E-ISSN: 2583-715X

Pandian Journal Of Women's Studies

We are New Women

Pandian Journal of Women's Studies

Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்

மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி

தமிழ்த்துறை உயராய்வு மையம்

நாகர்கோவில்

பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்

Feminist Studies from a Multifaceted Perception

Volume 5, Special Issue 1 (2), January 2025

தொகுதி 5, சிறப்பிதழ் 1 (2), ஜனவரி 2025

Pandian Educational Trust supports Sustainable Development Goals and is a member of UN SDG Publishers compact.

Sustainable Development Goals

- United Nations

SDG 4: Quality Education
"Educate Every Mind, Illuminate Every Life!"

SDG 5: Gender Equality
"Empower Her, Transform the World!"

Pandian Journal of Women's Studies

Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்

மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி

தமிழ்த்துறை உயராய்வு மையம்

நாகர்கோவில்

பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்

Feminist Studies from a Multifaceted Perception

Volume 5, Special Issue 1 (2), January 2025

தொகுதி 5, சிறப்பிதழ் 1 (2), ஜனவரி 2025

Pandian Journal of Women's Studies

Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்

மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

About the Journal and Scope

Pandian Journal of Women's Studies – (PJWS) E-ISSN: 2583-715X is an open-access journal from the patronization of Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India. It is published twice (May and November) in a year by the Trust. As a research journal, PJWS publishes quality based research articles from the literature, non-fictional works, empirical study reports, case studies, short communications and other related fields to supplement the educational gap of the academic professionals in the discipline of Women's writing and Gender studies. PJWS follows a double-blind peer-review model to keep unbiased results in its evaluation to all received manuscripts. Its aim is to propagate academic merit and integrity and to hover as one of the best Women studies journals in the arena of Women studies. PJWS is a pioneer Gold Open Access Journal. From its inception, it contributes to make the academic content freely available via the Trust site and other scholarly harvesting databases. The journal follows The Budapest Open Access Initiative (BOAI) https://www.budapestopenaccessinitiative.org/ to ensure free availability of articles in public internet, permitting all to search, read, download, copy, distribute, print, link the full texts of articles (PDF & other formats), indexing, data to other software, use them for lawful purposes, without financial and legal or technical barriers with proper attribution to the author. Now, the journal is published in electronic format and preserved in the trust website with permanent preservation facility and public access.

Submission Preparation Checklist

As a vital part of the submission process, the authors are insisted to check their manuscript for submission with compliance to the following items and the submissions that are not perfect as per the guidelines would be declined. The submission must not be previously published, nor in simultaneous submission to any other journal for consideration. The submission file is in Microsoft Word. ORCiD Id is mandatory. Parenthetical documentation, Proper Bibliographic references, URL or DOI for the electronic references have to be provided as per MLA or APA Style guidelines. The text should be single-spaced: uses Times New Roman Type Face and 12 point font; use italics wherever necessary (Original Books, Journal Titles), don't underline (except URL addresses). All types of illustrations, figures, and tables ought to be placed within the text at the appropriate points in alignment to the document, avoid giving them at the end. The text must adhere to the stylistic and bibliographic requirements as outlined as in the Author Guidelines according to the MLA or APA Style. Abstract 250- 350 words and full text of the paper 3000-5000 words. Tamil and English language articles are welcome. See more guidelines in the website. http://pandianeducationaltrust.com/pandian-journal-of-womens-studies-n-pjws.html

EDITORIAL BOARD

Dr. D. Maheswari, Editor-in-chief,
President, Women's Emancipation Forum (Under the Aegis of Pandian Educational Trust)
Virudhunagar, Tamil Nadu, India.
Email id: president@pandianeducationaltrust.com
Profile: http://pandianeducationaltrust.com/trustees.html

Dr. (Mrs) S. Kesavan
Professor, Department of Hindu Civilization,
Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
Email id: kesavans@esn.ac.lk
Profile: https://www.fac.esn.ac.lk/hindu-civilization/academic-staff/s-kesavan

Dr. R. Radhika Devi,
Director i/c,
Women's Studies Centre, Madurai Kamaraj University,
Tamil Nadu, India-21.
Email id: radhikadevi.wsc@mkuniversity.org
Profile: http://mkuniversity.ac.in/new/centre/wsc/faculty_profile.php

Dr. D. Uma Devi,
Professor of Tamil,
Department of Modern Indian Languages and Literary Studies,
University of Delhi, New Delhi -7, India.
Email id: dumadevi@mil.du.ac.in
Profile: http://mil.du.ac.in/FACULTY.html http://mil.du.ac.in/Asset/Faculty%20Photos/updatedcvs/Dr.%20UMA.pdf

Dr. R. Vasuhi,
Head i/c, Assistant Professor of English,
Department of English, Manonmaniam Sundaranar University,
Tamil Nadu, India.
Email id: rvasuhi@msuniv.ac.in
Profile: https://www.msuniv.ac.in/Academic/Department/English/Faculty

Mrs. T. Jeyappradha,
Assistant Professor of Management,
Nadar Mahajana Sangam S Vellaichamy Nadar College,
Nagamalai, Madurai, Tamil Nadu, India.
Email id: jeyappradha@nmssvnc.edu.in
Profile: https://nmssvnc.edu.in/academics/departments/department-of-business-administrationaided/

பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

பதிப்பாசிரியர் இதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல்,

கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

Title Verso

Journal title : **Pandian Journal of Women's Studies**

Editor Name : **Dr. D. Maheswari**

Publication frequency : **Biyearly - May and November**

Volume/Issue : **Volume 5, Special Issue 1 (2)**

Place of Publication : **Virudhunagar**

Date of Publication : **January 2025**

Paper Size : **Digital A4 Size**

Medium of Publication: **E-version**

Access Type (URL or DOI): Gold OA, Online, Indexed long time in Internet Archive

Subscription Type : **APC**

Publisher : **Pandian Educational Trust**

Publisher Website : **https://pandianeducationaltrust.com/**

Journal Site : **https://tinyurl.com/2p86v3yw**

Pandian Educational Trust supports Sustainable Development Goals and is a member of UN SDG Publishers compact.

SUSTAINABLE DEVELOPMENT GOALS

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

Pandian Journal of Women's Studies – (PJWS) E-ISSN: 2583-715X **is *a*** Peer-Reviewed Journal published continuously which is published twice (May and November) in a year **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. **Pandian Journal of Women's Studies** aims to bring down academic research to promote research support for the academicians and scholars in the field of women studies. Research through this academic medium motivates in all aspects of main and inter-disciplines of the core area of study with authentic e-publication. Making Internationalization of Pandian Journal of Women's Studies in the globalized world aids the scholarly community to gather knowledge on Women's Studies and the related fields to it. The impudence and revelation of academic research on internet could foster green printing and open access nature in the domain research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of research and education and the unification of the people in our world. In achieving the aim, our journal has been created**.**

Disclaimer

Pandian Journal of Women's Studies is committed to research Ethics and consider plagiarism as a crime done to the original author. So, the authors are advised to follow academic ethics with respect to acknowledgment of quotations from other scholarly works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions must be original, must accompany the declaration form stating the research paper as an original work, and has not been published elsewhere for any academic or research purpose. The contributor will be liable for such lapses on any legal issues and publication ethics. **Contact:** president@pandianeducationaltrust.com for submission and other information. For Institutional Subscription contact the publisher.

Message from the Editor-in-Chief

Pandian Journal of Women's Studies is a Peer Reviewed Journal which is committed to academic research, welcomes academicians, scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas in the field of Women Studies. Research is to establish, substantiate facts, restate previous works and to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal to bring down scholarly articles to the academic world. I am happy to bring Volume 5, Special Issue 1 (2), January 2025 to the academic community.

Publisher Contact:
Maheswari Darmalingam
Pandian Educational Trust (TN-32-0003213),
Maheswari Publishers, (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN32D0026797)
3/350, Veterinary Hospital Back Side,
Virudhunagar- 626001, Tamil Nadu, India.
Mobile: +91 8526769556,
email: editorptjts@pandianeducationaltrust.com,

Copyright © 2025 – Authors'

Pandian Journal of Women's Studies is an Open Access journal and the Pdf copy can be reused within the terms of the CC BY license https://creativecommons.org/licenses/by/4.0/. Think before you print so that you can save trees and environment.

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
Pandian Journal of Women's Studies

பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்
Feminist Studies from a Multifaceted Perception

Volume 5, Special Issue 1 (2), January 2025
தொகுதி 5, சிறப்பிதழ் 1 (2), ஜனவரி 2025

சிறப்பிதழ் குழு

இதழ் முதன்மை ஆசிரியர்

முனைவர் த. மகேஸ்வரி,
நிறுவனர்,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

சிறப்பிதழ் பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா. ம. ஜெயகலா,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் பொ. இரவீந்திரன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

இணைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் (திருமதி) எஸ். கேசவன்,
மேனாள் தலைவர், இந்து நாகரிகத்துறை,
சிரேஷ்டவிரிவுரையாளர், கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

முனைவர் கி. நாகேந்திரன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி,
சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் செ. சாந்தி,
இணைப்பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி,
தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் மா. வினோத்குமார்,
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்,
ஆங்கிலத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, நாகலாபுரம், தமிழ்நாடு, இந்தியா.

பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This Special issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

Be Eco-friendly

வாழ்த்துரை

மருத்துவர் ஆ. நாகராஜன்,
தலைவர் - செயலர்,
தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

அன்புடையீர்,

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

- பாரதியார்

மூன்று கடல்கள் சங்கமிக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவிலில் நமது தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியானது 1952ஆம் ஆண்டு முதல் கல்வி சேவையினைச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. இக்கல்லூரி 12 துறை சார்ந்த கல்வியினையும் ஆராய்ச்சிப் படிப்பினையும் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றது. இக்கல்லூரியின் தமிழ்த்துறை உயராய்வு மையமும் மதிப்பாய்வு செய்யப்படும் (A Peer-Reviewed Journal) பாண்டியன் மகளிர் ஆய்விதழும் இணைந்து '**பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்**' என்னும் தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கினை 31 ஜனவரி 2025 அன்று நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கிற்குச் சங்ககாலம் முதல் தற்காலம் வரை உள்ள பெண்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் நோக்கில் 63 கட்டுரைகள் வந்துள்ளன. இக்கருத்தரங்கிற்கு வரப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்து வெளியிட இருக்கும் எம் கல்லூரியின் தமிழ்த்துறைக்கும், ஒருங்கிணைப்பாளராகிய முனைவர் பா.ம.ஜெயகலா, இணைப்பேராசிரியர் & முனைவர் பொ.இரவீந்திரன் உதவிப்பேராசிரியர் அவர்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

மருத்துவர் ஆ. நாகராஜன்

பாராட்டுரை

முனைவர் தெ. ம பத்மநாபன்,
முதல்வர்,
தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

“கல்வியில் லாத பெண்கள்
களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி; அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான்?"

- பாரதிதாசன்

கல்விப் பணியினைச் செவ்வனே ஆற்றி வரும் நமது தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியின் சிறப்புமிக்க தமிழ்த்துறையும், மதிப்பாய்வு செய்யப்படும் பாண்டியன் மகளிர் ஆய்வு இதழும் (A Peer Reviewed Journal) இணைந்து **‘பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்’** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 31 ஜனவரி 2025 அன்று நடத்தி 63 ஆய்வுக் கட்டுரைகளை நூலாக்கம் செய்வது நமது கல்லூரிக்கும் தமிழ்த்துறைக்கும் பெருமைக்குரியதாகும். இதில் தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இப்பன்னாட்டுக் கருத்தரங்கு இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் மிக்க பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. சிறப்பான கருத்தாழமிக்க இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த இருக்கின்ற தமிழ்த்துறைக்கும் அதன் ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிய முனைவர் பா. ம. ஜெயகலா இணைப்பேராசிரியர் & முனைவர் பொ. இரவீந்திரன், உதவிப்பேராசிரியர் அவர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி!

அன்புடன்

முனைவர் தெ. ம. பத்மநாபன்

அணிந்துரை

முனைவர் வீ. வேணுகுமார்,
இணைப் பேராசிரியர் (பணி நிறைவு),
தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,
நாகர்கோவில்,
திட்டக்குழு உறுப்பினர்,
தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம்,
சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

உலக மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாக திகழும் தமிழ் நமது தாய்மொழி என்பது நமக்கு எல்லாம் பெருமை சேர்க்கும். அத்தகு தமிழ் மொழியை வளர்ப்பதும் தமிழாய்வினை வளப்படுத்துவதும் நமது உயரிய நோக்கமாக அமைய வேண்டும். இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருவது மொழியையும் ஆய்வினையும் மேன்மேலும் வளப்படுத்தும் என்பது உண்மை. ஆய்வு என்பது நுட்பமானது மட்டுமல்ல பல கிளைகளுடன் வளர்ந்து வருவதால் மொழியின் வளர்ச்சிக்கு ஆய்வு இன்றியமையாததாகின்றது.

ஆய்வுக் கட்டுரைகள் முறைப்படுத்தப்பட்டு தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவதும் அத்தியாவசியத் தேவையாகின்றது. ஓர் இலக்கியத்தை ஆய்வு செய்வது என்பது அவ்விலக்கியத்தைப் பற்றிய விரிவானப் பார்வைக்கு வழிவகை செய்யும் என்பது தெளிவு. அவ்வகையில் **“பன்முக நோக்கில் பெண்ணிய ஆய்வுகள்”** என்ற தலைப்பில் அமைந்த பன்னாட்டு கருத்தரங்கக் கட்டுரைகள் நூல் வடிவாகியுள்ளன. இக்கட்டுரைகளுள் சங்க இலக்கியம் முதல் தற்கால பா. விஜய் கவிதைகள் வரையிலான பல்வேறு இலக்கியங்கள் காட்டும் பெண்ணியச் சிந்தனைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆய்வு கட்டுரைகள் ஒவ்வொன்றும் மூல இலக்கியத்தையும் பாடல் வரிகளையும் வாசிக்க தூண்டுவனவாகவும் அமைகின்றன. தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுடைய பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் கட்டுரையாளர்களாக இருப்பது ஆய்வு கட்டுரைகளுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றது. பெண்ணிய சிந்தனைகளைக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட முழு முயற்சி செய்த பதிப்பாசிரியர்கள் முனைவர் பா.ம.ஜெயகலா மற்றும் முனைவர் பொ. இரவீந்திரன் ஆகியோரது ஆய்வுப் பணிக்குப் பாராட்டுகள். கட்டுரையாளர்களுக்கும் வாழ்த்துகள்.

நன்றி

நாகர்கோவில்.
20/01/2025

என்றும் அன்புடன்
முனைவர் வீ.வேணுகுமார்.

நன்றியுரை

முனைவர் பொ. இரவீந்திரன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்-2.

முனைவர் பா. ம. ஜெயகலா,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்-2.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா

- விநாயகர் துதி

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!

- கவிமணி

தாய் வாழ்க! தாய் தந்த தமிழ் வாழ்க! ஒரு மொழியின் சிறப்பிற்கும் செம்மைக்கும் முதல் அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமைவாய்ந்த இலக்கியங்களாகும். பழமையானது; இலக்கிய வளமுடையது நமது தமிழ்மொழி. நம் மொழி செந்தமிழ், பைந்தமிழ், அருந்தமிழ், நறுந்தமிழ், தீந்தமிழ், முத்தமிழ், நற்றமிழ், கன்னித்தமிழ், மூவாந்தமிழ், தெளிதமிழ், தென்றமிழ் என பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. முச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்த பெருமை தமிழ்மொழிக்கு மட்டுமே உரியது. தமிழ்மொழி, செம்மொழி தான் என முதன் முதலில் எழுத்துப் பூர்வமாக மெய்ப்பித்து குரல் கொடுத்தவர் சூரிய நாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர். திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூயமொழியே செம்மொழியாம் – இத்தகு இலக்கணம் கொண்டது தமிழ் மொழி மட்டுமே என ஆணித்தரமாக முழங்கியவர்.

“தமிழ் மொழியே உலக மொழி; தமிழ் மொழியே செம்மொழி” என்ற பரிதிமாற் கலைஞரின் முழக்கம் தமிழ் மொழியின் தகுதியை உலகிற்கு உணர்த்த உதவியது. 2004 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் தமிழைச் சொம்மொழியாக அறிவித்தது. இது பரிதிமாற்

கலைஞரின் முழக்கத்தின் வெற்றியாகும். தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் தாய் போன்றது. இதை மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் "ஞாலமொழி தமிழே" என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். தமிழ் மொழியில் பல்வகைப்பட்ட இலக்கியங்கள் நாளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இவ்விலக்கியங்களை மேலும் செம்மைப்படுத்திட பல வகையில் தமிழ் ஆய்வாளர்கள் முயன்றுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில் இக்கருத்தரங்கு நம் தமிழ் மொழி இலக்கியங்களை ஆய்வுச்செய்ய ஒரு தூண்டுகோலாக அமையும் என்பதில் எந்தவித ஐயபாடுமில்லை.

பன்னாட்டுக் கருத்தரங்கினை எங்கள் கல்லூரியில் நடத்துவதற்கு அனுமதி அளித்து, நூலாக்கத்திற்கு வாழ்த்துரை வழங்கிய கல்லூரி **தலைவர் – செயலர் மருத்துவர் ஆ. நாகராஜன்** ஐயா அவர்களுக்கு மனதார நன்றியினைத் உரித்தாக்குகின்றோம். பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த அனுமதியளித்து ஒருங்கிணைப்பாளர்களாகிய எங்களை ஊக்குவித்து நூலிற்கு வாழ்த்துரை வழங்கிய அன்பிற்குரிய **முதல்வர் முனைவர் தெ. ம. பத்மநாபன்** அவர்களுக்கும் நன்யினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நூலிற்கு அணிந்துரை வழங்கிய தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், திட்டக்குழு உறுப்பினர் **முனைவர் வீ. வேணுகுமார்** அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். எங்கள் கல்லூரியோடு இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்துகின்ற **பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ் ஆசிரியர் முனைவர் த. மகேஸ்வரி** அவர்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம். இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்ற இருக்கின்ற திருவள்ளுவர் பல்கலைக்கழகம், **இணைப்பேராசிரியர் முனைவர் நா. சிவகுரு** அவர்களுக்கும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், **விரைவுரையாளர் ந. சுபராஜ்** அவர்களுக்கும், தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி **தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. கோ. அனிதாகுமாரி, முனைவர் பா. மலர், உதவிப்பேராசிரியர்** அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கருத்தரங்குச் சிறப்புடன் நடைப்பெற எங்களுடன் இணைந்துப் பணியாற்றிய தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல. பல்வேறு கல்லூரிகளிலிருந்து கருத்தரங்கில் கலந்துக் கொண்ட பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கட்டுரையாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த எங்களது பாசமிகு முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் கலந்துக் கொண்ட மாணவச் செல்வங்களுக்கும் எங்கள் நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

- திருக்குறள்

Be Eco-friendly

பொருளடக்கம்

வ.எண் S. No	தலைப்பு / பெயர் Title / Author Name	ப.எண் P. No
31.	புறநானூறு உணர்த்தும் பெண்களின் வாழ்வியல் Life of Women in *Puranaanooru* நா. பத்மஸ்ரீ / N. Padmasree முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala	261-267
32.	சங்க கால அகப்புற நடவடிக்கைகளில் பெண்கள் Women in Internal Affairs during the Sangam Period வே.பவானி / V. Bavani	268-276
33.	குடும்ப வாழ்வில் பெண் ஒடுக்குதல் Female Oppression in Family Life செ. ம. புளோரா / C. M. Flora முனைவர் எ . ஜாஸ்மின் விஜி / Dr. E. Jasmin Viji	277-286
34.	'ஏவாளின் இரண்டாவது முடிவு' சிறுகதைத் தொகுப்பில் பெண்வாழ்க்கை குறித்த சித்தரிப்புகள் Depictions of Women's Lives in the Short Story Collection *Yevalin Irandam Mudivu* ம. மகராஜன் / M. Maharajan முனைவர் பா. மலர் / Dr. P. Malar	287-300
35.	நெடுநல்வாடையில் பெண்களின் வாழ்வியல் The Lifestyle of Women in *Nedunalvadai* முனைவர் த. மகிலா ஜெனி / Dr. D. Mahila Jeni	301-307
36.	குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் Expressions of Nostalgic Feelings of the Coastal Beloved in *Kurunthokai* ஆ. மணி / A. Mani முனைவர் சு. ரவி ஜேசுராஜ் / Dr. S. Ravi Jesuraj	308-314
37.	தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண் உடல் மொழி Female Body Language in the Poems of Tamil Female Poets முனைவர் ப. ம. மயிலா / Dr. B. M. Myla	315-321
38.	பெண்ணிய நோக்கில் அகலிகைத் தொன்மம்	322-331

Be Eco-friendly

	Akalikai Myth from a Feminist Perspective **முனைவர் பா. மலர் / Dr. B. Malar**	
39.	**கலித்தொகை காட்டும் மகளிர் விளையாட்டுக்கள்** **Women's Games Shown in Kalithogai** **முனைவர் ஆ. மனோகரன் / Dr. A. Manoharan**	**332-340**
40.	**உமா மகேஸ்வரியின் *யாரும் யாருடனும் இல்லை* நாவலில் பெண்களின் வாழ்வியல்** **Life of Women in Uma Maheswari's Novel *YarumYarudanum Illai*** **முனைவர் அர. மீனா / Dr. R. Meena**	**341-349**
41.	**சங்க இலக்கியத்தில் பெண்ணியம்** **Feminism in the Sangam Literature** **தெ. முத்து லெட்சுமி / T. Muthu Lakshmi** **முனைவர் C. ஜெஸிறோஸ் / Dr. C. Jessy Rose**	**350-357**
42.	**காப்பிய இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல்** **Lives of Women in Epic Literature** **வா. மெரினா மஜீ / V. Merina Maju** **முனைவர் அ. பொன்னம்மாள் / Dr. A. Ponnammal**	**358-363**
43.	**பெண்ணிய நோக்கில் *அப்பாவுக்கு*... கவிதை தொகுப்பு** ***Appavuku*... Kavithai Thogupu in Feminist Perspective** **வி. மெர்லின் கிறிஸ்டினா / V. Merlin Christina** **முனைவர் பா. மலர் / Dr. B. Malar**	**364-371**
44.	**குமரி மாவட்ட *கடல் அடி* மற்றும் துறைவன் நாவல்களில் நெய்தல் நிலப்பெண்களின் கல்விச்சூழல்** **Educational Environment of the Coastal Land Women in the Novels *Kadaladi* and *Thuraivan* of Kumari District** **ரா. மேரிஜான்சி / R. Mary Johnsy** **முனைவர் ஏ. ராணி / Dr. Y. Rani**	**372-377**
45.	***ரோஜாக்கள் காய்ப்பதில்லை* கவிதைகளில் பெண்களின் வாழ்வியல்** **The Lives of Women in the Poems *Rojakkal Kaipathillai*** **முனைவர் எஸ். ராதிகா / Dr. S. Rathika**	**378-385**
46.	**சங்கம் காட்டும் பெண்கள்** **Women as Portrayed by Sangam** **முனைவர் ரா. ராஜேஸ்வரி / Dr. R. Rajeswari**	**386-393**

47.	நற்றிணை குறிஞ்சித் திணைப்பாடல்களில் தோழியின் மனஉணர்வுகள் The Thoughts of Female Companion in Natrinai Kurinji Thinai Songs முனைவர் மெ. ரேவதி / Dr. M. Revathi	394-399
48.	வள்ளுவன் காட்டும் மங்கையின் மாண்புகள் The Qualities of Women by Valluvar முனைவர் S. ரேவதி பாப்பாத்தி / Dr. S. Revathi Pappathi	400-406
49.	பெரியபுராணம் காட்டும் மகளிர் வாழ்வியல் Women's Life in *Periyapuranam* முனைவர் மு. விஜய சாரதா / Dr. M. Vijaya Saratha	407-413
50.	தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல் Contemporary Life of Women முனைவர் ஐ. க. விஜி / Dr. I. K. Viji	414-422
51.	புறநானூற்றில் பெண்களின் வாழ்வியல் Women's Life in *Purananooru* ச. வேளாங்கண்ணி / S. Velankanni	423-427
52.	சங்க காலப் பெண்களின் மாண்புகள் The Merits of Women in the Sangam Period முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala	428-438
53.	குறள் காட்டும் மாட்சிமை பொருந்திய மனையாள் The Majestic Wife Who Shows the Kural முனைவர் சு. ஜெயக்குமாரி / Dr. S. Jeyakumari	439-445
54.	கலித்தொகையில் தோழியின் வாழ்வியல் The Life of the Female Friend in *Kalithogai* முனைவர் கு. ச. ஜெயஸ்ரீ / Dr. K. S. Jaya Shree	446-454
55.	கம்பனின் அரசகுல பெண் பாத்திரப் படைப்பு Kambar's Creation of Royal Female Personage முனைவர் ஜா. ஞா. ஜோணி ஜெபமலர் / Dr. J. G. Joni Jebamalar	455-460
56.	பெண்ணிய நோக்கில் பா. விஜய் கவிதைகள் Feminist Perspective P. Vijay's Poems முனைவர் செ. ஷஜிபா / Dr. S. Sajibha	461-467
57.	ஆலங்கால் நாவலில் பெண்ணியப் பார்வை Feminism in the Novel *Aalankaal*	468-477

	து. ஷீஜா / D. Sheeja முனைவர் சு. இளமாறன் / Dr. S. Elamaran	
58.	இறையுதிர்காடு நாவலில் நவீன பெண்ணியம் Modern Feminism in the Novel *Irayuthirkadu* ஜெ. ஷெராபின் / J. Sherafin நே. நிஷா நேவிஸ் / N. Nisha Navis	478-483
59.	*மணிமேகலை* காட்டும் பெண்ணிய சிந்தனைகள் Feminist Thoughts Evinced in *Manimegalai* முனைவர் ஐ. ஜெ. ஹெலினா கிரேஸ்லின் / Dr. I. J. Helena Gracelin	484-489
60.	Feminism in Chimamanda Adichie's Novel *Purple Hibiscus* Dr. J. Cenu Nair	490-495
61.	A Study of the Unsung Women Freedom Fighter K.P. Janaki Ammal M. Sudalai Muthu Dr. B. Sheeba Kumari	496-498
62.	Government Agencies Promotion of Women Entrepreneurship in India Dr. K. K. Thanammal	499-502
63.	Perceptions about Cosmetics among Feminine Working Consumers in Kanyakumari District Dr. T. Barathi Dr. V. Ramalexmi	503-507

Be Eco-friendly

Be Eco-friendly

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Life of Women in *Purananooru*

N. Padmasree, Reg.No.: 21113154022030, Research Scholar, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil-02, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320
Dr. P. M. Jayakala, Associate Professor of Tamil, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil-02, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14752230

Abstract

Sangam songs are the treasure of Tamils. Sangam literature mirrors life and expresses the sentiments of the Tamil people. They have given inner primacy of feelings and other feelings as external and they have made a distinction of internal and external life. One can also see that women are highlighted in the Sangam Songs. Sangam women did not distinguish between love life and domestic life but also academic prowess and the gift of the women. The purpose of this article is to explore the way that how "Purananooru" speaks about the heroic spirit of women who sent their sons to war for the sake of the country after losing their husbands in the war. The patriotism and courage they share show how they support their husbands. Therefore, the Sangam period is considered the golden age of Tamil literature. It was a time when Tamil poets abounded in their knowledge. During that time, female poets were seen as literary figures on par with male poets. Many "Purananooru" songs show us that women excelled not only in domestic life but also in education. Hence, this article tells the life of women as seen in "Purananooru".

Keywords: Women, Bravery, Hospitality, Family Life, Philanthrophy.

References

[1] Aruna. *Thirukuralmoolamumuraium.* Aruna Publications, Chennai, 2018.
[2] Kokila. "Purananuru Padalgal Pengalin Veeram." *Sarvadhesa Tamil Aaivethal*, Volume-4, 2022. DOI : 10.34256/irjt22345
[3] Tamizhannal. *Tholkaapiyam Moolamum Karuthuraium*. Meenakshi Puthaga Nilayam, Mayooravalagam, Madurai, 2017.
[4] Dhanalakshmi. "Sangakalathil Magalir Thozhilgal." *Shanlax International Journal*, Issue 1 July 2018.
[5] Bala Subramaniam. *Purananuru Mullamum Uraium.* NCBH, 2011.
[6] Bala Subramaniam. "Nathenaim Ullamum Uraium." NCBH, 2004.
[7] Puliyurkesigan. *Silappadikaram Mullamum Uraium*. Saran Books, Chennai, 2012.
[8] Jay Kumari. "Shanga Illakeyakalil Pengalin Allumai." *Puthiya Avayam*, Vol-07, Issue-02, June 2023.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Be Eco-friendly

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

புறநானூறு உணர்த்தும் பெண்களின் வாழ்வியல்

நா. பத்மஶ்ரீ, பதிவுஎண்: 21113154022030, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320
முனைவர் பா. ம. ஜெயகலா, இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி- 12. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14752230

ஆய்வுச்சுருக்கம்

தமிழர்களின் இலக்கிய சொத்து சங்க பாடல்கள். தமிழனின் உணர்வினை வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாகிய சங்க இலக்கியத்தில் உள்ள உணர்வுகளுக்கு அக முதன்மையும் பிற உணர்வுகளுக்கு புறம் என இரண்டாம் இடமும் கொடுத்து அகம் புறம் என்ற பாகுபாட்டை வகுத்துள்ளனர். உணர்வுகள் என்றாலே பெண்களை முன்னிலைப்படுத்தி உள்ளதையும் காணலாம். சங்ககால பெண்கள் காதல் வாழ்க்கை, இல்லற வாழ்க்கை மட்டுமல்லாமல் கல்வி வீரத்திலும் கொடையிலும் சிறப்புற்றவர்களாக இருந்தனர்.தன் கணவனை போரில் இழந்த பின்னும் நாட்டிற்காக தன் மகனை போருக்கு அனுப்பிய பெண்களின் வீர உணர்வையும் இரவலர்க்கு பகிர்ந்து அளிக்கும் கொடை தன்மையும் கணவனுக்கு துணையாக இருக்கும் இல்லற வாழ்க்கை பற்றியும் புறநானூற்றின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: மகளிர், வீரம், விருந்தோம்பல், இல்லறம், கொடை.

முன்னுரை

செம்மொழியாம் தமிழ் மொழி தரணிய உயர்வடைய செய்த மொழி இலக்கியங்களில் முதன்மையாக சொல்லப்படுகின்ற சங்க இலக்கியம் தான் தலைமை இடம் பெறுகிறது.'சங்க காலத்தில் மகளிருக்கு உயர்ந்த மதிப்பு இருந்தது (தனலட்சுமி, பக். 1) என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. புற வாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும் மகளிர் தகுந்த நிலையில் இருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இத்தகைய தன்மையுடைய இலக்கியங்களில் புறநானூறு சிறப்பு பெறுகிறது. புறநானூற்று பெண்களின் வீரம், இல்லற வாழ்க்கை, விருந்தோம்பல் பண்பு, கொடை திறம் போன்றவைகளை இக் கட்டுரையின் வழி அறியலாம்.

சங்ககாலப் பெண்கள்

பழந்தமிழ் பண்பாட்டின் நிலைகளனாய் அமைந்தவே சங்ககால மகளிரின் பண்புகள் ஆகும். "பெண்கள் நடமாடும் பிரம்மாக்கள் தாயுள்ளம், கருணை, அன்பு மென்மை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தன்மையோடு இருப்பவர்கள்" (ஜெய குமாரி, ப. 493). "பெண்கள் மேன்மை, அறிவு போன்ற இயற்கை குணங்களைக் கொண்டவர்கள்" என்று உ . வே சாமிநாத ஐயர் குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் பெண்கள் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றபட்டனர். பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராகச் சிறந்து விளங்கினர். மேலும் பெண்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை பண்புகளான நான்கு வகை குணங்களிலும் சிறப்பு பெற்று விளங்கினர் இதையே, தொல்காப்பியர்,

அச்சமும் நாணும் மடனும் முந் துறத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ன (தொல்., 1045)

என்ற நூற்பா வழி உணர்த்துகிறார். இந்த தொல்காப்பிய கூற்றுக்கிணங்க சங்க காலப் பெண்கள் உயர்ந்த பண்புகள் பல பெற்று விளங்கியதை புறநானூற்று இலக்கியமும் தெளிவுபடுத்துகிறது.

பெண்பாற் புலவர்கள்

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனச் சித்திகரிக்கப்படும் சங்க காலம் தமிழ் புலவர்கள் நிறைந்து வழிந்த காலம் அக்காலத்தில் ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக காணப்பட்டனர். பெண்கள் இல்லறத்தில் மட்டுமின்றி கல்வியிலும் சிறப்பு பெற்றிருந்தனர் என்பதை, புறநானூற்று பாடல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன. ஔவையார், காக்கை பாடினியார், காவற்பெண்டு, நச்செள்ளையார், தாயங்கண்ணியார், பாரி மகளிர் பொன்முடியார், வெள்ளை மாளர், போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இப்புறநானூற்று பாடல்களை பாடி உள்ளனர். இவர்கள் சுதந்திர மனப்பான்மை உடையவர்களாகவும், துணிந்த நெஞ்சம் படைத்தவர்களாகவும், சிறந்த தூதுவர்களாகவும் தங்களை வெளிப்படுத்தியது அவர்களின் பாடல் வழி அறிய முடிகிறது.

புறநானூற்று பெண்களின் வீரம்

புறநானூற்று மகளிர் வீரம் மற்றும் நாட்டுப்பற்று உடையவர்களாக காணப்பட்டனர். பகைவர் இடத்தில் தங்கள் நாட்டை காப்பதற்கு தங்கள் கணவன் மற்றும் பிள்ளைகளை போருக்கு அனுப்பி வெற்றி வாகைச் சூட செய்தனர். போர்க்களத்தில் விழுப்புண் ஏற்படினும் அது புற முதுகில் இடம்பெறுதல் கூடாது என்ற வேட்கை உணர்வு உடையவர்களாக காணப்பட்டனர். ஒரு வீரனுடைய தாய் தன்மகன் போர்க்களத்தில் இறந்தான் என்று செய்தி அறிந்தவுடன் மகனை காண போர்க்களம் செல்கிறார். அங்கு தம் பகைவர்களை எதிர்த்துப் போர் புரிந்து இறுதியில் உடல் வெட்டுண்டு கிடந்த தன் மகனின் வீரத்தைக் கண்ட பெருமிதத்தில் அவளுடைய வற்றிய மார்புகள் மீண்டும் பாலூறி சுரந்தன இதை,

கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்
வெந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தோடு உகைத்து எழுதரூஉ துரந்து ஏறி ஞாப்பின்
வரு படை போழ்ந்து வாய்ப் பட விலக்கி
கிடைப் படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி
வாடு முலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே. (புறம்., 295)

என்ற பாடல் வலியுறுத்துகிறது.ஒரு தாயானவள் தன்மகன் இறந்தாலும் கூட வீரனாகவும் சான்றோனாகவும் இருக்க வேண்டும் இது அவனை பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட பெரியது" (வீ. கோகிலா. ப. 2) தன் மகன் போரில் இறந்ததை எண்ணி வருந்தாமல் நாட்டை காக்க உயிரை கொடுத்ததற்காக பெருமிதம் கொள்ளும் வீர மறக்குடி பெண்களாக நம் புறநானூற்று பெண்கள் திகழ்ந்தனர், என்பதை மேற்கூறிய பாடல் வழி அறிய முடிகிறது.

புறநானூற்று மகளிரின் இல்வாழ்க்கை

சங்க கால பெண்கள் மனையற மாண்புகளில் சிறந்து விளங்கினர். மகளிரின் மனையற மாண்புகளாக இல்வாழ்க்கை, விருந்தோம்பல், மக்கள் பேறு, ஈகை, பொறுமை, கணவனை பேணுதல் போன்ற நற்பண்புகளை பெற்றிருந்தனர் என்பதை புறநானூற்று வழி அறிய முடிகிறது. இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவி இருவரும் மேற்கொள்ளும் அறம், பொருள் இன்பங்களால் சிறப்புறுவது. இதையே வள்ளுவரும்,

அறம் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (குறள்., 47)

என்ற குறள்வழி அறியலாம். அதாவது பிறருடைய பழிச்சொல் இல்லாது அறச் செயல் செய்து வாழ்வதே சிறந்த இல்வாழ்க்கை என கூறுகிறார்.இதையே புறநானூறும் வலியுறுத்துகிறது.

நீரொடு நிறைந்த ஈர் இதழ் மழைக்கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற் படர்ந்திசினே-நல் போர்க் குமண!-
என் நிலை அறிந்நனை ஆயின் (புறம்., 164)

என்னும் பாடல் வரிகள் வறுமையால் வாடும் தன் மனைவியின் துன்பத்தை கண்ட பெருந்தலைச் சாத்தனார் துன்பத்தை நீக்கும் பொருட்டு குமணனிடம் வந்து தன்னிலையை கூறி பொருள் பெற்று சென்றதை எடுத்துக்காட்டுகிறது. ஆக ஆண் பெண் இருவரும் கருத்தொருமித்த இல்லற வாழ்வை மேற்கொண்டு இருந்தனர் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகிறது.

இல்லற வாழ்விற்கு வலுவூட்டுவது 'விருந்தோம்பல்' ஆகும். நம் புறநானூற்று மகளிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர்.நம்மை நாடிவரும் விருந்தினரை இன் முகத்தோடு வரவேற்று உண்ண உணவும் உடுக்க உடையும் கொடுத்து மிக்க அன்போடு அவர்களை

உபசரித்தனர். பண்டைய தமிழர்கள் தாம்வறுமை நிலையில் வாழ்ந்த போதிலும் நம்மை நாடி வருகின்ற வறியவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர். மேலும் நாள்தோறும் தங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரவேண்டும் என்று பெண்கள்'நடுகல்' வழிபாடு செய்தனர் என்பதை, கீழ்காணும் புறநானூற்று பாடல் வரிகள் மூலம் உணர முடிகிறது.

களிறுபொரக் கலங்கு, கழல் முள் வேலி

அரிதுஉண் கூவல், அம்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை
நடுக்கல் கைதொழுது பரவும்,
ஒடியாது;
விருந்து எதிர் பெருகதில் யானே என்னையும் (புறம்., 306)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும் இளங்கோவடிகளும் தம் காப்பியத்தில் விருந்தின் மேன்மையை வலியுறுத்தி உள்ளார்.

மரப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பொருந்தன் வாழ்க்கையும் (சிலம்பு., 85, 86)

என்ற சிலப்பதிகாரப் பாடல் கண்ணகி தன் பொழுநன் கோவலன் தன்னோடு இல்லாததால் அறவோர்க்கு அளித்தல் ,அந்தணர்க்கு ஓம்பல், துறவிகளை உபசரித்தல் போன்ற இல்லற பண்புகளை செய்ய முடியாமல் போனதை எண்ணி வருந்துகிறாள்.மேலும்,

இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்., 81)

என்று வள்ளுவரும் பொருள்களை உருவாக்கி பாதுகாப்பது ஏனெனில் தன்னை நாடிவரும் விருந்தினருக்கு கொடுத்து உதவி செய்வதற்கே என்று விருந்தின் மேன்மை எடுத்துக் கூறுகிறார்.

சங்ககால பெண்கள் தம் கணவன் மற்றும் பிள்ளைகளிடம் பேரன்பு மிக்கவர்களாக வாழ்ந்தனர் என்பதை புறநானூற்று பாடல்கள் வலியுறுத்துகின்றன. கணவனுக்கு துன்பம் ஏற்படும் போது உறுதுணையாகவும், கணவன் தன் அருகில் இல்லாத நேரத்தில் தங்களை ஒப்பனை செய்து கொள்ளாமலும் வாழ்ந்தனர். மேலும், போரில் புண்பட்ட தன் கணவனை பேய் நெருங்காதிருக்க வேப்பிலைகளை தன் மனையில் செரிகியும், கடுகை வீட்டின் முன் சிதறியும், ஆம்பல் பண்ணைப் பாடியும், மணியோசை எழுப்பியும், ஈடுபடுவது நறுமணப் புகை பரப்பியும் பாதுகாத்து வந்தனர் என்பதை பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

தீங் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,
வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க ,
கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி ,
ஐயவி சிதறி,ஆம்பல் ஊதி

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இசை மணி ஏறிந்து ,காஞ்சி பாடி
நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ ,
காக்கம் (புறம்., 281)

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும், இல்வாழ்க்கையில் சிறந்த பேறாக கருதப்படுவது மக்கள் பேறு ஆகும். இதையே வள்ளுவர்,

மங்கல மென்ப மனைமாட்சி யதன்
நன்கலன் நன்மக்கட் பேறு (குறள்., 60)

என்ற குறள் எடுத்துரைக்கிறது. மேலும், மக்களால் உண்டாகும் இன்பமே இன்பங்களில் எல்லாம் சிறந்தது. அறிவு கொடை நற்குணம் படைத்த மக்களை பெற்ற தாய், தந்தையரை உலகம் போற்றி புகழும் என்றும் புறநானூறு விளக்குகிறது.

படைப்புல பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப் படக்
குறுகுறு நடந்து , சிறு கை நீட்டி,
இட்டும் தொட்டும் ,கவ்வியும் ,துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும் (புறம்., 188)

என்ற பாடல் வழி அறியலாம்.

புறநானூற்று பெண்களின் கொடைத்திறம்

எந்தவித கைமாறும் கருதாமல் வறியவர்க்கு பிறருக்கும் நாம் கொள் என கொடுத்தலே'கொடை' ஆகும். உலகத்தார் போற்றும் அறங்களில் எல்லாம் காலத்தால் அழியாத சிறப்பு பெற்றது ஈகையே, புறநானூற்று பெண்கள் கொடையுள்ளம் கொண்டவர்களாக வாழ்ந்தனர் என்பதை, புறநானூற்று பாடல்கள் பல அறிவுறுத்துகின்றன. தம்மைத் தேடி வரும் இரவலர் விருந்தினர் மற்றும் உறவினர்களுக்கு தம்மால் இயன்ற அளவு பொருட்களை கொடுத்து மகிழ்ந்தனர். தன் கணவன் தன்னை விட்டு போருக்காகவோ அல்லது வேறு நிமித்தமாகவோ பிரிந்து சென்றாலும் புறநானூற்றும் மகளிர் தம் இல்லம் தேடி வரும் நிலவ இரவலர்க்கு இல்லை என்று கூறாது பொருட்களை வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவர்களாக விளங்கினர் என்பதை, பின்வரும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப,
விண் தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்,
கிழவன் சேட் புலம் படரின், இழை அணிந்து,
புன் தலை மடப் பிடி பரிசிலாக,
பெண்டிரும் தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க் (புறம்., 151)

இந்தப் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மேலும்,

பிறர்க்கு என முயலும் பேரருள் நெஞ்சமொடு (நற்., 186)

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்னும் பாடல் கிடைத்த பொருளை சேர்த்து வைக்காமல் வறுமையில் வாடுவோருக்கு கொடுத்து எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று நினைப்பதே நல்ல உள்ளம் ஆகும்.

முடிவுரை

சங்ககாலத்தில் ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் மக்கள் வாழ்ந்தனர். பெண்கள் ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் சிறப்பு பெற்று விளங்கினர். அவற்றுள் புறநானூற்றில் பெண்கள் போற்றுதற்குரிய பல நற்பண்புகளை பெற்றிருந்தனர். இல்லறம், விருந்தோம்பல், கல்வி, வீரம், கொடை போன்ற நற்செயல்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தினர். கணவன் மற்றும் பிள்ளைகளை பேணுதலிலும் அவர் பால் அன்பு காட்டுதலிலும் குறைவில்லாமல் வாழ்ந்தனர்.ஈகையில் தன்னலம் கருதாது வாழ்ந்தனர் என்பதை புறநானூற்று வழி அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] அருணா. *திருக்குறள் மூலமும் உரையும்.* அருணா பப்ளிகேஷன்ஸ். சென்னை மூன்றாம் பதிப்பு நவம்பர் 2018.

[2] கோகிலா. "புறநானூற்று பாடல்களில் பெண்களின் வீரம்." *சர்வதேச தமிழ் ஆய்விதழ்,* தொகுதி 4, 2022.

[3] தமிழண்ணல். *தொல்காப்பியமும் மூலமும் கருத்துரையும்.* மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், மதுரை, ஐந்தாம் பதிப்பு, ஆகஸ்ட் 2017.

[4] தனலட்சுமி. "சங்ககாலத்தில் மகளிர் தொழில்கள்." *சான்லாக் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்,* தொகுதி 1, ISSN 24 54 39 93, ஜூலை 2018.

[5] பாலசுப்பிரமணியன். *புறநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, அக்டோபர் 2011.

[6] பாலசுப்பிரமணியன். *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

[7] புலியூர் கேசிகன். *சிலப்பதிகாரம் மூலம் உரையும்.* சரண் புக்ஸ். சென்னை. 2012.

[8] ஜெயகுமாரி. "சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை." *புதிய அவையம்,* தொகுதி 2, ஜூன் 2023.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Women in Internal Affairs during the Sangam Period

V. Bavani, Research Scholar, Madras Christian College, Chennai-600059, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-2825-0822
DOI: 10.5281/zenodo.14752240

Abstract

Puram life at the Sangam times can be the economic activity and Agam life can be said to be the family activity that prepares the individual. In Sangam literature, material production activities such as hunting, ploughing, fishing and war have taken place. People involved in these jobs. They make love, raise families, keep chastity and carry out social activities. In these two types of activities, Agam and Puram, both men and women are important in every place. However, the social contribution of both is equally important. Sangam literature is largely an internal literature. All kinds of internal activities are explained through their external activities. It is difficult to accurately divide and classify human life as internal life or external life. Similarly, in Sangam poems, there are poems in which internal and external activities are revealed in the same poem. Tamil people lived in a life affiliated with nature and have realized the internal and external walks of life. This paper finds out the internal affairs of women at the time of Sangam period.

Keywords: Agam, Puram, Feast, Butter Milk, Salt Selling.

References

[1] Parimanam, A. M. *Sanga Ilakkiyam*. New Century Book House, Chennai. 2004.
[2] Mathaiyan, P. *Agathinai Kotpaadum Sanga Aga Kavithai Marapum*. Pavai Publications, Chennai, 2009.
[3] Ammankili Murugadhas. *Sanga Kavithaiyakkam Marapum Matramum*. Kumaram Puthaga Illam, Chennai, 2006.
[4] Thaninayaga Adigal. *Nila Amaippum Tamil Kavithaiyum.* New Century Book House, Chennai. 2014.
[5] Kailasabathi, K. *Tamil Veeranilai Kavithaiyum*. Kumaram Puthaga Illam, Chennai, 2006.
[6] Amirtha Gowri, A. *Sanga Illakiyathil Uraiyaadal*. Paari Nilaiyam, Chennai,1989.
[7] Sarala Rajagopalan. *Sanga Illakiyathil Thozhi. A*alaigal Achagam, Chennai,1988.
[8] Kalaimani, K. *Sanga Illakiyathil Manitha Urimaigal. N*ila Sooriyan Pathippagam, Chennai, 2016.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

சங்க கால அகப்புற நடவடிக்கைகளில் பெண்கள்

வே. பவானி, முனைவர்பட்ட ஆய்வாளர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-2825-0822
DOI: 10.5281/zenodo.14752240

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தில் அக வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது போன்று புற வாழ்க்கையிலும் பெண்கள் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக அகப்பாடல்களில் இடம்பெறும் புறம் சார்ந்த நிகழ்வுகள் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. தினைப்புனம் காத்தல், விருந்து அயர்தல், தலைவன் இல்லாத பொழுது இல்லறக் கடன்களை ஆற்றியிருத்தல், உப்பு விற்றல், மோர் விற்றல், மீன் காய வைத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளான புற நிகழ்வுகள் தலைவியின் அக நிகழ்வுகளினூடே இடம் பெற்றுள்ளது இவ்வாய்வின் வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்புச்சொற்கள்: அகம், புறம், விருந்து அயர்தல், மோர் விற்றல், உப்பு விற்றல்.

முன்னுரை

புறம் என்பது பொருளாதார நடவடிக்கை என்றும் அகம் என்பது அந்த பொருளாதார நடவடிக்கைக்கு மனம் மற்றும் உடலைத் தயார் செய்யும் குடும்ப நடவடிக்கை என்றும் கூறலாம். சங்க இலக்கியத்தில் வேட்டை, உழவு, மீன்பிடித்தல், போர் போன்ற பொருள் உற்பத்தி செயல்பாடுகள் நடைபெற்றுள்ளன. இந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் களவில் காதல் செய்து கற்பில் குடும்பம் நடத்தி, சமூக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அகம் புறம் ஆகிய இவ்விருவகை நடவடிக்கைகளிலும் ஆண்பெண் இருபாலரும் ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு பாலினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆயினும் இருவர் சமூக பங்களிப்பும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சங்க இலக்கியங்கள் பெரிதும் அகப்புற இலக்கியங்களாக அமைந்துள்ளன. எல்லாவித அகச் செயல்பாடுகளும் அவர்களது புறச் செயல்பாடுகளினூடே விளக்கப்பட்டுள்ளன. மனிதர்களின் வாழ்க்கையை அக வாழ்க்கை என்றோ புற வாழ்க்கை என்றோ துல்லியமாக பிரித்து வகை செய்தல் கடினம். இதேபோல் சங்கப்பாடல்களிலும் ஒரே பாடலில் அக மற்றும் புற நடவடிக்கைகள் தெளிவாக வெளிப்படும் விதத்தில் பாடல்கள் உள்ளன. பெரும்பான்மையான அகப்பாடல்கள் புறநிகழ்ச்சிகளோடு சேர்த்தே பாடப்பட்டுள்ளன. அவ்வகைப பாடல்களில் பெண்கள் அகத்திலும் புறத்திலும் எவ்வாறு பங்கெடுத்துள்ளனர் என்பது **சங்ககால அகப்புற நடவடிக்கைகளில் பெண்கள்** என்னும் தலைப்பின் கீழ் இக்கட்டுரை ஆராய்கிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அகப் புற உருவாக்கம்

ஆதிகால மனிதன் விலங்குகளைப் போல் கிடைத்ததை உண்டு வந்தான். விலங்குகளைப் போல புனர் உற்பத்தியிலும் ஈடுபட்டு வந்தான். அவனது பொருளாதார செயல்பாடுகள் வளர உணவு சேகரித்தலோடு உற்பத்தியையும் தொடங்கினான். இச்செயல்பாடுகள் அவனது மன வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக அமைந்தன. அவன் சமூகமாக வாழ தொடங்கியதும் காதல் என்னும் அக உணர்வு உருவானது. சமூக வளர்ச்சிக்கு ஏற்ப உணர்வு நிலையிலும் முதிர்ச்சி ஏற்பட்டது. காதல் உணர்வுடன் பண்பாட்டு முன்னேற்றமும் ஏற்பட்டது. மனிதனின் வளர்ச்சி கட்டத்தில் மொழி உருவாக்கத்தின் நீண்ட நெடும் பயணத்தின் ஒரு கட்டத்தில் இலக்கியங்கள் உருவாயின. அவற்றுள் அவனது இன்றியமையாத அகப்புற செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. இந்நடவடிக்கைகளின் தொடக்ககால இலக்கிய ஆவணங்களாக சங்க இலக்கியங்கள் உள்ளன. சமூக வரலாற்றின் ஒரு கட்டத்தில் உற்பத்தியில் ஆண் பெண் இருவரும் இணைந்து கூட்டாகச் செயல்பட்டனர். பின்னர் அந்நிலை மாற்றம் அடைந்தது. இதனால் ஆண்கள் நேரடியான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பெண்கள் அவ்வுற்பத்திக்குத் துணையான வேலைகளில் ஈடுபட்டனர். இந்த சமூக உண்மைகள் இலக்கியங்கள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த இலக்கியங்களைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் விளைந்தவை அகம், புறம் போன்ற பாகுபாடுகளாகும்.

தினைப் புனம் காத்தல்

தினைப்புனம் காத்தல் என்பது சங்க சமூகத்தில் குறிப்பிட்ட அந்தஸ்தில் உள்ள தலைவி தம் குடும்பத்துக்குச் சொந்தமான தினை விளைந்த நிலத்தில் அதன் கதிர்களைத் தின்ன வரும் பறவைகளை விரட்டுதல் ஆகும். இந்த வேலையைச் செய்ய வரும் தலைவியை, சங்க சமூகத்தில் குறிப்பிட்ட அந்தஸ்தில் உள்ள தலைவன் கண்டு காதல் கொண்டு இருவரும் இன்புறுகின்றனர். இவ்விடத்தில் தலைவியின் காதல் ஒழுக்கமும் பொருளாதாரச் செயல்பாடும் ஒருங்கே பாடல்களில் வெளிப்படுகின்றன. ஒன்றுக்கு ஒன்று துணை நிற்பதையும் காணமுடிகிறது.

குறிஞ்சி நிலத் தலைவிக்கு உரியதாக இந்த வேலை சுட்டப்பட்டுள்ளது. தலைவி தினைப்புனம் காக்கும் காட்சி பின்வருமாறு சுட்டப்பட்டுள்ளது.

மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி,
பொலிந்த ஆயமொடு காணதக இயலி
தழலை வாங்கியும், தட்டை ஓப்பியும்
அழல்ஏர் செயலை அம்தழை அசைஇயும்,
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ? வாழிய, மழையே (அகம்., 188. 9-14)

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இப்பாடலில் தலைவனிடம் தலைவியை வரைந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள் தலைவி. நிலத்தில் மழை பொழிந்து நிலம் சிறப்பது போல் தலைவனும் தலைவியை மணம் செய்து கொண்டு அவர்களது இல்லற வாழ்க்கை செழிக்க வேண்டும் என்று குறிப்பாக உணர்த்துகிறாள். இந்த அக நடவடிக்கையைச் சுட்டும் போது தலைவி தினைப்புனம் காக்கும் போது, தழலைச் சுற்றியும், தட்டை அடித்து ஒலி எழுப்பியும் பறவைகளை விரட்டும் புறச் செயல்பாடும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பல பாடல்களில் தலைவியின் அகச் செயல்பாடான இயற்கைப் புணர்ச்சியும் புறச் செயல்பாடான தினைப் புனம் காத்தலும் விளக்கப்பட்டுள்ளன.

யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்
கரும்பு மருள் முதல பைந்தாட் செந்தினை (குறுந்., 198. 1-2)

என்ற பாடலில் காவல் காக்க வரும் தலைவியைக் காண வரும் தலைவனைத் தோழி இங்கு வர வேண்டாம். தாய் இங்கு வரக்கூடும் என்று கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். இப்பாடலுக்குப் பின்வருமாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

தோழி தலைவனிடம் தன் மலைக்குரியன பூசி வருக என்றும், இயல்பாகவே மணம் உடைமையால் பூசாது வருக என்றும் கூறினாள். தலைவி அவனைப் புணர்ந்த வழி, அவன் பூசிய சந்தன மணம், தலைவியின் உடலில் காணப்பட்ட வழி, தாய் அப்புதுமணம் கண்டு ஐயுற்று, தினை கடியப் போகவிடாள் என்றும், ஆண்டு நிகழ்வது காண வருவாள் என்றும், இதனால் தாம் அஞ்சுதும் என்றும் தலைவற்குக் கூறி குறியிடம் வேறாக உரைத்தாள். (பரிமணம், அ. ப. 457)

எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் குறுவர்கள் காட்டை எரித்து வேளாண் செய்த இடத்தில் விளைவிக்கப்பட்ட பயிரின் கதிரைக் காக்கும் பொருட்டு வரும் தலைவியைக் காண வரும் காதலனுக்குத் தோழி குறி இடம் சுட்டுவதைக் காட்டுகிறது இப்பாடல். இதில் தலைவியின் தினைப் புனம் காக்கும் புற நிகழ்வும், தலைவியின் தமர் தினைப் புனைத்தை உருவாக்கிய விதமும், அவ்விடத்தில் நிகழும் தலைமக்களின் காதல் நாடகமும் சுட்டப்பட்டுள்ளன. மற்றொரு பாடலில் காவல் புரியும் தலைவிக்குக் காதல் வந்த செய்தி அறியாமல் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்துவது பற்றி தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

மரம்கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ்
அம் சில் ஓதி, அசை இயல், கொடிச்சி (குறுந்., 214. 1 – 3)

என்ற பாடல் வரிகளால் தினைப்புனத்தைக் காவல் காக்கும் கொடிச்சியின் நோய்க்குக் காரணம் தலைவன் பால் அவள் கொண்ட அன்பு. இதனை அறியாத இவ்வூரார் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்துகின்றனர். இதனால் எந்தப் பலனும் விளையப் போவதில்லை என்று விளக்குகின்றாள் தோழி. தலைவிக்கு ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டது என்று கருதி அதை அறிய வெறியாட்டு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நிகழ்த்துதல் அக்காலப் பண்பாடாகும். ஆனால் அதன் அடிப்படைக் காரணம் தெரியாமல் இது நிகழ்த்தப்படுகிறது என்று தோழி கவலை அடைகிறாள்.

வெறியாட்டு என்னும் இப்புற நிகழ்வும், தலைவி தினைப்புனம் காத்தல் என்ற புற நிகழ்வும் தலைவி காதல் நோயுற்று துன்புறுகிறாள் என்ற அக நிகழ்வுடன் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன. பெண்கள் விதைகள் நடுவதற்கும் காவலுக்கும் பயன்படுத்திய கருவி குறித்துப் பின்வரும் கூற்று விளக்குகிறது.

> **விதைகள் நடுவதற்குப் பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' மிக முக்கிய கருவியாகும். இதனைத் தினைப்புனக் காவலிலும் பெண்கள் பயன்படுத்தினர் இவர்கள் பயன்படுத்திய இக்கருவி பின்னாளில் தாய்த்தெய்வங்களின் சூலாயுதமாக படிமலர்ச்சி பெற்றது.(பக்தவத்சல பாரதி, ப. 92)**

இங்ஙனம் தலைமக்களின் அக வாழ்வின் மூலமாக பல புற செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. தலைமக்களின் களவு வாழ்வை விளக்கத் தினை புனம் காத்தலை ஒரு உத்தியாகவும் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அகப் பொருளின் இலக்கிய இன்பத்தை மிகுவிக்கப் பயன்படுத்திய உத்தி என்றாலும், இலக்கியம் வாழ்வின் பிரதிபலிப்பு என்னும் வகையில் இச்செய்திகள் மூலம் அக்கால விவசாயம் குறித்து அறியமுடிகிறது. இவ்வாறு பல பாடல்கள் மூலம் தினைப்புன விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

கால்நடை வளர்ப்பில் பெண்

கால்நடை வளர்ப்பில் பெண்கள் பல பணிகளைச் செய்துள்ளனர். பால் கறத்தல், கால்நடைகளை மேய்த்தல், கன்றுகளைப் பிடித்து கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளனர். முல்லைக்கலி பாடல்களில் ஆயர்குல தலைவியின் காதல் வாழ்க்கைக் குறித்துக் கூறும் பொழுது அவர்தம் பொருளாதார நடவடிக்கைகள் சுட்டப்பட்டுள்ளன.

தலைவியிடம் காதல் கொண்ட தலைவன் என் நெஞ்சு உன்னிடம் உள்ளது. அதை அடிமையாகக் கொண்டு சென்றவள் நீ என்று கூற, அதற்குப் பதில் கூறும் பொழுது தலைவி தான் செய்யும் வேலைகளை பட்டியலிட்டு இந்த வேலைகளை எல்லாம் நான் அடிமையாகக் கொண்டு சென்ற உன் நெஞ்சு செய்யுமோ என்று அவனை எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளது பின்வரும் முல்லைக்கலி பாடல்.

> **நின்நெஞ்சம் களமாக் கொண்டு யாம் ஆள, எமக்கு எவன் எளிதாகும்**
> **புனத்துளான் என்னைக்குப் புகாஉய்த்துக் கொடுப்பதோ?**
> **இனத்துளான் எந்தைக்குக் கலத் தொடு செல்வதோ?**
> **தீணைக் காலுள் யாய் விட்ட கன்று மேய்க்கற்பதோ? (கலித்., 108. 30 – 33)**

எனக் கூறுகிறாள் தலைவி. தனது காதலைத் தெரிவிக்கும் தலைவனிடம் உன் நெஞ்சை நான் எப்படி அடிமையாகக் கொண்டு போக முடியும். உன் நெஞ்சு புனத்தில் இருக்கும் என் தமையனுக்கு உணவு எடுத்துச் செல்லுமோ? என் தந்தை பால் கறக்க கலம் கொண்டு தருமோ?

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தினை அரிந்த வயல்களில் என் தாய் மேயவிட்ட கன்றுகளை மேய்க்குமோ? என்றெல்லாம் கூறுகிறாள். இந்த வேலைகளை எல்லாம் செய்யும் தலைவியைத் தலைவன் காதலிக்கிறான். ஒரு கட்டத்தில் அவள் அவனது காதலை ஏற்கிறாள். இங்ஙனம் தலைமக்களின் காதல் வாழ்க்கையும் பொருளாதார வாழக்கையும் இப்பாடலில் ஒருங்கே விளக்கம் பெறுவதைக் காணமுடிகிறது.

குடும்பத்தில் மகளிர்

விருந்தோம்பல் என்பது சங்ககால மக்களின் இணையற்ற பண்பாகும். மக்கள் தம் பயணங்களின் போது ஆங்காங்கே கிடைக்கும் இடங்களில் தங்கிச் சென்று வந்துள்ளனர். அவர்களுக்கு உணவளித்தல் தங்கள் கடமை என்று அக்கால மக்கள் கருதியுள்ளனர். புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் உணவளித்து பாதுகாத்தல் என்பது பல பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன. பெண்கள் அக நடவடிக்கயானாலும் புற நடவடிக்கையானாலும் குடும்பம் சார்ந்து இயங்கினர். விருந்தோம்பல் இல்லற கடன்களில் முதன்மைக் கடனாகும். இவ் விருந்தோம்பல் கணவன் மனைவி இருவரும் இருந்து செய்தல் சிறப்பெனக் கருதப்பட்டது. இதனை,

பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்து நனி பெறுதலும் உரியள் மாதோ (ஐங்., 442. 1 – 2)

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. தலைவன் பாசறையில் இருக்கிறான். தன் தலைவியின் நினைவு வருகிறது. அரசன் சீக்கிரம் வினை முடித்தால் நாம் விரைவில் நம் தலைவியிடம் செல்லலாம். அவளும் விருந்தினை செய்யும் மகிழ்ச்சியைப் பெறுவாள் என்று கூறுகிறான். இங்ஙனம் விருந்து கொடுக்க இயலாது வருந்துதல் என்ற அக நிகழ்வும், தலைவன் பாசறையில் இருந்து போர் செய்தல் என்ற புற நிகழ்வும் இங்கு சுட்டப்பட்டுள்ளது.

மோர் விற்றல்

மோர் கடைதல் மற்றும் விற்றல் என்பது ஆயர் மகளிருக்கு மட்டும் உரியதான வேலையாகும். முல்லை நிலத்தில் கால்நடைகள் மிகுதியாக வளர்க்கப்பட்டமையால், அங்கு உபரி பால் கிடைக்கப் பெற்றது. உபரியான பாலில் உறையிட்டு தயிராக்கி, மோர் கடைந்து விற்றுள்ளனர். மோர் விற்க சென்ற தலைவியைக் கண்டு தலைவன் காதல் கொள்கிறான். இவர் மோர் விற்கும் அழகைப் பின்வருமாறு கூறுகிறான் தலைவன்

கார்ஆரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராத சென்று, பெரும் பதவப்புல் மாந்தி
நீர்ஆர் நிழல குடம் சுட்டு இனத்துள்ளும்
போர் ஆரா ஏற்றின், பொரு நாகு, இளம்பாண்டில்
தேர் ஊர, செம்மாந்தது போல், மதைஇனள்
பேர் ஊரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மோரோடு வந்தாள் – தகை கண்டை; யாரோடும்
சொல்லியாள் அன்றே வனப்பு (கலித்., 109. 1 – 8)

என்ற பாடல் வரிகளில் மோர் விற்கப் போகும் தலைவியைக் கண்டு தலைவன் தன் நெஞ்சோடு கூறுவதாக அமைந்துள்ளது. இதில் தலைவியின் அழகு தலைவனுக்கு செய்த நோய் சுட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் தலை மக்களின் காதல் வாழ்க்கையில் மோர் விற்றல் என்ற புற வாழ்வும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணமுடிகிறது.

உப்பு விற்றல்

உமணர்கள் உப்பு விற்கச் செல்லும் போது தங்கள் குடும்பத்துடன் செல்வது வழக்கம். உப்பு வணிகரின் வண்டிகளின் பூண் நடுகல்லை சிதைக்கும் என்றும், ஊர் தோறும் உப்பு விற்க செல்லும் உமணர்கள் பாலை நிலத்தில் தங்கி அடுப்பு மூட்டி உணவு சமைத்து உண்டுவிட்டு சென்றுவிட, அந்த அடுப்பில் மறவர் இறைச்சி சமைத்து உண்ணும் நிகழ்ச்சியை அகநானூறு கூறுகிறது.

மீன்பிடித்து சிறிய குடிசையில் வாழும் பரதவ மக்கள் உப்பங்கழிகளில் உழாமல் உப்பினை விளைவித்து அவற்றை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு கையில் சாற்றுக் கோலைக் கொண்டு எருதுகளை ஓட்டிச் செல்கின்றனர். இந்நிகழ்வை அகநானூற்றில் காணமுடிகிறது. ஆணும் பெண்ணும் தம் பிள்ளைகளுடன் குடும்பமாக இணைந்து தொழில் செய்துள்ளதை அறியமுடிகிறது. உப்பு விற்கும் தலைவியைக் கண்ட தலைவன் அவள் பால் காதல் கொண்டு தவிக்கும் நிகழ்ச்சி அகநானூற்றில் சுட்டப்பட்டுள்ளது.

சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' எனச்
சேரி விலைமாறு கூறலின், மனைய
விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூ தள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே. (அகம்., 140. 6 – 15)

என உமணர் மகள் தன் கைகளில் வளைகள் ஒலிக்க கைகளை வீசிச் சென்று நெல்லுக்கு இணையான உப்பு தருவதாக கூவிக் கொண்டு போவாள். அவள் குரலைக் கேட்டு புதிய ஆள் என்பதை உணர்ந்த நாய் குரைக்க, அதைக் கேட்டு அப்பெண் அச்சமுறுகிறாள். அத்தகைய அவளது கண்கள் எனக்கு வண்டியை இழுக்க முடியாமல் இழுக்கும் எருது அடைந்த துன்பதைத் தருகின்றன எனக் கூறுகிறான் தலைவன்.

உப்பு விற்ற தலைவியினால் தலைவன் காதல் நோய்க்கு ஆளாகி துன்பம் அடைவது சுட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் தலைவியின் உப்பு விற்கும் புற நிகழ்வோடு தலைமக்களின் காதல் நிகழ்வும் சுட்டப்பட்டுள்ளது.

மீன் காயவைத்தல்

நெய்தல் நிலத்தில் பெண்களின் முக்கியத் தொழில் மீன் காய வைத்தல் ஆகும். நெய்தல் நிலத் தலைவி ஒருத்தியைக் கண்டு காதல் கொண்ட தலைவன் அவளது தோழியை அணுக, அவள் அவனை மறுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப் புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ
புலவு நாறுதும் செல நின்றீமோ (நற்., 45. 6 – 8)

என்ற பாடல் வரிகளில் தலைவியாகிய இவள் மீன் பிடித்து வாழும் பரதவருடைய மகள். நீயோ தேரை உடைய செல்வ செழிப்பு மிக்க குடும்பத்து மகன். நம் இருவர் குடும்பத்துக்கும் தங்கள் காதல் ஒத்துவராது. நாங்கள் எங்கள் குடும்பத்தார் பிடித்து வந்த சுறா மீனை அறுத்து காய வைத்துக் காவல் காக்கும் தன்மை கொண்டோர். எங்கள் மேல் புலவு நாறும். நீங்கள் செல்க என்று கூறுகிறாள் தோழி. தோழி வழியாகக் கூறப்பட்டாலும் இப்பாடலில் சொல்லப்பட்டது தலைமக்களின் காதல் வாழ்க்கையே ஆகும்.

தலைவி சுறாமீனைக் காய வைக்கும் வேலை செய்பவள் என்பதையும், அவளைக் காதலிக்கும் செல்வத்தில் உயர்ந்த தலைவனையும் இப்பாடல் சுட்டுகிறது. இங்குத் தலைவனின் காதல் மறுக்கப்படுகிறது. இங்ஙனம் தலைவியின் பொருளாதார நடவடிக்கை மற்றும் அவளது சிறுகுடி வாழ்வு தலை மக்களின் காதல் வாழ்க்கைக்குத் தடையாக இருப்பதைக் காணமுடிகிறது. தலைமக்களின் காதல் உணர்வைத் தீர்மானிக்கும் காரணிகளில் பொருளாதார நிலை முக்கியமாக இருந்துள்ளதை மேற்கண்ட நெய்தற் பாடல் சுட்டுகின்றனது.

முடிவுரை

அகமும் புறமும் பிரிக்க முடியாதவை. புறப்பாடல்களில் அக நிகழ்வுகளைக் கூறுதல் தமிழ் மரபில் இல்லை. ஆனால் அகப் பாடல்களில் ஏராளமான புற நிகழ்வுகள் சுட்டப்பட்டுள்ளன. பெண்களைப் பொறுத்தவரை நேரடியாகப் போர்களில் பங்கெடுத்துக் கொண்ட குறிப்புகள் இல்லை எனினும், போருக்குச் சென்ற தலைவனின் குடும்பம் உட்பட, குடும்பம் என்ற அளவில் உள்ள எல்லா பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இதனைச் சங்க அகப்பாடல் பல விளக்குகின்றன. அதிகமாக களவு வாழ்க்கையில் பெண்களின் பொருளாதார நடவடிக்கைகள் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. களவு வாழ்க்கை என்பது வீட்டுக்கு வெளியே நடைபெறக்கூடியது. அது பெண்கள் வெளியில் வேலை செய்யப் போகும் போது அதற்கான சூழல் உருவாகிறது. எல்லா அகப்பாடல்களிலும் தலைவி நேரடியாகப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடாவிட்டாலும் ஏதேனும் ஒரு புற

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நிகழ்வு பின்னணியாகவேனும் வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் பெண்கள் ஆண்களைப் போன்றே அகப்புற நடவடிக்கைகளில் ஈடுபட்டு சமூகத்திற்குத் தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளமை சங்கப்பாடல்கள் வழி புலனாகிறது.

துணைநூற் பட்டியல்

[1] பரிமணம் அ. மா (ப. ஆ), சங்க இலக்கியம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[2] மாதையன், பெ. *அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.

[3] அம்மன்கிளி முருகதாஸ். *சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்.* குமரன் புத்தக இல்லாம், சென்னை, 2006.

[4] தனிநாயக அடிகள். *நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

[5] கைலாசபதி, க. *தமிழ் வீரநிலைக் கவிதை.* குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.

[6] அமிர்த கௌரி, ஆ, *சங்க இலக்கியத்தில் உரையாடல்.* பாரி நிலையம், சென்னை, 1989.

[7] சரளா ராசகோபாலன். *சங்க இலக்கியத்தில் தோழி.* அலைகள் அச்சகம், சென்னை, 1988.

[8] கலைமணி, கா. *சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்.* நிலாசூரியன் பதிப்பகம், சென்னை, 2016.

[9] சண்முகம் பிள்ளை, மு. *சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

[10] ஜெப மனோபன், பொ. *செம்மொழியை உருவாக்கிய சமூக அமைப்பு.* (முனைவர்பட்ட ஆய்வேடு) சென்னை பல்கலைக் கழகம், 2014.

[11] கிறிஸ்டோபர் காட்வெல். *கானலும் உண்மையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Female Oppression in Family Life

C. M. Flora, Tamil Research Scholar, Nesamony Memorial Christian College, Marthandatm, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
Dr. E. Jasmin Viji, Assistant Professor, Tamil Research Centre, Nesamony Memorial Christian College, Marthandatm, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu.India.
ORCiD: https://orcid.org/0009-0001-7489-441X
DOI: 10.5281/zenodo.14752400

Abstract

Female enslavement has been a form of cruelty against women since time immemorial in all societies. A man can get whatever he wants but when a woman is brought up she is brought up by saying that the woman has certain limits. Thus, a woman has to be under the control of her father before marriage and after marriage, she has to submit herself to her husband and after the death of him, she has to be under the safety of her son. She is subjected to many cruelties. She is forced to live as a slave throughout her life. Marriage is between a man and a woman. In fact, a woman is a sacred one to establish a family. A husband and wife relationship is very noble. But when a husband dominates his wife in the familial relationship, a turbulent situation occurs and affects his family and also the society. It will spoil the children of the family. Due to this, the woman suffers a lot mentally. Through this article, one can know how the woman is mentally affected by the domineering action of her husband.

Keywords: Women, Happiness, Beauty, Growth, Life.

References

[1] Isakiammal, B, Dr. *Pen Mana Sikkal*. Kavya Patippagam. Mutarpatippu, April, 2009.
[2] Kalaivani, N, Dr. *Tamil Putinankalil Tamil Odukkutalum Pirassanaikalum*. Kavya Patippagam, 2013.
[3] Goumareeswari, S. *Thirukkural Parimelazagar Urai*. Sharada Patippagam, 2002.
[4] Sukirtha Basmath, S. Dr. *Penkal Nettu Intu Nalai*. Sarash Patippakam, 2006.
[5] Parimala, S. *Makalirin Panmuka Nokku*. Tamil Palkalaikazhka Veliyedu, 2009.
[6] Prema, Ira. *Penniyam.* Tamil Puttakalayam Patippakam, Mutal Patippu, April 2000.
[7] Puliyoorkesigan. *Kuruntokai Mulamum Uraiyum*. Sarata Patippakam, 2010.
[8] Murukesan, M. Dr. *Marivarum Samutayattil Manitan*. Ganga Rani Patippagam, 2006.
[9] Johnsi Balraj, D. Dr. *Devatasi Murai Ozhippiyal*. Emikar Michael, 2024.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குடும்ப வாழ்வில் பெண் ஒடுக்குதல்

செ. ம. புளோரா, பதிவு எண் 23213114022019, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
முனைவர் எ . ஜாஸ்மின் விஜி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-7489-441X
DOI: 10.5281/zenodo.14752400

ஆய்வுச் சுருக்கம்

பெண் அடிமைப்படுத்தப்படுவது என்பது காலங்காலமாக பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமையாக தொடர்ந்து கொண்டே வருகின்றது. பெண் வளர்க்கப்படும் பொழுது ஆண் எப்படி வேண்டுமானாலும் இருப்பான் பெண்தான் அனுசரித்துப் போக வேண்டும் என்றெல்லாம் சொல்லி வளர்க்கப்படுகிறாள். இதனால் திருமணத்திற்கு முன் தன் தந்தைக்கும் திருமணத்திற்கு பின் கணவனுக்கும் கணவன் இறந்த பிறகு மகனுக்கும் அடிபணிந்து பல கொடுமைகளுக்கு ஆளாகிறாள். அவள் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறாள். பெண் என்பவள் ஒரு குடும்பத்தை நிறுவுவதற்காக உள்ள புனிதமான இடமாகும்.கணவன் மனைவி உறவில் கணவன் தன் மனைவிடம் ஆதிக்கத்தை செலுத்தும் போது அவனுடைய குடும்பத்தை மட்டுமல்ல அந்த சமுதாயத்தை பாதிக்கக்கூடிய சூழல் ஏற்படுகிறது. இதனால் பெண் மனதளவில் பெருமளவு பாதிக்கப்படுகிறாள்.கணவனின் ஆதிக்க செயலினால் பெண் எவ்வாறு மனதளவில் பாதிப்புக்கு உள்ளாகிறாள் என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடியும்.

குறிப்புச்சொற்கள்: மகளிர், மகிழ்ச்சி, அழகு, வளர்ச்சி, வாழ்க்கை.

முன்னுரை

குடும்ப உறவுகளில் முதன்மையானது கணவன் மனைவி உறவு. திருமணத்திற்குப் பின் ஒரு பெண்ணுக்கு பாசமிகு உறவு எதுவென்றால் அது கணவனின் உறவாகும். எனவே பெண் தனது கணவனைப் பற்றிய பல்வேறு கற்பனைகளுடனும், கனவுகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் தனது திருமண வாழ்வினை தொடங்குகிறாள். அவளது எதிர்பார்ப்புகள் திருமணத்திற்கு பின் ஏமாற்றம் அடையும்போது அவள் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகிறாள். பெற்றோரால் மிகவும் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டாலும் திருமணத்திற்குப் பின் கணவனின் சுய கட்டுப்பாட்டிற்கு அடங்கி பல பிரச்சினைகளை சந்திக்கிறாள். பெண் சுதந்திரமின்மை, தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமை, அடிமைத்தனம் போன்ற வாழ்க்கை வாழ கட்டாயப்படுத்தப்படுகிறாள். கணவனின்

ஆணாதிக்க உணர்வும் அதிகாரப் போக்குகளும் மனைவியின் உணர்வுகளை பாதிக்கும் செயல்களாக அமையும் போது கணவனின் ஒவ்வொரு செயல்களும் மனைவியை ஏதோ ஒரு விதத்தில் ஒடுக்குதலுக்கு உள்ளாக்குவதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கணவன் -மனைவி உறவு

குடும்பத்தில் பெண் தாய், மகள், மனைவி, மருமகள், சகோதரி என்னும் நிலையில் அமைந்திருக்கும் உறவுகள் தான் அடிப்படையான உறவுகளாக அமைந்துள்ளது. இவ்வுறவுகளில் எல்லாம் முதன்மையான உறவாக திருமணத்திற்கு பின் ஒரு பெண்ணுக்கு அமைவது கணவன் மனைவி உறவாகும். திருமணத்திற்கு பின் பெண் மனைவி என்ற நிலையைப் பெறுகிறாள். இவ்வுறவு வாழ்வின் இறுதிவரை நீடித்து நிற்கக் கூடிய உறுதியான இணைப்பாகும். திருமணத்தின் வழி இணைந்து தான் என்ற தன்மை அழிந்து, நாம் என்ற நிலையை அடைவர். குறுந்தொகை பாடலில்,

வினையே ஆடவர்க்கு உயிரே
மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிரே (குறுந்., 135: 1-2)

என்று மனைவிக்கு தன் கணவன் தான் உயிர் போன்றவன் என்று எடுத்தியம்புகிறது.

திருக்குறளில் திருவள்ளுவரும் வாழ்க்கைத் துணைநலம், மனைமாட்சி அதிகாரத்தில் பெண்ணின் சிறப்பினை பெருமைப்பட மொழிந்துள்ளார். இதனை,

தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலான் பெண் (குறள். 56)

கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதி யமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவள் பெண்.மேலும்,

இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை (குறள். 41)

வாழ்க்கை முறையான இல்லறத்துக்கு ஏற்றமும் நிறைவும் தருபவர் பெண்ணே. ஆணை மணந்து, மனங் கலந்து, வீடு நிறையும் மகிழ்வும் மாட்சியையும் உற்ற துணையாகவும் நிற்பவர் மகளிர்.இத்தகு சிறப்புமிக்க மனைவியை ஆணாதிக்க போக்கினால் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவது தான் கேள்விக்குறியாக உள்ளது.கணவனின் அன்றாட செயல்களில் மாற்றம் ஏற்படும் போது அவள் ஒவ்வொரு நிலையிலும் உள்ளம் ஒடுக்கப்படுவதை பின்வரும் கருத்துக்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும் .

கணவனின் அன்பின்மை

திருமண உறவில் கணவனும் மனைவியும் அன்பு சங்கிலியால் பிணைக்கப்படும் பொழுது உறவு வலுப்பெறுகிறது. திருமணத்திற்கு பின் கணவனுடன் வாழும் பெண் மகிழ்ச்சியின் மொத்த உருவமாக காணப்படுகிறாள். துக்கத்தில் தோள் கொடுக்கவும், தப்பு செய்தால் அதனை சுட்டிக் காட்டி திருத்தவும், நன்மை செய்தால் அதை பாராட்டவும்,

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளவும், வளர்ச்சியில் துணை நிற்கவும் பெண்ணுக்கு ஆண் ஊன்றுகோலாக இருக்க வேண்டும். கணவரின் அன்பு கிடைக்காத போது மனைவி தான் புறக்கணிக்கப்படுவதாக எண்ணுகிறாள். கணவன் மனைவியிடம் அன்பு கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் கணவனின் தீய எண்ணங்களும், செயல்களும் தான் மனைவி தனக்கு கட்டுப்பட்டவள் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழமாக பதிந்திருப்பதால், தன்னுடைய அனுமதி இல்லாமல் மனைவி எந்த இடத்துக்கு சென்றாலும் அதனை அவன் ஏற்றுக்கொள்ளாமல் காரணம் கேட்டு துன்பப்படுத்துகிறான்.இதற்கு காரணம் குடும்பம் என்ற அமைப்பும் திருமணம் என்னும் பந்தமுமாகும் என்று பெண் கருதுகிறாள்.பெண் விடுதலை என்பது திருமணம் முறையை அடியோடு அழித்தாலும் ஒழிக்க முடியாது (பிரேமா, இரா. ப: 85) பெண்ணியம் என்ற நூலில் சுட்டிக்காட்டுகிறார். எனவே திருமண உறவில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் அதிலிருந்து முயற்சி செய்து வெளியே வந்தாலும் சமுதாயத்தின் இழிவான வார்த்தைகளுக்கு ஆளாக்கப்பட்டுகிறாள் பெண்.

தாழ்வு மனப்பான்மை

கணவன் தன்னிடம் அழகின்மை, அறிவு கூர்மையின்மை, உடல் குறைபாடு போன்ற காரணங்களால் தன்னை தாழ்வுமனப்பான்மையோடு எண்ணிக் கொண்டு, மனைவியிடம் அவளது அறிவு, அழகு, திறமை, சிந்திக்கும் ஆற்றல் இவைகளைக் கண்டு அவளை மனதளவில் தனது இயலாமையை சுட்டிக்காட்டி பாதிப்புக் குள்ளாக்குகிறான். வார்த்தைகளாலும் செயல்களாலும் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்குகிறான். பெண்ணுக்கு எத்தனை முறை மனதளவில் பாதிப்புகள் வந்தாலும் கணவன் ஒரு சில நேரங்களில் அன்பு காட்டும் போது கணவனால் ஏற்பட்ட மனக்காயங்களை ஒரு பொருட்டாகவே அவள் நினைப்பதில்லை. ஆனால் வாழ்க்கை ஏமாற்றமாக தோல்வியாக அமையும் பொழுது அவள் மனதளவில் பாதிப்புக்குள்ளாகி எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகி விடுகிறது.கணவனின் தாழ்வு மனப்பான்மையால் வாழ்வின் அடுத்த நிலைக்கு அடி எடுத்து வைக்க முடியாமல் தடுமாற்றம் அடைகிறாள்.கணவன் மனைவியை புரிந்து கொண்டால் மட்டுமே இதிலிருந்து வெளிவர முடியும்.

கணவனின் ஆதிக்கம்

அன்றிலிருந்து இன்று வரை பெண் என்பவள் தன் உடல் மீது தானே உரிமை கொண்டாட முடியாதபடி ஆணுக்கு மட்டும் உரிமை உடைய ஒரு பொருளாக சமுதாயம் பெண்ணை மதிப்பிட்டு வைத்துள்ளது. திருமணம், இல்லறம் என்ற மரபினால் வீடு எனும் கூட்டுக்குள் அடைத்து கணவன் தனது ஆதிக்க சக்தியினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் வருத்துவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. திருமணத்திற்கு பின் பிள்ளைகளின் வாழ்க்கை கண்டு பெற்றோர்கள் எதிர்த்து பேச முடியாமல் தவிக்கும் நிலைகள் தான் இன்று ஏராளம்.கணவன் வீட்டில் மகள் கொடுமைக்கு ஆளாவதை கண்டும் கேட்டும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

எதிர்த்து போராட முடியாமல் தடுமாறுகிறார்கள். பெண்ணுரிமை, முன்னேற்றம், பெண்களுக்கு சம அந்தஸ்து என்றெல்லாம் மேடை போட்டு முழங்கும் ஆண்கள் தங்களது வீடுகளில் உள்ள பெண்களுக்கு முழு சுதந்திரமும் மதிப்பும் கொடுக்கிறார்களா என்றால் அது கேள்விக்குறியாக தான் இன்றும் நம் சமுதாயத்தில் இருக்கிறது. ஆதிக்க போக்குள்ள ஆண்களால் பெண்கள் அதிகமாக பிரச்சனைகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாவது குறித்து வ.உமாராணி அவர்கள் கூறும் போது,

> **பெண்களிடையே ஆடவர் துணை இன்றி வாழ இயலாது என்ற கருத்து நிலவுவதால் பெண்கள் ஆடவர்களால் பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். மக்களிடையே நிலவும் இவ்வண்ணத்தை அறிந்து கொண்டு தான் ஆடவர் சமுதாயம் பெண்களுடைய துணை வேண்டும் என்ற நிலை இருந்தும் காட்டிக்கொள்வதில்லை." (இசக்கிஅம்மாள், ஆ, முனைவர். ப. 31)**

பெண்மனச் சிக்கல்கள் என்னும் நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு காரணமாய் அமைவது அவள் தனக்கு நேரும் துன்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருப்பதாகும். சில பெண்கள் அனுபவிக்கும் ஒடுக்குதல்கள் வெளியில் சொல்ல முடியாத சோகங்களாக அவளுக்குள்ளையே அமிழ்ந்து போய் விடுகின்றன. ஆணின் ஆதிக்க சிந்தனைகளால் பல இன்னல்களுக்கு ஆளாகும் பெண்களில் சிலர் தங்களது வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.மேலும்,

> **தொழில் காரணமாக வீட்டை விட்டு வெளியில் செல்லும் கணவன் வீட்டுக்கு நுழையும் போது கணவனின் உடல் மற்றும் மனம் சார்ந்த தேவைகளை முன்வந்து நிறைவேற்றுவதே பெண்ணின் கடமையாக கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எதிர்ப்பார்ப்பு ஆதிகால சமுதாயத்திலிருந்து இன்று வரை நிலவி வருகிறது. (ஜான்சி பால்ராஜ், த, முனைவர், ப. 12)**

எந்நேரம் ஆனாலும் கணவனின் வருகைக்காக காத்திருந்து அவனிடம் எந்த கேள்வியும் கேட்கக்கூடாது என்று ஒரு சில ஆணாதிக்க சக்திகள் எதிர்பார்ப்பது அவமானத்துக்குரிய செயலாக காண முடிகிறது. கணவனின் தேவைகளை பூர்த்தி செய்வது தான் மனைவின் வேலை என்று இச்செயல்கள் மூலம் உணர முடிகிறது. இத்தகைய ஆணாதிக்க சிந்தனைகளை வென்று ஒரு சில பெண்கள் வெளியே வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

அவமானப்படுத்தப்படும் நிலை

குடும்பத்தில் கணவனின் தேவைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பணிவிடை செய்து, கணவன் போற்றும் படியாக வாழும் பெண் ஏதேனும் ஒரு கொடிய நோயின் தாக்குதலுக்கு ஆளாகும் பொழுது கணவனா டச்சு நவநவல் வெறுத்து ஒடுக்கப்பட்டு தீண்ட தகாதவளைப் போல் கருதப்படுகிறாள். இன்பம் துன்பம் எது வந்தாலும் இருவரும் சமமாக

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பங்கிட்டு கொள்வோம் என்று திருமணத்தின்போது கூறிய கணவன் இயலாமையில் இருக்கும் போது மனைவியை வெறுத்து ஒதுக்கி அவமானப்படுத்தும் நிலை இன்றும் சமுதாயத்தில் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கிறது.

> **என்னதான் குடும்பம் என்னும் தத்துவம் மிக உயர்ந்த அர்த்தம் பொருந்திய புனிதமாக போற்றி பாதுகாக்க வேண்டிய அமைப்பாக இருந்தாலும், பெண்ணுக்கு அது நரகமாகிவிடுகிறது எனில் அதை உடைத்து நொறுக்கி வெளியேறுவது அந்தப் பெண்ணின் முதல் சுதந்திரமாகும் (கலைவாணி, நா, முனைவர். ப. 22).**

இக்கருத்திற்கு ஏற்ப ஒரு சில பெண்கள் வெளியேற முயற்சி செய்கிறார்கள்.ஆனால் ஒரு சில பெண்கள் முயற்சி செய்யும் போது கணவன் மனைவியிடம் சந்தேகம் கொண்டு தகாத வார்த்தைகளால் அவமானப்படுத்தும் போது மனதளவில் பாதிக்கப்பட்டு கூனிக் குறுகி யாரிடமும் பேசும் அளவிற்கு தைரியம் இல்லாமல் வீட்டுக்குள்ளே முடங்கி போகிறாள். பிற ஆண்களுடன் பேசுவதையும் தவறாக எண்ணி அவமானப்படுத்தி வீட்டு சிறைக்குள் கைதிபோல் வைத்திருக்கும் ஆண்களும் இக்கால சூழலில் உள்ளனர்.

அன்பு, கருணை, மனிதாபிமானம், ஒழுக்கம், நேர்மை, விட்டுக் கொடுத்தல், இயலாமையில் உதவுதல், போன்ற உயர்ந்த எண்ணங்கள் மறைந்து மனைவியும் ஒரு மனித உயிர் போன்றவள் என்று மதிக்கும் பண்பு குறைந்து வருகிறது. திருமணம் என்பது ஒரு பெண்ணின் முடிவான தீர்ப்பு அதை மாற்ற முடியாது. முரண்பாடுகளை கொண்ட கணவன் ஆனாலும் வாழ்ந்தே தீர வேண்டும் என்ற கட்டாயத்தில் பெண்கள் என்றும் ஒடுக்குதல்களுக்கும் அவமானத்திற்கும் அடிபணிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனைவி தன் விருப்பப்படி நடக்க வேண்டும் என்பதோடு அல்லாமல் தன்னுடைய ரசனைக்கு ஏற்றவளாக நடந்து கொள்ள வேண்டும். அழகு, பண்பு ,உடல் தோற்றம், மனநிலை இவைகளில் எல்லாம் தனக்கு ஒத்துப் போக வேண்டும் என்று விரும்புகிறான். அவ்வாறு இல்லை என்றால் அவமானத்திற்குள் தள்ளப்படுகிறாள். அவமானம் அடையும் பெண்கள் சமையலறையில் முடங்கி போகிறார்கள். கணவன் பணக்கார குடும்பத்தை சேர்ந்தவனாக இருந்து அவனுக்கு மனைவியாக அமையும் பெண் ஏழை குடும்பத்தை சேர்ந்தவளாக இருந்தாலும் கணவனால் அவமானத்துக்குள் உள்ளாக்கப்படுகிறாள். தன்னுடைய உயர்ந்த நிலையைக் கூறி மனைவியை அடுத்தவர்கள் முன் தாழ்வாக அவமானப்படுத்தி பேசும் சூழலும் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கிறது.

கணவரின் பொறுப்பின்மையும் குடிப்பழக்கமும்

திருமணத்திற்கு பின் மனைவி குழந்தைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கணவனை சார்ந்ததாகும். இச்சூழலில் தனது பொறுப்பினை தட்டிக் கழிக்கும்போது மனைவியானவள் மனசிக்கலுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. பெரும்பாலும் குடும்பத்தின் மீது பொறுப்பும் அக்கறையும் எடுத்துக் கொள்ளாமல், இருப்பதற்கு காரணம்

கணவனின் குடிப்பழக்கமாகும். குடிப்பழக்கத்திலிருந்து கணவரால் மீள முடியாத சூழலில் மனைவி அப்பொறுப்பினை ஏற்று சிரமப்படும் சூழல் ஏற்படுகிறது. கணவனின் குடிப்பழக்கத்தினால் பொருளாதார சிக்கலும் ஏற்பட்டுவிடுகிறது. புகுந்த வீடு அல்லது பிறந்த வீடு ஆதரவு இருந்தால் மட்டுமே மனத்துணிவுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள முடியும். இச்சூழல் இல்லை என்றால் மனைவியும் வேலைக்கு செல்வதுதான் ஒரே வழி. இதனால் மனைவியானவள் வீட்டு வேலைகளையும் கவனித்து வெளியே வேலைக்கும் சென்று தனது குடும்பத்தை பாதுகாக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறாள். மனைவி எவ்வளவுதான் சிரமப்பட்டு சிக்கனமாக பொறுப்பாக இருந்தாலும் கணவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உழைப்பற்றவனாக இருந்தால் வாழ்க்கையில் ஒரு தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும் என்பது அன்றாட வாழ்வின் மூலம் உணர முடியும்.

கணவனின் பாலியல் பிறழ்வு

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற தொன்மை பழமொழிகளை தற்கால பெண்கள் மதித்து கணவனின் நிலை குறித்து மனதிற்குள் எண்ணி மன நோயாளியாக மாறும் நிலை காணப்படுகிறது. எந்த மனைவியும் தன் கணவன் திருமணத்துக்கு பின் நெறிபிறழ்ந்து பிற பெண்களுடன் உறவாடுவதை ஏற்றுக் கொள்வதில்லை. கணவனின் நெறிபிறழ்ந்த வாழ்வை பிறர் கூறும் போது, மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகிறாள். இதனால் பிரிந்து வாழும் நிலையும் நேரிடுகிறது. மனைவியும் தன்னை போன்ற ஒரு உயிர் என்ற எண்ணம் கணவனிடம் இல்லாதவரை பெண் மனைவி என்ற நிலையில் அடிமையாக தான் இருந்து கொண்டிருக்கிறாள்.

> **சேறு கண்டவிடம் மிதித்து நீருகண்டவிடம் கழுவி வருவான் ஆண் பிள்ளையவன் என்பன போன்ற சொல்லாடல்கள் கற்பு ஆணுக்கு உரியதல்ல என்று உணர்த்தவே ஏற்படுத்தப்பட்டன (ஜான்சி பால்ராஜ், த, முனைவர். ப. 15)**

பெண் மட்டும் உடலையும் மனதையும் பிற ஆண்களிடம் இருந்து காத்துக் கொள்ள வேண்டும் என்று ஆடவர் விரும்புகின்றனர், தன் கணவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புவதை ஆண்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கணவரின் பெண் பித்து பிறத் தீயப்பழக்கங்களை காட்டிலும் பெண்ணுக்கு மிகுந்த அவமானத்தை தருகிறது. இதனை சிலப்பதிகாரத்திலும் கண்ணகி கோவலனிடம் **போற்றா ஒழுக்கம் புரிந்தீர் (முருகேசன், மு, ப: 78)** என்று குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது. கணவனின் பாலியல் பிறழ்வு மனைவியின் தன்மானத்தை பாதிக்கிறது. தன் பெண்மை மதிக்கப்படாவிட்டாலும் மிதிப்படாமல் இருந்தால் போதும் என்ற எண்ணமே இன்றைய காலங்களில் பெண்களின் ஆதங்கமாக உள்ளது.

மனைவியின் ஆளுமை

குடும்ப அமைப்பில் கணவனின் தனித்தன்மை மனைவியால் போற்றப்படுவது போல் மனைவியின் ஆளுமைத் திறன் கணவனால் சில இடங்களில் போற்றப்படுவதில்லை. **ஆணும்**

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்கும் (கலைவாணி, நா, முனைவர். ப. 58) இக்கருத்து ஆண்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என அன்றாட செயல்கள் மூலம் அறிய முடிகிறது.சமுதாயத்திலும் குடும்பத்திலும் பெண்களின் ஆளுமையை ஏற்றுக் கொள்வது என்பது மிக மிக அரிதாக உள்ளது .கணவனின் ஆளுமையோடு மனைவியின் ஆளுமையை இணைத்து பேசாமல் மனைவியை மட்டம் தட்டி பேசும் கணவன்மார்களும் இச்சமுதாயத்தில் ஏராளம். மனைவியின் அழகு புத்திசாலித்தனம், சுறுசுறுப்பு கலைத்திறன்கள் போன்றவற்றை போற்றத் தெரியாத கணவனால் மனைவிக்கு மனச்சிக்கல் ஏற்படுவது கணவனின் அறியாமையின் உச்சகட்டம் ஆகும். அவளது கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும், மனைவியிடம் கேட்காமல் ஒரு காரியத்தை முடிவெடுத்து விட்டு தகவலை மட்டும் கூறுவதால் அங்கு மனைவியின் கருத்துக்கு இடம் இல்லாமல் போகிறது. உணவுக்கும், படுக்கைக்கும் மட்டுமே மனைவியை பயன்படுத்திவிட்டு அவளது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத கணவனால் மனைவி உள நோய்க்கு ஆளாகிறாள்.

மனைவியை பிறந்த வீட்டிற்கு செல்ல விடாமை

ஒரு பெண் திருமணமான பின்னர் தன் பிறந்த வீட்டிற்கு அடிக்கடி போகவோ, பெற்றோருக்கு உதவிடவோ கூடாது என்று கணவனோ கணவன் விட்டாரோ தடை செய்யும் நிலை இன்றும் காணப்படுகிறது. கணவர் வீட்டார் கூறினாலும் கணவன் மனைவிக்கு ஆதரவாக பேசி மனைவிக்காக தன் தாய் தந்தையிடம் பேசுவது இயலாத ஒன்றாக இருக்கிறது. பெண் என்பவள் திருமணமானவுடன் மடியில் வைத்த பொருளை உதறுவது போல் பிறந்த வீட்டு உறவுகளையும், நட்புகளையும் உதறிவிட்டு வந்துவிட வேண்டும். என்று புகுந்த வீட்டார் நினைப்பது மிக கொடுமையான செயலாகும். ஒரு செடியை பிடுங்கி இன்னொரு இடத்தில் நடுவதானால் கூட அது முளைத்த இடத்தில் வேரடி மண்ணோடு தான் எடுத்துச் சென்று புது இடத்தில் நடுவது வழக்கம். வேரடி மண்ணை உதறி விட்டு நட்டால் சரியாக வேர் பிடிக்காது. செடிக்கு அப்படி என்றால் உணர்வுபூர்வமாக 20 ஆண்டுகளோ அல்லது அதற்கு மேல் பிறந்த வீட்டில் வாழ்ந்த பெண் எவ்வளவு அன்பையும் பாசத்தையும் வேரடி மண்ணாக கொண்டிருப்பாள் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. எனவே, பிறந்துவீட்டு உறவுகளை நியாயமான அளவு மதிக்க வேண்டிய கடமை கணவனுக்கும் அவனை சேர்ந்தவர்களுக்கும் உண்டு. இது கணவனும் அவனது வீட்டாரும் தவறும் போது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படும் சிக்கல் இருவரும் பிரிந்து வாழும் நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

குழந்தையின்மை

கணவனின் ஒடுக்குதலுக்கு மிக முக்கிய காரணமாக ஒரு பெண்ணுக்கு அமைவது குழந்தை பேறின்மை ஆகும். கணவனிடம் குறைபாடு இருந்தாலும் மலடி என்ற சொல் மனைவியின் மீது தான் சுமத்தப்படுகிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

காலம் கடந்த திருமணத்தாலும், ஏதேனும் கருப்பையில் குறைபாடுகள் இருந்தாலும் ஊட்டச்சத்து குறைவாலும் இந்நிலை ஏற்பட வாய்ப்புகள் உண்டு (பரிமளா, சா. ப.51).

கணவன் மனைவி இருவருக்கும் இது உண்டு. இதனை புரிந்து கொள்ளாத ஆயிரம் பஞ்சஆண்மையற்ற தன்மையை மூடி மறைக்க மனைவி மேல் குற்றங்களை சுமத்தி அவளை ஒடுக்குதலுக்கு உள்ளாக்குவதோடு தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்கின்றனர். தனக்கு குழந்தை பேறின்மைக்கு கணவன் தான் காரணம் என்று தெரிய வந்தாலும் பல பெண்கள் குறிப்பாக படித்த பெண்கள் கூட அதை வெளிக்காட்டுவதில்லை. இந்த மனதிலே ஆண்களிடம் ஏற்படாமல் இருப்பது வேதனைக்குரிய செயலாக இருக்கிறது .திருமணமாகி ஒரு சில வருடங்களிலே குழந்தை பிறக்கவில்லை என்றால் பெண்ணிடம் மட்டுமே குறை உள்ளதாக சுட்டிக்காட்டி பெண்ணை குறை கூறும் வழக்கம் தொன்றுதொட்டு இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் வருடங்கள் செல்ல செல்ல கணவரின் எண்ணங்களில் மாற்றம் ஏற்படும் போது அவனது வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் கண்டு மன வேதனைக்குள் ளாகிறாள். இதனால் இருவரும் பிரிந்து வாழும் நிலைகளும் பெரும்பாலும் அதிக இடங்களில் காணப்படுவதை பார்க்க முடிகிறது.

வரதட்சணைக் கொடுமை

பெண்ணுக்கு சமூகம் இழைக்கும் கொடுமைகளில் தலையானது வரதட்சணைக் கொடுமையாகும். வரதட்சணைக் கொடுமை பெரும்பாலான குடும்பங்களில் புரையோடிப் போயிருக்கும் ஒரு நோயாகும். பெற்றோரால் வரதட்சணைத்தொகை முழுவதுமாக கொடுக்க முடியாது சூழலில் பெண் புகுந்து வீட்டாரால் ஒடுக்கப்பட்டு வாழாவெட்டி என்ற பட்டத்துடன் துன்பங்களை சுமக்கிறாள் வரதட்சிணைக் கொடுமையால் "மணப்பெண் தற்கொலை" என்று நாளிதழ்களில் செய்திகள் வருகின்றன. படிக்காத பெண்கள் என்று இல்லாமல் படித்த பெண்களில் பலரும் இக்கொடுமைக்கு உள்ளாகின்றனர். இது சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாகும் எனினும் கணவனின் குடும்பத்தார் பெண்ணை வார்த்தைகளால் காயப்படுத்தினாலும் அதற்கு ஆதரவாக கணவரும் இல்லாதபோது மனைவியானவள் ஏமாற்றம் அடைகிறாள்.

கணவரின் பொன் பண ஆசையினால் தன்னுடைய வாழ்க்கையை இழந்து நிற்கும் பெண்களே மிக அதிகம். மனைவியின் சீர்வரிசையில் நிறைவு பெறாத கணவனின் மனநிலையைக் கண்டு பெரும்பாலான பெண்கள் தற்கொலை என்ற முடிவினை எடுப்பது மிகவும் வேதனைக்குரிய செயலாகும் .இச்செயல் சமுதாயத்திற்கு இழுக்கான ஒன்றாகும் .இந்நிலை மாறா பெண்கள் விழிப்புணர்வு பெற்று அடுத்த தலைமுறை இப் பிரச்சினைக்கு அடிமையாகாமல் இருக்க தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே பெண்களின் மதிப்பினையும் மாண்பினை ஊட்டி வளர்க்க வேண்டும். இதன் மூலம் அடுத்த தலைமுறையாவது இதிலிருந்து விடுபட முடியும் என்பது திண்ணமான முடிவாகும்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

முடிவுரை

பெண் ஒடுக்குதல் எங்கே துவங்கியது என்று ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களின் வாழ்வின் ஆதாரமாக இருக்கும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்க்குரியன" என்று குறிப்பிடுகிறது. இதனை தவறாக புரிந்து கொண்டுள்ள ஆணாதிக்க சமுதாயம் அச்சம், நாணம், மடம்,பயிர்ப்பு ஆகியவை ஒரு நல்ல பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களாக பார்க்காமல், கணவன் என்பவன் மனைவியை தன் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி ஒடுக்கி அவளது திறமைகளுக்கு மதிப்பளிக்காமல் வைத்திருப்பது இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] இசக்கிஅம்மாள், ஆ, முனைவர். *பெண் மனச் சிக்கல்கள்*. காவ்யா பதிப்பகம், 2009.

[2] கலைவாணி, நா, முனைவர். *தமிழ்ப் புதினங்களில் தமிழ் ஒடுக்குதலும் பிரச்சனைகளும்*. காவ்யா பதிப்பகம், 2013.

[3] கௌமாரீஸ்வரி, எஸ். *திருக்குறள் பரிமேலழகர் உரை*, சாரதா பதிப்பகம், 2002.

[4] சுகிர்தா பஸ்மத், ச, முனைவர். *பெண்கள் நேற்று இன்று நாளை*. சரஸ் பதிப்பகம், 2006.

[5] பரிமளா, சா. *மகளிரின் பன்முக நோக்கு*. தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 2009

[6] பிரேமா, இரா, முனைவர். *பெண்ணியம்*. தமிழ்ப் புத்தகாலயம் பதிப்பகம், 2000.

[7] புலியூர் கேசி. *குறுந்தொகை மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2010.

[8] முருகேசன், மு, முனைவர். *மாறிவரும் சமுதாயத்தில் மனிதன்*. கங்கா ராணி பதிப்பகம், 2006.

[9] ஜான்சி பால்ராஜ், த, முனைவர். *தேவதாசி முறை ஒழிப்பியல்*. எமிகார் மைக்கேல், 2024.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Depictions of Women's Lives in the Short Story Collection *Yevalin Irandam Mudivu*

M. Maharajan, Registration No.: 22113154021009, Tamil Research Scholar, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0000-7514-6299
Dr. P. Malar, Assistant Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752281

Abstract

The short story writer Pavannan has realized the position of women in the social hierarchy and has composed his short stories to express it. He has created environments that suit the theme of his short stories. He has used characters from myths and epics to express his ideas. He has conveyed the thoughts that men generally have about women through the narrators. The author has understood the place of women in the social hierarchy over time and has expressed it in his short stories. Women are depicted in short stories as having a sense of motherhood, being deceived by men in love, and having a compassionate heart for men. The fact that family relationships do not support the development of women and do not respect their basic feelings and rights creates a tightness in their mentality. Through his short stories, Pavannan reveals that the social structure that provides equal rights and participation to both sexes will pave the way for a better future.

Keywords: Mythology, Vasavaththa, Panchali, Damayanti, Sakunthala.

References

[1] Anandhi, N. *Perungathai Moolamum Uraiyum*. Kaura Book store.
[2] Pavannan. *Evalin Irandavathu Mudivu*. Tamilini, 342 T.D.K. Road, Chennai – 14.
[3] Palayan, A.P. *Nalavenpa Moolamum Uraiyum*. Saradha Press. Rayapettai, Chennai.
[4] Prema, I. Dr. *Penniyam*. World Tamil Research Institute, Taramani, Chennai –113. 1994.
[5] https://ta.wikipedia.org/s/7e6 Accessed on 25 November 2024.
[6] https://ta.wikipedia.org/s/mtn Accessed on 25 November 2024.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

‘ஏவாளின் இரண்டாவது முடிவு’ சிறுகதைத் தொகுப்பில் பெண்வாழ்க்கை குறித்த சித்தரிப்புகள்

ம. மகராஜன், பதிவுஎண்: 22113154021009, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-7514-6299
முனைவர் பா. மலர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752281

ஆய்வுச்சுருக்கம்

சிறுகதை ஆசிரியர் பாவண்ணன் பெண்கள் சமூக அடுக்கில் என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதை உணர்ந்து அதனை வெளிப்படுத்தும் விதமாக தம் சிறுகதைகளை புனைந்திருக்கிறார். தம் சிறுகதையின் கருவுக்கு ஏற்ற வகையில் சூழல்களை அமைத்திருக்கிறார். தொன்ம கதைகள், காப்பியங்கள் ஆகியவற்றின் கதாப்பாத்திரங்களை தன் கருத்துகளைக் கூற பயன்படுத்தியிருக்கிறார். ஆண்கள் பொதுவாக பெண்கள் குறித்து தம் மனதில் கொண்டிருக்கும் எண்ணங்களை கதைமாந்தர்கள் வழியாக உணர்த்தியிருக்கிறார். காலங்காலமாக பெண்கள் சமூக அடுக்கில் எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதை நன்குணர்ந்து தன் சிறுகதைகளில் ஆசிரியர் கூறியிருக்கின்றார். பெண்கள் தாய்மை உணர்வை கொண்டவர்களாக, அன்பு கொண்டு ஆண்களால் ஏமாற்றப்படுபவர்களாக, ஆண்களுக்காக மனம் இரங்கும் தன்மை கொண்டவர்களாக சிறுகதைகளில் காட்சிப்படுத்தப்படுகின்றனர். குடும்ப உறவுகள் பெண்களின் வளர்ச்சியில் ஆதரவு வழங்காமல் இருப்பதும் அவர்களுக்குரிய அடிப்படை உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளிக்காமல் இருப்பதும் அவர்களின் மனநிலையில் இறுக்கமான தன்மையை ஏற்படுத்திவிடுகிறது. சமூகக் கட்டமைப்பானது இருபாலினத்தவருக்கும் சமமான உரிமை மற்றும் பங்களிப்பை அளிப்பதே சிறப்பான எதிர்காலம் அமைய வழிஅமைக்கும் என்பதை பாவண்ணன் தம் சிறுகதைகளின் வழி வெளிப்படுத்துகிறார்.

குறிப்புச்சொற்கள்: தொன்மக்கதைகள், வாசவதத்தை, பாஞ்சாலி, தமயந்தி, சாகுந்தலை

முன்னுரை

பாவண்ணனின் ‘ஏவாளின் இரண்டாவது முடிவு’ என்னும் சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் 11 சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் பெண்களை குறித்ததாகவே உள்ளது. புராணங்கள் துவங்கி காப்பியங்களில் நீட்சியடைந்து தற்கால எதார்த்த வாழ்வில் இடம்பெறும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது. அனைத்து சிறுகதைகளின் மைய ஓட்டமும் பெண்களாகவே அமைகிறார்கள். சமூகத்தின் சமநிலைக்கு ஆண்-பெண் என்ற இருவரின் பங்களிப்பும் அவசியம் என்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

தெய்வமாக்கப்பட்ட பெண்

தமிழ் சமூகத்தின் மரபார்ந்த தெய்வங்களை எடுத்துக்கொண்டால் அதில் ஆண் தெய்வங்களுக்கு நிகரானதாகவும் சில இடங்களில் ஆண் தெய்வங்களைவிட மேன்மையானதாகவும் பெண் தெய்வங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. பெண் தெய்வங்கள் அனைத்தும் மங்களத்தின் அடையாளமாகவும் புனிதத்தன்மை வாய்ந்ததாகவும் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த பெண் தெய்வங்களின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக கூறப்படும் கதைகளை நாம் கேட்டோம் என்றால் அதனுள் ஓர் முரண்பட்ட இயக்கம் இருப்பதை கண்டு கொள்ளலாம். தமிழ் நிலத்தில் எங்கும் சிறுதெய்வங்களாக இருக்கின்ற பெண் தெய்வங்கள் குறித்து அறிந்து கொள்ள முற்படும்போது அவற்றுள் பெரும்பான்மையானவை ஆண்களின் அடக்குமுறைகளுக்கும் அதிகாரங்களுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆட்பட்டவையாகவும் பிற்காலத்தில் அவை மேல்நிலையாக்கம் பெற்றவையாகவும் அமைந்திருப்பதை காணலாம்.

தொன்மக் கதைகளில் இடம்பெறுகின்ற சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னியின் மனைவி ரேணுகா தேவியார். இவர் பரசுராமரின் தாயாரும் ஆவார். சிறுதெய்வமாக்கப்பட்ட ரேணுகா தேவியை முதன்மை கதாபாத்திரமாகக் கொண்ட 'காற்றில்கரைந்துவரும்குரல்' என்னும் சிறுகதை இந்த தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது. தன்னுடைய இயல்பான நடத்தையால் கணவனின் தண்டனைக்கு ஆளான ஒரு பெண்ணின் மனநிலையை எடுத்துக் கூறுவதாக இக்கதை புனையப்பட்டிருக்கிறது. ஆற்றுநீரில் பிம்பமாக தெரிந்த கந்தர்வன் ஒருவனை ஒரு வினாடி நேரம் கூர்ந்து கவனித்ததற்காக தன்னுடைய கணவனால் விமர்சிக்கப்பட்டாள். கணவன் கட்டளையால் தன் மகனான பரசுராமன் கையால் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டார். பரசுராமனின் வேண்டுதலின்படியும் தன்னுடைய கணவன் ஜமத்தக்னியின் தவ வலிமை வழியும் மீண்டும் உயிர்பெற்றாள் என்பதை புராணங்கள் கூறுகின்றன.

புராணங்கள் வழி பார்த்தோமானால் இந்நிகழ்வுகள் அனைத்தும் சமநிலைப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றன. ஆனால் குற்றம் – விசாரணை –தண்டனை என்று கோணத்தில் இந்த செயல்களை நோக்க வேண்டும். தவறு செய்தவர்களுக்குக்கூட தன் தரப்பு விளக்கத்தை அளிக்க அவகாசம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் தன்னுடைய மனம், புத்தி, உடலால் எந்த ஒரு தவறும் செய்யாத போது எந்த விசாரணைக்கும் உட்படுத்தப்படாமலும் அவள் தரப்பு நியாயங்களைகூற அவகாசம் வழங்கப்படாமலும் நேரடியாக தண்டனைக்கு ஆளாகிறாள். அதுவும் தனக்கு எல்லாவுமாக இருப்பவராலேயே

அந்த தண்டனை வழங்கப்படும்போது மனதில் ஏற்படுகின்ற வேதனையும் பயமும் விரக்தியும் தனக்கு எல்லா காலத்தும் அந்த நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் என்பதை தெய்வ கதாபாத்திரம் உணர்த்துகிறது.

"உன் தாயின் தலையை வெட்டி விடு" என்ற ஜமத்தக்னியின் வார்த்தைகளை அவளால் மறக்க முடியவில்லை. மனிதர்களின் இன்னல்களை தீர்த்து அவர்களின் உயர்வான வாழ்க்கைக்கு வழிகாட்டும் சக்தி வாய்ந்த தெய்வமாக அவள் உயர்நிலைக்குச் சென்றபின்பும்கூட அந்த குரல் அவளை கலவரப்படுத்திக்கொண்டே இருக்கிறது. தான் அமர்ந்திருக்கும் கருவறை சுவரில் அந்த குரலின் சத்தம் எதிரொலித்துக் கொண்டிருப்பதாகவும் அவள் எண்ணிக் கொள்கிறாள்.

இக்கதையில் இடம்பெறும் மற்றொரு கதாபாத்திரமான கௌரி தற்கால எதார்த்த வாழ்வின் பிரதிநிதியாகவே காட்சிப்படுத்தப்படுகிறாள். இரவில் கருவறையில் இருந்து வெளிவரும் அம்மன் பூ விற்கும் பெண்ணான கௌரியுடன் தினமும் பேசுகிறாள். அவள் மூலமாக நாட்டு நடப்புகளை அறிந்து கொள்கிறாள். குடிப்பழக்கத்திற்கு அடிமையான கணவனின் துன்புறுத்தலினால் அவனைவிட்டுத் தன்னிச்சையான சுயசார்பு வாழ்க்கை வாழும் பெண்ணாக கௌரி காட்டப்படுகிறார். இரவு வேளையில் இருவரும் சேர்ந்து நகர்உலா செல்லுகையில் அவர்கள் காணும் காட்சிகள் அனைத்தும் தற்கால வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்தியபடியே உள்ளன. கணவன் மனைவி இடையேயான பிரச்சனைக்கு தீர்வு காண பஞ்சாயத்து அமைப்பு ஆலமரம் அடியில் கூடுகிறது. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு கணவனுக்கு ஆதரவாக தீர்ப்பு கூறுகின்றனர். மனைவியின் நடத்தைகளை விமர்சனம் செய்கின்றனர். புராணங்களில் மட்டுமல்ல தற்காலத்திலும்கூட ஆண் பெண் இருவரின் உறவுகளில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சிறுகதை ஆசிரியர் தன்னுடைய கதை மாந்தர்களின் வழியே புலப்படுத்திக் காட்டுகிறார்.

பெண்மையை ஏற்றுக்கொள்ளாத ஆண்

'குமாரவனம்' என்ற சிறுகதையில் இடம்பெறும் முதன்மை கதாபாத்திரம் இளன். அவன் தன்னுடைய குதிரையில் காடுகள் வழியாக சென்று கொண்டிருக்கையில் வழி தவறி வேறொரு வனப்பகுதியான குமாரவனத்திற்கு வருகிறான். அந்த வனத்தில் எங்குமே அழகான பெண்கள் இருக்கிறார்கள். ஆண் ஒருவன்கூட இல்லை. அவன் அவர்களை பார்த்தபடியே செல்கிறான். பெண்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தனர். இவனுக்கு தாகம் மேலிடவே நீர் நிலையில் தண்ணீர் அருந்துகிறான். அங்கும் பெண்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அவன் அங்கிருக்கும் பெண் ஒருவளிடம் விசாரிக்கவே குமாரவனத்திற்குள் வந்தவர்கள் எவரும் திரும்பி செல்ல இயலாது எனக் கூறுகிறாள். குமாரவனத்திற்குள் இருக்கும் பெண்கள் அனைவருமே வழித்தவறி வந்தவர்களே என்கிறாள் அந்த பெண். இளன் நீரில் தன் உருவத்தை காணும் வேளையில் மிகவும் அதிர்ச்சியடைகிறான்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அவன் முகம் பெண்முகமாக மாறிவிட்டது. குமாரவனத்தின் தலைவனான ருத்ரனைத் தவிர அனைவருமே பெண்கள்தான் என கூறுகிறாள் அந்த பெண். இளனின் உடலிலும் உடல் அசைவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை அவன் உணர்கிறான்.

குமாரவனத்திற்குள் நுழைந்த போது அங்கு தென்பட்ட பெண்களின் அழகில் களிப்புற்ற இளன்தான் பெண்ணாக மாறியதை ஏற்றுக்கொள்ள இயலாதவனாகவே உள்ளான். ஆணிற்குரிய பலம், உடல் வன்மை ஆகியவற்றை இழந்து பெண்ணிற்குரிய அழகு, இனிமை, மென்மை ஆகியவற்றை தான் பெற்றிருப்பதை எண்ணி மிகுந்த வருத்தம் அடைகிறான். பெண்களை விரும்பும் மனம் கொண்ட ஆண் ஒருவன் எப்போதும் தான் பெண்ணாக இருக்கவிரும்புவதில்லை என்ற எதார்த்தத்தை பாவண்ணன் இக்கதையின் வழி உணர்த்துகின்றார்.

தன்னம்பிக்கை பெண்

'நெருப்பு வளையங்கள்' என்னும் கதையில் இடம்பெறும் ராணி கதாபாத்திரம் தன்னம்பிக்கை கொண்ட பெண் கதாபாத்திரமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சர்க்கஸ் ஒன்றில் நெருப்பு வளையங்களைத் தாண்டும் சாகசம் செய்பவள் ராணி. அவள் தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் கணவனால் ஏமாற்றப்பட்டவள். எனினும் அதனை கடந்து தன்னுடைய சாகச செயல்பாடுகளினால் சர்க்கஸ் பார்வையாளர்களின் மனதை மகிழ்வித்துக் கொண்டிருப்பவள். தன் மனம் எவ்வளவு பாரமாக இருந்தாலும் உடலை இலகுவாக்கிக் கொண்டு வளையங்களைத் தாண்டி பிறரை மகிழ்வித்து தன் உள்ளத்தையும் இலகுவாக்கிக் கொள்கிறாள். புதிய சாகசங்களை அறிமுகப்படுத்துவதால் ராணி செய்து கொண்டிருந்த நெருப்பு வளைய விளையாட்டை நிறுத்திக்கொள்ள சர்க்கஸ் முதலாளி முடிவு செய்தார். தன்னுடைய இறுதி சாகச விளையாட்டு விளையாடுகையில் பார்வையாளர் கூட்டத்தில் முதலாளி அருகில் அமர்ந்திருக்கும் தன் கணவனைப் பார்க்கிறாள். அதுவரை சிரித்த முகத்தோடும் உற்சாகத்தோடும் சாகசம் செய்து கொண்டிருந்தவள் அவன் கண்கள் தன்னை ஊடுருவதை அறிந்ததும் மனம் நொந்து போனாள். அவள் உற்சாகமும் குறைந்தது. எனினும் தான் எவரைக் கண்டும் பயப்படக்கூடாது எந்த துன்புறுத்துதலுக்கும் உட்படக்கூடாது என தனக்குத்தானே நம்பிக்கை கற்பித்துக்கொண்டு நெருப்பு வளையங்களைத் தாண்டி சாகசம் செய்தாள். பார்வையாளர்களின் கைதட்டலும் ஏகோபித்த பாராட்டும் ராணிக்கு ஊக்கத்தையும் தன்னம்பிக்கையும் அளித்தது. ராணியின் நிலையையும் அவள் திறமையும் உணர்ந்த சர்க்கஸ் முதலாளி அவள் சாகச விளையாட்டை தொடர்ந்து நிகழ்த்த முடிவு செய்து அவளிடம் பேசினார். ஆனால் தன் மீதும் தன்னுடைய திறமை மீதும் நம்பிக்கை உள்ளது; எவரும் தன்னிடத்தில் இரக்கம்காட்ட தேவையில்லை. அதனை தான் விரும்புவதில்லை எனக்கூறி சர்க்கஸை விட்டு வெளியேறுகிறாள்.

ஒருவர் தன்னுடைய கடந்த காலத்தில் எவ்வளவு துன்பங்களையும் வேதனைகளையும் கண்டிருந்தாலும் அதனை கடந்து செல்ல முயற்சி செய்ய வேண்டும். அவற்றை மறந்து புதிய பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது முந்தைய கால நினைவுகளும் நபர்களும் நம்முன் வரும்வேளையில் அதனை கடந்து செல்ல கூரிய உத்வேகத்துடன் இருக்க வேண்டும். அவற்றினால் நம்முடைய பயணத்தில் மாற்றமோ வேகக்குறைப்போ வந்துவிடாதபடி நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ராணி கதாபாத்திரம் நமக்கு உரைக்கின்றது.

தாய்மை குணம் கொண்டவள் பெண்

மகாபாரதத்தின் பாஞ்சாலியை மையமாகக் கொண்ட அவளுடைய தாய் மனதை வெளிப்படுத்திக் காட்டுகின்ற சிறுகதை 'அன்னை'. குருசேத்திரப் போரின் இறுதி நாளில் அஸ்வத்தாமன் தன்னுடைய தோழன் துரியோதனன் மறைவுக்கு பழிவாங்க எண்ணினான். பாசறையில் தூங்கிக் கொண்டிருக்கும் பாண்டவர்களை போர் விதிமுறைகளை மீறி இரவு நேரத்தில் தாக்கிக் கொலைசெய்ய துணிந்தான். பாசறை கூடாரம் ஒன்றில் நுழைந்து ஐந்து பேரையும் தலையை வெட்டிக் கொன்றான். ஆனால் இறந்து போனவர்கள் பாண்டவர்கள் அல்லர். அவர்களின் ஐந்து புதல்வர்கள். தன்னுடைய மகன்களை இழந்த அன்னையான பாஞ்சாலியின் புலம்பல்கள், ஆவேசங்கள், பாச உணர்வுகள் ஆகியவற்றை இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

மகன்களின் மரணத்தை அறிந்தவள் அவர்களின் உயிரற்ற உடல்களைத் தழுவி அழுகிறாள். தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்த முடியாமல் திணறுகிறாள். திடீரென்று ஆவேசம் கொண்டவளாக அரற்றுகிறாள். சுற்றியிருந்தவர்கள் எவராலும் அவளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அர்ஜுனன் அஸ்வத்தாமனைப் பிடித்து வந்து பாஞ்சாலி முன் நிறுத்துகிறான். அவன் தாக்கப்பட்டவனாகையால் அவன் உடலில் இருந்தும், இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அஸ்வத்தாமன் உயிரைப் பறிக்க பலர் காத்துக்கொண்டிருக்கையில் பாஞ்சாலி அவனை மன்னித்து விடுவது அனைவருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. மகன்களை இழந்து தாயாக தான் படும் இன்னல்களை இன்னொரு தாய் அனுபவிக்க வேண்டாம் என்கிறாள். இத்தகையதொரு கடினமான சூழ்நிலையில் எவரும் மனம் தடுமாறுவதும் ஆவேசப்படுவதும் நிகழ்வது உண்டு. ஆனால் பாஞ்சாலி தன்னுடைய இடத்தில் இன்னொரு அன்னையை நிறுத்தி அவளுக்கு ஏற்படும் துன்பத்தை நினைத்துப் பார்க்கிறாள். இன்னொரு தாய்க்கு தான் தாயாக மாறுகிறாள். தாய்மை எனும் உயர்ந்த தன்மையை மகாபாரத பாஞ்சாலி கதாபாத்திரம் வழியாக நமக்கு கூறிச் செல்கிறார் ஆசிரியர் பாவண்ணன்.

இன்னல்களுக்கு ஆட்படும் பெண்

தன்னுடைய சிறு வயதிலிருந்து பல்வேறு ஒடுக்குமுறைகளையும் ஏளனங்களையும் சந்தித்துக்கொண்ட பெண் தன்னுடைய மனதிடத்தாலும் தன்னம்பிக்கையாலும் கல்வி பயின்று

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அரசின் விமானப்படையில் வேலை பெற்றுவிடுகிறாள். எப்பொழுதும் புன்னகையுடனும் நிமிர்ந்த நடையுடனும் இருக்கும் பரிமளாதேவி தன் குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகளால் தன்னையே இழந்து விடுகிறார். அந்தப் பெண்ணின் வாழ்வைப் பற்றி கூறுவதாக 'அஞ்சலி' எனும் சிறுகதை அமைகிறது. வீட்டின் வெளியேயான புற வாழ்வில் வெற்றிபெற்ற பரிமளா தேவியால் வீட்டின் உறுப்பினர்களைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அவர்களும் பரிமளா தேவியை பற்றி எண்ணிப்பார்க்கவும் இல்லை. தன்னுடைய கணவனிடம் இருந்து எந்த ஒரு ஆதரவையும் அவர் பெற்றதில்லை. தன் இரு மகன்களும் காதல், போதை ஆகியவற்றில் தங்களை இழந்து விடுகின்றனர். அவர்கள் பற்றிய எண்ணங்கள் பரிமளா தேவியின் உடலில் இருதய நோய் ஏற்பட காரணம் ஆகிறது. அதுமட்டுமில்லாமல் கீழே விழுந்து நடக்க இயலாதவராகவும் இருந்தார். மருத்துவர்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தியும் கேட்காமல் தன் அலுவல் வேலைகளை கவனித்து வந்தவர், மருத்துவமனையில் பரிசோதனைக்கு செல்லுகையில் இறந்து விடுகிறார்.

தன்னுடைய வாழ்வில் வெற்றிபெற வேண்டும் சுயத்துடன் வாழ வேண்டும் என்று ஓடிக்கொண்டிருந்தவருக்கு அவர் குடும்பமே தடையாக அமைந்தது. ஒருவர் குடும்பச் சூழ்நிலையும் அலுவலகச் சூழலும் எவ்வாறு இருந்தாலும் அதனை சமநிலையில் வைத்திருக்க முயல வேண்டும். இரண்டும் தராசின் இருபக்கம் போன்றது. ஒன்று உயர்ந்தால் மற்றொன்று தாழ்வு கொள்ளும். வேலை, குடும்பம் இரண்டிலும் தான் ஒரு அங்கத்தினர் என்பததை அறிந்து இரண்டின் கடமைகளையும் குறை இல்லாது செய்ய தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பரிமளாதேவி கதாபாத்திரம் தான் வேலை செய்யும் இடத்தில் வெற்றி பெற்றாலும் தன் குடும்ப கடமைகளில் தோல்வி அடைந்தார். இதனை மற்றுமொரு பார்வையில் அணுகினோம் என்றால் ஒரு பெண் உயர்நிலைக்குச் செல்லும் போது அவளுக்கு துணையாக இருக்க வேண்டிய ஆண் அவளை உதாசீனப்படுத்துவதும் அவளை துன்பத்திற்கு உள்ளாக்குவதும் நிகழ்ந்தேறுகிறது. வெற்றி பெற்றதற்கு அவருடைய தன்னம்பிக்கை, சுயஉழைப்பு, கல்வி காரணமாக இருந்தாலும் அவருடைய உடல் பலவீனத்திற்கு மனவேதனைக்கு இறப்பிற்கு காரணமானவர்கள் அவருடைய கணவன் மற்றும் மகன்கள் ஆவர்.

ஆண்களால் புரிந்து கொள்ளப்படாத பெண்

கடல் நீரும் ஆற்று நீரும் ஒன்று கலக்கும் இடமான கழிமுகம் என்பதை சிறுகதை தலைப்பாகக் கொண்ட கதை சிவபாலன் எனும் ஆணின் இரட்டை எண்ணங்கள் ஒன்று கலந்து குழப்பமானதை காட்டுவதாக உள்ளது. தன்னுடைய மனைவி ருக்மணியிடம் விவாகரத்து பெற்ற சிவபாலன் தனிமையில் வசிக்கிறார். அவர்கள் குழந்தை அபி ருக்மணியிடம் வளருகின்றது. தன் குழந்தையை மாதம் ஒரு முறை சந்தித்துக் கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது. அதன்படி குறிப்பிட்ட ஒரு நாளில் தன் குழந்தையைச் சந்தித்துக் கொள்ள

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சிவபாலன் ஆர்வமுடன் காத்திருந்தான். தான் தங்கியிருந்த விடுதியின் வெளியே தன் மனைவி மற்றும் மகனுக்காக காத்திருக்கையில் அவன் மனதில் கலக்கம் தோன்றுகிறது. தன் மனைவியின் நிலையை எண்ணி வருத்தம் கொள்கிறான். அவள் வேலை மற்றும் குழந்தை வளர்ப்பில் தனியாக துன்பப்படுகிறாள் என அவள் மீதுபரிவு கொள்கிறான். தான் தன்னுடைய மனைவியை விவாகரத்து செய்தது தவறான செயல்தானோ என்று தன்னைத்தானே குற்றம் சொல்லிக் கொள்கிறான். கடற்கரையில் சென்று அங்கு குவிந்திருந்த மக்கள் கூட்டத்தில் இடையே குழந்தைகளைக் கண்டதும் சிவபாலனுக்கு தன் மகன் மீதான பாசமும் அவனை காணாது தவித்த தவிப்பும் மேலோங்குகிறது. அவர்களுடன் தான் மீண்டும் சேர்ந்து வாழும் தன் விருப்பத்தை தன் மனைவியிடம் கூற வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறான்.

சந்திப்பு நிகழ்வதற்கு குறிப்பிடப்பட்டிருந்த நேரம் வந்தது. ஆனால் அவர்கள் இருவரும் வரவில்லை என்றதும் சிவபாலன் தன் மனைவி மீது கொண்டிருந்த காழ்ப்பு மனதில் இருந்து வெளிவருகின்றது. அதுவரையில் தன் மனைவி மீது பாசமும் பரிவும் கொண்டிருந்தவன் திடீரென அதற்கு நேர்எதிரான நிலைப்பாட்டைக் கொள்கிறான். அவள் தன்னை பழிவாங்குவதாகவும் தன் குழந்தையை தான் சந்திக்கக்கூடாது என எண்ணுவதாகவும் மீண்டும் மீண்டும் மனதில் பதிய வைத்துக் கொள்கிறான். மழை பொழிந்து கொண்டிருந்த மாலை வேளையில் ஆட்டோவில் தனியாக வந்திறங்கிய ருக்மணியை கண்டதும் அவனுடைய கோபம், காழ்ப்பு, அவநம்பிக்கை எல்லாம் அவள் மேலே வந்திறங்கியது. குழந்தைக்கு அடிபட்டதால் மருத்துவமனை சென்று வருவதாக அவள் கூறியும் அவன் அதனை நம்பமறுத்து விட்டான். அவள் தன் நிலையை எவ்வளவு எடுத்துக்கூறியும் சிவபாலன் அதனை ஏற்கவில்லை. அவள் திரும்பிச் செல்கையில் அவள் துணியில் இருந்த இரத்தத்தைக் கண்டதும் அது உண்மைதானோ என்று அவனுக்குத் தோன்றியது என்றாலும் அதனை அவளிடம் வெளிப்படுத்தவில்லை சிவபாலன்.

சிவபாலன் ருக்மணி இருவரும் விவாகரத்து பெற்றவர்கள் என்று குறிப்பிடும் ஆசிரியர் அதற்கான காரணத்தை இக்கதையில் குறிப்பிடவில்லை. அதனை கதை ஓட்டத்தின் மூலம் நாம் புரிந்து கொள்ள முடியும். தன் மனைவி மற்றும் குழந்தையை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும் அவர்கள் மீது நீங்கா அன்பு கொள்ள வேண்டும் என்று நினைக்கும் ஆண் மனம் தன் மனைவியான பெண்ணின் மனதிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவள் கால தாமதமாக வந்ததும் அதற்காக பல்வேறு காரணங்களை ஆண்மனம் தானாகவே வருவித்துக் கொள்கிறது. அந்த பெண்ணின் சூழ்நிலையை மன உணர்வை அவன் புரிந்து கொள்ள முயலவில்லை. அவன் தவறான எண்ணம் கொண்டவள் என்று முடிவுக்கு வந்தவன் அவள் ஆடையில் இருந்த இரத்தக் கறையைக் கண்டதும் அவளிடம் பேச முயன்றிருக்கலாம். அவள் சூழ்நிலையை தான் புரிந்து கொண்டேன் என்று அவளிடம் கூறி இருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. தன் ஆணவத்தைவிட்டு இறங்கி சென்று அவளிடம் பேச அவன் முன்வரவில்லை. தான்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விரும்பிய குடும்பம் தனக்கு கிடைக்க இருந்த ஒரு நல்வாய்ப்பைத் தன்னுடைய விரக்தி உணர்வு, ஆணவ மனத்தால் வீணடித்துக் கொண்டான் சிவபாலன்.

குழந்தை பிறப்பும் சமூக ஒழுங்கமைவும்

'ஏவாளின் இரண்டாவது முடிவு' என்னும் சிறுகதை சிசுக்கொலையை மையமாகக் கொண்டு பழங்கால புராண நிகழ்வை தற்கால நடப்புகளோடு ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட புனைவாகும். ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு குழந்தை பிறப்பு ஏற்படவில்லை. அதற்கான காரணத்தை அறிய ராஜ் என்பவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படவே அவர் தன்னுடைய தேடலில் விளைவாக அதனைக் கண்டடைகிறார்.

துஷ்யந்தராஜா - சாகுந்தலை இடையேயான காதலின் விளைவாக சாகுந்தலை வயிற்றில் கரு ஒன்று உருவாகின்றது. குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் வருவதாக சொல்லிச்சென்ற துஷ்யந்தன் திரும்பி வரவில்லை. எனவே சாகுந்தலை வயிற்றுக் கருவின் பிறப்பைத் தாமதப்படுத்த அவள் தோழியான காட்டுப்பெண் மந்திரம் ஒன்றைக் கூறுகின்றாள். அவளுடைய மந்திர வார்த்தைகள் காற்றில் அலைந்துக் கொண்டிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்களின் செவிகளில் அது ஒலிக்கவே அவர்களும் அதனை என்னவென்று அறியாது முணுமுணுக்கினர். அத்தருணத்தில் இருந்து அந்நாட்டில் குழந்தை பிறப்பு ஏற்படவில்லை. திடீரென தோன்றிய மந்திர வார்த்தைகள் எங்கிருந்து துவங்கியிருக்கும் என்று தேடி ராஜ் அலைகிறான். இறுதியில் சாகுந்தலைக்கு உதவிய காட்டுப் பெண்களின் வழிதோன்றல்களின் உதடுகளில் இருந்தே அந்த வார்த்தைகள் தோன்றியிருக்கும் என்பதை கண்டறிந்து அவர்களை தேடி செல்கிறான். அவர்களை சந்தித்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையில் ராஜ் செல்லவே காட்டுப்பெண்கள் வாழ்ந்திருந்த காடு தீப்பற்றி எரிந்து அனைவரும் இறந்து போகின்றனர்.

முற்காலத்தில் செய்த சிறு தவறுகூட வரலாற்றை மாற்றும் தன்மை கொண்டதுதான். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு புதிய தலைமுறை மனிதர்கள் தேவை. அப்போதுதான் அச்சமூகத்தின் செயல்பாடுகள் எல்லாம் சீரானதாக இருக்கும். குழந்தை பிறப்பு என்பது சமூகத்தில் இன்றியாமையாது. அது குடும்பம் எனும் நிறுவனத்தின் முழுமைக்கும் தேவையானதாகும். எதிர்கால தலைமுறைகள் இல்லா சமூகம் காலப்போக்கில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள இயலாமல் அழிந்து போகும் தன்மையுடையதாகும். சிசுக்கொலையின் விளைவு எதிர்காலத்தில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இக்கதை வெளிப்படுத்திக்காட்டுகிறது.

உரிமை மறுக்கப்பட்ட பெண்

ஆண் பெண் என்ற இரண்டு குழந்தைகளுக்கும் சமமான உரிமைகளையும் மதிப்பினையும் கொடுக்க வேண்டும் என்ற கருத்து இக்காலத்தில் பரவலாக பேசப்படுகிறது.

இதன் காரணமாக எல்லா துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளனர். இரண்டு தலைமுறைகளுக்கு முன்பிருந்த பெண்களைவிட தற்கால பெண்கள் பல வகைகளில் முன்னேற்றம் கொண்டவர்களாக விளங்கிவருகின்றனர். சென்ற தலைமுறையில் ஆண் குழந்தைக்கு கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனை மையக் கருவாகக்கொண்டு உருவாக்கப்பட்ட சிறுகதை 'காலணி'.

குடும்பத்தில் தம்பிக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகள் அவன் அக்காவுக்கு வழங்கப்படவில்லை. தம்பிக்கு காலணி வாங்கிக் கொடுக்கும் தந்தை அக்காவான பெண் குழந்தைக்கு வாங்கிக் கொடுக்க மறுக்கிறார். வெயில் பாதைகளிலும் முள் வழியிலும் வெற்றுக்கால்களுடன் நடந்து நடந்து வாழ்க்கை பயணத்தில் சென்று கொண்டிருக்கிறாள். திருமணம் செய்துகொண்ட பிறகு முதன்முதலாக காலணி அணிகிறாள். தான் பிறந்த இடத்திற்கு நேர்மாறான பருவ அமைப்புடைய குளிர்ச்சியான இடத்தில் கணவனோடு வாழ்கிறாள். குளிரின் தாக்கத்தினால் கால்களில் பாதிப்பு ஏற்படவே வீட்டிற்குள்ளும் செருப்பு அணிந்தபடியே இருக்கிறாள். மாமனார் அவள் தம்மை அவமதிப்பதாக எண்ணிக்கொண்டு அவள் கால்களை துணி தேய்ப்புப்பெட்டியால் காயப்படுத்துகிறார். அவளும் காயத்தால் வேதனைப்பட்டு அதனை ஆற்ற இயலாது இறுதியில் இறந்து போகின்றாள்.

மனிதனுக்குரிய அடிப்படை ஆசைகள், தேவைகளைக்கூட அனுபவிக்க பெற்றுக்கொள்ள உரிமை மறுக்கப்பட்டவர்களாக பெண்கள் இருந்திருக்கின்றனர். பெற்றோர் வீட்டிலும் தான் திருமணம் செய்துகொண்ட கணவன் வீட்டிலும் துன்பங்களோடு வாழ்பவர்களை எண்ணிப்பார்ப்பதற்கு இக்கதை தூண்டுகின்றது. சமூகத்தில் பெண்ணும் ஆணும் சமம் என சட்டங்கள் வரையறை செய்தாலும் குடும்பத்தின் வலைப்பின்னல்களை சட்டங்கள் எதுவும் செய்ததில்லை. இதனை அன்றாட வாழ்வில் பல நிகழ்வுகளில் வழியே நாம் அறிந்து கொள்ளலாம்.

பெண் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத சமூகம்

நளன் – தமயந்தி கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறுகதை 'முற்றுகை'. சுயம்வரம் எனும் நிகழ்வின்போது அதற்கு ஆட்படும் பெண்ணின் உணர்வுகளையும் அவள் எதிர்பார்ப்புகளையும் அவள் கட்டுப்பாடுகளையும் வெளிப்படுத்திக்காட்டுவதாக இச்சிறுகதை அமைகின்றது. தன்னை திருமணம் செய்துகொள்ள விருப்பம் கொண்டு வானுலக தேவர்கள் மனித உரு கொண்டு வந்திருப்பதை தமயந்தி அறிந்து அக்கூட்டத்தில் இருக்கும் நளனை அடையாளம் கண்டு அவனுக்கு மாலை சூட்டுகிறாள். இது நளன் தமயந்தி கதையில் சுயம்வர நிகழ்வின் பொதுவான கருத்துகள். ஆனால் முற்றுகை கதையில் அதன் ஆசிரியர் பாவண்ணன் சுயம்வரத்தின்போது தமயந்தி என்னென்ன உளச்சிக்கல்களை எதிர்கொள்கிறாள் என்பதை எடுத்துக் கூறுகிறார். தான் விரும்பும் ஒருவனை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தன்னை விரும்பும் ஒருவனை திருமணம் செய்துகொள்ள எவருடைய ஒப்புதல் எல்லாம் தேவைப்படுகிறது என்ற கேள்வி தமயந்தி மனதில் எழுகிறது. கூட்டத்தில் இருக்கும் நளனை முதலிலேயே அவள் கண்டு கொண்டாலும் அவள் முன்னே நின்று கொண்டிருக்கும் பிற ஆண்களைது தாண்டிதான் அவள் நளனைப் பார்க்கமுடியும். ஒவ்வொருவர் முன்பாக தான்நின்று பிறகு அவரை கடந்து மற்றவர் முன்னிற்கையில் அவள் மனம் மிகவும் குறுகுகிறது. தன்னை உயிரற்ற பொம்மைபோல காட்சிப்படுத்தும் நிகழ்வை விரும்பாதவளாக உள்ளாள் தமயந்தி. ஆனால் அந்த எண்ணத்தை சபையோர் முன்னிலையில் வெளிப்படுத்த இயலாதவளாக இருக்கிறாள்.

தனது கணவனைத்தவிர வேறு எந்த ஆணையும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூடாது எனும் நெறிமுறை இருக்கும் சமூகத்தில் ஒவ்வொரு ஆணின் முகத்தையும் ஏறிட்டுப்பார்த்து சம்மதம் சொல்லும் நடைமுறையை தமயந்தி வெறுக்கிறாள். தன் மனம் கணவனாக ஏற்றுக்கொண்ட நளனைத்தவிர வேறு எவரையும் பார்க்ககூடாது என்ற எண்ணம் கொண்ட தமயந்தி நளன் அருகில் சென்று அவனுக்கு மாலை அணிவித்து அவன் முகம் பார்க்கிறாள். ஆனால் சுயம்வரத்தில் பங்கு கொண்டவர்கள் தமயந்தி தங்களை காணாது நளனைப் பார்த்ததால் மட்டுமே அவன் கழுத்தில் மாலை அணிவித்தாள் என்றும் அவள் தங்களை பார்க்காதது பெருந்தவறு என்றும் குற்றம் கூறுகின்றனர். சமூகம் கட்டமைத்த நெறிமுறைகளின்படி நடந்து கொண்டாலும் தமயந்தி என்னும் பெண் ஆணின் பார்வையில் எண்ணத்தில் தவறானவளாகவே கருதப்படுகிறாள். சமூகத்தின் கருத்துக்கள், நடைமுறைகள், நெறிமுறைகள் பெண்ணின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தை அவள் மனதில் ஏற்படுத்தும் ஆற்றா வருத்தத்தை நளன் –தமயந்தி சுயம்வர நிகழ்வு வழியே பாவண்ணன் எடுத்துக் கூறுகிறார்.

அன்பால் ஏமாற்றப்படும் பெண்

‘வாசவதத்தை’ என்னும் சிறுகதையும் பெண் மனதை மையக் கருவாகக் கொண்டது. பெருங்கதை காப்பியத்தின் தலைவன் உதயணன். அவன் தன்னுடைய யாழ் வாசிப்புத் திறமையைக் கொண்டு வாசவதத்தையை காதலில் வென்று திருமணம் செய்து கொண்டான். அதன்பிறகு அவன் வெவ்வேறு காலங்களில் பதுமாவதி, மானனீகை, விரிச்சிகை ஆகிய பெண்களையும் திருமணம் செய்துகொண்டு இறுதியாக தன்னுடைய நாட்டையும் திருமண உறவுகளையும் துறந்து துறவு கோலம் ஏற்கிறான். சீவகசிந்தாமணி போலவே பெருங்கதையும் உலக நிலையாமையை வலியுறுத்தக்கூடியதாகும். உதயணனின் மனைவியான வாசவதத்தை அரண்மனையில் தனித்திருக்கிறாள். தன்னுடைய காதல் கணவன் ஏற்கனவே இரண்டு பெண்களைத் திருமணம் செய்துவிட்டான். அவர்களும் அரண்மனையில் இருக்க வேறொரு பெண்ணின் மீது காதல்கொண்டு அவளையும் அவன் திருமணம் செய்ய விரும்புகிறான் என்பதை அறிகிறாள். தான் அவன் மீது மட்டுமே விருப்பமும் காதலும் கொண்டிருக்க அவன் அவனது காதலை மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிப்பதை வாசவதத்தை விரும்பவில்லை.

அவனை காணும் பொழுது அதனைப்பற்றி அவனிடம் பேச வேண்டும் என்று எண்ணுகிறாள். ஆனால் அவன் வாசவதத்தையை சந்திக்கும்போது அவள் பதில்பேச முடியாதவாறு அன்பு பொழிகிறான். அரண்மனை அருகில் இருக்கும் குளத்தில் இரவு வேளையில் வாசவதத்தை தனித்திருக்க உதயணன் வருகிறான். அவன் தன் திருமணத்திற்கு ஒப்புதல்பெறவே தன்னை சந்திக்க வருகிறான் என்பதை வாசவதத்தை உணர்ந்திருந்தாள். அவன் எவ்வளவு நியாயம் சொன்னாலும் தான் ஒப்புக்கொள்ள போவதில்லை என்று முடிவுடன் இருந்தாள். வாசவதத்தை அருகில் வந்தவன் அவள் அழகை புகழ்ந்து பேசுகிறான். அவளை பலவாறாக கொஞ்சுகிறான். அன்பிற்காக ஏங்கி இருக்கும் குழந்தைபோல நடந்து கொள்கிறான். அவர்களுக்குள் நிகழ்ந்த ஊடல்களுக்குபின் மற்ற பெண்களோடு புதிதாய் வரவிருக்கும் பெண்ணும் அரண்மனையில் தங்கிக் கொள்வதால் தனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று உதயணனிடம் கூறிவிடுகிறாள். வாசவதத்தையின் ஒப்புதலைபெற்ற உதயணன் மனமகிழ்வுடன் திரும்பிச் செல்கிறான். உதயணனை காணும் முன்புவரை மிகவும் உறுதியான மனத்துடன் இருந்த வாசவதத்தை அவனுடைய சொற்கள் நடத்தைகளைக் கண்டு உள்ளம் இறங்குகிறாள். அவன் தவறு செய்பவனாக இருந்தாலும் தன்னுடைய அன்புக்கு துரோகம் செய்பவனாக இருந்தாலும் அவனை மன்னிக்கும் மனநிலைக்கு வந்துவிடுகிறாள். அவனது ஒவ்வொரு திருமணம் குறித்த தகவல் வருவதும் தான் மனத்திடத்துடன் அவனை மறுக்க முயல்வதும் இறுதியில் அவன் அவளை வென்று செல்வதுமே நடந்தேறுகிறது. ஒவ்வொரு முறையும் தோல்வி கண்டவள் இம்முறையிலும் வெற்றிபெற இயலவில்லை. பெண்மனம் இலகுவாக இருப்பதும் தவறை மன்னிக்கும் தன்மையை அதிகமாக பெற்றிருப்பதும் அன்புக்கு இறங்கும் தன்மை உடையதாக இருப்பதும் அவர்களின் ஏமாற்றத்திற்கு காரணமாக அமைவதாக இச்சிறுகதை நமக்கு உணர்த்துகிறது.

தடுமாற்ற மனதால் ஏமாறும் பெண்

'வாக்குமூலம்' என்ற சிறுகதை சமகால நிகழ்வுகளோடு புனையப்பட்டுள்ளது. கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பெண்ணை குறித்ததாக இக்கதை அமைகிறது. கொலை வழக்கை விசாரிக்கும் அதிகாரியான சங்கர் என்பவரும் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பெண்ணும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இக்கதையில் சங்கரின் குரல் எங்கும் ஒலிக்கவில்லை. பெண் தன் தரப்பு விளக்கங்களைக் கொடுப்பதாகவே இக்கதை அமைகிறது. கல்லூரியில் படிக்கும் காலங்களில் மிகவும் சுறுசுறுப்பாக அனைவரையும் கவரக்கூடிய பெண்ணாக இருந்தவள் தற்போது கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவளாக காட்சிப்படுத்தப்படுகிறாள். செல்வந்தர் ஒருவனை திருமணம் செய்துகொண்டவள் தன் கணவன் தொழில் நிமித்தமாக அடிக்கடி வெளியூருக்கு செல்கையில் அவன் பிரிவை தாங்கமுடியாதவளாக இருக்கிறாள். பெரும்பாலும் தன் வீட்டில் தனிமையிலேயே இருக்கின்றாள். தன் கணவனின் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரிடம் அவள் விருப்பம்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கொண்டு அவனுக்கு பணபலன்களைக் கொடுக்கிறாள். தன் கணவன் மாரடைப்பு நோயில் இறந்ததும் அவள் அவனை திருமணம் செய்து கொள்ள நினைக்கிறாள். ஆனால் அவன் அவளை விரும்பாமல் அவளிடம் இருந்த பணத்தை மட்டுமே விரும்பியிருக்கிறான். அவர்களுக்கு இடையே நிகழ்ந்த வாக்குவாதம் முற்றுகையில் அவள் தள்ளிவிட அவன் இறக்கிறான். பெண் ஒருவர் மனது சிறிது தடுமாற்றம் அடையும்போது அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள சில ஆண்கள் எண்ணுகின்றனர். வாழ்வின் சில தவறுகள் எப்பொழுதும் சரிசெய்ய முடியாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. சமூகம் கட்டமைத்த குடும்பம் என்ற அமைப்புக்குள் வாழும்பொழுது அதன் தன்மைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். அந்தப் பெண் தன் கணவனை விடுத்து வேறு ஆணிடம் விருப்பம் கொண்டது குடும்ப அமைப்பை உருகுலைக்கிறது. தன் கணவன் இறந்த பின்பு திருமணம் செய்ய நினைத்தபோது அவன் தன் மீது உண்மை அன்பைக் கொண்டிருக்கவில்லை என அறிகிறாள். எந்த ஒரு ஆதரவும் இல்லாத நிலையில் அவன் மீதான கோபத்தை வெளிப்படுத்துகிறாள். எதேச்சையாக அவன் இறந்துவிடவே அவள் வாழ்வு இனி என்னவாகும் என்ற கேள்வியே இறுதியில் எஞ்சுகிறது. மனதின் சிறிய தடுமாற்றம்கூட வாழ்வின் ஓட்டத்தில் திசைமாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதையே பாவண்ணன் எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றைய காலம் வரை மனித இனத்தின் ஓர் அங்கமாக இருக்கின்ற பெண்கள் பல்வேறு வழிகளில் இன்னல்களுக்கு உட்பட்டிருக்கின்றனர். சமூக கட்டமைப்பு ஆண்களை மையமிட்டு அமைக்கப்பட்டபோது ஆண்களால் பெண்கள் ஒடுக்குதலுக்கு ஆளானார்கள். அரசியல், கல்வி, பொருளாதாரம், சமயம் என எல்லாவற்றிலும் பெண்கள் ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே இருந்திருக்கின்றனர். தற்காலத்தில் அரசியல் ரீதியாக பல்வேறு உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அவற்றால் சமூக கட்டமைப்பில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. பொதுவான பார்வையில் ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே பெண்கள் இருக்கின்றனர். பாவண்ணன் சமூகத்தின் பல நிலைகளில் காணப்படும் பெண்கள் குறித்தும் பெண்கள் பற்றிய ஆண்களின் எண்ணங்களையும் தம் புனைவின் வழியாக எளிமையாக உணர்த்துகிறார். பெண்கள் தன் மனதிடம், அயராத உழைப்பு, சமூகத்தின் எள்ளல்களுக்கு செவி சாய்க்காமை ஆகியற்றைக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும். ஆண் – பெண் இருவரும் சமூகத்தின் அங்கத்தினர் என்பதை ஒவ்வொருவரும் உணரும் போதே சிறப்பான எதிர்காலம் கொண்ட நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

குறிப்புகள்

[1] ஆனந்தி, ந. *பெருங்கதை மூலமும் உரையும்*. கௌரா புத்தக நிலையம்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[2] பாவண்ணன். *ஏவாளின் இரண்டாவது முடிவு*. தமிழினி, 342 டி.டி.கே.சாலை, சென்னை – 14.

[3] பாலையன், அ. ப. *நளவெண்பா மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம். ராயப்பேட்டை, சென்னை.

[4] பிரேமா, இரா, முனைவர். *பெண்ணியம்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தரமணி, சென்னை – 113, 1994.

[5] https://ta.wikipedia.org/s/7e6 நவம்பர் 25, 2024 அன்று அணுகப்பட்டது

[6] https://ta.wikipedia.org/s/mtn நவம்பர் 25, 2024 அன்று அணுகப்பட்டது.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Lifestyle of Women in *Nedunalvadai*

Dr. D. Mahila Jeni, Assistant Professor of Tamil, Lekshipuram College of Arts and Science, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-5346-4859
DOI: 10.5281/zenodo.14752303

Abstract

"Nedunalvadai" was composed by Nakkirar portraying the famous Pandyan King Nedunchezhiyan as the one who wears the Neem flowers. This book is one of the "Pattuppattu" Books. It has been written in 188 verses by the author. As the events take place during the Vadai period, it is a longing for the beloved (Thalaivi) who is separated from the leader and the war is won. It becomes a good source for the hero who is resting in the barracks after victory in the war. It is named "Nedunalvadai" as it means a long and good season for the hero and a nostalgic situation for the beloved. "Patupapatu" is the only collection considered as an expression of internal life. The theme is revolved around the place Koodirp Pasarai. (Victory Barracks) It also contains the story of the women worshipping the war Goddess Kotravai. Nedunalvadai is divided into three parts. The first part describes the effects of the Vadai (Cool) wind. The second part describes the suffering of the beloved who was separated from the hero. The last part describes the news about the hero in the pasarai (Barracks). Hence, the life history of the hero, beloved, maid and Adal women in this book are explained in the article.

Keywords: *Nedunalvadai*, Thalaivi, Thalaivan, Thozhi, Lifestyle.

References

[1] Chandra, S. *Nedunalvadai*. Chellappa Publishing House, 2008.
[2] Suyambu, P. *Tamil Ilakkiya Varalaru*. 2017.
[3] Nagarasan, V. Dr. *Pathupattu Moolam Uraiyum*. New Century House (P) Lit, Chennai-600008, 2009
[4] Manavalan, A. A. *Sangam Ilakkiyam*. New Century House (P) Lit, Chennai-600008, 2009
[5] Manickavasan, J. *Pathupattu Moolam Uraium*. Umapathippagam, 2002.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

நெடுநல்வாடையில் பெண்களின் வாழ்வியல்

முனைவர் த. மகிலா ஜெனி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-5346-4859
DOI: 10.5281/zenodo.14752303

ஆய்வுச்சுருக்கம்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரையைச் சேர்ந்த நக்கீரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டதே நெடுநல்வாடை. இந்நூல் பத்துப் பாட்டு நூல்களுள் ஒன்று. 188 பாடலடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. நிகழ்வுகள் வாடைக் காலத்தில் நிகழ்வதாலும், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இது நெடுவாடையாகவும், போர் வெற்றியைப் பெற்ற கூதிர்ப்பாசறையின் கண் இருக்கும் தலைவனுக்கு நல்ல வாடையாகவும் அமைந்தது. இது நீண்ட நல்ல வாடை என்னும் பொருளில் அமைந்ததால் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள தலைவி, தோழி, செவிலியர், ஆடல் மகளிர் ஆகியோரின் வாழ்வியல் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: *நெடுநல்வாடை*, தலைவி, தலைவன், தோழி, வாழ்க்கை முறை.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படும் சிறப்பு பதினெண்மேற்கணக்கு நூல்களான *எட்டுத்தொகை*, பத்துப்பாட்டைக் குறிக்கிறது. *எட்டுத்தொகை* நூற்களில் எட்டு நூற்களும் பத்துப்பாட்டு நூற்களில் பத்து நூல்களும் அடங்கியுள்ளன. இந்நூல்களில் பழந்தமிழரின் பெருமை சொல்லப்பட்டுள்ளது. *பத்துப்பாட்டு* நூற்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் தலைவி, தோழியர், செவிலித்தாய் முதலான பெண்களின் வாழ்வியல் குறித்து இடம்பெற்றுள்ளது. அவற்றை இக்கட்டுரையில் ஆராய்வதாக அமைகிறது.

நெடுநல்வாடை

பத்துப்பாட்டுள் ஒரே அகப்புறப்பாட்டு நூல் நெடுநல்வாடை. 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது. பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியது. கூதிர்ப் பாசறை என்னும் துறை கருவாக அமைந்துள்ளது. கொற்றவையைப் பெண்கள் வழிபட்ட செய்தி இடம்பெற்றுள்ளது. *நெடுநல்வாடை* மூன்று பகுதிகளாக இடம்பெற்றுள்ளது. முதற் பகுதி வாடைக்காற்றின் விளைவுகளை விவரிக்கிறது. இரண்டாம் பகுதி தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்ப நிலையை விவரிக்கிறது. இறுதிப் பகுதி பாசறையிலுள்ள தலைவன் பற்றிய செய்திகளை விவரிக்கிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இல்லுறை மகளிர் தெய்வத்தை வழிபடல்

இளம் பெண்கள் பசுங்காம்புகளை உடைய பிச்சிப் பூவின் அரும்புகளை அவை மலரும் மாலைக் காலம் வந்துவிட்டதை உணர்ந்து அவற்றைச் செடியிலே இருந்து பறித்து மாலையாகக் கட்டி பூந்தட்டிலே எடுத்து வைத்து இரும்பால் செய்த தகளி விளக்கில் உள்ள நெய்யிட்ட திரியை ஏற்றி நெல்லும் மலரும் தூவி இல்லுறை தெய்வத்தை வழிபட்டதை,

பூங்குழைக்கு அமர்ந்தஏந்து எழில் மழைக்கண்
மடவரல்மகளிர்பிடகைப்பெய்த
செவ்வி அரும்பின் பைங்கால் பித்தகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப்பொழுது அறிந்து
இரும்செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது (நெடுநல்., 38-44)

நெடுநல்வாடை உணர்த்துகிறது.

கூந்தல் உலர்த்துதல்

குளிர்ந்த நறுமணம் கமழும் மயிர்ச்சந்தன விறகிலே, நெருப்பை மூட்டி, வயிரம்பாய்ந்த அகில் கட்டைகளையும் வெள்ளை நிறம் உடைய கண்ட சருக்கரையையும் சேர்த்து அந்த நெருப்பிலே போட்டு எழுப்பும் புகையில் கூந்தலை உலர்த்தியதை,

கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்இருங் கூந்தல் சில்மலர் பெய்ம்மார்
தண்நறும் தகரம்முளரி நெருப்பு அமைத்து
இருங்காழ் அகிலொடு வெள்அயர் புகைப்ப (நெடுநல்., 53-56)

நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

மாலைகளை வெறுத்து மலர்ச் சூடுதல்

நறுங்கூந்தலுடைய பெண்கள் பெரிய பூ மாலைகள் சூடுவதை விட்டனர். மலரால் செய்த மாலைகள் குளிர்ச்சியைத் தருவதால் குளிர்ச்சி போதும் மேலும் குளிர்ச்சி வேண்டாம் என்று மாலைகள் சூடுவதைத் தவிர்த்து சில மலர்களைச் சூடிக்கொண்டனர்.

கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்இருங் கூந்தல் சிலமலர் பொய்ம்மார். (நெடுநல்., 53-54)

குளிர்ந்த தண்ணீர் குடிக்காதிருத்தல்

கைத்தொழில் வல்ல பொற்கொல்லன், அழகாகச் செய்த சிவந்த நிறமுடைய கைவிசிறி உறையிலிட்டபடி அவற்றின் வளைந்த ஆணியிலே, அதனைச் சுற்றிச் சிலந்தி வலை கட்டியிருக்கத் தொங்கிக் கொண்டிருந்தது. எனவே விசிறி தேவைப்படவில்லை. நீண்ட நாள் புழக்கத்தில் இல்லாததால் சிலந்தி கூடுகட்டிவிட்டது. வானத்தை முட்ட எழுப்பப்பட்ட மேல்நிலை மாடத்தில் உள்ள இளவேனில் நிலா முற்றத்தில் உலவ படுக்க மனமில்லாமல்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உள்ளே தென்றல் வரவிடும் சாளரக்கதவுகள் இரண்டையும் இழுத்து மூடித் தாளிட அவையும் மூடிக் கிடந்தன. கல் என்னும் ஒலியோடு மழை சிறுதூறலாய்ப் பெய்து கொண்டே இருந்ததால் குவிந்த வாயுடைய குடத்தில் இருக்கும் குளிர்ந்த நீரை எவரும் குடிக்க விரும்பாமல், அகன்ற வாயுடையகும் மட்டியில் மூட்டிய சிவந்த நெருப்பில் குளிர் காய்ந்து கொண்டிருந்ததை,

சிலம்பி வால்றூல் வலந்தன தூங்க
வாண்உற நிவந்தமேல் நிலை மருங்கின்
வேனில் பள்ளித்தென் வளிதேரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்நிலைப்
போர்வாய் கதவம் தாழொடு துறப்ப
கல்என்று வலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார். (நெடுநல்., 60-65)

என்ற பாடல்வரி குறிப்பிடுகிறது.

ஆடல் மகளிர் யாழிசை

நாட்டியம் ஆடுகின்ற பெண்கள் ஆட்டத்தைக் கைவிட்டு பாட்டுப் பாடத் தொடங்கினர். எனவே யாழினைக் கையிலெடுத்தனர். நரம்பு முறுக்கி இசை கூட்டினர். குளிரின் தொல்லை அதிகமாக இருந்ததால் நரம்பு தளர்ந்து இசை மாறியது. எனவே, யாழைத் தம் மார்போடு அணைத்து அவர்கள் தம் மார்பு வெப்பத்தால் சூடேற்றிகரும் தண்டுடைய சிறியயாழைப் பிரிந்திருந்த பெண்கள் கவலைப்பட்டு வருந்த கடுமழை பெய்யும் கார்காலம் நிலைபெற்றது போல் நின்று துன்புறுத்தியதை,

ஆடல் மகளிர் பாடல் கொளப்புணர்மார்
தண்மையில் திரிந்தஇன் குரல்தீந் தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணு முறைநிறுப்ப. (நெடுநல்., 66-70)

இப்பாடல் உணர்த்துகிறது.

தலைவி தங்கியிருக்கும் அந்தப்புரத்தின் சிறப்பு

யவன நாட்டின் கைதேர்ந்த கலை வல்லுநர்கள் செய்த பாவை விளக்குகளும், அவற்றை கைகளில் ஏந்தி இருக்கும் பெரிய அகல்கள் அவை நிறைய நெய்யை விட்டு பெரிய திரிகளைப் போட்டு ஏற்றிய விளக்கின் ஒளிச்சுடர் மேல் நோக்கி நிமிர்ந்து நின்று ஏரியும் ஒளி குன்றினாலும் நெய் ஊற்றி மீண்டும் ஒளிபரவி நிற்கும்படிச் செய்வர். மலை உச்சி போல் உயர்ந்த மாடங்களுடைய அந்தப்புரத்தின் உச்சிமாடங்களில் வானில்தெரியும் இந்திரவில் போல் பலவண்ணக்கொடிகள் அசைந்தாடும் நீலமணி போலக் கரிய கால்கள் போன்ற தூண்களும் செம்பினால் செய்தது போன்றிருக்கும் பெரியசுவர்களும் மேல்விதானமும்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அதில்வெள்ளியை உருக்கி ஊற்றிச் செய்தது போன்ற பல உருவிலான பூக்களும் பூங்கொடிகளும் கண்டவர் வியக்கும்படி இருக்கும் அந்தப்புரத்தில்,

யவனர் இயற்றிய வினை மாண்பாவை
கைஏந்துஇ அகல்நிறைய நெய்சொரிந்து
பல்வேறு பள்ளி தொறும்பாய் இருந்நீங்க
வில்கிடந்தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி அன்ன விளங்கும் சுதைஉரீஇ
உருவப்பல் பூஒரு கொடி வளைஇ (நெடுநல்., 102-110)

தலைவனைத் தவிர வேறு ஆடவர் எவரும் நுழைய முடியாத அரும்பெரும் காவலுடையது தலை விதங்கியிருக்கும் அந்தப்புரம். கடவுளின் கருவறை போன்ற இனிய நல்ல இல்லமாகும் என்பதை நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

தலைவியின்அணிகலன்

தலைவனைப் பிரிந்த தலைவி கவலை கொண்டதனால் முத்துவடம் மார்பில் புரள இருந்த தலைவியின் உடலில் இப்போது மங்கல நாண் மட்டும் தொங்குகிறது. நெற்றியில் புரள்கின்ற சில முடிகள் எண்ணெய்ப் பசை இன்றி வறண்டு மிகுந்த ஒளி வீசியது. மகரக்குழையைக் கழற்றி விட்டதால்அது அணிந்திருந்த சிறிய துவாரத்தில் தூர்ந்து போகாதிருக்க ஓலைச்சுருள் ஒன்றைச் செருகிக் கொண்டிருக்கின்ற வெறுங்காது, பொன்வளையல் சூடியிருந்த மயிர் ஒழுங்குடைய முன் கைகளில் இப்போது சங்கு வளையல்களும், காப்புக் கயிறும், சிவந்த கைவிரல்களில் இப்போது வாளை மீனின் திறந்த வாய் போன்ற சாதாரண வெறும் மோதிரமும் அணிந்திருந்தாள் என்பதை,

பொலந் தொடி தின்றமயிர் வார்முன்கை
வலம்புரிவளை யொடு கடிகைநூல் யாத்து
செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கத்து (நெடுநல்., 141-145)

என்றுதலைவியின் அணிகலன் குறித்து நெடுநல்வாடை தெளிவுபடுத்துகிறது.

தலைவியின் ஆடை

பூ வேலைப்பாடமைந்த வெண்பட்டாடை உடுத்தியிருந்த இடுப்பில் தூசி படிந்த சாதாரண நூலாடையைத் தலைவி அணிந்திருந்தாள். ஏனெனில், தலைவனைக் காணாமல் தவித்துப்போனதால் வருத்தத்தில் தூசுபடிந்த ஆடையை அணிந்திருந்தாள் என்பதை, **பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல் / அம்மாசு ஊர்ந்தஅவரி லறூல்கலிங்க மொடு (நெடுநல்., 146-147)** இப்பாடல் உணர்த்துகிறது.

தலைவனைப் பிரிந்தத லைவியின் தோற்றம்

மாந்தளிர் போலும் மேனி நிறமும், அழகுத் தேமலும் கொண்டஅழகிய மூங்கில் போலும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தோளும், கச்சினால் இழுத்துக்கட்டிய தாமரை மொக்கு போன்ற மென்மார்பும் வருந்தி வாடும் இடையும் கொண்ட தலைவி,

தளிர்ஏர் மேனித் தாய சுணங்கின்

அம்பணைத் தடை இயமென் தோள்முகிழ் முலை(நெடுநல்., 148-149)

தலைவனின் பிரிவுத் துயரத்தால் வருத்தத்தோடு தவித்ததை இப்பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன.

தலைவியின் தோழிப் பெண்கள் கூறும் ஆறுதல்

தலைவனைப் பிரிந்த கவலையில் தலைவி தனித்துத்தவித்திருக்க அவளுடைய தோழிப் பெண்கள் அவளுடைய மென்மையான பாதங்களை மெல்லத் தடவித் தலைவிக்கு,

வம்பு விசித்து யாத்தவாங்கு சாய்நுசுப்பின்

மெல்லியல் மகளிர் நல்லடி வருட (நெடுநல்., 150-151)

ஆறுதல் கூறியபடி இருந்தனர்.

செவிலித் தாயர்களின் தோற்றம்

நரைத்த வெள்ளை முடிகூடக் கலந்த அழகிய நறுங்கூந்தலுடைய, சிவந்த முகம் கொண்ட செவிலித்தாயர்கள் என்பதை,

நரை விரவுற்ற நறுமென் கூந்தல்

செம்முகச் செவிலியர் (நெடுநல்., 152-153)

என்ற பாடல் வரி குறிப்பிடுகிறது.

செவிலித் தாயர்கள் தலைவியைத் தேற்றுதல்

தலைவிக்குத் தலைவனைப் பிரிந்ததால் உண்டான துன்பத்தைத் தவிர்க்க எண்ணி ஒன்றாகக் கூடி சிறிதாகவும், நீண்ட உரையாகவும் பல சமாதான நன்மொழிகளைக் கூறிக் கவலைப்படாதே இன்றே இப்போதே உனக்கினிய துணைவர் வந்துவிடுவார் என்று அவளுக்கு உவப்பான சில இனிய மொழிகளைச் சொல்லியும் தலைவி ஏற்காது மனம் வருந்தியவளாய் காணப்பட்டாள் என்பதை,

குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி

இன்னே வருகுவர் இன்துணையோர் என

உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து (நெடுநல்., 154-156)

என்கிறது நெடுநல்வாடை.

தலைவி கண்ணீர் விட்டு அழுதல்

செவிலித்தாயர்களின் அறிவுரையைக் கேட்டு, பெருமூச்சுவிட்டுக் கறுத்த நீலமலரில் தங்கிய பனிநீர் கீழே விழுவது போலக் கண்ணீர் சிந்தி நீலமலர் போலும் கண்கள் அழ சிவந்த கைவிரல்களால் வழிகின்ற கண்ணீரைத்து டைத்துக் கொண்டு தலைவனை நினைத்துத் தவித்தாள்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

செவிலித்தாயர் கொற்றவையை வணங்குதல்

தலைவனின் பிரிவுத்துயரை எண்ணி மீளாத துயரத்தில் மூழ்கிக் கிடக்கும் தலைவியின் துயரம் நீங்கச் செவிலித்தாயர் போர் குறித்துச் சென்ற தலைவனுக்கு இன்றே வெற்றி கிடைக்கவும், போர்முடிய வேண்டும் என்றும் கொற்றவையைப் பணிந்து நின்றதை,

இன்னா அரும்படர் தீரவிறல் தந்து

இன்னே முடிகதிலஅம்ம (நெடுநல்., 166-167)

என்ற பாடல் வரி குறிப்பிடுகிறது.

முடிவுரை

போர் குறித்துப் போன தலைவன் சொன்னபடி வரவில்லை என்றாலும் வாடைக்காலம் வந்து விட்டதை தலைவனைப் பிரிந்ததலைவியை மேலும், தவிக்கச் செய்யவிட்டு மேன்மாடத்தில் காற்று நுழையும் சன்னல் கதவுகளை அடைத்து விட்டுத் தலைவன் தேர்வரும் ஓசை கேட்கும் கேட்கும் திசைமுகம் பார்த்து தவித்துக் கொண்டிருக்கும் தலைவியை தோழியர்களும் செவிலித்தாயரும் தேற்றுவதாக நீண்டவாடையாக இருப்பதை *நெடுநல்வாடை* உணர்த்துகிறது.

குறிப்புகள்

[1] சந்திரா, சு. *நெடுநல்வாடை*. செல்லப்பா பதிப்பகம், 2008.

[2] சுயம்பு, பெ. *தமிழ் இலக்கிய வரலாறு*. 2017.

[3] நாகராசன், வி. முனைவர். *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி ஹவுஸ் (பி) லிட், சென்னை-600008, 2009.

[4] மணவாளன், அ, அ. *சங்க இலக்கியம்*. நியூ செஞ்சுரி ஹவுஸ் (பி) லிட், சென்னை-600008, 2009.

[5] மாணிக்கவாசன், ஞா. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. உமா பதிப்பகம், 2002.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Expressions of Nostalgic Feelings of the Coastal Beloved in *Kurunthokai*

A. Mani, Reg. No.: 18211284021006, Research Scholor, Tamil Research Centre,
St.Xavier's College, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
Dr. S. Ravi Jesuraj, Assistant Professor of Tamil, Tamil Research Centre,
St.Xavier's College, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-3575-5325
DOI:

Abstract

The article states the nostalgic feelings and their expressions found in the Neithal songs (Coastal) of "Kurunthogai." Four Kalavu (Secret Love) songs are taken for study and they highlight the expressions of nostalgic feelings of the beloved (Thalaivi) that can be learned from the songs. The sad expressions of the ladylove who is sad by the hero's separation has been mentioned in the poems. Among them, the part called "Vemmaik Kanneer Sindhum Nilai" describes how the heroine worries for the hero and sheds tears for his safety. It also explains how the heroine longs for the departed hero and asks her friend about the sickness of lust. She tells the maid (Thozhi) that she wants to give up her life. She is unable to bear the separation from his thoughts. The section titled "Paruvam Kandhu Irangum Nila" mentions that the hero did not return even at the Karkalam (Rainy Season). and shows how the bellowed mourns for it. The section on the separation of the hero and the nostalgic situation of the beloved is shown by the poets in the above mentioned four songs. In the concluding section, it is shown that the expressions of the beloved are very sensitive to the departure of the hero. She has a strong love for him, and the hero thinking the bellowed believes that her pure love will help her to live a happy married life. Nevertheless, the article mentions the reason for the hero's separation from the textual references.

Keywords: *Kurunthogai*, Neithal, Beloved (Thalaivi), Hero (Thalaivan), Maid (Thozhi).

References

[1] Ilampooran, (Ed.). *Tholkappiyam Bhattathikaram*. Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Association, Ltd., Chennai -1, March 1982.
[2] Yesudasan, P.S. *Thirukkuralil Kalavum Karppum*. Manivasagar Publishing House, Chennai - 600 108, 2015.
[3] Saminathaiyaravars, U.V. (Ed.). *Kurunthokai*. Kabir Printing House, Chennai, 1947.
[4] Somasundharanar, P.V. (Ed.). *Kurunthokai*. Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Association, Ltd., Chennai -18, 2007.
[5] Nagarasan, V. (Text.). *Kurunthogai* (Source and Text), Book – 1, New Century Book House (P) Ltd., Chennai – 600 098, 2014.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள்

ஆ. மணி, பதிவெண்: 18211284021006, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
முனைவர் சு. ரவி ஜேசுராஜ், உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-3575-5325
DOI:

ஆய்வுச்சுருக்கம்

குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் என்பது ஆய்வுக்கட்டுரைத் தலைப்பு. இவ்வாய்வுக் கட்டுரையில் முதலாவதாக முன்னுரைப் பகுதி அமைகிறது. இப்பகுதியில் குறுந்தொகைக்கண் இடம்பெறும் நெய்தல் பாடல்களுள் தலைவி தோழியிடம் கூறுவனவாக உள்ள நான்கு களவுப் பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதும் அப்பாடல்களிலிருந்து அறியலாகும் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது என்பதும் கூறப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து தலைவனது பிரிவினால் துயருற்ற தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளின் வகைகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை என்னும் பகுதி களவில் தலைவன் தன்னைப் பிரிவான் என்பதனை அறிந்த தலைவி கலங்கித் துயருற்றுக் கண்ணிமைகள் கருகும் அளவிற்கு வெம்மைக் கண்ணீர் வடித்ததனையும் தலைவன் அக்கண்ணீரைத் துடைத்து ஆற்றுவித்ததனையும் அத்தகைய காதலன்பு கொண்ட தலைவன் பின்னர்த் தன்னைப் பிரிந்ததால் துயர் ஆற்றாதவளாகித் தனது நெஞ்சு மிகவும் வருந்துகிறது என்று தோழியிடம் கூறுவதனையும் எடுத்துரைக்கிறது. கண்கள் துயிலாத நிலை என்னும் பகுதி பிரிந்த தலைவனது வருகையை எதிர்நோக்கிக் கண் துஞ்சாது வருந்திய தலைவிகாமநோய் என்பது அத்தகையதோ? எனத் தோழியிடம் வினவுவதை விளக்குகிறது. உயிர் துறக்கும் நிலை என்னும் பகுதி தலைவன் பிரிந்தவுடன் அவனது பிரிவை ஆற்றாமல் நீங்காத காம உணர்வுடன் தலைவி தனது உயிரைத் துறக்க விரும்புவதைக் கூறுகிறது. பருவம் கண்டு இரங்கும் நிலை என்னும் பகுதி கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர்த் திரும்பி வருவதாகத் தலைவியிடம் கூறிச் சென்ற தலைவன் கார்காலத்தில் மழை பெய்யும்போதும் மீண்டு வராததால் அவள் மிக வருந்தி இரங்கியதைக் குறிப்பிடுகிறது. தலைவனது பிரிவுக்கான காரணம் என்னும் பகுதியில் மேற்குறிப்பிட்ட நான்கு பாடல்களுக்குரிய உரை விளக்கங்களின் மூலம் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பது கூறப்படுகிறது. முடிவுரைப்பகுதியில் நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளின் மூலம் பிரிந்த தலைவனைத் தலைவி மறவாது அவன்மீது உறுதியான தூய காதலன்பு கொள்கிறாள் என்பதும் அத்தூய காதலன்பு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தலைவனோடு சேர்ந்து சிறந்த இல்லற வாழ்வு வாழத் துணைபுரியும் என்று தலைவி நம்புகிறாள் என்பதும் கூறப்படுகின்றன. மேலும், தலைவனது பிரிவுக்கான காரணத்தைப் பாடல்கள் கூறாவிடினும் உரை விளக்கங்கள் கூறுகின்றன என்பது உரைக்கப்படுகிறது.

திறவுச்சொற்கள்: *குறுந்தொகை*, நெய்தல், தலைவி, தலைவன், தோழி.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் என்று இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை என்பது அகநூலாகும். இதனுள் ஐவகைத் திணைகள் குறித்த பாடல்கள் இடம்பெறுகின்றன. குறுந்தொகையில் உள்ள முதல் இருநூறு பாடல்களில் முப்பது பாடல்கள் நெய்தல் திணையைச் சார்ந்தவை.அவற்றுள் தலைவி தோழியிடம் கூறுவனவாகப் பதினான்கு பாடல்கள் அமைந்துள்ளன. அவை களவுப் பாடல்கள். அக்களவுப்பாடல்களுள் நான்கு பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அப்பாடல்கள் மூலம் புலப்படும் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள்

ஐந்திணை நிலப்பகுப்புக்களுள் ஒன்றான நெய்தல் நிலத்தைக் கடலும் கடல் சார்ந்த இடமும் கொண்ட பகுதியாக முன்னோர் வகுத்தனர். இந்நிலத்தில் வாழ்கின்ற மக்களின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும்.நெய்தல் நிலத் தலைவனும் தலைவியும் களவு வகைகளுள் ஒன்றான இயற்கைப் புணர்ச்சிக்கு உட்படுகின்றனர்.பின்னர் இருவரும் ஆழ்ந்த காதல் உணர்வுடன் உள்ளம் ஒன்றி வாழ்ந்து வருகின்றனர்.இச்சூழலில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான்.நீண்ட நாட்களாகத் தலைவனைக் காணாது தலைவி பிரிவாற்றாமல் துயருறுகிறாள். இப்பிரிவாற்றாமையால் அவள் இரங்கிய மனநிலைக்கு உள்ளாகிறாள்.அதன் விளைவாக அவளிடமிருந்து பல இரங்கல் உணர்வுகள் வெளிப்படுகின்றன.

1) வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை,

2) கண்கள் துயிலாத நிலை,

3) உயிர் துறக்கும் நிலை,

4) பருவம் கண்டு இரங்கும் நிலை

என்பன தலைவியின் இரங்கல் உணர்வின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. அவை இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை

தலைவனது பிரிவைத் தாங்க முடியாமல் கலங்கித் துயருறும் தலைவி தனது நெஞ்சு மிகவும் வருந்துகின்றது எனத் தோழியிடம் கூறுகிறாள். இயற்கைப் புணர்ச்சியின்போது

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தலைவன் தலைவியிடம் "**நின்னைப் பிரியேன்**" என்று கூற, பிரிவு என்ற ஒன்று உண்டு என்பதனை நினைத்துக் கலங்கிய தலைவி தனது கண்களின் இமைகள் கருகும் அளவுக்கு வெம்மைக் கண்ணீர் வடித்தாள். அக்கண்ணீரைத் தலைவன் தனது கையால் துடைத்துத் தலைவியுடன் அளவளாவிப் பிரியாது தங்கி அவளை ஆற்றுவித்தான். அத்தகைய காதலுடைய தலைவன் இப்பொழுது தன்னுடன் தங்காமல் பிரிந்ததை நினைத்துக் கலங்கிய தலைவி தன்னுடைய நெஞ்சு மிகவும் வருந்துவதாகத் தோழியிடம் மீண்டும் கூறுகிறாள். இக்கருத்தினை,

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே (குறுந்., 4)

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது. தலைவியின் கண்கள் வெம்மைக் கண்ணீர் வடிப்பது குறித்து உரையாசிரியர் உ.வே.சா., "**பிரிவாற்றாமையால் வரும் கண்ணீராதலின் வெம்மையை யுடையதாயிற்று**" (குறுந்., ப. 15) என்று விளக்குவர். இப்பாடலில் 'நோமென் னெஞ்சே' என்னும் தொடர் மூன்று முறை அடுக்கி வந்துள்ளது.இதுகுறித்து உ.வே.சா., "**மூன்று முறை அடுக்கியது ஆற்றாமை மிகுதி பற்றி**" (குறுந்., ப. 15) என்பர்.

கண்கள் துயிலாத நிலை

நெய்தல் நிலக் கடற்கரை அருகில் புன்னை மரம் வளர்ந்து காட்சியளிக்கிறது. இனிய நிழலையுடைய அம்மரத்தில் குருகு என்னும் பறவை மீன் உண்டு துணையின்றித் தங்கித் துயில் கொள்கிறது. இத்தகைய நெய்தல் நிலத்திற்கு உரிய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் காதலன்பு கொள்கின்றனர்.ஒரு தருணத்தில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான்.அதனால், தலைவி பிரிவாற்றாது துயருறுகிறாள். பல இதழ்களையுடைய தாமரை மலரைப் போன்ற மையுண்ட தலைவியின் கண்கள் தலைவனின் வரவை எதிர்நோக்கித் துயிலாமல் வருந்துகின்றன. அங்ஙனம் துயிலாமல் வருந்தும் தலைவி, "**காம நோய் என்பது அத்தகையதோ?**" என்று தோழியிடம் பிரிவாற்றாமல் மனம் கலங்கி வினவுகிறாள்.

அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே (குறுந்., 5)

என்னும் பாடல் மேற்கருத்தைப் புலப்படுத்தி நிற்கிறது. இப்பாடலின் உரையாசிரியர் வி.நாகராசன், "**தன் நாட்டில் குருகு இனிது உறங்குவதற்குக் காரணமாகிய தலைவன்,**

தலைவியின் உறங்காமைக்குக் காரணன் ஆயினன் என்ற குறிப்பு, இப்பாடலில் அமைந்துள்ளது" (குறுந். ப. 20) என்று குறிப்பிடுவர். இவர்தம் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

உயிர் துறக்கும் நிலை

நீரில் வாழும் மகன்றில் பறவைகள் ஆணும் பெண்ணுமாகப் பிரிவின்றி இணைந்து இன்புற்று வாழும் இயல்புடையன. அங்ஙனம் அவை சேர்ந்து வாழ்ந்து வரும் நிலையில் தமக்கிடையே ஒரு பூ வந்து ஒன்றையொன்று காண முடியாமல் மறைப்பதாக இருந்தால்கூடப் பல ஆண்டுகள் கழிந்தாற்போலத் துயருற்று உயிரைத் துறக்கும். அதுபோலத் தலைவன், தலைவி என்னும் இருவராக வாழ்ந்துவரும் இவ்வுலகத்தில் தலைவனது பிரிவினால் ஒருவராகத் தனித்து வாழ்வது தலைவிக்குப் பெருந்துன்பத்தைத் தர வல்லது. அப்பிரிவுத் துன்பத்திலிருந்து நீங்கித் தப்புவதற்குப் புணர்ச்சியால் ஒன்றிணைந்த மேற்குறித்த மகன்றில் பறவைகள் பிரிவு நேர்ந்த உடன் இறந்துபட்டனபோலத் தலைவன் பிரிந்த உடன் நீங்காத காம உணர்வோடு தனது உயிரும் பிரிவதாக என்று விருப்புடன் தலைவி தோழியிடம் கூறுகிறாள். இக்கருத்தினை, "**பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன" (**குறுந்., 57) எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் வலியுறுத்தும். இப்பாடலில் பயின்று வரும் 'உடனுயிர் போகுக தில்ல...' என்னும் பாடலடிக்கு உரை வரைந்த உ.வே.சா., **"ஒருங்கே எம் உயிர் போவனவாகுக ; இஃது எனது விருப்பம்"** (குறுந்., ப. 137) எனத் தலைவி தோழியிடம் கூறியதாகக் குறிப்பர். உரையாசிரியர் வி.நாகராசன், **"காதலர்ப் பிரிந்தவுடன் என் உயிரும் உடன் நீங்குவதாகுக. அதுவே என் விருப்பமாகும்"** (குறுந். ப. 148) என்பர். உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார், **"பிரிவு நேர்ந்த அப்பொழுதே இவ்வுயிரும் இவ்வுடலை விட்டுப் போவதாக; இஃது எனக்கு விருப்பம்"** (குறுந். ப. 117) என்று குறிப்பிடுவர். இம்மூவருள் வி.நாகராசனும் பொ.வே.சோமசுந்தரனாரும் ஒன்றுபடுவர். உ.வே.சா. வேறுபடுவர். இவர் தம் உரைகள் குறித்து எதிர்கால ஆய்வர் ஆய்க.

பருவம் கண்டு இரங்கும் நிலை

கார்ப்பருவ மாலைக்காலத்தில் மழையையுடைய கரிய மேகங்கள் மலைப்பகுதிக்கண் தோன்றுகின்றன.அவை அம்மலைப்பகுதியில் இனிய ஓசையுடன் இடி இடித்து முழங்குகின்றன. அதன் விளைவாக மழை பெய்கின்றது. அம்மழையானது முன்பு மழை பெய்த குன்றத்தின்கண் பரவிக் கிடந்த மணம் கமழும் மலர்களையும் அப்பொழுது உதிர்ந்த மணம் வீசும் புதிய மலர்களையும் சுமந்து வந்து அருவியாகப் பாய்கிறது. இத்தகைய கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகப் பாதுகாப்பான மொழிகளைக் கூறித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவர் இன்னும் வந்திலர். அவர் உறுதியாகத் தன்னை மறந்துள்ளார்.ஆயின், தலைவி அவரை மறவாமல் இருப்பதாகப் பிரிவுத்துயருடன் தோழியிடம் கூறுகிறாள். இதனை,

... வாரார் தோழி

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மறந்தோர் மன்ற மறவா நாமே (குறுந்., 200: 3-4)

என வரும் பாடலடிகள் இடம்பெறும் பாடல் புலப்படுத்தும்.

கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகத் தலைவியிடம் கூறிப் பிரிந்த தலைவர் கார்ப்பருவத்தில் இடி இடித்து மழை பெய்து கொண்டிருக்கும் நிலையிலும் வந்திலர். அதனால், பெரிதும் ஆற்றாமைத்துயர் அடைந்த தலைவி இரங்கி வருந்தும் நிலைக்கு உள்ளானாள்.தலைவர் குறித்த காலத்தில் வாராது தன்னை மறந்தாலும் தான் அவரை மறவாது நினைவு கூர்வதாகக் கூறுகிறாள்.அவளது கூற்றிலிருந்து அவள் தலைவர்மீது கொண்டிருக்கும் பேரன்பு புலப்படுகிறது. காதல் வாழ்வு இனிமையானது. பிரிவு துயரம் மிக்கது ; இரங்கத்தக்கது. இப்பிரிவில்தான் அன்பு மிகும். **பிரிவே அன்பின் மிகுதியை உணர்த்த வல்லது.இன்பச்சுவைக் காட்சிகளைவிட அவலச்சுவை மனதில் சிறந்ததொரு இடம்பெற்று விடுதற்குரியதாகின்றது.** (குறுந்., ப. 38) என்பர் ப.ச.ஏசுதாசன். இவர்தம் கூற்று இங்குப் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

தலைவனது பிரிவுக்கான காரணம்

பண்டைய மாந்தர்தம் அக வாழ்வில் ஓதற்பிரிவு, பகைவயிற்பிரிவு, தூதுவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என்றினைய பல்வகைப் பிரிவுகள் நிகழ்ந்தன என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. (தொல். பொருள். நூ. எண். 27, 35, 185) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு பாடல்களும் தலைவன் பிரிந்ததனால் தலைவிக்கு ஏற்பட்ட பிரிவாற்றாமையையும் அதன் விளைவாக அவள் தனது இரங்கல் உணர்வுகளைத் தோழியிடம் வெளிப்படுத்துவதனையும் எடுத்துரைக்கின்றன. ஆயின், தலைவன் தலைவியைப் பிரிந்ததற்கான காரணம் குறித்துப் பாடல்களில் கூறப்படவில்லை. எனினும், குறுந்தொகை உரையாசிரியர்களின் விளக்கங்களிலிருந்து களவில் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பதனை அறிய முடிகிறது. மேற்குறித்த பாடல்களுள் உரையாசிரியர் வி. நாகராசன் முதல் பாடலின் கீழ்ப்பகுதியிலும் (குறுந்., ப.17), உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார் முதல் இரண்டு பாடல்களின் மேற்பகுதியிலும் (குறுந். பக்., 48, 49) தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துக் கூறுவர். எஞ்சிய பாடல்களின் உரை விளக்கங்களில் மேற்குறிப்பிட்ட உரையாசிரியர்களும் நான்கு பாடல்களுக்குமுரிய உரை விளக்கங்களில் உரையாசிரியர் உ.வே.சா.வும் தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துக் கூறினாரிலர். இது குறித்து எதிர்கால ஆய்வர் ஆய்க.

முடிவுரை

குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பட்ட இவ்வாய்வின் மூலம் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. இயற்கைப் புணர்ச்சியால் ஒன்றுபட்ட மனத்தினராகத் தலைவனும் தலைவியும் வாழ்ந்த சூழலில் தலைவனது பிரிவு தலைவிக்குப் பிரிவாற்றாமையால் துயருற்று இரங்கும் மன

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உணர்வைத் தோற்றுவித்தது. அதன் விளைவாகத் தலைவி நெஞ்சு வருந்தி வெம்மைக் கண்ணீர் சிந்துதல், தலைவனின் வருகையை எதிர்நோக்கிக் கண்கள் துயிலாமல் இருத்தல், மகன்றில் பறவையைப் போலத்தலைவி உயிர் துறக்கும் நிலைக்குச் செல்லுதல், கார்காலம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் கார்காலம் வந்த பின்னரும் வாராமையால் தலைவி அப்பருவம் கண்டு இரங்கும் நிலைக்கு உள்ளாகி, தலைவன் தன்னை மறந்தாலும் தான் தலைவனை மறவாத நிலையில் இருப்பதாகக் கூறுதல் ஆகியன தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளாக அறிய முடிந்தன. இவ்விரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் தலைவி தலைவன்மீது கொண்ட உறுதியான தூய காதலையும் தலைவனோடு மேன்மையான இல்லற வாழ்வு வாழ்ந்து பொலிவடைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதையும் புலப்படுத்துகின்றன எனலாம். மேலும், தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துப் பாடல்கள் கூறாவிடினும் உரையாசிரியர்களின் விளக்கங்கள் மூலம் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பதனை அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] இளம்பூரணர், (உரை.). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை -1, 1982.

[2] ஏசுதாசன், ப.ச. *திருக்குறளில் களவும் கற்பும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8, 2015.

[3] சாமிநாதையரவர்கள், உ.வே., (உரை.). *குறுந்தொகை.* கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1947.

[4] சோமசுந்தரனார், பொ.வே., (உரை.). *குறுந்தொகை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-18, 2007.

[5] நாகராசன், வி., (உரை.), *குறுந்தொகை* (மூலமும் உரையும்), புத்தகம் – 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 600 098, 2014.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Female Body Language in the Poems of Tamil Female Poets

Dr. B. M. Myla, Assistant Professor of Tamil,
Sree Ayyappa College for Women, Chunkankadai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0000-8125-8596
DOI: 10.5281/zenodo.14752345

Abstract

In the ancient Sangam literature in Tamil, one can see that patriarchal thought is common in the Indian family system apart from the hunting social system that went beyond the tribal tradition. Various social rituals related to women's bodies, women's professions, beliefs and religious institutions oppress women. Femininity is constructed as someone who possesses qualities such as fear, tenderness, modesty, and chastity and who is submissive to the male authority in the family. Women are considered as the one who fulfils men's desires, who is the object of desire, who ought not to question the male's knowledge, who do not uphold the authority of knowledge, who cannot leave the family system, who are subject to physical and social rules and who does not break caste rules. There is a common perception that if any female poet writes about female organs in their poems, it is called female body language. This study aims to re-read this and examine how the female body is recorded in the poems of Tamil female poets that transcend the boundaries of male-centric culture, by raising voices against anti-female concepts and values, and against the violence inflicted upon them.

Keywords: Patriarchal Society, Female Body Language, Poems, Tamil Female Poets.

References

[1] Ilampooranar. *Tolkappiyam.* Sarada Publishing House.
[2] Seypal, S. *Akanaanuru Moolamum Uraiyum.* New Century Book House (P) Ltd., Chennai – 98
[3] Somasundaran, P. V. (Ed.). *Agananooru. Saiva Siddhanta Noorpathippu Kazhagam*. Chennai, 1966.
[4] Duraisamy Pillai, S. A., *Natrinai (Explanation).* Aruna Publications, Chennai, 1968.
[5] Balasubramanian, K.V. *Natrinai Moolamum Uraiyum*. New Century Book House (P) Ltd., Chennai – 98
[6] Puliyurkesigan. *Tholkappiyam.* Parinilayam, Chennai, 2012.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண் உடல் மொழி

முனைவர் ப. ம. மயிலா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-8125-8596
DOI: 10.5281/zenodo.14752345

ஆய்வுச்சுருக்கம்

தமிழில் பழமையான சங்க இலக்கிய பிரதிக்குள் தொல்குடி மரபை தாண்டிய வேட்டை சமூக அமைப்பை தவிர நிறுவனமயமாக்கப்பட்ட குடும்ப அமைப்பில் ஆணாதிக்க சிந்தனை போக்கிருப்பதை நாம் பார்க்கலாம். பெண்ணின் உடல் சார்ந்தும், பெண்ணின் தொழில் சார்ந்தும் பல்வேறு வகையான சமூக சடங்குகள் நம்பிக்கைகள் சார்ந்தும் மத நிறுவனம் சார்ந்தும் பெண் ஒடுக்குதலுக்கு உள்ளாவதை நாம் கவனிக்கலாம். இதனை இந்த ஆய்வு முன் வைக்கிறது.

குறிப்புச்சொற்கள்: ஆணாதிக்க சமூகம், பெண் உடல் மொழி, கவிதைகள், தமிழ் பெண் கவிஞர்கள்.

முன்னுரை

பெண்மை, அச்சம், மென்மை, நாணம், மடம், கற்பு, போன்ற பண்புகளை உடையவளாக ஆணின் துணிவுக்கு எதிராகக் குடும்பத்தில் கட்டுப்பட்டு நடப்பவளாக அவனது இச்சையைப் பூர்த்தி செய்பவளாக வேட்கை பொருளாக அறிந்தும் அறியாத பேதையாக ஆணின் அறிவை கேள்விக்குட்படுத்துபவளாக அறிவின் பாற்பட்ட அதிகாரத்தை கைக்கொள்ளாதவளாக குடும்பம் என்ற அமைப்பில் இருந்து வெளியேற முடியாதவளாக உடல் சார்ந்த விதிகளுக்கும் சமூகத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பவளாக, சாதி விதிகளை முறாதவளாக பெண்மை கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண் உறுப்புகளைப் பெண் கவிஞர்கள் கவிதைகளில் எழுதினால் அது தான் பெண் உடல்மொழியாக இருக்குமோ என்ற ஐயமும் பொது பார்வையும் உண்டு. அதனை மறுவாசிப்புக்கு உட்படுத்தி பெண்ணுக்கு எதிரான கருத்தாக்கங்கள், மதிப்பீடுகள் அவற்றின் வன்முறையைக் குரல் எழுப்பி ஆண் மைய மொழிக் கலாச்சாரத்தின் எல்லைகளை மீறி பெண் உடல் எவ்வாறு பெண் கவிஞர்களின் கவிதைகளில் பதிவாகியுள்ளது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆணாதிக்க சமூக மதிப்பீடுகள்

ஆணாதிக்க சமூகத்தின் இருமை எண்ணமான செய்வினை/ செயப்பாட்டுத்தன்மை, சூரியன் / சந்திரன், கலாச்சாம் / இயற்கை, பகல் / இரவு, தந்தை / தாய், மூளை / உணர்வு, அறிவுச்சார்பு / உள்ளச் சார்பு போன்ற எதிர்மறைகள் ஆண் / பெண் என்ற எதிர்மறையை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மையமாகக் கொண்டு ஆணாதிக்க சமூக ஒழுங்கமைவுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆண்மை என்ற கருத்தாக்கத்தினுள் வீரம் / துஒலவ, வலிமை / ஆற்றல், அறிவு / ஞானம் போன்றவைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

சங்ககால சமூக அமைப்பில் இதனை நாம் கண்கூடாகக் காணலாம். போரில் வெற்றியை நோக்கியதாகவும், போரில் எதிரியை வீழ்த்தும் நிர்வாகம் சார்ந்ததாகவும் சமூக சாதிய கட்டுப்பாடுகளை பேணுவதிலும் ஆண்மை கருத்தாடல்கள் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைக்கப்பட்டுள்ள பண்புகள் சார்ந்து தான் பெண்மை இந்த சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண்மை ஆண்மை என்ற பாலினப்பாகுபாடுகள் மனிதர்களின் உள்ளுணர்வில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அப்பாகுபாடுகள் மொழியிலும் ஆழமாக வேரூன்றச்செய்து நிலை நிறுத்தப்பட்டுள்ளன. "லக்கான்" (Lacan) என்ற மொழியியல் அறிஞர் மொழி தான் மாந்தரை பண்பாட்டு பாலியலுக்கு கொண்டு சென்று பெண் ஆண் என்று கட்டமைக்கின்றது என்கிறார். ஆகையினால் தான் பெண்ணும், ஆணும் சமூக உயிரிகளாகக் கருதப்பட்டாலும் பெண் வேறு தளத்திலும், ஆண் வேறு தளத்திலும் முரண்படுத்தப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

சமூக வாழ்நிலை தளத்தில் உடலியல் ரீதியாகவும் வாழ்கை முறையிலும், பண்பாட்டு நடத்தைகளிலும் இன்றும் பிற நடவடிக்கைகளிலும் பெண்ணுக்கு வேறான அனுபவங்களும் ஆணுக்கு வேறான அனுபவங்களும் பெறப்படுகின்றன. அதாவது பாலியல் அடிப்படையிலும், பாலின பாகுபாட்டின் அடிப்படையிலும் வேறுபடுத்தப்படுவதால் பெண்ணின் அனுபவங்கள் ஆணின் அனுபவங்களில் இருந்து வேறுபட்டே தான் அமைந்திருக்கின்றன.

சங்க கால சமூக அமைப்புச் சூழல்

தொல்காப்பியம் பெண்களுக்குரிய பண்புகளாக,

அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.,கள., 1045)
உயிரினும் சிறந்தன்று நா ணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு (தொல்.,கள., 1059)

இப்படி பெண்ணினது பண்புகளாக நாணத்தையும் கற்பையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல்வன்மை, நல்லறிவு, விருந்தினரை வரவேற்றல், சுற்றம் ஓம்பல் என்பவை பெண்களின் பண்புகளாக தொல்காப்பியம் வரையறுக்கிறது.

மொழியைக் கையாளும் அதிகாரம் யாரின் கைவசம் இருந்ததோ அவரது கண்ணோட்டத்தை ஒட்டியே மொழியும் வடிவமைக்கப்படுவதை காணமுடிகிறது. முற்காலத்தில் உள்ள தாய்வழி சமூக அமைப்பு தந்தை வழி சமூக அமைப்பாக மாறிய பின்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பொருளாதாரம், அரசியல், சட்டம், சமயம் எனப்பல துறைகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தியதால் மொழி ஆண் வழிப்பட்டதாக மாறியது, சங்கக் கவிதைகளில் ஆண்களது பேச்சில் மறங்களும், அறங்களும் புதைந்து கடந்தன. மாறாக பெண்களது பேச்சில் சுழிவிரக்கமும், ஏக்கமுமே பொழிந்து கிடந்தன.

பேச்சினை பெண் அம்சம் என்றும் அது நிலையற்றது என்றும், எழுத்தினை ஆண் அம்சம் என்றும் அது நிலைத்தது என்றும் பின் நவீன சிந்தனைவாதி மிஷேல் பூக்கோ கூறுகிறார். அதிகாரம் செலுத்த முயன்ற ஆண் சமூக அமைப்பு பெண்களை ஒடுக்குவதற்கு முதலில் அவர்களது மொழியைத் தான் கையில் எடுத்துள்ளது. பெண்கள் இன்சொல்லிற்கும், மென்மையான சொல்லிற்கும் சொந்தக்காரர்கள் என்பதை வலியுறுத்திப் பின் அவர்கள் இப்படித்தான் பேச வேண்டும் என்பதை சங்கக் கவிதை அழுத்தமாகவும் வலிமையாகவும் வரையறுத்துக் கொண்டது.

பூங்கட் புதல்வன் உறங்கு வயில் ஒல்கி
வந்தீக எந்தை என்னும்
அம்தீம் கிளவி கேட்கு நாமே (நற்., 221)

என்ற நற்றிணை பாடல் வறிகள் மூலம் தலைவி அழகிய இனிய குரலை உடையவள், விருந்தினரை எதிர்கொண்டு போற்றும் விருப்பம் உடையவள் பின்னர் தன் மகன் தூங்கும் இடத்தில் துவளும் நடையினராய் விடியற்பொழுதில் சென்று எந்தாய் வருக என தலைவி அழைப்பாள். அத்தகைய அழகிய இனிய குரலை நாமும் கேட்க வேண்டும் என்கிறான் தலைவன். இங்கு ஆணின் பேச்சின் மூலம் பெண்ணின் மொழி வரையறுக்கப்படுகிறது. இதன் மூலம் பெண்களது மொழியை ஆண்கள் வரையறைப்படுத்தியுள்ளது தெரிய வருகிறது. பெண்கள் சிலவாகி சொற்களை மட்டும் பேசக் கூடியவர்கள் என்பதன் மூலம் பெண்கள் குறித்த ஆணாதிக்க எண்ணத்தின் மன வெளிப்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது.

உடல் - வரையறை

பெண்மை, ஆண்மை என்ற பாலினப் பாகுபாட்டிற்கு வரலாறு நெடுகிலும் பல்வேறு விளக்கங்கள் தரப்படுள்ளன. மானிட இனம் தங்களைப் பற்றி உருவாக்கிக்கொண்ட கருத்தியல், அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றை ஓட்டியே இந்த விளக்கங்கள் அமைகின்றன. பெண் உடலில் ஏற்படும் பருவ மாற்றங்களை அச்சுறுத்துபவையாகவும், ஈர்ப்பவையாகவும் கட்டமைத்துள்ளனர். ஆண் உடலில் ஏற்படும் மாற்றங்கள் நேர்கோட்டுப்பாணியில் வளர்ச்சியைக் குறிப்பதாகவும், பெண் உடலில் ஏற்படும் மாற்றங்கள் நேர்க்கோட்டுப் பாணியில் வளர்ச்சியைக் குறிப்பதாகவும், பெண் உடலில் ஏற்படும் அனைத்து மாற்றங்களும் நேர்கோட்டைச் சிதைப்பவையாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாதவிலக்கு, பிரசவம், மாதவிலக்கு நிற்றல் போன்ற இயற்கையான உடற்கூறு நிகழ்வுகள் ஆணாதிக்கச் சமூக அமைப்பால் தூய்மையற்ற நிகழ்வாகக் கருதப்பட்டன. எனவே

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்ணுடலை தீட்டு என்று ஒதுக்கி வைத்து சுத்தம், அசுத்தம் என்ற எதிர்வுகளை கட்டமைத்தனர் மாதவிலக்குக் குறித்தச் சிந்தனை பெண்களுக்குள்ளும் திணிக்கப்படுவதால் தனது உடலை தானே வெறுக்கும் மானிடப்பிறவியாக பெண் மாறிப்போனாள். ஆண் நோக்கல் பெண் உடலானது தீட்டாகப் பார்க்கப்பட்டாலும் அழகு, சுகம், போகம் தரும் பொருளாகவும், அனுபவிக்கத்தக்க பொருளாகவும் அணுகப்படுகிறது. எனவே பெண்ணுடலைப் போகப்பொருளாகக் கட்டமைக்கின்றது ஆணாதிக்க சமூக அமைப்பு என்று உறுதியாகக் கூறலாம்.

சங்கக் கவிதையில் தலைவியின் இயல்பு

ஆணின் உடலை வலிமையாகவும், பெண்ணின் உடலை பாலியல் உறுப்புக்களை வைத்தும் வரையறை செய்துள்ளனர். ஆணின் உடலுக்கு நேர் எதிர் பண்பினை கொண்டது பெண்ணில் உடல் என்றளவிலேயே பெண்ணுடல் வரையறுக்கப்பட்டுள்ளது.

பணைத்தோள்
நாறையங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு
அறிய வாயலென அழுங்கி செலவே (அகம்., 65)

பெண்ணின் குண இயல்புகளில் முக்கியமான ஒன்றாக தாய்மை கொண்டாடப்படுகிறது. ஒரு குடும்ப பெண்ணின் முக்கியமான பொறுப்புகள் அனைத்தும் தாய்மை நோக்கோடு தான் நிகழ்த்தப்படுகின்றன. தாய் சேய் உறவு என்பது பூமியில் வாழும் உயிரினங்கள் அனைத்திற்கிடையிலும் இயற்கையாக அமைந்த உயிரியல் பண்பாகும். ஐந்தறிவுடைய விலங்குகளிடம் தாய் விலங்கு ஈனும் கட்டி அந்த தாய்க்கு தான் சொந்தமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆணாதிக்க சமுதாயம் உருவாக்கியுள்ள சமூகக் கலாச்சார நிறுவனங்களில் தான் தாயிடமிருந்து குழந்தை அபகரிக்கப்படுகிறது. இந்தப் பூமினை முழுவதுமாக ஆணே கையகப்படுத்திக் கொண்ட பிறகு பெண்ணுக்கென்று அகாரம் கொண்டாடத் தனது இனம்பெருக்கத் தொடர்ச்சியைப் பெண்ணே கையகப்படுத்த வேண்டும். இதன்மூலம் தனக்கான மொழி வெளியையும் புனைவு வெளியையும் சுவைவெளியையும் அவளால் உருவாக்கிக் கொள்ள முடியும் என்று மாலதி மைத்திரி கூறுவதை இந்த இடத்தினை நாம் கருத்தில் கொள்ளலாம்.

உடல் ரீதியாகப் பாலியல் அனுபவம் பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவானதாயினும் அது நிகழ்த்துபவர் நிகழ்த்தப்படுவது என்ற வேறுபாடான செயல்களைப் பொறுத்து மாறுபடுன்றது. பாலினத்தில் உள்ள வேறுபாடு ஏனைய தளங்களிலும் ஆணுக்கு ஆளும் பாத்திரத்தையும், பெண்களுக்கு ஆளப்படும் பாத்திரத்தையும் ஏற்படுத்துகிறது. ஆளப்படும் பாத்திரமான பெண்ணைக் காதலியாய், மனைவியாய், குழந்தைகளின் தாயாய், தாசியாய், அழகு பொருளாய், பதுமையாய் உற்று நோக்கினான் ஆண். இவ்வாறாக பாலினப்

பாகுபாடானது. பெண்ணை அமைதியின் மறுவடிவமாகச் சித்தரித்துள்ளது. அதன்வழிப் பெண்மைக்குள்ள பெருமைகளெல்லாம் தாய்மையில் தான் நிறைவு பெறுகின்றன. பெண்கள், மனைவி, தாய், தலைவி என்ற பதவிகளோ என்ற பதவிகளாலேயே பூரணத்துவ அடைகின்றனர் என்பதை விட இப்படி நிலைகளைக் கடக்காவிட்டால் அவளது வாழ்வு முழுமை பெறுவதில்லை என்று நம்ப வைக்கப்பட்டாள்.

தாய்மைக்கு ஏற்ப அவளது உடல் மெல்ல மெல்லச் செதுக்கப்படுகிற நிலையில் உடலோடு மனமும் இயைந்து களிக்கும் உணர்வை அவளே உணர முடியும். பெண்ணின் கருப்பை என்பது தனி உலகம். அவ்வுலகத்தின் சூட்சமங்களறிய பல நூற்றாண்டு காலம் மானிட இனம் அறிவியல் துணையோடு போராடி கொண்டு இருக்கிறது. இயற்கையின் ஆற்றலை இயற்கையின் செய் நேர்த்தியை உணர்கிற பிராதன இடமாக கருவுருதல் முதல் குழந்தைப்பேறு வரையிலான காலங்களைச் சொல்லலாம்.

ஆண் பெண் தொழில் கருத்தாக்கம்

வீட்டு வேலை செய்கின்ற பெண் தாழ்வானவளாகவும் வருமானம் ஈட்டும் வேலை செய்யும் ஆண் உயர்வானவனாகவும் சமூக அமைப்பில் கருதப்பட்டனர். பெண்ணின் பணிகள் சமூக உற்பத்தியாகக் கருதப்படாமல் சமையல் செய்தல், துணி துவைத்தல், பாத்திரம் கழுவுதல், வீட்டை பராமரித்தல், குழந்தையைப் பராமரித்தல் என்ற வகையில் உற்பத்திக்கு நேரடியாகத் தொடர்பற்ற சேவைகளாகக் கருதப்பட்டது. பெண் மனை சார்ந்தவள், மனைக்குரியவள் என்ற பாலின பாகுபாட்டின் அடிப்படையிலேயே பெண்களது தொழில் வரையறுக்கப்பட்டது.

திணைசார் அடிப்படையில் ஆண்களது தொழிலானது தேன் எடுத்தல், வேட்டையாடுதல், ஆநிரை மேய்த்தல் உழுதல், மீன்பிடித்தல், களவாடுதல், போர்த் தொழில் புரிதல் என்ற நிலையிலும் பெண்களது தொழில் பயிர்த்தொழில் செய்தல், திணைப்புனம் காத்தல், தினை உலர்த்தல், பால் கறத்தல், மோர் விற்றல், உப்பு விற்றல் மீன் பிடித்தல், மீன் உலர்த்தல் பூ விற்றல் என்ற நிலையிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆண்களது தொழில் புறவெளித் தொழிலாகவும், பெண்களது தொழில் மனைசார் தொழிலாகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆண் உடல் வலிமை பெற்றவன் என்று உருவாக்கப்பட்ட பாலின பாகுபாட்டின் அடிப்படையிலும் பெண் மென்மைத்தன்மை வாய்ந்தவள் என்று உருவாக்கப்பட்ட பாலினப் பாகுபாட்டின் அடிப்படையிலும் இருபாலருக்குமான தொழில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

இவ்வாறாக சங்க கால வாழ்வியல் வரையறைக்குள் பெண் உடல் சார்ந்தும் தொழில் சார்ந்தும் எவ்வாறெல்லாம் கட்டமைக்கப்பட்டாள் என்பதை ஆண் பெண் என்கிற பண்பாட்டு அடையாளத்திற்குள் நின்று இந்த ஆய்வு பதிவு செய்கிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம்*. சாரதா பதிப்பகம்.

[2] செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை – 98

[3] சோமசுந்தரன், பொ, வே. (உ.ஆ.). *அகநானூறு*. சைவ சித்தாந்த நூற்கழக வெளியீடு, சென்னை,1966.

[4] துரைசாமி பிள்ளை, சு. ஒளவை. *நற்றிணை* (விளக்கவுரை). அருணாப் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1968.

[5] பாலசுப்பிரமணியன், கு,வே. *நற்றிணை மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை – 98

[6] புலியூர்கேசிகன். *தொல்காப்பியம்*. பாரிநிலையம், சென்னை, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Akalikai Myth from a Feminist Perspective

Dr. B. Malar, Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu. India.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752431

Abstract

Feminism has always provided rich data in the field of Tamil literary research. Through literature, we can understand the state of marginalization of women, who are the rulers of the world. There are many scenes in literature where women are placed as the center of attention and considered in thoughts related to social problems. Literature has not failed to show the situation where every feminist activity is subjected to criticism and her personal thoughts, life, and feelings are not given space. It is inevitable to see in literary evolutions that the tendency to show women for the honor-shame, happiness-sadness activities of the masculine world has become a natural thing since the beginning. In this way, the image of the female mythological element, Akalikai, can be seen to be present explicitly and implicitly in the literature of all periods. This article aims to examine the design of Akalikai in the literature of the mythological period from a feminist perspective.

Keywords: Mythology, Akalikai Myth, Philosophy, Feminism, Patriarchal Society.

References

[1] Inthubala, Ira. "Tamil Ilakkiyatthil Penniya Kaddamaippum Kaddudaippum." *Tamilmozhi Mattum Ilakkiya Pannattu Aayvithazh*. Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[2] Girija, S. "Ilakkiyankalil Penniya Koorukal." *Tamilmozhi Mattum Ilakkiya Pannattu Aayvithazh.* Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[3] Geetha Ranchithapakkiyam. Nensai Allum Silappathikaratthil Mathaviyin Penniya Kaddudaippu." *Tamimozhi Mattum Ilakkiya Pannaddu Aayvithazh*. Thokuthi 2, Sirappu Ithazh 3, Thokuthi 1, February 2020.
[4] Subiramaniyan, P. *Paripadal Moolamum Uraiyum*. New Century Book House, Pvt. Ltd. Chennai, October 2011.
[5] Puthumaippitthan. *Puthumaippitthan Kathaikal*. Vartthamanan Pathippagam, 2005.
[6] Poovannan. *Kambaramayanam Moolamum Thelivuraiyum*. Varthamanan Pathippagam, Chennai, July 1985.
[7] *Akalikai Venpa*. Tamil Digital Library.
[8] *Valmiki Ramayanam*. Varthamanan Pathippagam, 2005.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

பெண்ணிய நோக்கில் அகலிகைத் தொன்மம்

முனைவர் பா. மலர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752431

ஆய்வுச்சுருக்கம்

உலகின் சரிபாதியான பெண்ணின் பங்களிப்பு இலக்கியங்களில் உண்மைத்தரமானதாக அமைகிறதா? என்பதை ஆய்வுச் செய்யும் பொருட்டே 'பெண்ணிய நோக்கில் அகலிகைத் தொன்மம்' என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. அகலிகைத் தொன்மம் மெய்யியல் பெண்ணியப் பார்வையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டுமென்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இராமயணத்திற்கு முன்பே அகலிகைக் கதை இந்தியாவில் இந்தியாவில் நிலை பெற்றிருந்திருக்கிறது. இராமாயணம் அகலிகைக் கதையை விரிவாக்கம் செய்துள்ளது. மெய்யியல் பார்வையில் நோக்கும் போது, ஒவ்வொரு இலக்கிய வடிவமும் அகலிகை அறிந்தோ அல்லது அறியாமலோ செய்த செயலை ; பெண்ணவளை முன்னிறுத்தியே விமரிசனம் செய்வதை உணரமுடிகிறது. அறிந்தே தவறிழைத்த இந்திரன் சாபம் பெற்ற கையோடு தேவர்களின் தலைவனாகவே தொடர்கிறான். ஆண்மைய சமூகமோ அகலிகையை மீண்டும் மீண்டும் ஆய்வுச் செய்வதை தனது கடமையாகக் கொண்டுள்ளதை உணரமுடிகிறது.

குறிப்புச்சொற்கள்: தொன்மம், அகலிகைத் தொன்மம், மெய்யியல், பெண்ணியம், ஆண்மைய சமுதாயம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய ஆய்வுத் தளத்தில் பெண்ணியம் என்றும் வளமான தரவுகளைத் தந்து கொண்டிருக்கிறது. உலகின் சரிபதியாக இயங்கி வரும் பெண் ஓரம் கட்டப்படும் நிலையை இலக்கியங்களின் வழி உணர முடிகிறது. சமூக சிக்கல் சார்ந்த எண்ணங்களில் பெண் மையப்புள்ளியாக வைக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் காட்சிகள் இலக்கியத்தில் ஏராளம். பெண்ணிய செயல்பாடுகள் ஒவ்வொன்றும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுவதும் அவளின் தனிப்பட்ட எண்ணம், வாழ்க்கை, உணர்வுகள் இவற்றுக்கு இடம் அளிக்காத நிலையையும் இலக்கியங்கள் காட்சிப்படுத்த தவறவில்லை. ஆண்மைய உலகின் மான – அவமான, சுக - துக்க செயல்பாடுகளுக்கு பெண்ணை கை காட்டும் போக்கு இயல்பான ஒன்றாக அமைவதை தொடக்க காலம் தொட்டே இலக்கிய பரிணாமங்களில் காண்பது தவிர்க்க முடியாதது. அவ்வகையில் பெண் தொன்மக்கூறான அகலிகை பிம்பம் எல்லா கால இலக்கியங்களிலும் வெளிப்படையாகவும் உள்ளார்ந்தும் இடம்பெறுவதைக் காணலாம். காலந்தோறுமான

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இலக்கியங்களில் அகலிகை வடிவமைப்பை பெண்ணிய நோக்கில் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அகலிகை

இந்திய கற்புக்கரசிகள் வரிசையில் முதலிடம் பெற்றவள் அகலிகை. இந்திய பெண்களின் வாழ்வியலுக்கு அகலிகை ஒரு சான்றாதாரம். இந்து சமய தொன்மவியலின்படி அகலிகை கௌதமரின் ரிஷி பத்தினி. அகல்யா, அகல்யை என்ற சிறு மாறுபாடுகளால் அழைக்கப்படும் அகலிகை களங்கமற்றவள் என்ற பொருளமைந்த பெயரினள். பிரம்மதேவரின் மானசீக மகள். புராணங்களின் கூற்றுப்படி உலகை முதலில் யார் வலம் வருவாரோ அவருக்கே அவளை மணம் முடிப்பேன் என்ற பிரம்மதேவனின் ஆணைக்கிணங்க உலகாக கருதப்படும் பசுவை வலம் வந்து அகலிகையை மணந்தார் கௌதமர். வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், அகலிகை வெண்பா, புதுமைப்பித்தனின், அகலிகை,சாப விமோசனம் என தொடர்ந்து அகலிகை தொன்மம் இலக்கிய பயணத்தில் பதிவு பெற்று தொடர்கிறது.

பேரழகியான அகலிகையை அடைய வேண்டும் என்ற தேவர்களின் அரசன் இந்திரனின் நெறியில்லா ஆசை, அகலிகையின் கணவனான கௌதம முனிவரை ஏமாற்றி அகலிகையை அடைந்த இந்திரனின் கொடூர செயல்பாடு அகலிகை தொன்மத்தின் மையப்புள்ளியாக அமைகிறது. அதன் பின்னான குற்றச்சாட்டுகளும் சாபங்களும் மன்னிப்பளித்தலுமான தொடர் நிகழ்வுகள் ஒவ்வொரு படைப்பாளரின் மனநிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. அகலிகை பெரும்பாலான படைப்புகளில் பேதையாக சுட்டப்படுகிறாள். சில படைப்பாளிகள் அவளை கடுமையாக கண்டித்த நிலையையும் காண முடிகிறது. அகலிகை கதைக்குஇருபதுக்கும் மேற்பட்ட பாடபேதங்கள் இந்திய இலக்கியங்களில் காணப்படுகின்றன. அப்பேதங்களை தென்புல இலக்கியங்கள், வடபுல இலக்கியங்கள் என்ற வகைப்பாட்டியலின்படி வேறுபடுத்த முடியும்.

வட இந்திய ராமாயணம் முதல் தென்னிந்திய ராமாயணம் வரை இக்கதை பலவிதமான மாற்றங்களைக் கொண்டிருக்கிறது. காளிதாசரின் ரகுவம்சம், பரிபாடல், நாட்டுப்புறப்பாடல்கள் என பலவற்றிலும் கம்பராமாயணத்திற்கு முன்னர் அகலிகை கதை இடம்பெறுகிறது. பத்ம புராணம் **ராமன் கால் பட்டதும் தனது கல்லுருவம் நீங்கி அகலிகை தெய்வப் பெண்ணாக எழுந்தாள் (பத்ம புராணம்)** என்கிறது.

புராண காலத்திற்கு முன்பிருந்தே அகலிகை தொன்மக்கதை வழக்கிலிருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 'அகலிகை கல்லானாள்' என்பது தொன்றுதொட்டு நிலவிவந்த நம்பிக்கை. இதனை மிகப் பழைய நூல்களில் ஒன்றான பரிபாடலில்,

இந்திரன் பூசைஇவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன் சினன் உறக் கல்லாரு
ஒன்றியபடி இதென்று உரை செய்வோரும் (பரி., 19: 50-52)

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்று நப்பண்ணார் எழுதிய செவ்வேள் பாடலில் காண முடிகிறது.

வால்மீகியின் அகலிகை

வால்மீகி ராமாயணம் அழகில் மிக உயர்ந்தவளாக அகலிகையைக் காட்டுகிறது. அவள் அழகில் மோகம் கொண்ட இந்திரன் ஆற்றங்கரையில் தன் விருப்பை அவளிடம் தெரிவிக்க கணவரை தவிர பிறரை நினையாமல் வாழும் அகலிகையின் கோபத்திற்கு ஆளாகிறான். நேரடியாக தன்வசப்படுத்த முடியாது கௌதமர் ஆற்றங்கரைக்குச் செல்லும்வேளை கௌதமராக மாறி அகலிகையை புணர்கிறான் இந்திரன். மீண்டு வந்த கௌதமன் இருவரையும் சபிக்கிறார். வால்மீகி இக்கதையின் முதலில் அறியாது இணங்கிய அகலிகை; வந்தவன் இந்திரன் என அறிந்த பின்னும் அவனுடன் கூடி மகிழ்ந்தாள் என்கிறார். இதை திருவானைக்கா புராணம்,

உடையார் இந்திரனே நமை இருக்கின்றானோ
புந்தியின் அரும்பிய பொருவில் ஓதையார் (திருவானைக்கா புராணம்)

என்று கூறுகிறது. தீய குணம் கொண்ட இந்திரன் அவலட்சணம் ஆவான் என்றும் ஆண்டாண்டு காலம் காற்றையே உணவாக உண்டு அகலிகை கிடக்க வேண்டும் என்றும் கௌதமர் சாபமிடுகிறார். அவள் மற்றவர் கண்களுக்குப் புலப்படாமல் தவத்தில் இருந்தால்; மனைவிக்கு மட்டுமோர் சலுகை தருகிறார். தசரத ராமன் பாதம் பட்டு சாபவிமோசனம் பெறுவாள் என்றுரைக்கிறான்.

கம்பனின் அகலிகை

கம்பராமாயணத்தில் அகலிகை கதை மூன்று இடங்களில் வருகிறது. பாலகாண்டம் அகலிகை கதையை 17 பாடல்களில் பதிவு செய்கிறது. 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' (கம்பராமாயணம் 485: 3) என்றே கம்பர் அகலிகையை பதிவு செய்கிறார். முதலில் தன்னை தீண்டியது கௌதமர் என்றே அகலிகை கருதினாள். ஆனால் கூடலின்பத்தில் கௌதமன் இல்லை என்பதை உணர்ந்தாள் என்பது கம்பரின் கதைப்போக்காக அமைந்துள்ளது. ஆயினும் ராமன் பாதத்தூள் பட்டதும் தூயவளானாள் என்றே கம்பன் உரைக்கிறார். இராவணனின் மாமன் மாரீசன் சீதையை கவர்ந்து வந்து சிறை வைத்தது தவறு என்று அறிவுரை கூறும் போது,

அந்தரமுற்றாள் அகலிகை பொற்பால் அழிவுற்றார்
இந்திர னொப்பார் எத்தனையோர் தாம் இழிவுற்றார் (கம்., ஆரணி., மாரிச. வரை., 733)

என்கிறார். மாரிசன் வதைப்படலத்தில் இப்பாடல் அமைகிறது. மாயசனக படலத்திலும் அகலிகை கதை மீண்டும் உரைக்கப்படுகிறது. சீதையிடம் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டும் இராவணன்,

அந்தரம் உணரின் மேனாள் அகலிகை என்பாள் காதல்
இந்திரன் கரத்தை புல்லி எய்தினாள் இழுக்குற்றாளே (கம்., ஆரணி., மாரிச. வரை., 734)

என்று உரைப்பதாக அமைந்துள்ளது. இந்திரனை தழுவியதால் அகலிகை மாசடையவில்லை. எனவே சீதை தன்னை ஏற்றுக் கொண்டால் தவறாகாது என்கிறான் இராவணன்.

அகலிகை வெண்பாவில் அகலிகை

கம்பராமாயணத்திற்கு பிறகு வெள்ளக்கால் பா. சுப்ரமணிய முதலியாரால் எழுதப்பட்ட அகலிகை வெண்பா அகலிகையை வேறொரு கோணத்தில் காட்சிப்படுத்துகிறது. இந்திர காண்டம், அகலிகை காண்டம், கௌதமர் காண்டம் என்னும் மூன்று காண்டங்களில் 282 வெண்பாக்களால் அகலிகை கதை அமைக்கப்பட்டுள்ளது.

அகலிகையின் அழகால் கவரப்பட்ட இந்திரன் அவளை அணுகுகிறான். அகலிகை அவன் துர் எண்ணம் உணர்ந்து அவனை விலக்குகிறாள். கண்டிக்கிறாள். அகலிகை காண்டத்தில் இந்திரன் மாற்றுருவில் வந்து அகலிகையை அடைய முனைகிறான். அகலிகை அவனை அடையாளம் கண்டு கண்டிக்கிறாள்; அறவுரைகள் கூறுகிறாள்; வாதிடுகிறாள். முடியாத நிலையில் மயங்கிவிழ, நினைவில்லாத அகலிகையை இந்திரன் அடைகிறான். 'புழுத்தான் எரியும் அழல்எய்தினால் அன்ன துடித்தாள். நஞ்சுண்டவர்க்கு மருந்துண்டு. கற்பிழந்த தனக்கு மருந்தில்லையோ ?உயிர் போயினும் கற்பை காக்க வேண்டும் என்னும் உறுதி குன்றிபோனேனே. இதை விட வேறு குற்றம் உண்டோ ? என்று கூறி புலம்பி அழுத அகலிகையே அகலிகை வெண்பாவில் காட்சிப்படுத்தப்படுகிறாள். கல்லாவதற்கோ, கோதமனின் மனைவி என்னும் தகுதியை இழந்ததற்காகவோ அவள் கவலையுறவில்லை. அவனுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பு இல்லாமல் போனதற்காகவே அகலிகை வெண்பா அகலிகை கலங்கினாள்.இராமனின் பாதத்துகள்பட, மீண்டும்உருபெற்றஅகலிகை சாப விமோசனம் மாசு மறுவற்றது என முடிக்கிறது அகலிகை வெண்பா.

புதுமைப்பித்தனின் அகலிகை

1934 இல் புதுமைப்பித்தனால் எழுதப்பட்டது அகலிகை. இக்கதையின் படைப்பு அதுவரையிலான தொன்ம மரபிலிருந்து சிறியதொரு மாற்றத்தை தருகிறது. இதன் படைப்பு தளம் இருபதாம் நூற்றாண்டின் மாறுதலுடன் படைக்கப்பட்டுள்ளது. இயற்கை இகந்த புனைவுகளே இதில் இல்லை. இந்திரன் பூனை போல வருகிறான். பூனையாகவில்லை. இந்திரனாகவே வருகிறான். அகலிகையைக் கூடுகிறான். கௌதமர் வேடத்திலும் வரவில்லை. அகலிகை சாபம் பெறவில்லை. அகலிகை கல்லாகவில்லை. கதை முழுவதும் நடப்பியலோடு இணைந்து செல்கிறது. இக்கதையில் கௌதமர் தான் இலட்சிய கதாபாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார். **மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் கலங்கமானால் அவளை என்ன செய்ய முடியும் (ஆ. வேங்கடாசலபதி. பக். 135)** கௌதமரின் இந்த வாசகத்தை20 நூற்றாண்டின் கற்பு கோட்பாடாகக் கொள்ளலாம். மனத்தூய்மை தான் கற்பு. உடலுக்கு ஏற்பட்ட களங்கம் கற்பு கேடு ஆகாது. தூய்மை, களங்கம் இது எல்லாம் ஆண்மைய சமூகத்தில் பெண்ணின் உடல் மீது வைக்கப்பட்ட கற்பு எனும் கோட்பாட்டு தொன்மத்தை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பிரதிபலிப்பவையே. இவை ஆண்மைய சமூக வாதங்களாகவே அமைகின்றன. கௌதமரின், 'உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் கலங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?' என்ற தெளிவை புதுமைப்பித்தன் தான் படைத்த கௌதமருக்கு அளித்தமை ஆச்சரியத்திற்கு உரியது. இதன் விளைவுகளை எதிர்ப்புகளாகஅவர் சந்தித்தது ஆண்மைய உலகில் வியப்புக்குரியது அல்ல. ஒரு ஆண் எழுத்தாளனுக்குள்இருந்த இந்தப் புதுமைச் சிந்தனை வியப்புக்குரியது.

சாபவிமோசன அகலிகை

புதுமைப்பித்தனின் சாப விமோசனம் 1943 இல் வெளிவந்தது. இதன் கதை தளமே அகலிகை தொன்மக் கதைகளின் நிலையிலிருந்து மாறுபட்டது. பிற அகலிகை தொன்மக் கதைகள் சாப விமோசனம் பெற்ற அகலிகை தூயவள். அவளை கௌதமன் ஏற்றுக்கொண்டான் என்பதோடு முடிவடைந்துவிடுகிறது.'ராமாயண பரிட்சையம் உள்ளவர்களுக்கு இக்கதை பிடிக்காமல் போகலாம்'என்று தொடங்கும் இக்கதை சாபவிமோசனம் பெற்ற பின்னான சிக்கல் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. சாபவிமோசனம் பெற்ற அகலிகை, 'தெய்வமே மாசுபட்ட இந்த தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது' என்றே தொடக்கத்தில் எண்ணுகிறாள். கடும் தவத்திலிருந்து எழுந்து வரும் கோதமன் 'பெண்ணின் கேவலத்தில் இருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போல தயங்கி தயங்கி வருகிறான்'. சாப விமோசனத்திற்கு பிறகான வாழ்வு எப்படி என்பது பிரம்மாண்ட மதிலாக இருவருக்குள்ளும் இருக்கிறது என்று புதுமைப்பித்தன் தன் கதை பயணப்பட இருக்கும் வழியை எடுத்துரைக்கிறார். அதேபோல இராமனை பற்றிய புதுமைப்பித்தனின் விமர்சனம், 'இராமனுடைய கல்வி தர்மக்கண் கொண்டு அகலிகையின் நிலையைப் பார்த்தது. தெளிவின் ஒளிப்பூண்டது. ஆனால் அனுபவ சாணையில் பட்டைப் பிடிக்காதது. மனசுக்கும் கரண சக்தியின் நிதானத்திற்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? என்று கல்லாக சபிக்கப்பட்ட அகலிகையை எண்ணிய இராமனின் பார்வை அகலிகை தொன்ம வடிவத்தில் இருந்து மாறுபட்டது. நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்கொள்வது தான் பொருந்தும் (புதுமைப்பித்தன், சாபவிமோசனம்) என்ற விசுவாமித்திரரின் வாதம் தொன்மவியலிருந்து மாறாதது. ஏமாற்றின் அடிப்படையில் - பசுவை வலம் வந்துபெற்றவள்தானேஅகலிகை. கவுதமனின் மனம் தன்னை சுட்டது என்றபதிவுகள்எல்லாம் புத்தியல் நோக்குகள்.

சாப விமோசனத்தின் பின் உளவியல் ரீதியாக அகலிகை பாத்திரத்தை அணுகுகிறார் புதுமைப்பித்தன். தன்னை சுற்றி நிற்பவர்கள் எல்லோருமே இந்திரனாக தென்படுதல். அளவில்லா பயம், பேச வந்த ஓரிறைச் சொற்களை ஆயிரம் தடவை தனக்குள்ளே சொல்லி பார்ப்பது, தான் கூறியது சரிதானா என பல கோணங்களில் ஆராய்வது, கோதமன் வார்த்தைகளுக்கு உள்ளர்த்தம் உள்ளதா என ஆராய்வது, 'சாபவிமோசனம் பெற்றாலும் பாவ

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விமோசனம் கிடையாதா?' என குன்றிப்போவது என அவர் காட்சிப்படுத்துபவை இயல்பு வாழ்வை வெளிப்படுத்தும் மிகையில்லா நடப்பியல். கோதமனே இந்திரனாக தோன்றினான். கோதமனின் கூடல் மீண்டும் ஒரு இந்திர நாடகமாகவே தோன்றியது. இராமன் சீதையை தீக்குளிக்க சொன்னது கேட்ட அகலிகை மீண்டும் கல்லானாள். கல்லாவதே அவளுக்கு நிம்மதியைத் தந்தது.

இராமன் சீதையை தீக்குளிக்கச் சொன்னான் என்ற செய்தியை அறிந்த வேளையில் வெறிகொண்ட கண்ணகியின் ஆவேசத்தை கொண்ட அகலிகை தொன்மவியல் காணாதவள். தன் எதிர்ப்பையும் பிடித்த மின்மையையும் இராமன் சீதையை வழி அனுப்ப வெளிவராது வெளிப்படுத்துகிறான். சீதையிடம் தீக்குளிக்க அவரா சொன்னார் என்று கேட்டவள், ஆக்கமாட்டாளாக அவனா சொன்னான் என்று மரியாதையை குறைக்கிறாள். கற்பினை எவ்வாறு நிரூபிக்க முடியும் என்றும் உலகம் எது? என்றும் உரைக்கும் நிலையில் ஆண்மைய சமூகத்தில் சற்றே உரசி பார்க்கிறார் புதுமைப்பித்தன்.

மெய்யியல் பெண்ணியப்பார்வை

தமிழ் இலக்கியங்கள் பெண்ணிய பார்வைக்கு உட்படுத்த வேண்டிய காலச்சூழல் இது. பெண்மைய சமூகம் என்பது நிர்மாணிக்க முடியாத இக்காலச் சூழலில் பெண்கள் இலக்கியங்களில் காட்சிப்படுத்தும் விதம் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகிறது. ஆணுக்கு இங்கே பெண் இழைப்பில்லாத நிலையில் இலக்கியங்கள் பெண்ணை எவ்வாறு இன்றளவும் வெளிப்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயம் ஆகிறது. உலகின் சரிபாதியான பெண்ணின் பங்களிப்பு இலக்கியங்களில் உண்மை தரமானதாகவே வெளிப்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டே பெண்ணிய நோக்கில் அகலிகை துன்பம் என்ற இத்தலைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அகலிகை தொன்ம மெய்யியல் பெண்ணியப் பார்வையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கினை இவ்வவாய்வு கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.இராமாயணத்திற்கு முன்பு அகலிகைக்கதை இந்தியாவில் பரவலாக இருந்திருக்கிறது.இராமாயணம் அகலிகை கதையை புத்தாக்கம் செய்தது. இந்திய இராமாயணங்கள் அகலிகையை இந்திரனால் கற்பழிக்கப்பட்ட பெண்ணாகவே எடுத்துரைக்கிறது. சில கதை மாறுபாடுகளை கொண்டிருப்பினும் இதுவே மையம். சாப விமோசனம் என்ற கட்டமைப்பில் வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம், அகலிகை வெண்பா, புதுமைப்பித்தனின் அகலிகை, சாப விமோசனம் உள்ளிட்ட இலக்கியங்கள் சமகாலத்தில் இல்லாது இலக்கிய வரலாற்றில் தொடர் கருப்பொருளாக அகலிகைக்கதை உரைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இலக்கிய வடிவமும் அகலிகையின் அறியாது செய்து செயல்படாக கருதியும் தெரிந்தே தவறினாள் என்றும் சுட்டுகின்றதோடு விமரிசனத்திற்கு உள்ளாக்குகின்றன. தவறிழைத்த இந்திரனை சாபம் அளித்ததோடு விட்டுவிட்ட சமூகம் அகலிகையின் அறிந்தோ அறியாமலோ செய்த செயல்பாட்டினை கடும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விமர்சனத்திற்கு உள்ளாக்குகின்றன. அகலிகை சாப விமோசனம் பெற்றதும் புனிதமானவளாக கருதப்படுவதுடன் கதையை முடித்து விடுகின்றன. அதே வேளையில் கணவன் அல்லாத ஒருவனுடன் கூடியபோது அவன் கணவன் இல்லை என்பது உணராத நிலை, உணர்ந்த பின்னும் தன் கூடலை நிறுத்தாத நிலை, இரண்டையுமே கண்டிக்கின்றன. கற்பெனும் தன்மை இலாதவளாக அகலிகை எடுத்துரைக்கப்படும் காட்சியை வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் இவற்றில் காணமுடிகிறது. உணர்விழந்த கூடலின்பத்தில் திழைத்ததால் அவள் கல்லாக சபிக்கப்படுகிறாள். உணர்வின்றி காற்றை உண்டு தவமியற்றும் உணர்வில்லா கல்லாக அவளை புராண, இதிகாசங்கள் கௌதமரின் வழி சாபமிடுகின்றன.

அகலிகை வெண்பா உணர்வற்று மயங்கிய நிலையில் இந்திரன் அவளை அடைந்ததாக உரைகின்றது. இங்கே கௌதமரை விட அகலிகை தன் நிலைக்கு இறங்குகிறாள். கல்லாவதற்கு கவலை கொள்ளவில்லை. கணவனுக்கு பணிவிடை செய்வதற்கு தடை ஏற்பட்டதற்காகவே கவலையுறுகிறாள். கௌதமர் அகலிலையின் மனவருத்தம் மாயவே கல்லாக்கினார் என்கிறது அகலிகை வெண்பா.

பாலியல் வல்லுறவுகளும் அத்துமீறல்களும் மலிந்து போன இக்காலக்கட்டத்தில் அகலிகை தொன்மம் மீதான உறுதியானதொரு பெண்ணிய பார்வை பதியனிடப்பட வேண்டியது அவசியமாகிறது. பெண்ணின் அழகு ஆணின் உணர்வில் காமத்தை தூண்டுவதாக அமைகிறது என்ற பார்வை மாற்றப்பட வேண்டும். பெண் அழகு பிறரால் நுகரப்படும் பண்டம் அல்ல. பெண் உடல் மாற்றி மாற்றி தம் இச்சைக்கு பயன்படுத்த எண்ணும் ஆணின் மனநிலைக்கு அகலிகை தசைக்கூட்டமாகவே வெளிப்படுகிறாள். அங்கே ஒரு உயிருக்கான உணர்வோ, ஆசையோ, உரிமையோ மறுக்கப்படுதல் உலகில் சரிபாதியான பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூக மறுப்பாகவும் கொடுமையாகவும் கருத இடமுண்டு. போர்களின் போதும் தனிநபர் போட்டிகள், பிடிக்கா தன்மை இவை உள்ளிட்ட தர்க்கநிலைகளில் பெண் உடலை மையப்படுத்தி பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர் வரலாறாகவே அமைகின்றன.

பெண்ணழகு பாலியலைத் தூண்டுவது என்ற சமூக எண்ணம் அதிநவீன அறிவியல் உலகிலும் தொடர்ந்து வருவது வளர்ச்சி குன்றிய மனித மனநிலையை வெளிப்படுத்துவதாகவே அமைகிறது. அகலிகை அழகாக படைக்கப்பட்டாள். இதுவே அகலிகை தொன்மத்தில் எழுந்த சிக்கலாக அமைகிறது வேறெந்த ரிஷி பத்தினியும் எதிர்கொள்ளாத சிக்கலாகவே இதை கருத வேண்டிள்ளது. இந்து தொன்மவியலின் அடிப்படை அகலிகை கதையில் இந்திரனும், கௌதமரும் அகலிகைக்கு போட்டியிட்டுள்ளனர். அகலிகையை பிரம்மதேவன் அழகு தவத்திற்கு பயன்பட வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் படைத்ததாக இந்து தொன்மவியல் பேசுகிறது. ஆனால் படைப்பின் நோக்கம் சிதைந்து தவ வாழ்க்கை சீர்குலைத்ததாகவும், காற்றை உண்டு கல்லாய் கடந்து மீண்டும் தன்னுரு பெற்றதாகவும் அகலிகை வாழ்வியல் இராமாயண கதைகளில் பேசப்படுகிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஒரு பெண் புரிந்துணர்ந்து கொள்ளமுடியாத அறியாமையால் செய்த தவறுக்கு தண்டிக்கப்பட்டமை ஆண்மைய சமூக அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமைகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஏராளமான சாதக பாதக வாதங்களையும் உருவாக்கியுள்ளதை காலந்தோறும் காணமுடிகிறது. ஆனால் அகலிகையை அடைந்தே தீர வேண்டும் என்ற இந்திரன் சாபம் பெற்றதோடு களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு விடுகிறான். அவன் மீதான விமர்சனங்கள் அகலிகை அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை.

> **பெண்ணின் கற்பு மட்டும் கணவனால் வேண்டப்படுவதற்கு அடிப்படை காரணம், தன் மனைவியால் ஈன்றெடுக்கப்படும் குழந்தை தன் குழந்தை என்ற உறுதியை பெறுதலும் தன் தனிச்சொத்து தன் குழந்தையையே சேர வேண்டும் என்ற உறுதிப்பாடும் இருப்பதாக பேசப்படுகிறது. (கிரிஜா, பக். 109)**

ஆனால் அகலிகை தொன்மத்தில் அகலிகையான பெண்ணானவள் ஒரு ரிஷியின் மனைவி. ரிஷிக்கான தனிச்சொத்து வேத மந்திரங்களும் தவ வலிமையும் மட்டுமே. ஒரு ரிஷி தானறிந்த மந்திரங்களை தன் சுய வாரிசுக்கு மட்டுமே கற்றுத் தந்து கடத்துவதுமில்லை. தவ வலிமை அவரைத் தாண்டி அவரது சந்ததிக்கு கடத்தப்படுவதும் இல்லை. **பெண் என்பவள் பூமியில் பிறக்கும் போது ஒரு உயிர்தான். ஆனால் அவளை பெண்ணாக கட்டமைப்பது கட்டுப்பாடுகள் விதிப்பது நமது ஆதி சமூகமாக இருந்திருக்கிறது. (இந்துபாலா. பக். 52)** என்ற நிலையில் எந்தவிதமான கட்டுடைப்பையும் செய்ய அகலிகை முயலவில்லை என்பது இலக்கியங்களில் அமையும் அகலிகை தொன்மம் சுட்டும் உண்மை. புதுமைப்பித்தனின் அகலிகை கூட தன்னை கல்லாக்குவதில் சுகம் கண்டாளே தவிர தன்னை சுற்றிய சமூகத்திற்கு எதிராக எந்த சொல்லையும் எறியவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியது. அவள் ஆதி சமூக கட்டுப்பாடுகளை கட்டுடைத்து தனக்கு நேர்ந்த அவலத்திற்கு நீதி கேட்டுக்கும் பெண்ணாக இயங்கவில்லை, மலையாளத்தில் ஸ்ரீதேவியின் கல்லிகை அகலிகை துன்பத்தைப் பதிவு செய்கிறது. இந்திரனை முதலாளித்துவமாகவும் கௌதமரை புராணிகளின் வடிவமாகவும் அகலிகை பாட்டாளி அல்லது தொழிலாளியாகவும் மார்க்ஸியம் கருதுகிறது. **சிலப்பதிகாரம் மாதவியின் ஆரம்பமே அவளை விற்பனை பொருளாகவே காட்சிப்படுத்துகிறது. (கீதா. பக். 126)** அகலிகை இந்திரனுக்கும் கோதமனுக்குமான போட்டி பொருளாக இந்து தொன்மவியல் காட்சிப்படுத்தப்படுகிறது. வால்மீகி இராமாயண கதை அதை உறுதிப்படுத்துகிறது.

'ஏமாற்றி பெற்ற பொருள்தானே' புதுமைப்பித்தன் சாபவிமோசனம் அதனை எள்ளல் நடையில் நினைவூட்டுகிறது. தெரிந்தே நெறிதவறும் ஆண்கள் இந்திரனைப் போன்று தப்பித்துக் கொள்கிறார்கள். இந்திரனைப் போன்று அரசனாகவே வலம் வருகிறார்கள். ஆனால் தவறிழைக்கப்பட்ட பெண்கள் அகலிகையாக அல்லல்படுகிறார்கள். அவர்களுக்கு சாபம் அளிக்க கௌதமனாக சமூகம் விழிப்புடன் காத்திருப்பது இக்கால வெள்ளத்தின் நடப்பாகவே உள்ளது உணர முடிகிறது இலக்கியங்களும் அதையே பிரதிபலிக்கின்றன.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

துணைநூற்பட்டியல்

[1] இந்துபாலா, இரா. "தமிழ் இலக்கியத்தில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[2] கிரிஜா, செ. "இலக்கியங்களில் பெண்ணிய கூறுகள்." தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[3] கீதா ரஞ்சிதபாக்கியம், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் மாதவியின் பெண்ணிய கட்டுடைப்பு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, சிறப்பிதழ் 3. தொகுதி 1, பிப்ரவரி 2020.

[4] சுப்பிரமணியன், பி. *பரிபாடல் மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை, அக்டோபர் 2011

[5] புதுமைப்பித்தன். *புதுமைப்பித்தன் கதைகள்*. வர்த்தமானன் பதிப்பகம், 2005.

[6] பூவண்ணன், *கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும்*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ஜூலை 1985.

[7] *அகலிகை வெண்பா*. தமிழ் டிஜிட்டல் லைப்ரரி.

[8] வால்மீகி ராமாயணம். வர்த்தமானன் பதிப்பகம், 2005.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Women's Games Shown in Kalithogai

Dr. A. Manoharan, Assistant Professor of Tamil, Jeppiaar Institute of Technology, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0001-1940-5898
DOI: 10.5281/zenodo.14752459

Abstract

People living in the Sangam period enjoyed playing various types of games to maintain their physical health and for entertainment. During the Sangam period, games were divided into various types such as children's games, adult games, group games, men's games, and women's games and both adults and children spent their leisure time playing games. There is various evidence in Sangam literature that they lived for many years with good physical health, mental peace and happiness through games. In this way, in Kalithogai, one of the Sangam literature, the heroic games and recreational games of the Tamils are classified separately for men and women. Among these, this article is designed to examine the women's games featured in Kalithogai.

Keywords: Oosal, Alavan Aattam, Sunnam Thuval, Thai Neeradal, Asathiyadal, Suduvan Kaai, Vallai, Chiththirannam, Ambuli

References

[1] Ragavaiyangar, Mu. *Vilangu Por Vilaiyattu.* Pari Nilaiyam, Chennai, 1964.
[2] Sivakama Sunthari, Su. *Sanga Ilakkiya Vilaiyattuk Kalanjiyam*. New Century Book House, Chennai, 1995.
[3] Devaneyan, Gna. *Thamizhar Vilaiyaattukal.* Kazhaka Veliyedu, Chennai, 1962.
[4] Balasubiramaniyan, Ira. *Thamizhar Nattu Vilaiyaattukkal*. Ulakath Thamizharaaycchi Niruvanam, Chennai, 1980.
[5] Pichai, A. *Thamizh Panpattil Vilaiyattukkal.* Kabilan Pathippakam, Chennai, 1983.
[6] *Thamizh Perakaraathi Thokuthi* - 2, Chennai Palkalaik Kazhakam, Chennai, 1982.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

கலித்தொகை காட்டும் மகளிர் விளையாட்டுக்கள்

முனைவர் ஆ. மனோகரன், தமிழ் உதவிப்பேராசிரியர்,
ஜேப்பியார் தொழில் நுட்பக்கல்லூரி , சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-1940-5898
DOI: 10.5281/zenodo.14752459

ஆய்வுச்சுருக்கம்

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களின் உடல் நலனைப் பேணுவதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பல்வேறு வகையான விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்துள்ளனர். சங்க காலத்தில் சிறுவர் சிறுமியர் விளையாட்டு, பெரியவர் விளையாட்டு, குழு விளையாட்டு, ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு எனப் பலவகையாக விளையாட்டுக்களைப் பிரித்து பெரியோரும் சிறியோரும் தங்களது ஓய்வு நேரத்தை விளையாட்டில் கழித்துள்ளனர். விளையாட்டின் வாயிலாக நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் மனதிடத்துடனும் மகிழ்ச்சியுடனும் பல ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதற்கு சங்க இலக்கியங்களில் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்களும் பொழுது போக்கு விளையாட்டுக்களும் ஆடவர், மகளிர்கென தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள மகளிர் விளையாட்டுக்களைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

குறிப்புச்சொற்கள்: ஊசல், அலவன் ஆட்டல், சுண்ணம் தூவல், தை நீராடல், அசதியாடல், சுடுவன் காய், வள்ளை, சித்திரான்னம், அம்புலி.

முன்னுரை

பழங்கால வேட்டைச் சமூக மாந்தர்கள் வாழும் இடங்களிலேயே விளையாட்டுக்கள் தோற்றம் கொண்டிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. விலங்குகளை வேட்டையாடுதலும், ஆயுதங்களை கையாலுதலும், உடல் வலிமையைப் பேணுதலும் விளையாட்டுகளுக்கு வழிவகுத்திருக்கக் கூடும். எனினும் மனித குலம் பண்பாட்டில் வளரத் தொடங்கிய காலத்திலேயே விளையாட்டுக்களும் முதன்மை பெற்றன எனலாம். சங்ககாலத் தமிழர்கள் பெரும்பாலும் சமூகம் சார்ந்த செயல்பாடாகவே விளையாட்டைக் கருதினர். சூழ்நிலை விளையாட்டுக்களும், மைதானங்களின் நடுவே இடம்பெற்ற வீர விளையாட்டுக்களும் சமூக செயல்பாடுகளாகவே திகழ்ந்தன. அரசுகள், ஊர் மன்றங்கள் பல்வேறு விளையாட்டுக்களை நடத்தி விளையாட்டுக்களில் வெற்றி பெற்றோருக்கு பரிசும் மதிப்பும் அளித்தனர். சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பவற்றிற்கேற்பப் பல்வேறு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விளையாட்டுக்களில் ஈடுபட்டனர், பெண்களை ' வீட்டுக்குள் வளர்த்தல்' (இச்செரித்தல்) என்னும் நிலை அக்காலத்தில் காணப்பட்டாலும் சிறுமியர், இளம் மகளிர் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் பல விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர், மகளிர் வெளியில் சென்று தத்தம் தோழியரோடு விளையாடுவதே அறம். அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டிற்குள் இருந்தால் அது அறமும் இல்லை, ஆக்கமும் தேய்ந்து விடும் என்று உணர்ந்த அக்கால மகளிர் பல விளையாட்டுக்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உள்ளம் மற்றும் உடல் வலிமையோடு வாழ்ந்து மகிழ்ந்திருந்த குறிப்புக்கள் தமிழ் இலக்கியங்களில் நிரம்பக் காணப்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று சான்றோர்களால் புகழப்பெறும் கலித்தொகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் எண்ணிலடங்கா உள்ளன. இவற்றுள் மகளிர் விளையாட்டுக்களைப் பற்றி ஆராயும் நோக்கில் "**கலித்தொகைகாட்டும் மகளிர் விளையாட்டுக்கள்**" என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

கலித்தொகை

கலிப்பாவினால் ஆன பாடல்களைக் கொண்டது கலித்தொகையாகும். கலித்தொகை பாவகையால் பெயர்பெற்றது. இலக்கண நூல்களில் கூறப்படும் அகப்பொருள் பகுதிக்கு இந்நூல் இலக்கணமாய்த் திகழ்கிறது. "**கலி என்னும் சொல்லுக்கு களிப்பு, களிப்பின் பெருக்கு, செருக்கு, ஆரவாரம் முதலிய எழுச்சி நிலைகளை உணர்த்துகிறது.**" (தமிழ்ப் பேரகராதி, தொகுதி – 2. ப.227). கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை. துள்ளல் என்பதை ஆரவாரம் அல்லது எழுச்சி என்று பொருள் கொள்ளலாம்.

கலித்தொகையில் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய ஐந்து திணைகளிலும் 150 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாலைத் திணையில் 35 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 33 பாடல்களும், பாலைத் திணையும் மருதத் திணையும் சம எண்ணிக்கையில் 35 பாடல்களைப் பெற்றுள்ளன. கலித்தொகையில் பாடப்பெற்றுள்ள 150 பாடல்களையும் தொகுத்தவர் நல்லந்துவனார் என்னும் புலவராவார். கலித்தொகையின் முதல் பதிப்பு 1887 ஆம் ஆண்டில் வெளிவந்ததாகும். இதனைச் சுவடிகளில் இருந்து ஆராய்ந்து வெளியிட்டவர் அறிஞர் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆவர். இவ்வெளியீடு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும்.

விளையாட்டு பற்றி அறிஞர்களின் கருத்து

விளையாட்டு பற்றி மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் அவர்கள், **"விளை என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் ஆட்டு விளையாட்டு" (ஞா. தேவநேயன். ப. 5)** என்று விளக்குகிறார். மேலும், **"விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமெனக் கூறலாம்" (இரா.பாலசுப்பிரமணியன், ப. 448)** என்பார் டாக்டர்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இரா. பாலசுப்பிரமணியம். **"இன்பம் விளைவிக்கும் ஆட்டம்" (மு. இராகவையங்கார், ப. 297)** என்று இராகவையங்கார் கூறுகிறார். இவ்வகையில் விளையாட்டு பற்றிய விளக்கங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது விளையாடென்பது மகிழ்ச்சி நிறைந்த செயல் என்று விளக்கம் கொள்ளலாம்.

பாரம்பரிய விளையாட்டுக்கள்

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் கலித்தொகையில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. அவ்வகையில் மகளிர் விளையாட்டாக ஊஞ்சலாடுதல் (குறி.கலி.4, நெய்.கலி.14), குரவையாடுதல் (குறி.கலி.3,), பந்தாட்டம் (குறி.கலி.4, 15-21), சிறுவீடுகட்டி விளையாடுதல் (குறி.கலி.15), குழுவாகக் கூடி ஆடுதல் (மரு.கலி.18), தாயம் (நெய்.கலி.19) போன்ற விளையாட்டுக்களை மகளிர் சிறுவயதிலிருந்தே விளையாடி மகிழ்வர். இத்தகு விளையாட்டுக்களின் மூலம் தமிழர்களின் பாரம்பரிய மதிப்பினை அறிய இயலும்.

மகளிர் விளையாட்டுக்கள்

- ஊஞ்சல்
- அலவன் ஆட்டல் (நண்டு)
- எதிரொலி கேட்டல்
- சுண்ணம் தூவல்
- பந்து விளையாட்டு
- தாயம்
- பாவை விளையாட்டு
- தை நீராடல்
- வள்ளைப் பாட்டு
- குரவை
- சிறுசோறு ஆக்கல்
- அசதியாடல்

போன்ற விளையாட்டுக்கள் மகளிர் விளையாட்டுக்களாக கலித்தொகையில் சுட்டப்பெற்றுள்ளன.

ஊசல் (ஊஞ்சல்)

"ஊஞ்சல் ஊர்ந்து ஆட ஒருஞான்று வந்தானை" (குறி.கலி., 1) என்று தலைவன், தலைவி ஆடின ஊசலை ஆட்டினான் என்ற செய்தி இப்பாடல் அடியில் இடம்பெற்றுள்ளது.

தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை
வீழ்ஊசல் தூங்கல் பெறின் (நெய். கலி., 14)

என்ற பாடல் அடிகளில் நெய்தல் நில மக்கள் ஊஞ்சலைச் சுறாவின் வெண் மருப்பினைப் பலகையாகவும், தாழை விழுதுகளை ஊஞ்சல் கயிறாகவும், புறவிதழ் நீங்கிய நெய்தல்

மலர்களை நாராய்க் கட்டியும் ஊஞ்சலை அலங்கரித்துள்ளனர். மகிழ்ச்சிக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பதற்காகவும் இயற்கைச் சூழலை அனுபவித்து மகளிர் விளையாடியுள்ளனர்.

அலவன் ஆட்டல் (நண்டு)

கடற்கரைப் பகுதியிலும் வயல்வெளிப் பகுதிகளிலும் உள்ள அலவன் கூட்டம் கரைநோக்கி வரும்போது அவற்றைக் கைகளில் பிடித்து ஆட்டியும் மோதவிட்டும் மகிழ்ந்துள்ளனர். இதனை, "**உவறுநீர் உய்யர் எக்கர் அலவன் ஆடு அலைவரி" (நெய்.கலி., 19)** கடற்கரையில் நீர்படிந்த மணற் பகுதியில் மகளிர் விளையாடிய செய்திகளை இப்பாடல் அடி விளக்குகிறது.

எதிரொலி கேட்டல்

மலைப்பகுதிகள், குடியிருப்பு இல்லாத பகுதிகள் மற்றும் குகைப் பகுதிகளுக்குச் சென்று ஒலி எழுப்பி அந்த ஒலியே எதிரொலித்து வருவதைக் கேட்டுப் பெண்கள் வியந்து மகிழ்ந்து விளையாடிப் பொழுதுபோக்கியுள்ளனர். இதனை,

இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோல் கூறுவது கூறும் (குறி. கலி., 10)

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகிறது.

சுண்ணம் தூவல்

சுண்ணம் என்பது ஒருவகை மணப்பொடி. இதனை உருவாக்கும் பொறுப்பினைப் பெண்கள் பெற்றிருந்தனர். சுண்ணம் உருவாக்களில் தங்கள் முழுத் திறனையும் காட்டிப் போட்டியில் வெற்றிபெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர். ஒருவர் மீது ஒருவர் சுண்ணப் பொடியினைத் தூவி மகிழ்ந்துள்ளனர். இதனை, "**சுண்ண நீறு ஆடி" (மரு. கலி., 32)**
என்று சுண்ணத் தூவலைக் கலித்தொகைப் பாடலடி எடுத்துக்காட்டுகின்றது.

பந்து விளையாட்டு

பந்து விளையாட்டு மகளிர் விளையாட்டாகச் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. மகளிர் பூக்களைக் கொண்டு பந்து விளையாடிய செய்தி இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. பொதுமக்கள் கண்டு களிக்கும் வண்ணம் பெரிய அளவில் பந்து விளையாட்டு நடத்தப்பட்டிருப்பதை இலக்கியங்கள் வழி அறியலாம். **"வரிபந்து கொண்டு ஓடி" (குறி. கலி., 15) "விண்டோய் வரைப்பந்து எறிந்த அயாவீட / தண்தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே (குறி. கலி., 4)** என்று வானத்தை தொடுமளவிற்குப் பந்தைத் தூக்கிப் போட்டு விளையாடியதைக் கலித்தொகை கூறுகின்றது.

தாயம்

பழங்காலத்தில் புகழ்மிக்க விளையாட்டாகத் தாயம் காணப்பட்டுள்ளது. இத்தாயம் விளையாட்டை சிறியவர்களும் பெண்களும் ஆண்களும் பெரியவர்களும் விளையாடுவர்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

"பழங்கால நாகரீகத்தில் தாய விளையாட்டில் சுடுவன் காய்களைப் பயன்படுத்தி விளையாடியதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இதனை, மலையாளிகள் 'கம்பிதாயம்' என்று அழைப்பார்கள்." (அ, பிச்சை, ப. 32)

என்று குறிப்பிட்டுள்ளார். இத்தாய விளையாட்டு கலித்தொகையில் இடம்பெற்றுள்ளதை,

முத்துஉறழ் மணல்எக்கர் அளித்தக்கால் முன்ஆயம்
பத்துஉருவம் பெற்றவன் மனம் போல (நெ.கலி., 19)

என்று தாய விளையாட்டில் பத்துத் தாயங்களைப் பெற்றவனுடைய மனம்போலத் தலைவி இருந்த நிலையினை இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

பாவை விளையாட்டு

பாவை என்பது விளையாட்டுப் பொருள்களுள் ஒன்றான பதுமையைச் சுட்டும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது. பாவையை வைத்து சிறுவர், சிறுமியர் விளையாடுவதுண்டு. பாவை என்னும் சொல் ஆண், பெண் ஆகிய இருவகையில் அமைக்கப்பட்ட உருவங்களைக் குறிக்கும். அவை மண் பாவை, மரப்பாவை, பொற்பாவை, மலர்ப்பாவை என்று அழைக்கப்படுகின்றன. மகளிர் மரப்பாவைகளை மணமகனாகவும், மணமகளாகவும் கற்பனை செய்து அவற்றிற்கு மணம் பேசித் திருமணம் செய்து விளையாடுவர். இதனை,

சிறுமுத்தனைப் பேணிச் சிறுசோறு மடுத்த நீ
நறுநுத லவரொடு நக்கது நன்கு இயைவதோ (குறி. கலி., 23)

என்று ஆண் மரப்பாவை சிறுமுத்தன் என்ற சொல்லால் கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் சிறுமியர் பாவைகளுக்கு மணம் செய்து விளையாடி மகிழ்தலைக் நாட்டுப்புறங்களில் காணமுடிகிறது.

வள்ளைப் பாட்டு

சங்ககால விளையாட்டுக்களுள் மகளிர்க்கே உரிய விளையாட்டு வள்ளைப் பாட்டு.வள்ளை என்பது மகளிர் தங்களது கைகளில் அணிந்திருக்கும் வளையல். மகளிர் உரலில் உலக்கை கொண்டு இடிக்கும்போது சோர்வு தோன்றாது இருக்கும் பொருட்டுப் பாடப்படும் பாட்டு வள்ளைப்பாட்டு. இதனை,

உலக்கைப் பாட்டை உரல்பாட்டு, அவலிடி,
அம்மனை, வள்ளை (சு. சிவகாம சுந்தரி, ப., 107)

என்று சிவகாமி சுந்தரி குறிப்பிடுகிறார்.

கலித்தொகையில் தான் வள்ளைப்பாட்டு குறித்து அதிகப் பாடல்களும் செய்திகளும் காணப்பெறுகின்றன. உலக்கைகள் செல்வ நிலைக்கு ஏற்றாற்போல் யானைக் கொம்பாலும் சந்தன மரத்தாலும் ஆன உரலில் இட்டு நெல்லைக் குற்றி எடுப்பர். முத்து நிறைந்த யானைத் தந்தத்தால் ஆன உலக்கையைக் கொண்டு குற்றிய நிலையினை,

முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வகைசால் உலக்கை வடான்வயின் ஒச்சி (கலி., 40: 4-5)

என்ற பாடலடியும், மூங்கில் நெல்லினை பாறை உரலில் இட்டு யானைத் தந்தத்தால் குற்றியதை,

பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்

கோடு உலக்கை யாகநல் சேம்பின் இலைசுளகா (குறி. கலி., 5)

என்ற பாடலடிகளும் உணர்த்துகின்றன. கலித்தொகையின் 42 ஆவது பாடல் தலைவன் செய்த கொடுமையினை வள்ளைப்பாட்டாக பாடத் தோழியினைத் தலைவி அழைப்பதாக அமைந்துள்ளது.

குரவை

குரவை என்பது ஒருவகயான கூத்து ஆகும். இக்கூத்தினைப் பெண்கள் ஆடுவது மரபு. இதனை விளையாட்டாகவும் மேற்கொண்டுள்ளனர். குரவை என்பதற்கு **"ஒலி, கடல் , கூத்து, கைகோர்த்தாடல், பெருஞ்சத்தம், மகளிர் மகிழ்ச்சி ஒலி"** எனத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.

குரவை தழீஇ யாம் ஆடக் குரவையுள்

கொண்டு நிலைபாடிக் காண் (கலி., 39: 28-29)

என்ற பாடலடிகள் வாயிலாக மகளிர் குரவை ஆடும்போது குரவைக் கூத்துக்கேற்ற பாடலை ஆடிப் பாடியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

சிறுசோறு ஆக்கல்

சிறுமிகள் மணல் வீடு கட்டி சின்னச் செப்புகளை வைத்துச் சோறாக்கி விளையாடுவது இவ்விளையாட்டு ஆகும். தமிழ் அகராதி சிறுசோறு ஆக்கல் என்பதற்கு மணற்சோறு, சித்திரான்னம் எனப் பொருள் தருகிறது. "**சிறுசோறு மடுத்து" (கலி., 59)** என்ற பாடலடி மகளிர் சிறுசோறு சமைத்து விளையாடியமையைக் குறிப்பிடுகின்றது.

சிற்றில் சிதைத்தல்

சிறுமியர் கடல் அல்லது ஆற்று மணலில் சிறிய சிறிய வீடுகளைக் கட்டித் தம்முடைய கற்பனைக்கு ஏற்ப உருவாக்கி விளையாடுவர். சிற்றில் என்பதற்கு சிறுகுடில், சிறு வீடு, மண் வீடு என தமிழ் அகராதி கூறுகிறது.

தெருவில் நாம் ஆடும்

மணற் சிற்றில் காலின் சிதையா (கலி., 51)

என்ற பாடல் அடிகள் தலைவி சிறுவயதில் சிறு வீடு கட்டி விளையாடிய போது தலைவன் அதனை அழித்தான் என்ற செய்தி குறிப்பிடுகிறது.

அசதியாடல்

அசதியாடல் என்பது தனித்தும் ஓரிருவரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டும் விளையாடும் விளையாட்டு ஆகும். ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்து விளையாடுவது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அசதியாடல் என்பது பரிகசித்தல், வேடிக்கை, வார்த்தை கூறுதல், சிரித்துப் பேசுதல் என்று தமிழ் அகராதி கூறுகிறது.

வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர் மன்னோ கூறு (கலி., 94)

என்ற பாடல் அடிகள் குறளனும் கூனியும் உரையாடும் அசதியாடல் விளையாட்டினைக் குறிப்பிடுகிறது.

அம்புலி காட்டல்

ஆண், பெண் என்ற இருபால் குழந்தைகளிடமும் பெரியவர்கள் அம்புலி காட்டி விளையாடச் செய்வர். அம்புலி என்பது பிள்ளைத் தமிழில் ஒரு உறுப்பு. சந்திரனைக் காட்டுதலைக் குறிக்கும் என்பர்.

ஐய! திங்கட் குழவி! வருக! என யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது (கலி., 80)

என்ற பாடலடிகள் அம்புலி காட்டுதலைக் குறிப்பிடுகிறது.

முடிவுரை

பழந்தமிழர்கள் பல்வேறு விளையாட்டுகளின் வழியாக மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தனர். ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு, சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள் என பல்வேறு விளையாட்டுக்கள் வீரத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் விளையாடப்பட்டதை கலித்தொகை தெளிவுபடுத்துகிறது. இவ்விளையாட்டுக்கள் அனைத்தும் தலைவன், தலைவி, தோழி ஆகியோரிடையே நடைபெறும் விளையாட்டுக்களாக அமைந்துள்ளன. கலித்தொகையில் பெண்கள் பல்வேறு தொழில்களில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். எனவே அவர்கள் உழைப்பின் களைப்புத்தீர விளையாட்டினை மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் இன்பம் களித்தனர். பெண்கள் தத்தம் பருவத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு விளையாடிய விளையாட்டுக்களில் மனிதநேயப் பண்பு மேலோங்கி காணப்படுவதை கலித்தொகை பாடல்கள் உறுதிப்படுத்துகிறது.

துணைநூற் பட்டியல்

[1] இராகவையங்கார், மு. *விலங்குப் போர் விளையாட்டு*. பாரி நிலையம், சென்னை, 1964
[2] சிவகாம சுந்தரி, சு. *சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1995.
[3] தேவநேயன், ஞா. *தமிழர் விளையாட்டுக்கள்*. கழக வெளியீடு, சென்னை, 1962.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[4] பாலசுப்பிரமணியன், இரா. *தமிழர் நாட்டு விளையாட்டுக்கள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

[5] பிச்சை, அ. *தமிழ்ப் பண்பாட்டில் விளையாட்டுக்கள்.* கபிலன் பதிப்பகம், சென்னை, 1983.

[6] *தமிழ்ப் பேரகராதி தொகுதி* – 2, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1982.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Life of Women in Uma Maheswari's Novel *YarumYarudanum Illai*

Dr. R. Meena, Assistant Professor of Tamil, Anna Adarsh College for Women, Chennai – 600040, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7094-5814
DOI: 10.5281/zenodo.14752476

Abstract

The changes in the behaviour of an individual would naturally affect him, his family, and the society. Literature deals with these in different forms and different meanings. From the Sangam period to the present, all literature has been actively involved in revealing the inner self of the individual. The passing away of the old and the introduction of the new are not new to Tamil literature. The Tamil people enriched their lives by listening to traditional songs and stories. Today's literary works are the result of their desire for the change of their taste. Narrative literatures stand out among these literary works. Due to the inner feelings, the stories emerge innumerable psychological thoughts such as pleasure, sorrow, disorder, and peace found in the hearts of humans are recorded in such stories. Writers have the power to read the minds of their fellow humans. Uma Maheswari is one of the notable writers in the Tamil literary space. Her novel "Yarum Yarudanum Illai" is a good example of the portrayal of women. This study aims to highlight the lives of women in the novel.

Keywords: Lifestyle, Women, Uma Maheswari, *Yarum Yarudanum Illai.*

References

[1] Ambai. *Udal Ennum Veli - Pennum Mozhiyum Velippadum*. Kizhakku Publishers, Chennai. December 2017.
[2] Uma Maheswari. *Yarum Yarudanum Illai*. Thamizhini Publisher, Chennai, 2003.
[3] Seenisami, T. Dr. *Tamil Novelgalil Ula Sitharippu.* Tanjore Tamil University Publication, Tanjore, 2004.
[4] Fathima Soosaimani, Dr. *Tamil Punaikathaigalil Ulaviyal*. *International Institute of Tamil Studies*, Chennai, 2007.
[5] Jayaramakrishnan, Dr. *Unarchigal Uruvakkum Udal Noigal.* New Century Book House, Chennai. 1985.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உமா மகேஸ்வரியின் *யாரும் யாருடனும் இல்லை* நாவலில் பெண்களின் வாழ்வியல்

முனைவர் அர. மீனா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை - 600040, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7094-5814
DOI: 10.5281/zenodo.14752476

ஆய்வுச்சுருக்கம்

ஒரு தனிமனிதனுடைய நடத்தையின் மாற்றங்கள் அவனையும், அவன் குடும்பத்தையும், அவன் சார்ந்த சமூகத்தையும் பாதிப்பது இயல்பு. இவற்றையே இலக்கியங்கள் வெவ்வேறு வடிவில், வெவ்வேறு பொருளில் கையாளுகின்றன. சங்ககாலம் தொடங்கி இக்காலம்வரை இலக்கியங்கள் யாவும் தனிமனிதனுடைய அகத்தை வெளிக்காட்டுவதில் முனைப்புடன் ஈடுபடுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் தமிழ் இலக்கியத்திற்குப் புதிதன்று. மரபுவழிப்பட்ட பாடல்களை, கதைகளைக் கேட்டுத் தம்வாழ்வை வளப்படுத்திக்கொண்ட தமிழினம், காலத்திற்கேற்ப தம் ரசனையை மாற்ற விரும்பிய விளைவே இன்றைய புத்திலக்கியங்கள். புத்திலக்கியங்களுள்கதைசார்ந்தஇலக்கியங்கள்தனிச்சிறப்புபெறுகின்றன. ஏனெனில், மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளே கதைகளாக முகிழ்த்தெழுகின்றன. மனிதர்களின் உள்ளத்தில் காணப்படுகின்ற இன்பம், துன்பம், விகாரம், அமைதி என எண்ணிலடங்காத உளவியல் சிந்தனைகள் கதைகளில் பதிவு செய்யப்படுகின்றன. மனிதர்களின் மனதைப் படிக்கின்ற ஆற்றல் எழுத்தாளர்களுக்கு உண்டு. அவ்வகையில் குறிப்பிடத்தக்க பெண் நாவலாசிரியராக அறியப்படுகின்ற உமாமகேஸ்வரியின் யாரும் யாருடனும் இல்லை என்ற நாவலில் பெண்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் நோக்கத்துடன் இவ்வாய்வு அமைகின்றது.

திறவுச்சொற்கள்: வாழ்க்கை முறை, பெண்கள், உமா மகேஸ்வரி, யாரும் யாருடனும் இல்லை.

முன்னுரை

பெண்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கின்ற சிக்கல்களுக்கு முடிவுகாண விரும்பினாலும் சமூகம் அவர்களுக்கான நியாயத்தை வழங்க மறுக்கின்றது. பெண்களே பெண்களுக்கு எதிராக அமைவதும் சிக்கல்களுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இவற்றைத் தாண்டி தங்கள் உடல், உள்ளம், உழைப்பு என அனைத்து நிலையிலும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள பெண்கள் போராடிக்கொண்டுதான் இருக்கின்றனர். காலங்கள் மாறினாலும் இத்தகைய போக்குமட்டும் இன்னும் மாறவில்லை. அவ்வகையில் அறுபதுகளில் வாழ்ந்த தமிழ்ச்சமூகப் பெண்களின் மனவோட்டத்தை இந்நாவல்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வெளிப்படுத்துகின்றது. கூட்டுக் குடும்பத்தில் சிக்கித்தவிக்கின்ற பெண்களின் வாழ்வியலை இந்நாவலின்வழி பின்வரும் தலைப்புகள் ஆராய்கின்றன.

கதையும் தலைப்புப் பொருத்தமும்

அன்னம்மா – பொன்னையா தம்பதியினர். அவர்களுக்கு ஏழு பிள்ளைகள். இருவர் பெண். ஐவர் ஆண். பெண்கள் இருவரும் மணமானவர்கள். ஐந்தாவது மகன் குணா திருமணமாகாதவன். தர்மராஜ் – ராஜேஸ்வரி, செல்வம் – தனமணி, நரேந்திரன் – விஜயா, நந்தகோபால் – வினோதினி ஆகியோர் முறையே மகன்களும் மருமகள்களுமாவர். இவர்களுள் ராஜேஸ்வரியும் வினோதினியும் உடன்பிறந்தவர்கள். வாணி, சுபா, லதா, அனு, பானு, வசந்தி, சரவணன், குமார் ஆகியோர் அந்த வீட்டின் குழந்தைகள். இவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றனர். பெற்றோர் இறந்தபிறகு இவர்களுக்குள் பூசல் முற்றுகின்றது. வீடு நிறைய உறவுகள் நிறைந்திருப்பினும் யாரும் யாருடனும் உறவாடவில்லை. அவரவர் தத்தம் உலகத்தில் ஆழ்ந்து போவதால் யாரும் யாருடனும் இல்லை என்ற தலைப்பு இந்நாவலுக்குப் பொருத்தமாக அமைகின்றது.

பெண்களின் வாழ்வியல்

பெண் என்றால் அமைதி, அழகு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், மென்மை, தாய்மை எனப் பற்பல அடையாளங்களை வகுத்து, அவர்களின் சுயத்தை ஏற்க மறுக்கின்ற சமுதாயத்தில்தான் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கணவன் தவறு செய்தாலும், அதைப்பொறுத்துக்கொண்டு, அதே கணவனுடன் சகிப்புத்தன்மையுடன் வாழவேண்டும் என்பதே, பெண்களின் மீது வீசப்படுகின்ற முதல் கணையாக அமைகின்றது. பொறுத்துப்போவதுதான் பெண்களின் குணம் என்றே பழக்கப்படுத்தப்பட்டது. இந்த வரைமுறை இன்றைய நவீன உலகிலும் தொடர்கின்றது என்பதுதான் உச்சக்கட்ட கொடுமை. ஆய்வுக்குரிய இந்நாவலிலும், அத்தகைய பெண் கதாபாத்திரங்களை வடிவமைத்துள்ளார் ஆசிரியர்.

சமையலறையும் பெண்களும்

சமையலறை ஒன்றே பெண்களின் வாழ்விடம் என்னும்படியான மனப்போக்கு இன்றும் காணப்படுகின்றது. பணிக்குச் செல்லும் நிலையில் இருக்கின்ற பெண்களுக்குச் சமையலறை விரும்பத்தகாத இடமாகவும் அமைகின்றது. அறுபதுகளின் காலகட்டத்தில் இந்நிலை இன்னும் தீவிரமாகவே காணப்பட்டுள்ளது என்பதற்கு இந்நாவல் சான்றுரைக்கின்றது. குடும்ப உறுப்பினர்களுக்குச் சமைத்துப்போடுவது ஒன்றையே தம்வாழ்வின் பெரும் கடைமையெனக் கொள்ளும் மனநிலையில் இந்நாவலின் பெண்கள் காணப்படுகின்றனர். இதனை, தினசரி உயர்ந்தும் தாழ்ந்தும் எரியும் அடுப்பு நெருப்பினை மாற்றி மாற்றித் தங்கள் பொழுதுகளைப் போட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தனர் அந்த வீட்டின் பெண்கள் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 67) என்று விவரிக்கின்றார் ஆசிரியர். ஆணுக்கு உலகம் என்பது விரிந்து

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கொண்டே போகும் வட்டம். பெண்ணுக்குப் பெண் என்பது குறுகிய அடிப்படை விளக்க வட்டம் (அம்பை. ப. 108) என்ற அம்பையின் கருத்திற்கிணங்க, பெண்கள் சமையலறை என்ற வட்டத்திற்குள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்கின்ற அவல நிலையை இந்நாவலில் காணமுடிகின்றது.

இல்லறத்தில் சகிப்புத்தன்மை

கூட்டுக் குடும்பத்தின் தலைவர் பொன்னையா தன் மனைவி அன்னம்மாவின் உடல்நிலை, தன் தாம்பத்திய வாழ்வில் நிறைவை ஏற்படுத்தவில்லை என்ற ஏக்கம் கொண்டு, பார்கவி என்ற பெண்ணுடன் தொடர்பு கொள்கின்றார். பாருவின் உடல் மீது நகரும் தன் விரல்கள் உண்மையில் கடிவாளப்பட்டுக் கிடப்பது அன்னம்மாவின் அடிமனதில் தான் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 46) என்று தன் தவறுக்கு நியாயம் தேடுகின்றார். தன் கணவன் தன்னைவிட்டு வேறொரு பெண்ணுடன் முயங்குகின்றார் என்று தெரிந்தும், தெரியாதவாறு, தன் மௌனத்தால் சகித்துக் கொள்கின்றாள் அன்னம்மா.

> **பெண் குழந்தை என்றாலே அது செலவுதான் என்று சலித்துக் கொள்கின்ற கணவன் செல்வம். தனக்குப் பிறந்த குழந்தைகள் மூன்றும் பெண்ணாகவே அமைந்துவிட, தன் மனைவியை, அவள்தான் ஏதோ சதிசெய்து வெறும் பெண் குழந்தைகளைப் பெற்றுத் தருகிறாள் என்று உறுதியாக நம்பினார். (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 179)**

ஆகையால், அவளிடம் முகம் கொடுத்துப் பேசாது, பெண் குழந்தைகளிடம் அன்பும் அரவணைப்பும் இன்றி ஒதுங்கியே வாழ்கின்றார். மனைவியிடம் தன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காது, தனக்குத்தானே ஒரு முகமூடி அணிந்து கொண்டு வாழ்கின்ற தன் கணவனின் அன்புக்கு ஏங்கித் தவிக்கின்றாள் தனமணி.

> **மனைவியை அதிகாரம் செய்தே வாழப்பழகியவர் தர்மராஜ். மனைவி செய்த சமையலை, குழம்பில் புளி ஜாஸ்தி, பொரியல் இன்னும் சரியா வதங்கல, என்னத்த சமைச்சிருக்க சனியன் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 67)**

என்று தன் மனைவியை வசைபாடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் தன் கணவனைப் பொறுத்துக் கொண்டு, தினமும் எந்த வகையிலாவது அவருக்குப் பிடித்தமான உணவை சமைத்துக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் சமையலறையையே தன் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் ராஜேஸ்வரி.

> **ஏராளமான செல்வங்கள் கொடுத்துத் திருமணம் செய்துகொடுத்த பின்பும்கூட, எதையாவது வாங்கிக்கொண்டு வா என்று கொடுமை செய்கின்ற தன் கணவனின் வெறியாட்டத்தைத் தாங்க முடியாமல், தாய் வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் அலைகின்றாள் பூரணி. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 31)**

திருமணம் செய்து கொள்ளாமல் பொன்னையாவோடு வாழ்ந்து, அவர் இறந்த பிறகு, அவரைப் பார்க்க அனுமதிக்காத உறவுகளின் பார்வையில் கூனிக் குறுகுகின்றாள் பார்கவி. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 272)

இவ்வாறு, கல்வியறிவை முழுமையாகப் பெறாமல், தன் பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, சிறுவயதிலேயே திருமணம் செய்து கொண்டு, கணவன் எத்துணைக் கொடுமையானவனாக இருந்தாலும், அந்தக் கணவனையே தன் வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டு, தன் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட கணவனின் கையை எதிர்ப்பார்த்திருக்கும் மனைவிகளை அடையாளம் காட்டுகின்றது இந்நாவல்.

சமூக நிலையில் பெண்கள்

பெண்களுக்கென்று வகுக்கப்பட்ட வரைமுறைகள், சட்டதிட்டங்கள் அவர்களை பரந்த நோக்கில் சிந்திக்கவிடுவதில்லை. குடும்பத்தின் பொறுப்பு ஆண், பெண் இவருக்குமானது என்றாலும், குடும்பத்தைச் சிதையாமல் பராமரிப்பது பெண்ணின் கடமை என்றே வற்புறுத்தப் பெறுகின்றது. அவர்களும் இதுவே உண்மை என்று நம்பத்தொடங்கி அதன்போக்கிலேயே மனத்திருப்தி கொள்கின்றனர். அதன்படி, இந்நாவலில், பெண்களுக்கென்று கூறப்பட்ட கட்டுப்பாடுகளைப் பின்வரும் பட்டியல் விளக்குகின்றது.

- வெளியிடங்களில் தன் குடும்பம் குறித்து உரையாடக்கூடாது (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 31)
- வயதுக்கு வந்தவுடன் வெளியில் போய் விளையாடக்கூடாது (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 127)
- ஆண்கள் உணவு உண்ட பின்பே உணவு உண்பது (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 66)
- பருவம் வந்தவுடன் திருமணத்திற்குத் தயாராவது (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 149)
- நோட்டுக்களில் கோலம் வரைவது, எம்பிராய்டரி பூக்கள் தைப்பது (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 230)

எனப் பல கோணங்களில் பெண்களின் மனநிலைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும்,

- பண்டிகை நாட்களில் குழந்தைகளை வாழ்த்தும்போது, ஆண் குழந்தைகளுக்கு 500 ரூபாய், பெண் குழந்தைகளுக்கு 100 ரூபாய்க் கொடுத்து வாழ்த்துவது. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 265),
- வெளியூர் சென்று மேற்படிப்பு படிக்க ஆண் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 254)
- பெண் குழந்தைகள் பருவம் வந்தவுடன் உள்ளூரில் உள்ள பள்ளிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுவது (*யாரும் யாருடனும் இல்லை*, ப.147)

என ஆண் குழந்தைகளுக்கான கற்பிதங்களைக் காணும்போது, அறுபது ஆண்டு காலத்திற்குமுன் ஆண், பெண் பேதங்களால் சமூகம் சுழற்றியடிக்கப்பட்டிருந்தமையும்,

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஆணாதிக்கம் நிறைந்த மனப்போக்கு நிறைந்தவர்களாக ஆண் சமூகம் இருந்துள்ளமையும் அறியப்படுகின்றது.

தாழ்வு மனப்பான்மை

சமூகத்தின் பார்வையில் மதிப்புப் பெறாதபோது, பிறர்குறை கூறும்போது இயல்பாகவே மனிதர்களின் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். இதனை, தன்னிடமுள்ள அல்லது இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளும் குறைகளின் காரணமாகத் தன்னைத்தானே குறைவாக மதிப்பிடும் மனப்போக்கு (தி. செயராமகிருஷ்ணன். ப. 12) என்றுரைக்கின்றனர் உளவியல் அறிஞர்கள். அதன்படி, ஆய்வுக்குரிய இந்நாவலில் தாய் தந்தையை இழந்த, கால் ஊனமுற்ற சுப்பு என்கின்ற பெண், அன்னம்மாவின் கருணையால் அக்கூட்டுக்குடும்பத்தில் ஓர் அங்கமாகின்றாள். தன்னைக் கடந்துபோகும் மனிதர்களின் கால்களையும், பாதங்களையும் கண்டு தானும் அவ்வாறு ஓடியாட முடியவில்லையே என ஏங்கிக் கொண்டே தன் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறாள்.

> **இளமையின் மினுக்கும் இறங்கி வதங்கி கால்களில் மரத்துக்கிடப்பதைப் பார்க்கும்போது தன்மேல் தீவிரமாகக் கிளர்ந்தெழும் பரிதாபத்தை ஒரு வாஞ்சையுள்ள நட்பைப்போல் வளர்க்கத் தொடங்குவாள் (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 58)**

என அவளின் கதாபாத்திரம் உரைக்கப்படுகின்றது. பிரியமும் இணக்கமும் நிறைந்தது தாம்பத்திய உறவு என்று தன் கனவிலே எண்ணியிருந்த அவளை, தோட்டக்கார வேலையாள்தன் வன்புணர்வுக்கு ஆளாக்கும்போது அவனுடைய வலிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமுடியாத தன் இயலாமையை எண்ணி கலங்கியதைவிட,

> **நொண்டிக்கழுதைக் கென்னடி நொரநாட்டியம் என்று வன்மத்தோடு தன் உடல் மீது பரவியபோது அவள் உணர்வுகளற்ற இடமொன்றில் சிதைந்து கிடந்தாள். (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 174)**

குடும்பத்தின் பெரியவர் பொன்னையா அவளுக்கு நல்லதொரு மாப்பிள்ளை பார்த்ததாகக் கூறியவுடன் தன் நிலைமையை எடுத்துக்கூற இயலாதவளாய், இறுதியில் தற்கொலை செய்துகொள்வதாகப் படைக்கப்பட்டிருக்கின்றாள்.

நியாயமான விருப்பங்கள் நிறைவேறாமை

ஒரு மனிதனுக்குப் பசியும், தூக்கமும் எவ்வளவு இயல்பானதோ, அதேபோன்று உடல் தேவையும் இயல்பானதே. இது ஆண், பெண் இருவருக்கும் பொது. ஆனால், பெண்கள் தங்கள் காமத்தை வெளிப்படுத்துவது மிகப்பெரும் குற்றம் என்றே பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அவளுடைய நியாயமான விருப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இந்நாவலில், வினோதியின் பாத்திரப்படைப்பும் அவ்வாறே அமைந்துள்ளது. பதினேழு வயதில் திருமணம் முடித்து, குடிகார கணவனுக்கு மனைவியாகின்ற வினோதினி, குடியின் போதையால் இயந்திர

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கதியில் தன்னுடன் தாம்பத்திய உறவுகொள்ளும் தன் கணவனை எண்ணி மறுகுகின்றாள். பல நாட்கள் விரக தாபத்தால் தவிக்கின்றாள். வினோதியின் பெருமூச்சுக்களில் வெம்மை ஏறும்.

> **தனது அடிமனதில் நிராசையும் தனிமையும் பெருகிப்பெருகி பொறாமையாகக் கவலையோடு கவனித்தாலும் அவை அவளால் களைய இயலாதவையாக இருந்தன. (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 135)**

என்ற வரிகள் அவளின் அடிமன ஆசைகள் நிறைவேறாத ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றன. பசி, தாகம், பால் உணர்வு போன்ற அடிப்படை உந்துதல்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் அடைபடும் போது விழைவு நிறைவேறப்பெறாத மனம், தன் இழப்பின் வேதனையை மறக்க, மூலப்பொருளை ஒத்திருக்கும் ஒரு பதிலி அல்லது மாற்றுப்பொருளைப் பற்றிக்கொண்டு ஆறுதல் பெற முனைகின்றது. (பாத்திமா சூசைமணி. ப. 38) என்ற உளவியல் கருத்துப்படி, வினோதியின் மனமும் தன் விருப்பத்தை நிறைவேற்ற வேறு வழிகளில் முயன்றது. இதனால், தன் திருமணத்திற்கு முன்பே தனக்கு அறிமுகமான தன் கணவனின் தம்பி குணாவின்பால் ஈர்க்கப்பட்டு, தன் மனதில் புதைந்து கிடக்கும் ஆசைத்தீயை அவன் மூலமாக அணைக்க முயற்சிக்கிறாள். அண்ணனுக்குத் திருமணம் செய்வதற்கு முன்பே வினோதினியை நன்கு தெரிந்த குணா அவள்பால் ஈர்க்கப்பட்டு, இறந்த தன் தாயின் அன்பை அவளிடம் கண்டு, அவளின் ஆசைகளுக்குத் தானும் உடந்தையாகின்றான். இருவரும் மனமொத்த தம்பதியர் போல் தங்கள் இரவுகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் கழிக்கின்றனர். அவனால் கருவுற்ற வினோதினி ஊராருக்கும், தன் குடும்பத்தாருக்கும் பயந்து தன் சகோதரியின் உதவியுடன் கருவை அழிக்கின்றாள். இயல்பான தன் விருப்பம் நிறைவேறாமையால், சந்தர்ப்ப சூழல்களால் வேறுவடிவில் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்ட பெண்ணையும் ஆசிரியர் படைத்துள்ளார்.

கற்பனையில் வாழ்தல்

நிறைவேறாத தன் விருப்பங்களைக் கனவில், கற்பனையில் நிகழ்த்திக்கொண்டு இன்பம் அடைவது ஒருவகையான மனநிலை. இந்நாவலில் படைக்கப்பட்டிருக்கும் அனு என்ற குழந்தைக் கதாபாத்திரம் அவ்வாறே படைக்கப்பட்டுள்ளது. நினைவிலே தனக்கு மனநிறைவை தராத நிகழ்வுகளைத் தன் கனவிலும், கற்பனையிலும் காண்கின்றாள் அனு. மற்ற குழந்தைகளோடு தானும் குதிரை சவாரி செய்யவேண்டும். தண்ணீரில் விளையாட வேண்டும் என்ற தன்னுடைய சின்ன சின்ன ஆசைகளுக்கெல்லாம் தடை விதிக்கும் தாய் மீது வெறுப்பு கொள்கின்றாள்.

> **ஆயினும், அவள் மனம் கூண்டு வண்டியை விட்டு விரைந்து வெளியேறும்.... அனுவும் குதிரையும் மட்டும்தான் அங்கிருப்பார்கள். தேவதைகள் அங்குமிங்கும் உலவுவார்கள். அவர்களோடு அனு தோழமை கொள்வாள். கடவுளுக்கருகில் உட்கார்ந்து உலகத்தின் தலை விதியை நிர்ணயிப்பாள்... (*யாரும் யாருடனும் இல்லை*, ப. 74)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்றவாறு தன் ஆசைகளை எல்லாம் கனவில் நிறைவேற்றிக் கொள்கின்றாள். ஆசைப்படும் நிகழ்வுகளைக் கற்பனையாக உருவமைத்துப்பார்த்து மகிழ்ச்சி அடைதல் (சீனிச்சாமி. ப. 21) என்ற கருத்தின்படி, உள்ளத்தில் அடக்கி வைக்கப்பட்ட நிறைவேறாத ஆசைகளுக்கு வடிவம் கொடுத்து மகிழ்கின்றாள் அனு.

முடிவுரை

அறுபது ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தின் சமூகச் சூழலை இந்நாவல் விவரிக்கின்றது. ஆணாதிக்கம் நிறைந்த உலகில் பெண்கள் தனக்கென்று விருப்பு வெறுப்பு கொண்டவர்களாகவோ, சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவோ வாழவில்லை என்பதற்கு இந்நாவல் மிகப்பெரும் சாட்சியுரைக்கின்றது. அதே வேளையில், ஆண்களின் ஆணாதிக்கப் போக்கும், அவர்களின் தனிப்பட்ட ஒழுக்கங்களும் குடும்பத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது. பெண்களின் உலகம் ஆண்களைச் சுற்றியே சுழல்கின்றது. கணவனுடன் ஒன்றிணைந்து வாழ்வதே சமூக அங்கீகாரம் என்ற நிலையில் பெண்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. அதனால், தன்னைக் கொடுமைப்படுத்தும் கணவர்களிடம் இருந்து மீளமுடியாமல் சகிப்புத் தன்மையுடன் வாழப்பழகிக் கொண்டவர்களாகக் காட்சியளிக்கின்றனர். குடும்பப் பராமரிப்பு என்பது பெண்ணின் தனிக்கடமை என்ற எண்ணம் பெண்ணின் நனவிலியில் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது. சமைப்பதும், கோலமிடுவதும், எம்பிராய்டரி வேலைகள் பார்ப்பது மட்டுமே அவர்களின் பொழுதுபோக்குகளாக அமைகின்றன. வயதுக்கு வந்தவுடன் அவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, வீட்டு வேலைகளைப் பழக்கிக் கொள்வதுதான் சிறந்த பெண்ணிற்கு அழகு என்ற தவறான கற்பித்தல் பெண்கள் உழல்கின்றனர். ஆண்கள் தங்களை உயர்வானவர்களாகக் கருதுவதும், பெண்கள் ஆண்களுக்கு அடிபணிந்தே வாழப்பிறந்தவர்கள் என்பதும் எழுதப்படாத விதியாக அமைகின்றது. தங்கள் விருப்பங்கள் நிறைவேறாத நிலையில் தாழ்வு மனப்பான்மை கொள்கின்றனர். வாழ முடியாது என்ற நிலையில் தற்கொலை செய்து கொள்கின்றனர். தனக்குப் பிடித்தவாறு கற்பனையில் வாழ்கின்றனர்.

குறிப்புகள்

[1] அம்பை. *உடலெனும் வெளி – பெண்ணும் மொழியும் வெளிப்பாடும்.* கிழக்குப் பதிப்பகம், சென்னை, 2017.

[2] உமாமகேஸ்வரி. *யாரும் யாருடனும் இல்லை.* தமிழினி பதிப்பகம், சென்னை, 2003.

[3] சீனிச்சாமி, து, முனைவர். *தமிழ் நாவல்களில் உளச்சித்தரிப்பு.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். 2004.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[4] பாத்திமாசூசைமணி, முனைவர். *தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

[5] ஜெயராமகிருஷ்ணன், தி, டாக்டர். *உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1985.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Feminism in the Sangam Literature

T. Muthu Lakshmi, Reg. No.: 23213154022019, Ph.D. Scholar of Tamil, S. T. Hindu College, Nagercoil-2, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0004-4472-8375
Dr. C. Jessy Rose, Associate Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil-2, Manonmaniam Sundaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-7535-0542
DOI: 10.5281/zenodo.14752502

Abstract

The themes of Sangam literature revolve around two main aspects. They are love and valour. Sangam Era poets presented nature as a backdrop for their imaginative and factual descriptions. It provides valuable information through the poems. The beloved or Thalaivi is a prominent figure in Sangam literature. She is revered for her exceptional qualities. Sangam women were known for their bravery and often shared the throne with kings. They lived with dignity and were adorned with beautiful jewellery. It is impossible to give a universal definition of feminism that applies to all societies in the world. Although there are many definitions of feminism, the general concept of Tamil feminism is to give equal rights for women at all levels of life. This research paper explores the concept of feminism in Sangam literature. It also highlights the feminist ideas that are instilled in the Sangam poems.

Keywords: Women, Dignity, Feminism, Sangam Literature. Sangam Women, Sangam Era.

References

[1] Kothandam, K. M. *Thirukkural, Ilaigharkalukkana Eliya Urai.* New Century Book House (P) Ltd. Chennai, 2014.
[2] Saminathiyar, U. Ve. *Kurunthokai Moolamum Uraium.* U.Ve.Sa. Nool Nilaiyam, Chennai, 2000.
[3] Subramaniyam, P. *Paripadal (Moolamum Uraiyum).* New Century Book House (P) Ltd. Chennai, 2007.
[4] Dadsinamoorthi, A. *Inkurunooru (Moolamum Uraiyum).* New Century Book House (P) Ltd. Chennai, 2011.
[5] Thirugnasampanthar, S. *Tholkappiyam Porul Athikaram (Moolamum Uraium).* Kathir Pathippakam, Thiruvaiyar, 2022.
[6] Puliyur Kesikan, *Natrinai Erandam Pakuthi Thelivurai*. Pari Nilayam, Chennai, 2007.
[7] Muthu Chidambaram, C. *Penniyam Thottamum Valarsium*, Muthu Pathippakam, Thirunelveli, 2005.
[8] Viswanathan, A. *Kalithogai Moolamum Uraiyum*, New Century Book House (P) Ltd., Chennai, 2004.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சங்க இலக்கியத்தில் பெண்ணியம்

தெ. முத்து லெட்சுமி, பதிவு எண்: 23213154022019, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ. தி. இந்துக் கல்லூரி. நாகர்கோவில்-2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0004-4472-8375
முனைவர் C. ஜெஸிறோஸ், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-7535-0542
DOI: 10.5281/zenodo.14752502

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியத்தின் பாடுபொருட்கள் காதல், வீரம் என்ற இரு நிலைகளில் அமைகின்றன. சங்ககாலப் புலவர்கள் இயற்கையை முன்வைத்து கற்பனைகளாகவும், உண்மைகளாகவும் சில தகவல்களை நமக்குச் சங்கப் பாடல்களாய் தந்தனர். சங்க கால மாந்தர்களில் சிறப்பாக கருதப்படும் தலைவி என்னும் பெண் பாத்திரம் போற்றப்படக்கூடியதாகும். சங்ககால மகளிர் வீரமிக்கவர்களாகவும், அரசர்களுடன் அரியணையின் அருகிலும், அழகு அணிகலன்களுடன் அலங்கரித்து இருப்பதைக் காணமுடிகிறது. இந்நிலை மட்டுமின்றி பெண்கள் தாங்கள் வாழ்வில் இன்ப துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் நிலை இன்று மட்டுமல்லாமல் சங்ககாலத்திலும் இருந்திருக்கிறது. அதனை மையமாகக வைத்து "சங்க இலக்கியங்களில் பெண்ணியம்" என்ற தலைப்பில் ஆராயப்படுகிறது.

குறிப்புச் சொற்கள்: மகளிர், மாண்புகள், பெண்ணியம், சங்க இலக்கியம், காதல், வீரம்.

முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது. வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்பது உண்மை. ஏனெனில், வாழ்க்கையில் சாதாரணமாக நடக்க முடியாததைக் கூட ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காக கற்பனையாக வாழ்க்கையில் நடப்பதாக இலக்கியத்தில் குறிப்பிடுவதும் உண்டு. எனவே, இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மொழி சமூகத்தின் வாழ்வு முறையை முழுவதும் உருவாக்கம் செய்ய முடியாது. ஆனால் சமூகத்தின் நிலையையும் பண்பாட்டையும் ஓரளவு காணமுடியும். சங்க இலக்கியத்தில் சங்ககால மக்களின் வாழ்வியல் உணர்வுகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. அதனடிப்படையில் சங்க இலக்கியத்தில் பெண்ணியம் எவ்வாறு பேசப்படுகிறது என்பதை ஆராய்வதே நோக்கமாகும்.

சங்ககால மகளிரின் பண்புநலம்

பழந்தமிழர் பண்பாட்டின் நிலைகளனாய் விளங்கியவை சங்ககால மக்களின்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அரும்பெரும் பண்புகள் ஆகும். அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புகள் பெண்களுக்குரியன. இதனை,

அச்சமும் நாணும் மடனும் முந்துறதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.களவியல்: 96)

என்னும் தொல்காப்பிய நூற்பா புலப்படுத்துகிறது. மகளிருக்கு உயிரைக் காட்டிலும் நாணமும், நாணத்தைக் காட்டிலும் கற்பும் மிகச்சிறந்தது என்பதைத் தொல்காப்பியர்,

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செய்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று (தொல்.களவியல்: 111)

என்கிறார். கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல் ஆகிய பண்புகளும் மகளிருக்கு இன்றியமையாதவை என்பதை,

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்து புறந்தருதலும் சுற்ற மோம்பலும்

புறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். பொருளியல்: 150)

என்னும் தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

வாழ்க்கைத் துணை நலம் என்னும் தலைப்பில் இவ்வுலகில் பெண்மையைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை என்பதை,

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்

திண்மை உண்டாகப் பெறின் (குறள்., 54)

என்று திருக்குறள் சிறப்பிக்கின்றது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகள் கூறப்பட்டிருந்தாலும் அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கான சம உரிமைகள் என்பது பொதுவான கருத்தியலாகும். பெண்ணியத்திற்கு உலகில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தும்படியான, முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுப்பது என்பது இயலாத ஒன்றாகும். **பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டின்படி அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் (முத்துச் சிதம்பரம், ச. ப. 11)** என்று புட்சர் கருதினார். பெண் தன் எதிர்காலத்தை நோக்கிச் செயல்படவும், தங்களுடைய கருத்தை வெளிப்படுத்தவும் முயலுவதே பெண்ணியம் எனலாம்.பெண்ணியம் பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. சமூகத்தில் அனைவருக்கும் சமமான நிலை உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் நோக்கமாகும். அதே சமூகத்தில் ஆணும் பெண்ணும் பாலின பாகுபாடுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப்படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கையாகும்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சங்க இலக்கியங்களில் பெண்ணியம்

பெண் - மனைவி, கணவன் சொல் தட்டாதவளாகவும், அவனால் வாழ்க்கை நோக்கம் கற்பிக்கப்பட்டவளாகவும் சங்கஇலக்கிய கவிதைகள் பதிவுசெய்கின்றன. இதனை,

வினையே ஆடவர்க்கு உயிரே
மனையுறை மகளிருக்குஆடவர் உயிர்என
நமக்கு உரைத்தவர் தாமே (குறு., 135)

என்ற வரிகள் கணவன் -மனைவி ஆகியோரின் கடமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன.

மனைவி என்னும் நல்லாள்

தலைவன் பரத்தையோடு சிலகாலம் இருந்தான். இப்பொழுது அவன் தன் மனைவியோடு வாழ விரும்பி அவளது தோழியின் உதவியை நாடுகின்றான். தோழியைத் தனக்காக தலைவியிடம் செல்ல வேண்டுகிறான். அதற்குத் தோழி,இப்பொழுது பரத்தையரோடு இருந்ததற்கான அடையாளங்களோடு நீ வந்திருக்கிறாய். ஒரு காலத்தில் நீ வறுமையில் வாடினாய். உனக்குத் தலைவி மனைவியாக வந்த பிறகுதான் வளமான வாழ்க்கை கிடைத்தது என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று கூறுவதை,

உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் சிரீஇயும்
தழை அணிப் பொழிந்த ஆயமொடு துவன்றி
விழாவொடு வருதி நீயே யிஃதோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனி விழாவாயிற் றென்னுமிவ்வூரே. (குறு., 295)

என்ற குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. இப்பாடல் மூலம் வறுமையில் வாடிய தலைவனது சாதாரண குடும்பம் பலரும் விருந்து உண்டு செல்லும் அளவிற்கு வளமாவதற்குக் காரணம் அவனது தலைவி ஆவாள். சங்க காலத் தலைவன் பொறுப்பின்றி பரத்தமையை நாடிச்சென்றாலும், மனைவி என்பவள் தன் குடும்பத்தை வளமாக்குவதற்குரிய வேலையைச் செய்பவளாகவும் தன் கடமையைச் சிறப்புற ஆற்றும் பெண்ணாகவும் செயல்படுவதைக் காணமுடிகிறது.

கற்பு

ஆண்கள் பல பெண்களுடன் உறவுவைத்துக் கொள்வது என்ற பாலியல் சுதந்திரத்தைப் பெற்று உல்லாசமாக வாழ்ந்து வந்தனர் என்பதை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தி கட்டாயப்பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் பரத்தமையிடம் சென்ற போது கண்டிக்கவில்லை என்பதை, **சேக்கை இனியர் பால் செல்வன் மனையாளால்... (பரி., 20. 86-88)** என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. எனவே பெண்ணுக்கு மட்டுமே ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பரத்தமையை ஏற்கும் பெண்கள்

சங்ககால மகளிர் கணவன் பரத்தையிடம் செல்வதையும் ஏற்றுக் கொண்டனர். தொல்காப்பியரும்,

கற்புவழிப் பட்டவள் பரத்தமையை ஏத்தினும்
உள்ளத்து ஊடல் உண்டு என மொழிப. (தொல்.பொருளியல்: 229)

என்ற நூற்பாவின் மூலம் கற்பு வழிப்பட்ட தலைவி உலக இயல்பினைக் கருதித் தலைமகனுடைய புறத்தொழுக்கத்திற்கு உடன்படுவாள் என்று கூறுகிறார். பெண்கள் தலைவன் பரத்தையிடம் செல்வதை ஏற்றுக்கொள்ளும் பண்பிலும் பெண்ணிய உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. *கலித்தொகை* பாடலில் பெண்கள் பரத்தையிடம் செல்லும் தலைவனை ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்துவதை,

நீரார் செறுவில் நெய்தலொடு நீடிய
...மகிழ்நன் பரத்தமை
நோவென் தோழி கடன் நமக்கு எனவே. (கலி., 75. 32-35)

என்ற பாடல் தலைவியின் உள்ள உணர்வினைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. தலைவன் புதிய புதிய பரத்தயரை விரும்பும் நிலையில், அதனைத் தலைவி எதிர்த்துக் கேட்டாலும் ஒன்றும் நிகழப் போவதில்லை என்பதை கருத்தில் கொண்டு வாய்மூடியவளாக இருந்திருக்கிறாள். ஆனால் அவள் மனம் நொந்து புலம்புவதைக் காண முடிகிறது.

பரத்தையிற் பிரிந்த கணவன் தன்தளர் நடைப்புதல்வனை நினைத்து இல்லம் திரும்புகிறானே தவிர புதல்வியை விரும்பி அல்ல என்பதை,

தளர்நடைப்புதல்வனைஉள்ளி, நின்
வளமனைவருதலும், வெளவியோளே (ஐங்., 66. 3-4)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகிறது. பெண்கள் முன்னேற்றம், புரட்சி, அனைத்துத் துறைகளிலும் பெண்கள் என காலம் வளர்ந்து கொண்டிருந்தாலும், சடங்கு, நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்ற பல பெயர்களில் பெண்கள் துன்பங்களை எதிர்கொள்வது இந்த இருப்பதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

பெண் பாலராய் பிறப்பதே துன்பம்

பெண்கள் தான் பெண்ணாய் பிறப்பதே பாவம் என்று கூறுவது இக்காலத்தில் மட்டுமின்றி சங்ககாலத்திலும் இருப்பதை,

காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் தாயே
தெறுவது அம்மஇத் திணைப் பிறத்த ல்லே. (குறு., 45)

என்ற *குறுத்தொகை* பாடல் குறிப்பிடுகிறது. காலையில் எழுந்து விரைந்து செல்லும் குதிரைகளைத் தேரில் பூட்டி, மிகுந்த அணிகலன்களை அணிந்த பரத்தையரைத், தழுவும் பொருட்டு, வளமை பொருந்திய ஊரை உடைய தலைவன் சென்றான். அவன் மிகுந்த பெருமைக்குரியவன். அவன் மீண்டும் தன்னிடம் வந்தால் அவனை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்றெண்ணி சிறுவனைப் பெற்ற தலைவி மனம் கலக்கம் அடைகிறாள். தலைவியின் மனம் கலங்கக்கூடிய செயலைத் தலைவன் செய்தாலும் அதனை மறந்து அவனைத் தலைவி ஏற்றுக் கொள்வது துன்பத்திற்குரியதாயினும் அஃது இந்த பெண் குடியிற் பிறந்தவர் செய்யும் செயல் போலும் என்று வருந்துகிறாள். பெண்கள் இவ்வாறு புலம்புவதைத் தவிர்த்து என்று தனது உரிமைக்காகவும், தனது விடுதலைக்காகவும் எப்பொழுது சுயமாக முடிவெடுத்து அதை தைரியமாக செயல்படுத்தி வெற்றியடைகிறாளோ அன்றே அவளுக்கு முழு சுதந்திரம் கிடைக்கும்.

காம உணர்வை வெளிப்படுத்தும் பெண்கள்

பொதுவாக பெண்கள் தங்கள் காம உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை என்ற கருத்து உள்ளது. சங்க இலக்கியத்தில் வெள்ளிவீதியார் பாடிய இரண்டு நற்றிணைப் பாடல்களிலும் காம உணர்வை தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்று வெளிப்படையாகக் கூறுவதை, **யாமம் உய்யாமை நின்றன்று / காமமோ பெரிதே களைஞரே இலரே. (நற்., 335)** என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. காமம் மிக்க கழிபடர்கிளவி என்பது தலைமகளின் காம உணர்வு பெருகிக் கொண்டே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. தலைவி காமமிகுதியால் நள்ளிரவில் என் உயிர் நின்று விடும் போல உள்ளது என்கிறாள். காமநோய் பெரிதாகும். அதை நீக்குவார் யாரும் இல்லை என்று புலம்புவதாகப் பாடுகிறார் வெள்ளிவீதியார். இதைப் போன்று,

கனை இருங் கங்குலும் கண்படை இலனே
அதனால் என்னோடு பெருங்கொல்
இவ்வுலகம் உலகமொடு பொருங்கொல் என் அவலம் உறு நெஞ்சே (நற்., 348)

என்ற பாடலில் தலைவன் இல்லாத நேரத்தில் உலகம் என்னோடு போரிடுகிறதா அல்லது துன்புறும் என் நெஞ்சம் இந்த உலகத்தோடு போரிட்டுக் கொண்டிருக்கின்றதா என்று காம உணர்வைத் தலைவி வெளிப்படுத்துவதாக அமைகிறது.

ஆழ்ந்த நம்பிக்கையும் அதீத நம்பிக்கையும்

தலைவன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்லும்போது கார்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாகச் சொல்லிச் செல்வது வழக்கம். அந்த நிலையில் கார்காலம் தொடங்கிவிட்டது. ஆனால் தலைவன் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் தலைவி இது உண்மையான கார் காலம் இல்லை. அதாவது கார்காலத்து அடையாளமான கொன்றைப் பூக்கள் பூத்துள்ளன. அதனால் கார்காலம் தொடங்கிவிட்டது என்று சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஏனென்றால் என்னுடைய தலைவன் பொய் சொல்ல மாட்டார் என்று கூறுவதாக ஒரு பாடல் உள்ளது. இதனை,

புதுப் பூங்கொனறைக் கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய் வழகலரே.(குறு., 21)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. தலைவன் பொய் வழங்கலையே அதாவது கார்காலமாக இருந்தால் அவர் திரும்பி வந்திருப்பார் என்று தலைவி வாதாடுகிறாள். இவ்வாறு தலைவி தலைவன் மேல் வைத்திருந்த ஆழ்ந்த நம்பிக்கையை இப்பாடல் வரிகள் புலப்படுத்துகிறது.

இன்னொரு முல்லை நிலத்தலைவி கார் காலம் இல்லாத பிற காலத்தில் பெய்த மழையைக் கார்காலம் என்று கருதுகிறாள். இதனை,

மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின, பிடவும் பூத்தன;
காரன்று இகுளை! தீர்கநின் படரே;
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளிஇய பஉகுத்தரும்
நொதுமல வானத்து முழங்கு குரல் கேட்டே (குறு., 251)

என்ற பாடல் மூலம் தலைவிக்குத் தலைவன் மேல் வைத்திருந்த அதீத நம்பிக்கையை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்விரு பாடல்கள் மூலம் சமூககாலப் பெண்கள் ஆண்களால் மூளைச்சலவை செய்யப்பட்டார்கள் என்பதையும், ஆண்கள் இட்ட வலைக்குள் சிக்கிக்கொண்டார்கள் என்பதையும் அறியமுடிகிறது. தனக்கென்ற ஒரு தனித்தன்மையின்றி, அவர்களின் வாழ்வோடும் தாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதுதான் இன்ப வாழ்வு என அவர்கள் கற்பித்ததையும் ஏற்றுக் கொண்டனர். தலைவனுக்காகவே தான் படைக்கப்பட்டுள்ளோம் என்ற அசைவில்லாத நம்பிக்கை உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

நிறைவுரை

சங்க இலக்கியங்கள் சங்ககால மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கின்றன. அவர்கள் மக்கள் வீரம், காதல் என்ற இரண்டு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போன்று ஆண் பெண் என்ற இரு பாலினங்கள் சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி என்ற பெயரில் ஒளிவீசுகின்றன. தலைவன் தன்னிகரில்லாதவனாகவும், தலைவி தலைவனைச் சார்ந்து வாழ்பவளாகவும் சங்க இலக்கியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. பெண்கள் இன்றையச் சூழலில் பெண்ணியத்திற்கு போராடுகின்றனர். ஆனால் சங்க கால மக்கள் அன்றே தம் வாழ்வில் துன்பங்கள் பலவற்றைக்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கடந்து வாழ்ந்ததனர். எனவே, சங்ககாலம் முதல் தற்காலம் வரை பெண்ணியம் ஏதோ ஒருவகையில் பேசப்படுகிறது என்பது புலனாகிறது.

குறிப்புகள்

[1] கோதண்டம், கொ. மா. *திருக்குறள்.* இளைஞர்களுக்கான எளிய உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2014.

[2] சாமிநாதையர், உ.வே. *குறுந்தொகை மூலமும் உரையும்.* உ. வே. சா. நூல் நிலையம், சென்னை, 2000.

[3] சுப்ரமணியம், பெ. *பரிபாடல்* (மூலமும்உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை, 2007.

[4] தட்சிணாமூர்த்தி, அ. *ஐங்குறுநூறு* (மூலமும்உரையும்). நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை. 2011.

[5] திருஞானசம்பந்தர், ச. *தொல்காப்பியம் பொருள் அதிகாரம்* (மூலமும் உரையும்). கதிர் பதிப்பகம், திருவையாறு, 2022.

[6] புலியூர் கேசிகன். *நற்றினை இரண்டாம் பகுதி தெளிவுரை.* பாரி நிலையம், சென்னை, 2007.

[7] முத்து சிதம்பரம், ச. *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்.* முத்து பதிப்பகம், திருநெல்வேலி, 2005.

[8] விஸ்வநாதன், அ. *கலித்தொகை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Lives of Women in Epic Literature

V. Merina Maju, Reg. No.: 241131501027, Ph.D Researcher, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil, Affiliated Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627 012, Tamil Nadu, India.
Dr. A. Ponnammal, Associate Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Affiliated Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627012, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785
DOI: 10.5281/zenodo.14752527

Abstract

The epics are a treasure of verses that show the truths of the ancient civilization of a country before the eyes of the people who have come after it for a long time. The meaning of these epics is that they are life-like paintings that illustrate the truths. The Tamil epics that narrate the ancient history of Tamil Nadu are "Silappadhikaram" and "Manimekalai". There are many epics in the Tamil language. However, the five major epics namely Silappadhikaram, Manimekalai, Jeevaga Chinthamani, Valyapathi and Kundalakesi are special. Of these, Silappadhikaram and Manimekalai embrace the history of Tamil Nadu. In this, the protagonist of Silappadhikaram is Kannagi, and the protagonist of Manimekalai is Manimekalai. These two epics have been made into epics focusing on women. The purpose of this essay is to explain the life situations of Kannagi, Manimekalai, Manimekalai's mother and Madhavi, who are the heroines of the epics Silapathikaram and Manimekalai. The life stages mentioned in this are entwined with the life stages of Kannagi, Madhavi and Manimekalai. Manimegalai is an epic which is a continuation of Silapathikaram. This article studies the lives of women in Tamil epic literature.

Keywords: Biography, Women, *Manimekalai*, Madhavi, Kannagi, *Silapathikaram*.

References

[1] Azhaku Krishna B. *Silappathikaram Kattum Panpadum Samuthaya Varalarum.* Iynthinai Pathippagam, 1988.
[2] Sivagnanam, M. P. *Silappathikar Thiranayvu*. Poonkodi Pathippagam, Mayilappoor, Chennai. 1999.
[3] Sivagnanam, M. P. *Silappathikar Aayvurai*. Poonkodi Pathippagam, Mayilappoor, Chennai. 2001.
[4] Somasundaranar, P. V. Pulavar. *Silappathikaram Mulamum Uraium*. Thirunelveli Thenninthiya Saivasithantha Noorpathippu Kalagam Limited, Chennai.
[5] Dasan, M. Pulavar. *Tholkappiya Kalansiyam Porulathikaram* - Pakuthi-1. Apila Pathippakam, Kanyakumari.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

காப்பிய இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல்

வா. மெரினா மஜீ, பதிவு எண்: 241131501027, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012, தமிழ்நாடு, இந்தியா.
முனைவர் அ. பொன்னம்மாள், இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-1127-6785
DOI: 10.5281/zenodo.14752527

ஆய்வுச்சுருக்கம்

காப்பிய இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் காப்பிய தலைவியாக இடம்பெறும் கண்ணகி, மணிமேகலை, மணிமேகலையின் தாய், மாதவி இவர்களின் வாழ்வியல் நிலைகளை விளக்கி கூறுவதே இவ்வாய்வு காட்டுரையின் நோக்கமாகும். இதில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நிலைகளும் கண்ணகி, மாதவி, மணிமேகலையின் வாழ்வியல் நிலைகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியே மணிமேகலை காப்பியமாகும். மணிமேகலைக்கு வேண்டிய கதை கரு சிலப்பதிகாரத்திலே தோன்றியுள்ளது எனலாம்.

குறிப்புச்சொற்கள்: காப்பியங்கள், பெண்கள், வாழ்வியல், மணிமேகலை, கண்ணகி, சிலப்பதிகாரம்.

முன்னுரை

ஒரு நாட்டின் பண்டைய நாகரிகத்தின் இனிய உண்மைகளை நெடுங்காலத்திற்குப் பின்வரும் மாந்தரின் கண்முன்னே காட்டும் கருவூலம் தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பியங்களேயாகும். அக்காப்பியங்களின் பொருள் உண்மைகளை எடுத்துரைக்கும் உயிர் ஓவியங்களாகும். தமிழ் நாட்டின் தொன்மை வரலாற்றினை எடுத்துக் கூறும் காப்பியங்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழ் மொழியில் காப்பியங்கள் பல உள்ளன. எனினும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெருங்காப்பியங்கள் சிறப்புமிக்கவையாக உள்ளன. இதில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழ்நாட்டு வரலாறு தழுவிய காப்பியங்களாம். இதில் சிலப்பதிகாரத்தின் காப்பியத்தலைவி கண்ணகி, மணிமேகலையின் காப்பியத்தலைவி மணிமேகலை. இவ்விருகாப்பியங்களுமே பெண்களை மையமாகக் கொண்டு காப்பியமாக்கப்பட்டுள்ளது. ஆகவே காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் பெண்களின் முக்கியத்துவம் இன்றியமையாததாக உள்ளது. இக்காப்பியங்களின் அடிப்படையில் வாழ்வியலைப்பற்றி விளக்கமாக காண்போம்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மாதவியின் பெருந்தகைமை

கலைகள் அனைத்தையும் கற்றுக் தேர்ந்து 'தலைக்கோலி' என்னும் சிறப்பு பெயரோடு ஆயிரத்தி எட்டு பொற்கழஞ்சியங்களையும் சோழ மன்னனிடமிருந்து பரிசாகப் பெற்றவள். கலையில் சிறந்து விளங்கிய மாதவியை காதலித்து கண்ணகியை மறந்து மாதவியுடன் கூடி வாழ்ந்த கோவலன் யாழிசை வாயிலாக ஊழ்வினை உருத்துவந்தூட்டிய பொழுது கோவலன் கடற்கரையிலேயே மாதவியை கைவிட்டு சென்றான். கோவலனுக்கும், கண்ணகிக்கும் நேர்ந்த கொடுந்துயரத்தை மாடலன் வாயிலாக கேட்டபின்னர் மிக்க துயரம் அடைந்தாள்.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழாவில் நடைபெறும் மாதவியின் நாட்டியம் நடைபெறாமல் போவதற்கு மாதவியின் வாழ்க்கை முறையே காரணம் என்று ஊர்மக்கள் பழிச்சொற்கள் கூறினர் அவற்றை கேட்டு மாதவி வருந்தாமையின் பொருட்டு, வயந்தமாலை "பழிக்குரிய செயல்களையே நீ செய்திருக்கிறாய் ஆதலின் நீ அதற்கு நாணவே வேண்டும். ஆனால் நீயோ நாணாமல் இருக்கின்றாய்" என்று கூறினாள். இதனை,

பலர்தொருபுரைக்கும் பண்பில் வாய்மொழி,
நயம்பா டில்லை நாணுடைத்து (சிலப்பதிகாரம்)

எனும் சிலப்பதிகாரப் பாடல் வரிமூலம் அறியலாம். இதைகேட்ட மாதவி "மற்ற சில பெண்களைப் போலவே நானும் கற்புடையவளாகவே இரு;க வேண்டும் என்ற கோட்பாட்டோடுதான் அந்த பெருங்குடி மகனோடு (கோவலனோடு) செருக்கோடு வாழ்ந்;திருந்தேன். ஆனால் நான் நினைத்தபடி கற்புடையவளாய் இருந்திருந்தால் என் காதலர் இறந்த செய்தி கேட்ட பொழுதே என் உயிர் இவ்வுடலைவிட்டு போயிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு போகவில்லையே நான் என்ன செய்வேன்? என்பதே உண்மையாயிற்று. பலர் கூடி என்னை பழிச்சொல்வதும் ஏற்புடையதாகும். இருப்பினும் கோவலனுக்கு கோவலனுக்கு பிறந்த மகளாகிய மணிமேகலையை ஊரார் போற்றும்விதமாக வளர்த்து அவளை கற்புடையவளாகவும், பக்தியுடையவளாகவும் அற ஒழுக்கத்தில் சிறந்தவனாகவம் உருவாக்குவதே என் நோக்கம்" என்று தனது தோழி வயந்தமாலையிடம் கூறினாள். இதிலிருந்து மாதவியின் தனித்திறத்தை அறிந்துகொள்ள முடியும். மேலும்

சிறப்பில் குன்றாச் செய்கையோடு பொருந்தியா
புற்பில் குன்றா பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை
ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்று குறைவுபடாமல்
ஏழாண்டு இயற்றி (சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை, பா. 5)

என்று மாதவியின் சிறப்பை இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார். கடவுளாய்ச் சிறந்தாள் ஒருவள். கணிகையர் குலத்துள் கற்பில் சிறந்தாள் ஒருவள். இவ்வாறு இரு பெண்களை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மையமிட்டு ஒருமுழு வரலாற்றை காப்பியமாக அளித்தவர் இளங்கோவடிகள். இந்த காப்பியம் முழுவதும் பெண்ணின் சிறப்பை வலியுறுத்தி அமைந்துள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களில் பெண்களின் வாழ்வியல்

காப்பிய உலகில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று புகழப்படும் சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி எனும் ஐந்து காப்பியங்களுமே பெண்களை மையமிட்ட காப்பியங்களாகவே விளங்குகிறது. 'மணநூல்' என்றழைக்கப்படும் சீவகசிந்தாமணியில் எட்டுபெண்களை மணந்ததாக கூறப்படும் கருத்திற்கு அப்பாற்பட்டு நோக்குகையில் அப்பெண்களை மணந்து அதன்வழி பெற்ற உதவிகளை காப்பியம் விரித்துரைப்பதைக் காணமுடிகிறது. இந்த காப்பியம் முழுவதும் பெண்களை மையமிட்டே அமைகிறது. சீவகனை சுடுகாட்டில் பெற்றெடுக்கும் விசையை வரை காப்பியம் முழுவதும் பெண்களே நிறைந்திருப்பதை உணர்த்துகிறது. மேலும் ஓடும் நதி முதல் வணங்கும் தெய்வம் வரை பெண்கள் பெயரே முதன்மைப்படுத்துவதைப் போல சீவகன் பகைவரை வென்று நாட்டை மீட்ட செயலைக் குறிப்பிடும் போது சீவகன், 'மண்மகளை மணந்தான்' என்றும் முடிசூடிய நிகழ்ச்சியை 'பூமகளை மணந்தான்' என்றும் ஞானம் பெற்று முக்திநிலையை அடைந்ததை 'கேவல மடந்தையை மணந்தான்' என்றும் கல்வி, நாடு, முக்தி என அனைத்தையும் பெண்மையின் அங்கமாகவே காப்பியங்கள் எடுத்துரைப்பதை அறியமுடிகிறது. வளையாபதியும், குண்டகேசியும் பெண்மையை முன்னிறுத்தியே காப்பியத்தை நகர செய்கின்றன.

கண்ணகியின் வாழ்வியல் நிலை

தொல்காப்பியர் குறிப்பிடும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைப் பண்பு நலன்களை பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. பொறுமை பெண்டிர்க்குரிய குணங்களுள் ஒன்றாகும். 'பொறை' எனப்படுவது மென்மையான மனத்துடன் பொறுத்துப்போகும் பண்பாகும்' இப்பொறையுடைமை கண்ணகியிடம் இருந்ததால் இளங்கோவடிகள்,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலன் யெர் மன்னுங் கண்ணகியென்பாள் மன்னோ (சிலம்பு மங். வாழ்., பா. 1: 26-29)

என்று பாராட்டப்படுகிறாள். மேலும், கண்ணகி போதிலார் திருவினாள்' என்றும். 'புகழுடை வழவென்றும் அடயாளம் காட்டப்படுகிறார். மேலும் தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' என்றும் 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்றும் பாராட்டப்படுகிறாள்.

மேலும் செல்வச்செழிப்பில் வாழ்ந்தவள் கண்ணகி. கணவன் அவளைவிட்டுப் பிரிந்து மாதவியின் பால் வாழ்ந்தபோது அப்பிரிவைத் தாங்கியவள். கோவலன் வந்து 'வருகென'

அழைத்ததும் மறுமொழி எதுவும் கூறாமல் உடனே சென்றவள். அவனுடன் காடுமேடுகளை கடந்து சென்றவள் கவுந்தியடிகள் அடைக்கலமாகத் தந்த மாதரியின் மகள் ஐயை வீட்டில் உணவு சமைத்தும் பரிமாறி பல்வேறு பணிகளை கணவனுக்காகச் செய்து மகிழ்நதவள். மனச் சுமைகளைக் கூட சுகங்களாக சுமந்து வாழ்ந்த கண்ணகி பெண்களிலேயே சிறப்பானவள் என்றால் அது மிகையாகாது.

தொல்காப்பிய கால பெண்கள் வாழ்வியல் நிலை

பெண்கள் என்பவர்கள் சிறந்த பண்புடன் விளங்க வேண்டும் என்பதை தொல்காப்பியர்

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஒம்பலும்
பிறவும் என்ன கிழவோள் மாண்புகள் (தொல்., 1098)

என்று வரையறுத்துள்ளது.

ஆரம்ப காலங்களில் ஆணுக்கு நிகராகப் பெண்களும் செயல்பட்டனர். ஆனால் இயற்கையாக உடல் ரீதியான மாற்றங்களில் ஆண், பெண் ஆகிய இருவருக்குமான தொழில் வேறுப்பட்டன. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்ற நிலை உருவானது. கடல் கடந்து செல்வது பெண்ணுக்கு தடை செய்யப்பட்டது. வாழுகின்ற இடத்திலேயே சிறுசிறு வேலைகளைச் செய்து வந்திருக்கின்றனர். இல்லத்தை ஆள்பவளாக அவள் தொடர்ந்து செயல்பட்டிருக்கிறாள். பெண்ணின் உயிரைவிட நாணம் பெரியது. ஆதனைவிட அவளது கற்பு மிக உயர்வானது. இதனை தொல்காப்பியர்

உயிரினும் சிறந்தன்று நானே நானினும்
செய்தீர் காட்சி, கற்பு சிறந்த றெனத்
தொல்லோர் கிளவி (தொல்., 1059)

எனும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

காப்பியங்களைப் பொறுத்தவரையில் தொடர்நிலைச் செய்யுளாக அமைந்து சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒரு கருத்தை கூற விளையும் போது அவ்வில்ககியம் பெண்மையை முன்னிறுத்தியதாகவே அமைவது காணமுடிகிறது. பெண்iயை மையமிட்டு உலகம் இயக்கம் அமைவதை இக்காப்பியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இக்காப்பியங்கள் அவை தோன்றிய காலத்தில் காணப்பட்ட பெண்களின் நிலையை எடுத்துரைப்பதாகவும் கருதலாம். ஆண், பெண் இருபாலரில் பெண்மைக்கே முக்கியத்துவம் கொடுத்து சிற்பபித்திருப்பதை அறியமுடிகிறது. இவ்வாறு பெண்களை மையப்படுத்தும் படைப்புகளை காலந்தோறும் வரவேற்புக்குரியதாக இருந்திருக்கிறது. இந்த முதன்மைப்படுத்துதலால் இக்காப்பியங்கள் இன்றளவும் பெருமையாகப் பேசப்படுகின்றன.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குறிப்புகள்

[1] அழகு கிருஷ்ணன் பொ. *சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்.* ஐந்திணை பதிப்பகம். 1988 .

[2] சிவஞானம், ம. பொ. *சிலப்பதிகாரத் திறனாய்வு.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை. 1999.

[3] சிவஞானம், ம.பொ. *சிலப்பதிகார ஆய்வுரை.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை. 2001.

[4] சோமசுந்தரனார், போ. வே, புலவர். *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட், சென்னை-1.

[5] தாசன், மு, புலவர். *தொல்காப்பிய களஞ்சியம் பொருளதிகாரம் பகுதி – 1.* அபிலா பதிப்பகம் குமரி.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Appavuku… Kavithai Thogupu in Feminist Perspective

V. Merlin Christina, Registration No:23113154022012, Ph.D Research Scholar (Full-time), Department of Tamil, S.T. Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
ORCiD: https://orcid.org/0009-0002-0493-2596
Dr. B. Malar, Research Guide, Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752582

Abstract

There are many ideas about women have been found in Sangam literature up to modern literature. Feminist ideas became widespread during Bharathiyar's time. Although the poet Malar points out the impact of his father's separation in the collection of poems by the contemporary writer Dr. P. Malar's "Apavukku" (To His Father), there are collections of poems with feminist ideas in them. The purpose of this article is to examine the feminist ideas in this collection of poems. Even in the twenty-first century, there is an environment in society where women are somehow subjected to slavery and oppression and live their lives within a narrow circle in their homes. P. Malar who works as an assistant professor at Thenthiruthangur Hindu College in Nagercoil, has published her first collection of poems 'Appavukku…'. Her collection of poems 'Appavukku…' highlights the lifestyle of women and the long way they have to go. She raises the alarm that those who are paralyzed inside the house are not women. Not only that, she records the idea that women should rule this world in her collection of poems.

Keywords: Penniyam, Kuzhanthai Thirumanam, Dowry, Widow, Appavukku.

References

[1] Malar, B. *Appavuku*. John Publication, Nagercoil. 2019
[2] Mariya Stephen. A. *Pennurimai Pathukappu.* Manitha Urimai Chattainkal Kalvi Veliedu
[3] Meyyappan. S, (P.A). *Bharathiyar Kavithaigal*. Manivasagar Pathippagam, Pari Munai, Chennai -18.1997
[4] Rangammal, R. *Pennium Anukumuraikalum.* Arivu Pathipakam, Ilakiya Kotpadukal.
[5] Vennila, A. *Neeril Alaiyum Mugam*. Agazhi Velieedu. Vandavasi, Chennai. 2008.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

பெண்ணிய நோக்கில் *அப்பாவுக்கு...* கவிதை தொகுப்பு

வி. மெர்லின் கிறிஸ்டினா, பதிவுஎண்: 23113154022012, தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-0493-2596
முனைவர் பா. மலர், உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
DOI: 10.5281/zenodo.14752582

ஆய்வுச்சுருக்கம்

இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் ஏதோ ஒருவகையில் பெண்கள் அடிமைத்தனத்திற்கும், ஒடுக்குதலுக்கும் உட்பட்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும் சூழல் சமுதாயத்தில் காணப்படுகின்றது. நாகர்கோவில் தென்திருதாங்கூர் இந்துக்கல்லூரியின் உதவிபேராசிரியராக பணியாற்றும் 'பா. மலர்' அவர்களின் முதல் கவிதை தொகுப்பு 'அப்பாவுக்கு...'. இவரின் இக்கவிதை தொகுப்பு பெண்களின் வாழ்வியல் முறையை சுட்டுவதோடு அவர்கள் செல்ல வேண்டிய தூரம் அதிகம், வீட்டுக்குள் முடங்கி கிடப்பவர்கள் பெண்கள் அல்ல என தட்டி எழுப்புகிறார். மட்டுமல்ல பெண்கள் இவ்வையகத்தை ஆள வேண்டியவர்கள் என்னும் கருத்துக்களை தன் கவிதை தொகுப்பில் பதிவு செய்கிறார்.

குறிப்புச்சொற்கள்: பெண்ணியம், குழந்தை திருமணம், வரதட்சணை, விதவை, அப்பாவுக்கு.

முன்னுரை

சங்க இலக்கியம் துவங்கிதற்கால இலக்கியம் வரையில் பெண்களைப் பற்றிய கருத்துக்கள் காணப்பட்டாலும், பாரதியார் காலத்திற்கு பெண்ணிய கருத்தாக்கங்கள் பரவலாயின. சமகால எழுத்தாளரான முனைவர். பா. மலரின் அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் அப்பாவுடைய பிரிவினையின் தாக்கத்தை கவிஞர் சுட்டி இருந்தாலும், பெண்ணிய கருத்துடைய கவிதை தொகுப்புகள் இதில் இடம் பெற்றுள்ளன. இக்கவிதை தொகுப்பின் பெண்ணிய கருத்தாக்கங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பெண்ணியம்

பெண்ணியம் என்பதன் ஆங்கில பதம் **'Feminism'** ஆகும். பெண்ணியம் என்பதை **'பெண்ணிலைவாதம்', 'பெண்நிலைஏற்பு', 'மகளிரியல்', 'பெண்ணலக்கொள்கை'** என்ற வேறுபெயர்களைக் கொண்டது. **'Feminism'** என்ற சொல் **'Femina'**என்ற இலத்தின் சொல்லின் திரிபு. துவக்கக் காலத்தில் பெண்ணியம் என்ற சொல் பாலியல் பண்புகளைக் குறிக்க

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பயன்பட்டது. பிற்காலங்களில் பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்கு இச்சொல்லை கையாண்டனர்.

அறிஞர்களின்கருத்துக்கள்:

'சார்லட்பன்' என்று அறிஞர் **"பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளை பெற்று தருவது மட்டுமல்ல சமூகத்தை மாற்றி அமைக்க முயல்வதாகும். 'கார்டன்'"** என்று அறிஞர் **"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்கிறார்."**

குழந்தைத் திருமணம்

குழந்தைதிருமணம் என்னும் பெருங்கேடு நம் சமூகத்தில் இன்றளவும் இருப்பதை காணமுடிகிறது. கல்வி கற்கும் வயதில் பெண் குழந்தைகள் குடும்பபாரம் சுமக்க தொடங்குகிறார்கள். இதனை,அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் வரும் **'நீர்குமிழிகள்'**என்ற கவிதையில்,

புத்தகம்தூக்கும்
பருவத்தில்
குழந்தைதூக்கும்
நிர்பந்தத்தால்
நங்கையே
உடைந்துபோகிறாய்
நீர்க்குமிழியாய் (நீர்குமிழிகள்.ப. 55)

நீரில் உள்ள நீர் குமிழிகள் ஒரு சில நிமிடங்களில் குறைந்து போகும். இவைப் போல் புத்தகம் தூக்கி சாதனைகள் நிகழ்த்த வேண்டிய வயதுடைய குழந்தைகள் அது மறுத்து ஒரு குழந்தை வேறொரு குழந்தை சுமப்பதை வருத்தத்துடன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். **"நல்ல வினை கொண்டு நாயை விற்பாரந்த / நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?" (பாரதியார் கவிதைகள். பெண் விடுதலைக் கும்மி. 4)** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கான திருமண வயது பதினெட்டு என வரையறை செய்தாலும், இன்றளவும் ஏதோ ஒரு ஒடுக்குதலுக்கு உட்பட்டு குழந்தை பருவத்திலேயே திருமணம் செய்யும் முறை வளர்ந்து வரும் நிலை தற்கால இயந்திர உலகிலும் காணப்படுகின்றது.

வரதட்சணை

வரதட்சணை என்ற சொல் **'ஸ்த்ரிதனம்', 'சீர்'** ஆகிய பெயர்களிலும் ஆங்கிலத்தில் **'Dowry'** என்ற பெயரிலும் சுட்டப்படுகின்றது. துவக்ககாலம் தாய்வழியை சார்ந்த சமூகமாக காணப்பட்டது. இக்காலத்தில் ஆண்வீட்டார் ஒரு பெண்ணை மணம் முடிக்க அவளுக்குரிய பரிசு பொருட்களை பெண்வீட்டாரிடம் கொடுத்து திருமணம் செய்யும் முறை வழக்கிலிருந்து. எப்போது பெண்ணுக்கு ஓய்வு தேவைப்பட்டதோ, அப்போது முதல் அவள் அடிமையாகது

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வங்கினார் பிற்காலங்களில் பெண் வீட்டாரை ஆண்விட்டாருக்கு சீர் என்ற பெயரில் கட்டாய வரதட்சனை கொடுக்கும் நிலை சமுதாயத்தில் காணப்படுகிறது. வரதட்சணை சரியாக தராததால் ஒரு பெண் மற்றொரு பெண்ணை வன்கொடுமை செய்யும் சூழல் சமுதாயத்தில் உள்ளது. இதனை தடுக்க அரசு 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடை சட்டம் ஏற்றி சமூதாயத்தில் நடைமுறைப்படுத்தினர். 1961 பிரிவு நான்கின் படி மணமகளின் வீட்டிலிருந்து நேரடியாகவோ மறைமுறைமுகமாகவோ மணமகனின் பெற்றோர், உறவினர் வரதட்சனை கேட்பாராயின் அவர்களுக்கு ஆறுமாதம் முதல் இரண்டு வருடம் வரை சிறை தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் அல்லது சீர்பொருட்களுக்கு ஏற்றவாறு தண்டனை விதிக்கலாம். உதவும் கரங்கள் என்ற கவிதையில்,

தட்சணையின்றி
தாலினைநீகட்டினால்
தாயும்கூட
தலைமுழுகிவிடுவாள்-என்
தலையன்இவன்
இல்லையென்று, (உதவும் கரங்கள்.ப.43)

என்ற கவிதை வரிகள் வாயிலாக ஒரு பெண் தான் மற்ற பெண்ணிடம் வரதட்சணை கேட்கிறார்கள் என ஆசிரியர்சுட்டுகிறார்.

இருபதுஆண்டுகள்
இறந்தபின்னே
இலட்சங்களை கையில்
கொண்டு உன்
இனிய மகளுக்கு
இலட்சிய மாப்பிள்ளை
தேடுகையில்
இலட்சங்கள் கோடிகளாய் மாறி
கைகொட்டி சிரிக்கும்.” (இலட்சங்கள் கோடிகளாய். ப. 74)

என்னும் கவிதை அடியில் ஆசிரியர் பா.மலர் இன்று நீங்கள் வாங்கும் வரதட்சணையை நாளை பல மடங்காக திரும்ப கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள இளைஞர்களை அறிவுறுத்துகிறார்.

அடிமை வாழ்க்கை

தன்னுரிமை இழந்து பிறருக்கு வேலை செய்வார்கள் அடிமைகள். பெண்கள் தன் கணவர் மற்றும் பிள்ளைகளுக்காக அவள் விருப்பம் எது வென்று அறியாமல் விரும்பாத காரியம் செய்தும் தன்னை கட்டுப்படுத்தி வாழும் நிலை உலகில் காணப்படுகின்றது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இதனையும் தொல்லை என்று நினையாமல் கடமை என கடக்கும் பெண்கள் அநேகர், அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் மறந்த கவிதையில்,

கிரைண்டரில் அரைப்படும்
மாவுக்கும்
படிப்பரைக்கும் இடையில்
களைந்து போகிறது
என் கவிதைகள்
மறந்த கனவாக... (மறந்த கவிதை. ப. 98)

இந்த கவிதையின் வாயிலாக ஆசிரியர் இந்த அடிமை வாழ்க்கையில் கிரைண்டரின் அரிசி எப்படி அரைப்படுகின்றதோ அவ்வாறு என் கவிதை காகிதத்தில் எழுத முடியாமல் கனவாக போகிறது என்கிறார். **பெண்கள் தினம்** என்ற கவிதையில் இந்த அடிமை வாழ்க்கை வாழும் பெண்களைப் பற்றி ஆசிரியர்,

வந்தது மார்ச் 8
மங்கையர் தினம்
மகிழ்ச்சிதான் மங்கையருக்கு
மறந்துவிட்டார்கள் நம்மை
ஆண்டுக்கு ஒரு நாளாவது
நினைக்கின்றார்கள் என்று
உன்னை மறந்தது
உலக மட்டு மல்ல
பெண்ணே நீயும் தான். (பெண்கள் தினம். ப.99)

ஆகிய அடியின் வாயிலாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவராய் அடிமை வாழ்வு செய்யும் பெண்கள் மார்ச் எட்டாம் தேதியானது உலகம் நினைக்கட்டும் என தன் ஆதங்கத்தை பதிவு செய்கிறார். அதோடு தன் நலனையே மறந்து வாழும் பெண்ணை சுட்டுகிறார்.

பெண் உளவியல்

தந்தை வழி சமூகத்தை சித்தரிக்கும் ஆசிரியர் அவரது அப்பாவை பிரிந்த மனநிலையை அறியமுடிகிறது. வரதட்சணை, குழந்தை திருமணம், குழந்தைபேறு, அடிமை வாழ்க்கை இந்த பிரச்சனைகளை எடுத்துரைக்கும் ஆசிரியர் பா.மலர் இவற்றிற்கான தீர்வை வாசகரின் கரங்களில் கொடுக்கிறார். இக்கவிதை தொகுப்பில் ஆசிரியர் சில நகைச்சுவைகளை கையாளுகிறார், அதுவும் பெண்ணை மையப்படுத்தி அமைவதைக் காண முடிகிறது.

வளர்ப்பு மகளாம்
வானப் பெண்ணிற்கு
வரலாறு காண ஊழலில்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வந்த பணத்தில்
வாங்கப் பெற்ற
வைரங்கள் இவை! (நட்சத்திரங்கள். ப. 98)
அடுப்படையிலே வெந்தாலும்
விதிக்கப்பட்ட வர மென்னவோ
ஆறிய தோசை. (தோசை. ப. 96)

ஆகிய கவிதை அடிகள் வாயிலாக பெண்ணியத்தை பேசும் பா.மலர் சில நேரங்களில் நகைச்சுவை வழியாக வாசகர்களே சிந்திக்கவைக்கிறார். வீட்டில் உள்ள அனைவரும் சூடான தோசை தோசையை கொடுக்கும் பெண் இறுதியில் அவளுக்கு மிஞ்சுவது அறிப்போன தோசை, அது மட்டுமில்ல தோசை எப்படி ஆறிப்போனதோ அதேபோல் தான் வேலைகளை செய்து உடலும் சோர்ந்த நிலைக்கு செல்கிறாள். இந்த உளவியலை நகைச்சுவையாக பதிவு செய்கிறார். பா.மலரின் அப்பாவுக்கு கவிதை தொகுப்பு முழுக்க முழுக்க பெண் உளவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தி உள்ளது.

விதவை

ஒரு ஆண், பெண் இருவருக்கும் திருமணமாகி ஒரு சில நாட்களில் கணவன் இறந்தால் அந்த பெண்ணிற்கு சுட்டும் பெயர் விதவை. ஒருவேளை கணவன் இறப்பதற்கு பதிலாக மனைவி இருந்தால் அந்த ஆணிற்கு சமூகம் எந்த பெயரையும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. பெண்கள் தலையில் பூச்சூடும் வழக்கம் உடையவர்கள். சங்க இலக்கியத்தில் ஆண்களும் பூச்சூடி உள்ளன. பூ மற்றும் பொட்டு வைப்பது பெண்களின் உரிமை. ஒரு பெண் தான் பிறந்து குழந்தை பருவம் முதல் பெற்றோரால் பூப்போட்டு வைத்து அழகு பார்க்கப்படுகிறாள். அவளுக்கோ கணவன் இறந்த பிறகு அந்த உரிமை மறுக்கப்படுகிறது என்பதை,

பூவையும் பொட்டையும் சமூகம்
எடுத்துக் கொள்ள
விதவை யாக்கி விலங்கு கையில்
விமலையே!
உடைந்து போகிறாய்
நீர்க்குமிழியாய்... (நீர்க்குமிழிகள். ப.55)

என்கிற நீர் குமிழிகள் கவிதை அடிகள் வாயிலாக ஆசிரியர் பா. மலர் விதவை என்கிற சொல்லைக் கண்டித்தும். பூவும், பொட்டும் பெண்களுக்கு எக்காலத்துக்கும் உரியன என்று உலகிற்கு பறைச்சாற்றுகிறார்.

குழந்தைப் பேறு:

இந்த சமுதாயத்தில் குழந்தை இல்லாமல் ஒரு பெண் இருந்தால் அவளுக்கு கிடைக்கும் பெயர் **'மலடி'** என்பதே. புதிதாக திருமணமாகும் ஆண், பெண்கள் ஒரு சில நாட்களில்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கருத்தரிக்க வேண்டும் என சமுதாயம் ஒரு பிம்பத்தை உருவாக்கியுள்ளது. இதனை மறைமுகமாக வட்டாரச் சொல்லாடலில் **'விசேஷம் இருக்கிறதா'** என கேட்கும் வழக்கம் காணப்படுகிறது .இருபத்தொன்றாம் நூற்றாண்டில் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் காணப்பட்டாலும் சிகிச்சை முறையில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லி முடியாதவை. **'அச்சுப்பிழை'** என்ற கவிதையில் நாப்பத்தெட்டு வயதான பெண்ணிற்கு நீண்ட நாட்களாய் குழந்தை இல்லாத ஏக்கத்தை நளிதழில் வெளிவந்த எட்டாம் வகுப்பு மாணவிக்கு பிறந்த எட்டு குழந்தைகளின் கதையை வாசித்து வெளிப்படுத்துகிறார். இதனை,

தொட்டில் பொம்மை முதல்
தாலாட்டு பாட்டு வரையிலும்
தயாராகலாம் ஆனால் குழந்தை? (அச்சுப்பிழை. ப.54)

என்ற கவிதை அடிகளின் வாயிலாக அறிய முடிகிறது. குழந்தை பேறு கடவுள் தரும் அருட்கொடை எந்த மனிதனுக்கு எப்போது தேவை என்பதை அறிந்து இறைவன் கொடுப்பார் மனிதன் பிறமனிதனை பேசுவது வன்முறையான செயல்தான் என ஆசிரியர் தெளிவாக இவ்வையகத்திற்கு உரைக்கிறார்.

குழந்தை வன்கொடுமை:

குழந்தை என்று சொன்னால் அனைவருக்கும் பிடிக்கும். அவர்களின் சிரிப்பில் இருக்கும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை இல்லை. இத்தகைய குழந்தைகள் மனித குணம் அற்ற தீய கயவர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும். குழந்தைகளை ஆசிரியர் பா.மலர்,

களங்கமில்லா கண்மணிகள்
காமவெறியர்களின்
விரக தாபத்திற்கு விலையாக
மலரும் முன்பே
கருகும் மொட்டுக்கள். (பெண்கள் தினம். ப.108)

என்னும் கவிதை அடிகளின் வாயிலாக இக்குழந்தைகள் மலரும் முன்பே கருகும் மொட்டுக்கள் என தன் கருத்தை சமுதாயத்திற்கு பதிவு செய்கிறார்.

திருமணம்

பத்துப் பொருத்தம் பார்த்து, நாள், கிழமை, நேரம் குறித்து பெண் பார்க்கும் நிகழ்வு, அயனிச்சோறு, திருமணத்திற்கு பின் உள்ள விருந்து வரையிலும் அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படித் தான் நடக்கும் திருமண விருந்துகளில் சில முறுமுறுப்புகளும் சண்டைகளும் மனக்கசப்புகளும் இருக்கும் இதனை,

பத்தும் பார்த்து
பரிசம் போட்டாலும்
முட்டல் முறைப்பும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

திட்டலும் இல்லா

திருமணம் இல்லை

தரணியில்.... (எதார்த்தம். ப. 98)

என்ற கவிதை அடிகள் வாயிலாக நகைச்சுவையோடு பா.மலர் சுட்டுகிறார்.

முடிவுரை

காலங்கள் பல மாறி நவீனம் என்கிற இயந்திர உலகிலும் பெண் பிறரால் அடிமைபட்டும், குழந்தை திருமணம், வரதட்சணையால் ஒடுக்கப்பட்டும், திருமணத்தில் குறைகூறல், பெண்குழந்தைகள் வன்முறைக்கு தள்ளப்படுகின்றனர் ஆகிய பெண்ணிய நிலைகளை ஆசிரியர் பா.மலர் தன் கவிதையை வழியாக கண்டிக்கிறார். பெண்கள் செல்ல வேண்டிய தூரம் அநேகம் என இன்றைய பெண்களைத் தட்டி எழுப்புகிறார்.

குறிப்புகள்

[1] மலர், பா, முனைவர். *அப்பாவுக்கு*. ஜான் பப்ளிகேஷன், நாகர்கோவில், 2019.

[2] மரியஸ்டீபன், அ. *பெண்ணுரிமை பாதுகாப்புச் சட்டங்கள்*. மனித உரிமை கல்வி வெளியீடு.

[3] மெய்யப்பன். ச (ப.ஆ). *பாரதியார் கவிதைகள்*. மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை -18.1997

[4] மெய்யப்பன். ச (ப.ஆ). *பாரதிதாசன் கவிதைகள்*. மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை -18.1997

[5] ரெங்கம்மாள், இரா. *பெண்ணியம் அணுகு முறைகளும், இலக்கிய பயன்பாடும்*. அறிவு பதிப்பகம், சென்னை.

[6] வெண்ணிலா, ஆ. *நீரில் அலையும் முகம்*. அகழி வெளியீடு, வந்தவாசி, சென்னை. 2008.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Educational Environment of the Coastal Land Women in the Novels *Kadaladi* and *Thuraivan* of Kumari District

R. Mary Johnsy, Reg No : 18213094022010, Research Scholor, Department of Tamil, Muslim Arts College, Thiruvithancodu, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0001-3115-6513
Dr. Y. Rani, Assistant Professor of Tamil, Muslim Arts College, Thiruvithancodu, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-2579-9239
DOI: 10.5281/zenodo.14752634

Abstract

*In Kumari district, coastal women were often backward in terms of education in the past. Bharathiyar says that men and women are born as equals. Similarly, education is equal for men and women. If women develop knowledge, ignorance can be eradicated in this region. In the past, coastal women of Kanyakumari district were largely deprived of education. Bharathiyar emphasized equality, stating that men and women, as human beings, are equal and so should their access to education. He believed that empowering women through education could eradicate ignorance from the world. This article discusses the challenges faced by women in acquiring education in the neithal (coastal) region as portrayed in Kurumpanai Berlin's "*Kadaladi*" and Christopher Antony's "*Thuraivan*". Topics include obstacles to women's education, poverty's impact on learning, women's rights, and educational environments. This article explains the difficulties faced by women in the education of coastal land, education in poverty, women's rights, educational environment, etc. found in Kurumpanai Berlin's novel "Kadaladi" and Christopher Antony's "*Thuraivan".

Keywords: Women's rights, women's slavery, women's education, kadaladi, Thuraivan

References

[1] Aranganathan, P. *Bharathi, Bharathidasan kavithaigalil Desiya Parvai.* Tamil Department, N.K.M. College, Pollachi.
[2] Christopher Antony. *Thuraivan*. Mukkadal Book Publication, No. 11, 33rd Street, Balaji Nagar, Chennai – 91, November 2015.
[3] Berlin, C. *Kadaladi*. New Century Book House, Chennai - 600098. 2017.
[4] Walter, S. *Varlam*. Karungal, Selali Publishing House, 2019
[5] Sri Chandran. *Naladiyar Moolamum Theliyuraiyum*. Varthamanan Publishing House, Chennai -34, 1989.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

குமரி மாவட்ட *கடல் அடி* மற்றும் துறைவன் நாவல்களில் நெய்தல் நிலப்பெண்களின் கல்விச்சூழல்

ரா. மேரிஜான்சி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பதிவு எண்:18213094022010. முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-3115-6513
முனைவர் ஏ. ராணி, நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-2579-9239
DOI: 10.5281/zenodo.14752634

ஆய்வுச்சுருக்கம்

குமரி மாவட்டத்தில் கடலோர பெண்கள் பெரும்பாலும் முந்திய காலங்களில் கல்வியறிவு பின்தங்கிய நிலையில் இருந்து வந்தனர். இதனை பாரதியார், மனிதர்களாக பிறந்த ஆணும், பெண்ணும் சமம். அது போன்று கல்வியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்று கூறுகிறார். பெண்கள் அறிவை வளர்த்தால் இந்த வையகத்தில் அறியாமையை ஒழித்து விட முடியும். குறும்பனை பெர்லினின் - ***கடல் அடி*** *நாவல் மற்றும் கிறிஸ்டோபர் ஆன்றனியின் -* ***துறைவன்*** *நாவலில் காணப்படும் நெய்தல் நிலப் பெண்களின் கல்வியில் ஏற்பட்ட இடர்பாடுகள், வறுமையில் கல்வி, பெண்ணுரிமை, கல்விச் சூழல் போன்றவை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.*

குறிப்புச்சொற்கள்: பெண்ணுரிமை, பெண்ணடிமை, பெண்கல்வி, கடல் அடி, துறைவன்.

முன்னுரை

கல்வி என்பது '**கல்**' என்னும் சொல் அடியிலிருந்து பிறந்ததென்பர். மனிதனை மனிதனாக மாற்றுவது கல்வி என்பர். அறியாமை என்னும் இருளை அகற்றுவது.. வாழ்வில் மனிதன் பெற வேண்டிய அனைத்தையும், உணர்த்தி நிற்பது கல்வி என்றால் அது மிகையாகாது. உலகியல் அறிவோடு பகுத்தறிவினையும் வழங்கி நிற்பது கல்வி. "கல்வி (Education) என்பது தத்துவத்தின் சக்தி வாய்ந்த ஒரு பக்கம் ஆகும். கல்வி என்பது இலத்தீன் சொல்லான 'Educatum' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'நு' என்றால் 'உள்ளேயிருந்து' என்றும், 'Duco' என்றால் 'வெளிக்கொணர்தல்' என்றும்பொருள்படும். எனவே, Education என்றால் 'உள்ளேயிருந்து வெளியே கொண்டு வருவதாகும் என்று மீனாட்சிசுந்தரம் விளக்கம் தருகிறார்.

கல்வியின் நிலைப்பாடு

கல்வியினால் ஏற்படும் நன்மை குறித்துப் பேசவந்த நாலடியார்,

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குஞ்சியழகும் கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சள்அழகும்அழகல்ல, நெஞ்சத்து
நல்லயாம் என்னும் நடுவு நிலையாம்
கல்வியழகே அழகு. (நாலடியார். 131)

தலை மயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானை கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும்கல்வி அழகேமிக உயர்ந்த அழகாம்.

பெண்ணடிமை தீர்ந்த பின்னர் நாட்டின் போதுமான கல்வி நிலையும் உயர வேண்டும் என்று கருதினார் பாரதி எனலாம். இதனை,

வீடு தோறுங் கலையின் விளக்கம்
வீதி தோறும் மிரண்டொரு பள்ளி
நாடு முற்றி லுமுள்ளன ஆர்கள்
நகர் களெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியிலாத தொரூ ரைத்
தீயினு க்கிரை யாகம டுத்தல்
கேடு தீர்க்கு மமுத மெனன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (பாரதியார்கவிதைகள், 'தோத்திரப்பாடல்கள்,
வெள்ளைத்தாமரை'பா. 6)

பெண் கல்வி

நாட்டின் அரசியல், விடுதலை கருதிப் பாடிய பாரதிதாசன் பெண்ணடிமை ஒழியவேண்டும் என்றும், பெண் கல்வி போற்றப்பட வேண்டும் என்றும் கருதினார். ஆகவே தான், பெண் கல்வியைப் பல இடங்களில் வலியுறுத்திப் பாடினார்.

பெற்றநல்தந்தைதாய்மாரே-நும்
பெண்களைக்கற்கவைப்பீரே!
இற்றைநாள்பெண்கல்வியாலே-முன்
னேறவேண்டும்வையமேலே!
பெண்களால்முன்னேறக்கூடும்- நம்
பெண்தமிழ்நாடும்எந்நாடும் (பாரதிதாசன்)

ஆக, நல்ல தந்தையும், தாயும் எங்கள் பெண்களைக் கல்விகற்கச் செய்ய வேண்டும். அதனால், இந்த வையமே முன்னேற்றமடையும் என்கிறார் பாரதிதாசன். இதை மிடுக்கோடு கோரவில்லை, மிகப் பணிவான வேண்டுகோளாகவே முன்வைக்கிறார் (ப. அரங்கநாதன், ப.130) பெண் கல்வி மறுக்கப்பட்ட போது அதை எதிர்த்துக் குரல் கொடுத்தார் பாரதியார்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி

பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல

மாதர் அறிவைக் கெடுத்தார் (பாரதியார்கவிதைகள், 'முரசு', பா. 9)

என்றும்,

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்

காட்சி கெடுத்தி டலாமோ

பெண்களறிவை வளர்த்தால் வையம்

பேதைமை யற்றிடுங் காணீர். (பாரதியார் கவிதைகள், 'முரசு', பா. 9)

என்றும்,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் (பாரதியார் கவிதைகள், புதுமைப் பெண்-பா. 4)

குமரி மாவட்ட மக்கள் பெரும்பாலானோர் கல்வியில் பின்தங்கியுள்ளனர். பின்னாளில் அவர்களுக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படவே அவர்கள் கல்வி கற்க தொடங்குகின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கத்தோலிக்கப் பாதிரியாரால் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடம் இன்னும் அதே எட்டாம் வகுப்பைத் தாண்ட முடியாமல் நடுநிலைப் பள்ளியாகவே உள்ளது (பெர்லின். சி ப. 30) என்பதிலிருந்து பள்ளிக் கூடம் குறைவாக இருந்தது புலப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் குமரி மாவட்டத்தில் பலரும் பலவிதமான உயர் படிப்புகளில் படித்து வேலைக்குச் செல்கின்றனர். அங்கு பள்ளிக்கூடம் மட்டுமின்றி, கல்லூரிகளும் கட்டப்பட்டுளளன என்பதை நாவலில், "**வீட்டுக்கு வீடு டிகிரிபடிச்சவங்க இருக்காங்க. நம்ம சமுதாயத்துக்கதல விதியமாத்தினது இந்த காலேஜி தான். இந்த காலேஜ் வராடி இருந்தண்ணா நம்ம சமுதாயம் இந்தளவுக்கு முன்னேறியிருக்காது.**"(கிறிஸ்டோபர் ஆன்றணி, ப. 220) என இடம் பெற்றுள்ளது. மேலும், பலர் உயர் படிப்புகளும் படித்து வெளி மாநிலங்களுக்கு வேலைக்குச் செல்கின்றனர் என்பதை, "படிப்பு முடிந்து ஜீவா வீட்டிற்கு வந்தாள். அம்மா, அப்பா, அண்ணா உங்க மூன்று பேருக்கும் ஒருமகிழ்ச்சியான செய்தி, எங்க காலேஜில கேம்பஸ் இன்டர்வியூல நான் தேர்வு செய்யப்பட்டிருக்கேன். சென்னையில வேலை". (வர்ளம்நாவல், ப. 46) என தகவல்கள் உறுதி செய்கின்றன.

வறுமையிலும் கல்வி

பெற்றோர்கள் படிக்கவில்லையெனினும், பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டுமென விரும்புவது உண்டு. அந்தவகையில், குமரி மாவட்ட மக்கள் விதிவிலக்கல்ல, தங்களுடைய குழந்தைகளைப் படிக்கவைக்க வேண்டுமென விரும்பினர் என்பதை நாவலில், "ஆரோன்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கடற்கரைக்கு வருவதை பர்த்லோமி விரும்புவதில்லை. ஆரோனை எப்படியாவது படிக்கவைக்க வேண்டும். என்ன படிக்க வைக்க வேண்டும் என்பதெல்லாம் பர்த்லோமிக்கு தெரியாது". (துறைவன்நாவல், ப. 55) என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வியில் ஏற்பட்ட இடர்பாடுகள்:

கல்வி கற்கும் போது பல இன்னல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள், சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களின் காரணமாகப் படிப்பினை தொடர முடியாமல் பலர் உள்ளனர். குமரி மாவட்டத்தில் பெண்களைப் படிக்க அனுப்புவதில் ஏற்படும் இன்னல்களை நாவலில், "வயசுக்கு வந்த புள்ளைய இவ்வளவு தூரத்துல எல்லாம் அனுப்ப முடியாது. குலம் கெட்டுக் கெடக்கு, பொன்னொரு தட்டம், பூவொரு தட்டமுன்னு பொத்திப் பொத்தி வளத்தமக்கள் கண்ட நாய்வளுக்க வாயில எரையாகக் குடுக்கமுடியாது. மகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருப்பதற்கு ; நிர்மலாவின் அம்மா காரணம் சொன்னாள்". (கடல்அடி, ப. 30) எனப் பதிவு செய்துள்ளன. இதிலிருந்து பெண்களின் கல்வி என்பது கேள்விக்குறியாக உள்ளது என்பது தெளிவாகிறது.

பெண்ணுரிமை

சமுதாயத்தில் பெண்ணுரிமை மறுக்கப்பட்டு அடுப்பங்கரையிலேயே முடங்கியிருந்த காலத்தில் பெண் உரிமைக்காகவும், பெண் கல்விக்காகவும் எண்ணற்ற எழுத்தாளர்கள் முன்வந்தனர். அந்தவகையில், "**பாரதியாரின் பெண்ணுரிமை இயக்கச் சிந்தனைகளின் ஊற்றுக் கண்களை அவர் ஆசிரியராக இருந்த 'சக்கரவர்த்தினி' இதழில் காண முடிகிறது. ஆய்விதழ் பெண் கல்வியை வலியுறுத்துவது என்பதை உணர்த்த இதழின் தலையங்கப் பக்கத்தில் பின்வரும் புதிய குறட்பாவை இயற்றி மகுடமாக வெளியிட்டு வந்தார் பாரதியார்.**"

பெண்மை அறிவோங்கப் பீடுயரும் பெண்மை தான்
ஓண்மையுற ஓங்கும் உலகு. (பாரதி)

அறிவின் வளர்ச்சியினாலே பெண்மைக்குச் சிறப்புண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்தவிடத்து அந்நாடு சிறப்புடையதாகும் என்பது பொருள். (பெ.சு.மணி. ப.159) எனக் குறிக்கிடுகிறார் பெ.சு.மணி அவர்கள்.

முடிவுரை

பெண்களுக்குக் கல்வி என்பது சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரைபல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய சூழலில் பலப் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்துகின்றனர். எனினும், காலங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் சிலநடைமுறைகளிலிருந்து பலரும் மாறாமல் இருக்கின்றனர். குமரி மாவட்ட குழந்தைகள் படிப்பில் மட்டுமின்றி, ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கியுள்ளனர். கல்வித் திறமை மட்டுமின்றி பல்வேறு திறன்களைப் பெண்கள் பெற்றிருந்தனர். இசையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகவும் கோவில்களில் பாடற்குழுவிலும் இருந்து

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வருகின்றனர். பள்ளிகளில் விளையாட்டு நிலையிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஓவியம், தையல் போன்றவற்றிலும் உயர் படிப்பிலும் பல அதிகாரிகளாகவும் இருக்கக்கூடிய சூழல் இருந்து வருகின்றது.

குறிப்புகள்

[1] அரங்கநாதன்,ப. *பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் தேசியப்பார்வை.* தமிழ்த்துறை, ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

[2] கிறிஸ்டோபர் ஆன்றணி. *துறைவன்* நாவல். முக்கடல் நூல் வெளியீடு, எண் 11, 33 ம் தெரு, பாலாஜி நகர் , சென்னை – 91, நவம்பர் 2015.

[3] பெர்லின், சி. *கடல்அடி* நாவல். நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை - 600098. 2017

[4] வால்டர், சு. *வர்ளம்* நாவல். இம்மேஜி பிரிண்ட் அவுட், கருங்கல், சேலாளி பதிப்பகம், 2019

[5] ஸ்ரீ சந்திரன். *நாலடியார் மூலமும் தெளிவுரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை -34, 1989.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Lives of Women in the Poems *Rojakkal Kaipathillai*

Dr. S. Rathika, Assistant Professor, Arunachala Arts & Science (Women) College, Vellichanthai –203, Tamil Nadu, India
ORCiD: https://orcid.org/0009-0000-1949-2453
DOI: 10.5281/zenodo.14752647

Abstract

During the time when the patriarchal society emerged, the decline of the female race began. On realizing the need for women to respect themselves as human beings, women all over the world started to rise together and raise their voices. In that way, the poet Kanthukam has given voice to the lives of women through the poem "Rojakal Kaipadthillai". One can see lots of news related to women in this collection of poems. Societal structure has been the fundamental reason for the emergence of feminist thought. Men, through their dominance, brought an end to the matrilineal social system and established a patrilineal one. As a result, the leadership of women disappeared giving rise to male dominance. From birth to death, a woman finds herself in a position where she must constantly struggle against patriarchal ideologies at every stage of her life. In such a context the poet Kanthukam has created the poetry collection "Rojakkal Kalippathillai" which serves as a platform for the powerful voice of women to resonate in poetic form. The article analyzes the anthology to find out the glimpses of women and their lives.

Keywords: Feminism, Women's Language, Poet, Kanthukam, *Rojakkal Kayppathillai*.

References

[1] Antony Raj, R. "Pen Mozhi." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannattu Ayvithazh*, Pakuti 2, February 2020.
[2] Kannan. *Kala Suvadu.* Nagercoil, November – December 2005.
[3] Kanthukam. *Rojakkal Kaipathillai*. Illidam, Sulamedu, Chennai – 600 094.
[4] Sarathaammal, C. *Penniya Ulappagupayvum Pen Eluthum.* International Institute of Tamil Studies, Tharamani, Chennai – 3.
[5] Brintha Srineevaasan. "*The Hindu, Pen Indu, Nangal Yenka Selvathu?" The Hindu,* Malathi Maithri Kalasuvadu Nalithazhkal, Sunday, February, 2014.
[6] Panchankam, K. *Pen Mozhi Punaivu.* Kavya Pathipakkam, Bangalore, 2000.
[7] Puliyoorkasikan. *Tholkappiyam.* Paari Nilayam, Chennai. 1980.
[8] Peshki. "Ezhatthup Pen Kavignarkalin Kalakamozhi." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannattu Ayvithazh*, Volume 2, February 2020.
[9] Rajam Krishnan. *Kalamthorum Pen.* National Book Trust, New Delhi. 1994.
[10] Vivekanandan, N. *Thirukkural Thelivurai*. Vivekananda Pathippakam, Mela Sooranku dy.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

ரோஜாக்கள் காய்ப்பதில்லை கவிதைகளில் பெண்களின் வாழ்வியல்

முனைவர் எஸ். ராதிகா, உதவிப்பேராசிரியர், அருணாச்சலா கலை மற்றும் அறிவியல் (பெண்கள்) கல்லூரி, வெள்ளிச்சந்தை – 629 203, தமிழ் நாடு, இந்தியா
ORCiD: https://orcid.org/0009-0000-1949-2453
DOI: 10.5281/zenodo.14752647

ஆய்வுச் சுருக்கம்

நமது சமுதாய அமைப்பு பெண்ணியச் சிந்தனை தோன்றுவதற்கு அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது. ஆண்கள் தங்களின் அதிகாரத் தன்மையால் தாய் வழிச் சமூக அமைப்பை முடிவுக்குக் கொண்டு வந்து, தந்தை வழிச் சமூகத்தை நிறுவினார்கள். அதனால் இனத்தலைவி மறைந்து இனத்தலைவன் உருவானான். பிறப்பு முதல் இறப்பு வரை அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆணாதிக்க கரத்தியலோடு போராட வேண்டிய நிலையில் இருக்கிறாள். இத்தகுசூழலில் பெண் மொழியின் உக்கிரமான குரலினைக் கவிதையாக்கத்திற்குத் தளமாகக் கொண்டு கவிஞர் கந்துகம். ரோஜாக்கள் காய்ப்பதில்லை என்ற கவிதை நூலை படைத்துள்ளார். பெண்ணினுடைய உலகம் ஆணோடு சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இங்குப் பெண்ணின் இயல்புகள் அவளிடத்தில் உருவாகுபவை அல்ல, செயற்கையாக உருவாக்கப்பட்டவை. இதனை உணர்ந்த கவிஞர் கந்தகம் தன்னைச்சுற்றி உள்ள பெண்களின் பிரச்சனைகளையும், தன்னுடைய பிரச்சனையாக அறிந்து எழுத்தின் வாயிலாக பதிவு செய்ததை இக்கவிதை தொகுப்பு உணர்த்துகிறது.

குறிப்புச்சொற்கள்: பெண்ணியம், பெண் மொழி, தமிழ் கவிஞர், கந்துகம், *ரோஜாக்கள் காய்ப்பதில்லை.*

முன்னுரை

தந்தை வழிச் சமூகம் தோற்றம் பெற்ற காலத்தில், பெண் இனத்தின் வீழ்ச்சியானது தொடங்கியது. பெண்கள் தன்னையும் ஒரு மனித உயிரியாய் மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து உலகம் முழுவதிலும் உள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து எழுச்சி குரல் கொடுக்க ஆரம்பித்தார்கள். அந்த வகையில் கவிஞர் கந்துகம் 'ரோஜாக்கள் காய்ப்பதில்லை என்ற கவிதை வாயிலாக பெண்களின் வாழ்வியலுக்கு குரல் கொடுத்துள்ளார். இதனைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

பெண் மொழி

புதிய புதிய சவால்கள், புதிய சூழ்நிலைகள் பெண்களைத் தாக்கும் சமூக வன்முறை, அவலங்கள் அனைத்தையும் எதிர் கொள்ள பெண்ணியம் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் பெண் மொழி.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்

என்னுங்காலை கிழத்திக்கில்லை (தொல்., 308)

என்று *தொல்காப்பியம்* மிகக் கடுமையாக சொன்ன இலக்கணம், இந்த நூற்றாண்டில் மிக நுட்பமாக நொறுக்கப்பட்டுள்ளது. "பெண் மொழி பெண்ணியத்தை மட்டுமே மையப்படுத்துவதல்ல, பெண்ணியத்திற்கும் அடுத்த நிலையில் புதியதொரு பரிணாமத்தோடு அது தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது" என்கிறார் முனைவர் இரா. அந்தோணி ராஜ். (முனைவர் இரா. அந்தோணிராஜ். ப. 13) சமூகத்தில் பெண்கள் மீது விதித்திருக்கும் கட்டுப்பாடுகளையும், தடைகளையும், உடைத்தெறிந்து விட்டு, தங்கள் உரிமைகளை வெளிப்படுத்துகிற எழுத்தாக பெண் மொழி உள்ளது என்பதை,

குருதியில் பூக்கும்

எழுத்து இது

உலரலாமே அன்றி

உதிர்ந்து விடாது (கந்துகம், ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 79)

என்று கொண்டாடுகிறார்.

பெண் உடல்

பெண் தன்னுடைய கலை, இலக்கிய பிரதிகளில் முழுமையாகத் தன்னைப் பற்றியும், தன் உடம்பினைப் பற்றியும், பதிவுச் செய்து வைக்க வேண்டும். இதனையே ஹெலன் சீக்சூ, 'உன்னையே நீ எழுது, உன் உடம்பின் குரல்களுக்குச் செவிசாய், அப்பொழுது தான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனதில் உள்ள மூலவளங்கள் எல்லாம் பொங்கிப்புறப்பட்டு வெளி வரும்' (க. பஞ்சாங்கம் – பெண் மொழி – புனைவு ப.71) என்று கூறுகிறார். ஒவ்வொரு பெண் எழுத்தாளர்களும், தங்கள் உடம்பின் அதிர்வுகளுக்கு உண்மையாக இருந்து, உடல் சார்ந்த கவிதைகளை படைக்கிறார்கள். 'பெண் கவிஞர்கள் புதிய படிமங்கள், குறியீடுகள் வாயிலாக ஆணாதிக்கக்குணம், அதிகாரத்தன்மை, காமப்பொருளாகப் பெண்ணைப் பயன்படுத்துதல் போன்றவற்றைப் பெண் கவிஞர்கள் தம் படைப்பின் மூலம் தகர்த்தெறிய முனைந்துள்ளார்', (முனைவர் ஞா. பெஸ்கி. ப.298) என்கிறார்.

திருமணத்தின் போது வரதட்சணை குறைவாகக் கொடுத்ததால் கிழிந்த இதயத்துடன் உன் படுக்கையில் நான் இருக்கிறேன். ஜுரோ வாட்ஸ் வெளிச்சத்தில் என்னைக் கிளறி நீயே தேடுகிறாய்.

திரை கிழியாத யோனி

நீ கொட்டிக்

கிழித்த விந்தாலும்

நீ குத்திக்

கிழித்த காயத்தின்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குருதியாலும்
என் மூச்சு
அடங்கும் வரை
புணர்ந்து கொள் (ரோஜாக்கள் காய்ப்பதில்லை. ப. 63)

இனி என் யோனித்துளையும், ஊழித் தீ கனற்று எரியும் என்று தாம்பத்ய வன்முறையை பதிவு செய்கிறார்.

மேலும், விருந்துண்ட வாழை இலையைத் தூக்கிப் போடுவது போலப் பெண்ணை அனுபவித்து விட்டுத் தூக்கிப் போடும் நிலை உள்ளதை,

உடல் மட்டுமல்ல
நான் நீ
விருந்துண்ட இலையாய்த்
தூக்கிப்போட (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 50)

என்று குரல் கொடுக்கிறார்.

கணவனால் வல்லுறவுக்கு ஆளாகும் பெண்கள்

உலகின் சரி பாதி இனமான பெண்கள் மீதான பாலியல் பலாத்காரமும், பாலியல் அத்துமீறல்களும், வன்கொடுமைகளும் அதிகரித்திருப்பதாகச் சர்வதேச ஆய்வுகள் அதிர்ச்சி தெரிவித்திருக்கின்றன. "ஜெர்மனியில் இது வரை கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் பெண் குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு இறந்திருக்கிறார்கள்", (பிருந்தா சீனிவாசன். ப. 4) என்று பிருந்தா சீனிவாசன் குறிப்பிடுகிறார்.

தன்னுடைய கணவனே தன்னுடைய கைகளை விரித்து, உடைகளைக் களைந்து, கணவனின் வன்மையான வல்லுறவினால் பாதிக்கப்பட்ட மனைவி தனது மூன்று நாட்களைத் தேடுகிறாள்.

நிற்கச் செய்து
கைகளை விரித்து
உடுக்கை களைந்து
சிலுவையில் கிடத்தி
நாளையும்
நாளையும்
அவன்
இஷ்டப்படியே
கழிந்தாலும்
மூன்றாம் நாளும் வரும்
அப்போது இருக்காது

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கிடத்தச் சிலுவையும்

அன்றைய ஆணியும் (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 23 - 24)

என்ற கவிதை வாயிலாக தினம் தினம் தனது கணவனின் இச்சைக்கு ஈடு கொடுத்து, அந்த மூன்றாம் நாளுக்காக ஏங்கும் பெண்ணின் அவலத்தை இக்கவிதையில் பதிவுச் செய்கிறார் கவிஞர்.

தாய்மையின் பேராற்றல்

தாய்மைத்துவம் என்பது பெண்களுக்குரிய பொதுவான அடிப்படை பண்பாகும். ஜூலிஸ் (Julies) என்பவர் பெண்மை என்பதை, 'தாயைப் பற்றியும் தாய் என்ற நிலையில் பெண்களின் மனப்பான்மையையே திரும்பக் குறிக்கிறது'. கொடிய முறையில் அடக்கியாளப்படும் ஒடுக்கும் பாங்குகளையுடைய பல பார்வைத் தளங்களை வெளியிடும் தன்மையுடையது தாய்மைத்துவம்' (சாரதாம்பாள். ப. 67) எனக் குறிப்பிடுவதாக செ. சாரதம்பாள் தனது நூலில் பதிவுச் செய்துள்ளார்.

பெண்களின் வயிறு பிரபஞ்சம் தழுவியது. அவள் தன் தாய்மைப் பேற்றால் இவ்வுலகைக் கட்டி ஆளுவதாக உணர்கிறாள். பெண்ணின் இனப்பெருக்கத்திற்குரிய தன்மைகளை, தாய்மை என்ற நிலையில் காரணம் காட்டி, தந்தைவழிச்சமுதாயம் அவளை அடக்குமுறைக்கு உட்படுத்தியுள்ளது.

உன்னைப் போல எனக்கும் மதியுண்டு, மடியுமுண்டு, உடல் தாங்கும் வலுவும் உண்டு என்று ஆண்களை நோக்கி சொல்வதோடு மட்டுமின்றி,

சவங்களை அல்ல

சிசுக்களைப் படைப்பவள்

நான் (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 87)

என்று தாய்மையின் பேராற்றலை வெளிக்காட்டுகிறார் கந்துகம்.

வாரிசை சுமக்க கருப்பைபைத் தேடும் சமூகம்

சமூகத்தில் ஆண் குழந்தையின் வரவேற்பும், பெண்குழந்தைப் புறக்கணிப்பும் வளர்ச்சி பெற்று வருகிறது. **"கர்ப்பத்தில் வளரும் பிண்டம் ஆணாகயிருக்க வேண்டும் என்று வேத மந்திரங்கள் தோன்றிய காலத்தில் இருந்து இன்று, இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியாண்டு வரை, பெண் மனித மதிப்பை இழக்கத் தொடங்கி சறுக்கி சறுக்கி ஒரு சூனியமாக தன் இனத்தைத தானே அழித்துக் கொள்ளும் அவலத்திற்கு வந்திருக்கிறாள்". (இராஜம் கிருஷ்ணன். ப. 60)** என்கிறார் இராஜம் கிருஷ்ணன்.

ஆண் – பெண் பாரபட்சம் காரணமாகப் பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை கருவிலேயே கண்டறிந்து பெற்றெடுத்த பிறகு விதை நெல்லைக் கொடுத்து பெண் குழந்தையைக் கொன்று விடுகிறார்கள்.

வாலிபனான உன் மகனுக்கு

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வாரிசைச் சுமக்கக்
கருப்பை தேடுகிறாய்
விதை நெல் தீர்ந்து
தரிசாய்ப் போன
வயக்காட்டில்' (ரோஜாக்கள் காய்ப்பதில்லை. ப. 56)

என்கிற கவிதை வாயிலாக வாரிசை சுமக்க பெண்ணில்லாத வறண்ட நிலையை இக்கவிதை வாயிலாக எடுத்துக்காட்டுகிறார் கவிஞர்.

தீட்டினை பெண் மீது திணித்தல்

தீட்டினை பெண்கள் மீது திணிப்பதில் சமூகம் முக்கிய பங்கு வகிக்கிறது. **"சாதி, மதம், இனம் இவற்றின் அடிப்படையில் எழும் சமூகக் கட்டமைப்புகள் பெண்ணின் உடலை மையமாக வைத்து இயங்குகின்றன. சாதித்தூய்மை, மதத்தூய்மை, இனத்தூய்மை இவற்றை மையமாக வைத்து இயங்கும் சமூகஅமைப்புகள் பெண்ணின் தூய்மை என்பதை வன்முறையுடன் வலியுறுத்துகின்றன" (மாலதி மைத்ரி (க.ஆ.), ப. 17)** என்கிறார் மாலதி மைத்ரி.

ஒரு உயிரை உற்பத்தி செய்யச்கூடிய உயிரணுக்களை மாதாந்திர சுழற்சியாகப் பெற்றிருப்பது பெண்ணின் பலமே. இத்தகைய பலத்தைப் பலவீனமாக எண்ண வைத்துத் தீட்டு, தீண்டாமை என்ற கருத்தாக்கத்தை மரபுரீதியான கட்டுப்பாடுகளை விதித்து காலந்தோறும் தனக்குச் சாதகமாக உருவாக்கி கொண்டு வந்துள்ளது. மேலும் புனிதத்தின் பெயரால் தீட்டுக்கழிக்க ஒதுக்கீடு செய்த இடத்தில் உட்கார வைக்கிற நிலை உள்ளதை,

உள்ளாடை நனைந்து சிவந்து
வயதுக்கு நான் வந்த போது
தாவணியால் போர்த்தி
ஒதுக்கீடு செய்த இடத்தில்
தீட்டுக் கழிக்க (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 5)

என்ற கவிதை வரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

வேலையிடங்களில் பாதுகாப்பின்மை

மனிதர்களுள் ஒரு பாலினரான மகளிர் மற்றொரு பாலினரான ஆண்களாலேயே பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படும் அவலம் நிகழ்கிறது. இன்றைய சமூகத்தில் பெண்களுக்கு படிக்க, வேலை பார்க்க வாய்ப்புகள் கூடி இருந்தாலும் ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் வெளியில் நடமாடுவதை ஏற்றுக் கொள்கிற மனபக்குவம் ஆண்களுக்கு வரவில்லை. பெண்களுக்குப் பணி நிலையில் பாதுகாப்பினைமைக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. பெண்கள் அலுவலகத்தில் உள்ள பிரச்சினைகளைப் பார்த்து பயப்படுகிறார்கள்.

வக்ரம் கொப்பளிக்கும்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அலுவலகச் சூழலில்

சீக்கிரம்

சாயங்காலம் வராதா (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 30)

என்ற ஏக்கம் பணியிடங்களில் உள்ள பெண்களுக்கு உள்ளதை இக்கவிதை வாயிலாகச் சுட்டிக்காட்டுகிறார் கந்தகம்.

உயர்கல்விக்கு மறுப்பு

அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையாக கல்வி உள்ளது. அதனால தான் வள்ளுவர்,

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைந்தூறும் அறிவு (குறள்., ப.101)

என்று கூறுகிறார். இன்று பெண் கல்வியைப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் குறுகிய நோக்கத்தோடு பெண்ணின் உயர்கல்வியை மறுப்பவர்களும் உண்டு.

ஒரு பெண் கல்லூரியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை வாங்கவதற்குப் பணம் கேட்கும் போது, படித்தது போதும் என்ற வார்த்தை அம்புகளால் பெண்ணின் தன்னம்பிக்கை அவளிடமிருந்து விடை பெற்று விட்டது என்பதை,

கல்லூரிக் கனவுகளுடன்

விண்ணப்பதாளுக்குப் பணம் கேட்க

படிச்சுக் கிழிச்சது போதும் சீக்கிரமா

எவனுக்காவது புடிச்சுக் குடுக்கணும்

என்ற அங்கலாய்ப்பு அம்புகளால்

முதன் முறையாகக்

குலை நடுக்கம் காணத்

தன்னம்பிக்கை விடை பெற்றது (ரோஜாக்கள் காய்ப்பதில்லை, ப. 12)

என்று குறிப்பிடுகிறார்.

நிறைவுரை

பெண் என்பவள் ஆணாதிக்கச் சமூகத்தில் சிக்கித் தவிக்கும் சிறகுகள் இருந்தும் பறக்க முடியாத பறவை. அந்தப் பறவைக்கு அனைத்து சுதந்திரமும் கொடுத்து விட்டோம். ஆனால் அந்தப்பறவை கூண்டை விட்டு எங்கும் செல்லக்கூடாது என்ற ஒரே ஒரு கட்டுப்பாட்டை மட்டும் செயல்படுத்த வேண்டும் என்கிறது இந்தச்சமூகம், அப்படியிருந்தும் பெண்ணிய கவிஞர்களின் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கத்தினால் சில பறவைகள் கூண்டை விட்டு வெளியே வந்து வானில் சிறகு விரித்து பறக்கத் தொடங்கி விட்டன. ஆனால் இன்னும் சில பறவைகளுக்கோ வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. அவர்களுக்காகத் தான் இன்னும் இவர்கள் கவிதை வாயிலாக குரல் கொடுத்து வருகிறார்கள். பெண்ணைத் தெய்வமாக கொண்டாடவும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வேண்டாம், தூக்கிப் போட்டு உடைக்கவும் வேண்டாம். சக மனுஷியாகப் பார்த்தாலே போதும் என்ற உணர்வை கந்துகம் கவிதை வாயிலாக அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] அந்தோணி ராஜ், இரா. "பெண் மொழி." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, பகுதி 2, பிப்ரவரி 2020.

[2] கண்ணன். *காலச்சுவடு*. நாகர்கோவில், நவம்பர் – டிசம்பர் 2005.

[3] கந்துகம். *ரோஜாக்கள் காய்ப்பதில்லை*. இல்லிடம் சூளைமேடு, சென்னை, 2001.

[4] சாரதாம்பாள், செ. *பெண்ணிய உளப்பகுப்பாய்வும், பெண் எழுத்தும்*. இண்டர் நேஷனல் இண்ஸ்டிடூய்ட் ஆப் தமிழ் ஸ்டடிஸ், தரமணி, சென்னை, 2005.

[5] பிருந்தா சீனிவாசன், "தி. இந்து பெண் இன்று நாங்கள் எங்கே செல்வது?" *தி. இந்து, மாலதி மைத்ரி காலச்சுவடு நாளிதழ்கள்*, ஞாயிறு, பிப்ரவரி 2, 2014.

[6] பஞ்சாங்கம், க. *பெண் – மொழி – புனைவு*. காவ்யா பதிப்பகம், பெங்களூர், 2000.

[7] புலியூர்கேசிகன், (உ.ஆ.). *தொல்காப்பியம்*. பாரி நிலையம், சென்னை.1980.

[8] பெஸ்கி, ஞா. "ஈழத்துப் பெண் கவிஞர்களின் கலகமொழி." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, பகுதி 2, பிப்ரவரி 2020.

[9] ராஜம் கிருஷ்ணன். *காலந்தோறும் பெண்*. நேஷனல் புக் டிரஸ்ட், புது டெல்லி, 1994.

[10] விவேகானந்தன், நா. *திருக்குறள் தெளிவுரை*. விவேகானந்தா பதிப்பகம், மேலச்சூரங்குடி.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Women as Portrayed by Sangam

Dr. R. Rajeswari, Assistant Professor& Head, Dept of Languages,
M.O.P. Vaishnav College for Women, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3620-8447
DOI: 10.5281/zenodo.14752666

Abstract

In the Tamil society that values femininity, women have been the main focus of literature throughout time. From the time of "Tolkappiyam" to the present day, the dignity of women has been expressed in a noble manner. Sangam literature is full of facts about various women such as heroines, heroine's friends, nurses and heroes. On the one hand, literature has distinguished women as poets, warriors full of bravery and teachers who teach virtue to the king and on the other hand, they have done their work as wives worthy of their husbands and mothers who cherish home. On keeping this in mind, this article aims to portray the women shown by Sangam and explore their characteristics. The article also elaborates on "Tholkappiyam" and Sangam women from the literary point of view of women. The songs of the Sangam women poets, such as Adimandiyar, have brought out their valour, their bravery through "Tholkappiyam" and emphasised the role of Thalaivi, Nattrai, Thozhi, Sevili, and shown in Sangam literature.

Keywords: *Tholkaappiyam*, Sangam Literature, Women, Women Poets.

References

[1] Balasubramaniyan. Ku. Vae. *Purananuru* (Mulamum Uraiyum). NCBH, 2014.
[2] Balasubramaniyan. Ku. Vae. *Nattrinai* (Mulamum Uraiyum). NCBH, Chennai-98, 2014.
[3] Balasubramaniyan. S. Dr. *Sanga Kala Magalir*. Paari Nilaiyam, Chennai, 1983.
[4] Dhakshianamoorthy. A. Dr. Aingurunooru (Mulamum Uraiyum), NCBH, Chennai, 2014.
[5] Jayabal. R. Prof., Agananuru (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[6] Jeyakumari. S. Dr. "Sanga Ilakkiyangalil Pengalin Aalumai." *Puthiya Avaiyam*, 2023,
[7] Lenin, K. Dr. "Sanga Ilakiyathil Vazhviyal Nokkil Pengal." *Iniyavaikatral International Tamil Studies*, July 2021.
[8] Mohan, R. Prof. *Pathupaattu*, Part – 1. (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[9] Mohan, R. Prof. *Pathupaattu*. Part – 2, (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[10] Nagarasan, V. Prof. *Kurunthogai* (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[11] Rajeswari, R. Dr. *Tholkaappiya Pendir*. Dinamani, 2020.
[12] Subramaniyam. S.V. *Tholkappiya Theliyurai*, Manivasaga Pathipagam, Chennai, 2006.
[13] Viswanathan. A. Prof., *Kaliththokai* (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

சங்கம் காட்டும் பெண்கள்

முனைவர் ரா. ராஜேஸ்வரி, மொழித்துறைத்தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3620-8447
DOI: 10.5281/zenodo.14752666

ஆய்வுச்சுருக்கம்

"சங்கம் காட்டும் பெண்கள்" எனும் தலைப்பிலான இக்கட்டுரையில், மகளிர் குறித்த இலக்கியப் பார்வையுள் தொல்காப்பியம் மற்றும் சங்ககாலப் பெண்கள் குறித்த கருத்துகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஆதிமந்தியார் முதலான சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் பாடல்கள்வழி வெளிப்பட்ட அவர்களது நெஞ்சுரம், வீரம் முதலானவையும் தொல்காப்பியத்தின் வழி தலைவி, நற்றாய், தோழி, செவிலி ஆகியோரின் பாங்கும் சங்க இலக்கியப் பாடல்களின் வழி பெண்களின் இயல்பும் இக்கட்டுரையில் நுவலப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: *தொல்காப்பியம்,* சங்க இலக்கியம், பெண்கள், பெண் கவிஞர்கள்.

முன்னுரை

பெண்மையைப் போற்றும் தமிழ்ச் சமூகத்தில், காலந்தோறும் பெண்கள் இலக்கியங்களில் முதன்மை இடம்பெறும் மையங்களாகத் திகழ்கின்றனர். அவ்வகையில் தொல்காப்பியம் தொட்டு தற்காலம் வரை மகளிர்தம் மாண்பு வெளிப்படுத்தப்படுகின்றது. தலைவி, நற்றாய், தோழி, செவிலி, பரத்தை முதலான பல்வேறு பெண்கள் பற்றி சங்க இலக்கியம் நுவல்கின்றது. இலக்கியம் புனையும் புலவர்களாகவும் ஊக்கம் நிறைந்த வீரர்களாகவும் மன்னனுக்கே அறம் கற்றுத்தரும் ஆசான்களாகவும் ஒருபுறம் தனிச்சிறப்புற்றுத் திகழ, மற்றொருபுறம் கணவனுக்கேற்ற மனைவியாகவும் இல்லறம் போற்றும் இல்லாளாகவும் தன் பணியைச் செய்துள்ளாள். இவ்வெண்ணத்தைக் கருத்திலேற்று சங்கம் காட்டும் பெண்களைப் படம்பிடித்து அவர்தம் தன்மையினை நுவல்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பெண்பாற் புலவர்கள்

'ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' எனும் கூற்றுக்கிணங்க அறிவிலோங்கிய வையமாகத் தமிழ்ச் சமூகம் சங்கந்தொட்டே திகழ்ந்தமையை சங்கப்பாடல்கள் சான்றாய்க் காட்டுகின்றன. ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கைப்பாடினியார், நப்பசைலையார், நற்சேள்ளையார், நன்முல்லையார், பொன்முடியார், முடத்தாமக்கண்ணியார், வெண்ணிக்குயத்தியார், வெள்ளிவீதியார் முதலான பெண்பாற்புலவர்களின் பாடல்கள் ஆணுக்கு நிகராய் அறிவிலோங்கி அக்கால மங்கையர் விளங்கிய நிலையைக் காட்டுகின்றன. இவர்களது பாடல்களின்வழி அக்காலப் பெண்களின்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வீரம், கல்வியறிவு, ஊக்கம், நெஞ்சுரம் முதலான பல்வேறு சிறப்பான நெறிகளைக் காணவியல்கின்றது. தம் கருத்தை மன்னனாகவே இருந்தாலும் மன உறுதியுடன் எடுத்துரைக்கும் மாண்பினை சங்காலப் பெண்பாற் புலவர்கள் கொண்டிருந்தனர். தற்காலம் வரை போற்றப்படும் மிகச் சிறந்த கருத்துகளைக் கற்காலத்தே துணிவுடன் கூறிய அவர்தம் பெருமை போற்றத்தக்கது. ஆண் – பெண் நட்பிற்குச் சான்றாகவும் மன்னன் மற்றும் புலவர்தம் ஒற்றுமைக்குக் காட்டாகவும் திகழ்வோர் அதியமான் மற்றும் ஔவையார் ஆவர். இவ்விருவருக்கும் நட்பு முகிழ்ப்பதற்கு முன்னர், ஔவையார் அதியமானிடம், **எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே (புறம்., 206, 13)** என்கிறார். இக்கூற்று அக்காலப் பெண்புலவரின் மனஉறுதியையும் யாருக்கும் அஞ்சாத நெறியையும் தெள்ளத் தெளிவாகக் காட்டகின்றது.

ஔவையார் அதியமானுடனான நட்பிற்காக நெடுங்கிள்ளிக்கும் அதியமானுக்கும் இடையே மூளவிருந்த போரினைத் தடுத்த துணிவுடையவர். வெண்ணிக்குயத்தியார், வளவனுக்கும் பெருஞ்சேரலாதனுக்கும் ஏற்பட்ட போரில் வளவனின் அம்பு சேரலாதனின் மார்பைத் துளைத்து முதுகை அடைந்தமையால் வடக்கிருந்த தன்மையினைக் கூறி, வளவனை விட சேரலாதன் சிறந்தவன் எனச் சுட்டும் அடிகளில் (புறம்.66) அப்பெண்பாற் புலவரின் ஆளுமையும் நெஞ்சுரமும் வெளிப்படுகின்றது.

தொல்காப்பியம் காட்டும் பெண்டிர்

தொன்மைச் சமூகத்தின் காலத்தையும் சூழலையும் படம்பிடிக்கும் கண்ணாடியாகத் திகழும் தொல்காப்யித்தில் அக்காலப் பெண்டிரின் இயல்பினை அறியமுடிகின்றது. பெண்களின் பண்பு குறித்துத் தொல்காப்பியர் கூறுமிடத்து,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொல்.,பொருள். களவி. நூ.,8)

என்கிறார். இம்மூன்று பண்புகளையும் பெண்கள் போற்றிய நிலையினைக் காணமுடிகின்றது.மற்றுமொரு நூற்பாவில்,

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான (தொல்.,பொருளியல். நூ., 15)

என்கிறார்.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர்க் காட்சிக் கற்புச்சிறந் தன்று (தொல்.,பொருள். களவி. நூ., 23)

எனும் தொல்காப்பிய நூற்பா உயிரைவிடச் சிறந்ததாக நாணையும் நாணைவிட கற்பினைச் சிறந்ததாகவும் போற்றிய பெண்டிரின் தன்மையினைப் படம்பிடிக்கின்றது.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெலியற் பொறையும் நிறையும் வல்லிதின்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்.,பொருள். கற்பி. நூ., 11)

எனும் நூற்பாவின்வழி, பெண்களுக்கான பண்புகள் வரையறுக்கப்பட்ட நிலையினை அறியமுடிகின்றது.

முந்நீர் வழக்கம் மகடூவோடில்லை (தொல்.,பொருள். கற்பி. நூ.,11)

நாணும் மடனும் பெண்மைய ஆதலின்

குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை

நெறிப்பட வாரா அவள்வயினான (தொல்.,பொருள். களவி. நூ., 17)

என்று தலைவிக்கான பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளமை அறியப்படுகின்றது.

தன்னுடைய மனத்தினுள் தோன்றும் வேட்கையினைத் தலைவன் கிளக்கும் நிலை தலைவிக்கு இல்லை என்பதை,

தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்

எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை (தொல்.,பொருள். களவி. நூ., 27)

என்னும் அடிகள் பறைசாற்றுகின்றன.

தலைவியுடன் நெருங்கிப் பழகும் பெண்ணாகத் திகழும் தோழி மதியிலும் மேம்பட்டவளாகத் திகழ்ந்துள்ளாள்.

உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலான்

உரியதாகும் தோழிகண் உரனே (தொல்.,பொருளியல். நூ., 45)

என்கிறது தொல்காப்பியம். "அறத்தொடு நிற்றல்" எனும் அரிய பகுதி, தோழியின் செம்மையினைக் காட்டுவதில் முக்கிய இடம்பெறுகின்றது.

தோழிக்கு அடுத்த நிலையில் தொல்காப்பியம் காட்டும் பெண் செவிலி.

கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள

நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்

செவிலிக்கு உரிய ஆகும் என்ப (தொல்.,பொருள். கற்பி. நூ., 12)

என்கிறது தொல்காப்பியம். நல்லவை உரைத்தல், அல்லவை கடிதல் எனும் மிகச்சிறந்த பண்பினைப் பெற்றிருப்பவள் தோழி என்பது அறியப்படுகின்றது. தொல்காப்பியம் பெண்களின் தன்மையினைச் சுட்டுமிடத்தில், கணவனை இறந்தோர் பூண்ட "தாபத நிலை" குறித்தும் கூறுகின்றது. இவ்வாறு பல நிலைகளில் தொல்காப்பியம் அக்காலப் பெண்டிரைக் காட்டினும்,

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பா லான (தொல்.,பொருளியல். நூ., 1154)

என்று முத்தாய்ப்பாக பெண்களைப் போற்றுகின்றது.

விருந்துபுறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்ப (தொல்.,பொருள். கற்பி. நூ., 11)

என்று தலைவியின் மாண்புகள் வரையறுக்கப்படுகின்றன.

தலைவி உரையின் தன்மை குறித்து கூறுமிடத்து,

அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி

பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே (தொல்., 1107)

என்கிறது. அன்பு பொதிந்த சொற்களை அருளோடு மொழிதல் பெண்டிரின் பண்பெனத் தொல்காப்பியம் போற்றுகின்றது.”தன்னைப் பற்றி மிகுமொழிகளைப் பேசும் பண்பு தலைவிக்கில்லை என்பதை,

தற்புகழ்க் கிளவி கிழவன்முன் கிளத்தல்

எத்திறத் தானும் கிழத்திக் கில்லை (தொல்., 1126)

என்பதால் உணரலாம்.

தன் தலைவனின் கருத்துக்கு எதிர்நின்று கருத்துரைக்காதவளாகத் தொல்காப்பியத் தலைவி திகழ்கிறாள்.

சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்

அல்ல கூற்று அவள்வயி னான (தொல்.,பொருள். நூ., 108)

சிறந்த பண்புகளின் இருப்பிடமாகக் காட்டப்படும் தொல்காப்பியத் தலைவி,

தற்புகழ்க் கிளவி கிழவன்முற் கிளத்தல்

எத்திறத் தானும் கிழத்திக் கில்லை (தொல்.,பொருள். நூ., 178)

என்று வாழ்பவள்.

மடலேறுதல் என்பது அக்காலப் பழக்கமாக இருந்துள்ளது. பனைமடலில் குதிரை உருவத்தினைச் செய்து தலைவன் ஊர்ந்து வருதலாகிய இந்நிலை தலைவிக்குப் பொருந்தாது.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்

பொற்புடை நெறிமை இன்மை யான (தொல்.,பொருள். அகத். நூ., 38)

மனையுரை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந்., 135: 1-2)

சங்கமும் பெண்களும்

சங்க காலப் பெண்கள் வீரச் செறிவுடையோராயும் கற்புக்கடம் பூண்டோராயும் திகழும் நிலையினைப் பாடல்களின்வழி அறியலாம். அன்பு, காதல், வீரம், நட்பு எனும் பல்வேறு வகைகளில் அவர்தம் தன்மையினை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

இம்மைமாறி மறுமை ஆயினும்

நீ ஆகியர் எம் கணவனே

யாமாகியர்நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49: 3-4)

என்று தன் தலைவன்மீது கொண்ட காதல் மீதூறப் பாடுகிறாள் ஒரு தலைவி. எப்பிறப்பிலும் தன் கணவன்மீது கொண்ட அன்பு மாறாது என்பதை இவ்வரிகள் வழி உணர்த்துகிறாள்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மற்றொரு தலைவன், தன் காதலின் அளவினை நிலம், வான், நீரென்று ஒப்பில்லா இயற்கையோடு ஒப்பிட்டு, தான் தன் தலைவன் மீது கொண்ட அன்பே சிறந்ததென்று உறுதியளிக்கிறாள்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அள வின்றே (குறுந்., 3: 1-2)

எனும் அடிகள், சங்கப் பெண்களின் வாழ்க்கைச் சாரமாக அமைகின்றன. சங்கப் பெண்டிர் வீரம் நிறைந்த ஆண்மகனையே திருமணம் செய்ய விழைந்தனர்.

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள் (கலி., 103)

என்பதால் ஆயர்குலப் பெண்கள் காளைகளை அடக்குதல் எனும் ஏறுதழுவுதலில் வென்ற ஆண்களையே மணக்க விரும்பிய தன்மை அறியப்படுகின்றது. பாசறைப் பெண்டிர், தங்கள் உடையொடு வாளைச் சுற்றிக்கட்டியிருந்தனர். வீரம் நிறைந்த அப்பெண்டிரின் தன்மையினை,

திண்பிடி ஒள் வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர் (முல்லை., 46-47)

என்பதன் வழி அறியப்படுகின்றது.

சங்கத் தலைவி இறப்பிற்கு அஞ்சவில்லை என்றும் இறப்பானது, தன்னையும் தன் தலைவனையும் பிரித்துவிடக் கூடும் என அஞ்சுவதாகவும் கூறுவதை,

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறிதா குவது ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே (நற்., 387: 7-9)

என்கிறாள்.

தன் தாய்வீட்டில் மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்த தலைவி, வறுமையிலும் தன் தலைவன் வீட்டிலிருப்பதையே விரும்புவதாக அமையும் பாடலில்,

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற்கீழ்
மானுண் டெஞ்சிய கலுழி நீரே (ஐங்., 204)

என்கிறாள்.

தலைவன் பரத்தமை அறிந்தும், தோழியிடம் கூட தெரிவிக்காமல் தன்னுள் மறைக்கும் தன்மையினை,

தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிச் கரப்பா டும்மே (குறுந்., 9)

என்பதால் அறியலாம்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஒக்கூர் மாசாத்தியார் கூறும் பெண்பாற் புலவர்,

கெடுக சிந்தைகடிது இவள் துணிவே மூதின்
மகளிர் ஆகுதல் தகும் (புறம்., 279: 1-2)

போர்க்களத்தில் தன் தமையன், கணவன் ஆகியோரை இழந்த பெண், தன்னுடைய மிகவும் இளம் வயதுடைய மகனைப் போருக்கு அனுப்பும் நெஞ்சுரத்தினை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது. சங்கப் பெண்டிரின் கற்பு குறித்துக் கூறுகையில், **வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினள் (கலி., 2)** என்பர். அக்காலப் பெண்டிர் தம் திறத்தால் இயற்கையையே மாற்றும் வல்லமை பெற்றிருந்த தன்மையினை, **அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே (கலி., 39)** மகளிர் இருமணம் கொள்ளும் நிலையினை முற்றிலும் விரும்பாத நிலையினை,

அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இவ்இயல்பு அன்றே (கலி., 114)

எனும் அடிகளால் அறியலாம்.

விருந்தினர் இரவில் வந்தாலும் கூட, முகமலர்ச்சியுடன் பெண்டிர் விருந்தளித்த தன்மையினை,

அல்லி லாயினும விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் (நற்., 142: 9-11)

எனும் அடிகள் காட்டுகின்றன.

தான் சமைத்த உணவைக் கணவன் உண்ணுமிடத்து, தான் உண்டதைக் காட்டிலும் மிகுந்த மனமகிழ்ச்சியடைந்த தலைவியின் நிலையினை,

இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., 167)

தொகுப்புரை

"சங்கம் காட்டும் பெண்கள்" எனும் தலைப்பிலான இக்கட்டுரையில், அறிவு, நெஞ்சுரம், தெளிவு முதலான உயர்ப் பண்புகளின் கூட்டாகத் திகழ்ந்த பெண்பாற் புலவர்களின் திறத்தையும் காதல், அன்பு, கற்பு என வாழ்ந்த தொல்காப்பியம் மற்றும் சங்ககாலத் தலைவியரின் பண்புநலன்களையும், தோழி, செவிலி ஆகியோரின் சிறப்பினையும் தொல்காப்பியம் மற்றும் சங்கப் பாடல்களின் சான்றுகளின் ஊடாக நோக்கவியல்கின்றது.

குறிப்புகள்

[1] தட்சிணாமூர்த்தி, அ, முனைவர். *ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[2] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[3] பாலசுப்பிரமணியன், கு. வெ. *புறநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[4] பாலசுப்பிரமணியன், கு. வெ. *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[5] பாலசுப்பிரமணியன், சி. *சங்ககால மகளிர்*. பாரி நிலையம், சென்னை, 1983.

[6] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[7] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[8] ராஜேஸ்வரி, ரா. முனைவர். "தொல்காப்பியப் பெண்டிர்." *தினமணி*, 2020.

[9] லெனின், க. முனைவர். "சங்க இலக்கியத்தில் வாழ்வியல் நோக்கில் பெண்கள்." *இனியவை கற்றல் பன்னாட்டுத் தமிழியல் மின்னிதழ்*, ஜூலை 2021.

[10] விசுநாதன், அ. முனைவர். *கலித்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[11] ஜெயக்குமாரி, ச. முனைவர். "சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை." *புதிய அவையம்*.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Thoughts of Female Companion in Natrinai Kurinji Thinai Songs

Dr. M. Revathi, Assistant Professor, Department of Tamil,
Shrimati Indira Gandhi College, Thiruchirappalli – 2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-8633-8306
DOI: 10.5281/zenodo.14752675

Abstract

Literature reveals the lifestyle of the people. Their content and form change with time. Tamil books express the excellence and superiority of the Tamil language. Literature has been written and established in Tamil both before and after the ancient grammar book, "Tholkappiyam". Among them, the Sangam literature stands out. This literature reflects the culture, lifestyle and politics of the people of the Sangam period. Of the eight volumes of Sangam literature, five are classified as internal books, namely "Natrinai", "Kurunthokai", "Aingurunuru", "Akananooru" and "Kalithokai", while the five are classified as external books, namely "Patitruppattu" and "Purananooru", and the mixed book is "Paripadal". The book that is counted first in the eight volumes is "Natrinai". This book contains four hundred songs that represent good morals. A female friend is a bridge that connects both the leader and the heroine in life. Kurinjinilam Thozhi, who appears in the story, asks the beloved to marry the leader who refuses the day sign and the night sign. It can be seen that the leader has expressed his feelings as intrusive and non-committal. It can be seen that the female friend expresses her feelings from her heart if the daughter is away with the leader. This article traces the role of female companion in "Natrinai" Kurinji songs.

Keywords: Natrinai, Kurinji thinai, Songs, Female Companion, Thoughts.

References

[1] Ilampooranar. *Tholkaappiyam.* Saratha Pathippagam, 2010.
[2] Chandran, S. *Ilampuranar Kalaviyal Uraiyil Ilakkiya Saantrugal*. Pallavi Publishing House, Erode, 2017.
[3] Sarala Rajagopalan. Sanga Ilakkiyathil Thozhi. Photographic Publishing House, Chennai. 1986
[4] Shanmugam Pillai, M. (P.A). *Tholkappiyam*, *Porulathigaram Ilampuranam* - Part 2. Mullai Nilayam, Chennai, 2004.
[5] Narayanasamy Iyer, Pinnathur (U.A.). *Natrinai Moolamum Uraiyum*. Saiva Siddhanta Noorpathippu Kazhagam, Chennai, 1952.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நற்றிணை குறிஞ்சித் திணைப்பாடல்களில் தோழியின் மனஉணர்வுகள்

முனைவர் மெ. ரேவதி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 2, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-8633-8306
DOI: 10.5281/zenodo.14752675

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் என்பன மக்களின் வாழ்க்கை முறையினை வெளிப்படுத்துவன. அவற்றின் பாடுபொருளும் வடிவமும் காலத்திற்கேற்ப மாற்றம்பெற்று வருவதுண்டு. தமிழ் மொழியின் சிறப்பையும் உயர்வையும் தமிழ்நூல்கள் பறைசாற்றுகின்றன. பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முன்பும் பின்பும் இலக்கியங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டு நிலைபெற்றுள்ளன. அவற்றுள் சிறப்புபெற்று விளங்குவன சங்க இலக்கியங்களாகும். இவ்விலக்கியம் சங்ககால மக்களின் பண்பாடு, வாழ்வியல், அரசியல் போன்றவற்றை உணர்த்துகின்றது. சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை எனும் ஐந்தும் அகநூல்கள் என்றும் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறநூல்கள் என்றும் அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல் என்றும் பகுக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் முதலில் வைத்து எண்ணப்படும் நூல் நற்றிணையாகும். இந்நூல் நல்ல ஒழுகலாறுகளைக் குறிக்கும் நானூறு பாடல்களைக் கொண்டது.

குறிப்புச்சொற்கள்: *நற்றிணை,* குறிஞ்சித் திணை, பாடல், தோழி, மனஉணர்வுகள்.

முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை ஒழுக்கம் என்ற பொருளைக் குறிக்கும் "திணை" என்னும் சொல்லை அடைமொழியாகக் கொண்டுள்ளது. ஒன்பதடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டடி பேரெல்லையும் உடையது. நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூலைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த மாறன் வழுதி. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. 175 புலவர்களால் பாடப்பட்ட இந்நூலில் 234 வது பாடல் கிடைக்கவில்லை. நற்றிணை நானூறு என்று அழைக்கப்படும் இந்நூலில் குறிஞ்சித் திணையில் இடம்பெறும் தோழியின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோழி

தோழியைப் பாங்கி என்றும் அழைப்பர். தோழி, தலைவியோடு ஒன்றாக வாழும் உரிமை பெற்று எப்போதும் அருகில் இருப்பவர். தோழியைத், **தோழி தானே செவிலியது**

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மகளே (தொல்.,பொருள். ப. 90) என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து தோழி செவிலியின் மகள் என்பது புலப்படுகின்றது. சரளா ராசகோபாலன், தோழி என்பவள் வெற்றியன்றித் தோல்வியே அறியாத விந்தைப் பிறவி (சரளாராசகோபாலன். ப. 8) என்றும், தோழி கூலிக்கு அமர்த்தப்படுகின்ற வேலைக்காரி போன்ற பாங்கியல்ல. பெரும்பாலும் எல்லா வகையாலும் தலைவியினையொத்த, அவளுக்குச் சமமான உயிர்த் தோழியாவாள் (சரளாராச கோபாலன். ப. 7) என்றும் கூறுகின்றார். களவு வாழ்க்கையில் தலைவன், தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவள் தோழி (செ. சந்திரன். ப.74) என்று செ. சந்திரன் குறிப்பிடுகின்றார். இப்பண்பினைக் கொண்ட நற்றிணையில் இடம்பெறும் குறிஞ்சிநிலத் தோழி தலைவன், தலைவி, செவிலி, தெய்வம், நெஞ்சம் போன்றோரிடம் எண்பத்தேழு பாடல்களில் கூற்று நிகழ்த்துகிறாள்.

தலைவனிடம் பேசுதல்

தோழி தலைவனிடம் பகற்குறி மறுத்தும் இரவுக்குறி மறுத்தும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறும் பத்தொன்பது பாடல்களில் பேசுகின்றாள்.

நன்றி விளையும் தீதொடுவரும் என
அன்றுநற்கு அறிந்தனள் ஆயின் குன்றத்துத்
தேம்முதிர் சிலம்பின் தடைஇய
வேய்மருள் பணைத்தோள் அழியலள் மன்னே (நற்., 188., 6-9)

என்ற பாடலடிகளின் மூலம், ஒரு காலத்தில் நன்மையாக வரும் காரியம் மற்றொரு காலத்தில் தீதாக முடியும் என்பதை இயற்கைப் புணர்ச்சியில் தலைவி அறிந்துவிட்டாள். அவளைத் திருமணம் செய்யாவிடில் அவளருகில் வர வேண்டாம் என்று கூறி தோழி தலைவனுக்குப் பகற்குறி மறுத்ததை அறிய முடிகின்றது. மற்றொரு பாடலில், உன்னால் தலைவிக்கு ஏற்படும் துயரத்தை எண்ணிப் பார்க்காமல், பாம்புகள் நடமாடும் இரவுப் பொழுதில் தலைவியைக் காணவருதல் உனக்குத் தகுதியுடையதன்று என்று கூறி தோழி தலைவனுக்கு இரவுக்குறி மறுத்ததை,

நன்மலை நாட பண்பு எனப்படுமோ
நின்நயந்து உறைவிஇன் உயிர் உள்ளாய்
அணங்குடை அரவின் ஆர்இருள் நடுநாள்
மைபடு சிறுநெறி எஃகுது ணையாக
ஆரம் கமழும் மார்பினை
சாரல் சிறுகுடி ஈங்கு நீவரலே (நற்., 168. 6-11)

என்ற பாடலடிகளின் மூலம் உணர முடிகின்றது. இதன் மூலம் தோழி தலைவனிடம் தலைவியை விரைந்து திருமணம் செய்து கொள்ளும் வகையில் இருவகை குறிகளிலும் மறுத்துப் பேசியதை அறிய முடிகின்றது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தலைவிடம் பேசுதல்

தலைவன் வரைவு மேற்கொள்ள வந்த பொழுதும், ஆறுபார்த்துற்ற அச்சத்தாலும், குறைநயப்பித்தும், இரவுக்குறி நேர்ந்தும் தலைவியிடம் இருபத்தெட்டு பாடல்களில் பேசுகின்றதைப் பின்வரும் வகையில் காணலாம்.

உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்
இரவின் அஞ்சாய் அஞ்சுவல் அரவின்
ஈர்அளைப் புற்றம் கார்என முற்றி
இரைதேர் எண்கினம் அகழும்
வரைசேர் சிறுநெறி வாரா தீமே. (நற்., 336. 7-11)

என்ற பாடலடிகளின் மூலம், தோழி தலைவியிடம் தலைவன் உன்னை இரவில் காணவரும் வழியில் யானை புலியின் வருகையை எதிர்பார்த்து நிற்கும், பாம்பு புற்றில் இரை தேட வந்த கரடியின் கூட்டங்கள் குடைந்து எடுக்கும். ஆகையால் தலைவன் வரும் வழியின் ஏதத்தைக் கூறி வராமல் தடுக்க வேண்டும் என்று கூறியதைக் காணமுடிகிறது.

வரைய வந்தவாய்மைக்கு ஏற்ப
நமர் கொடை நேர்ந்தனர் ஆயின் அவருடன்
நேர்வர கொல் வாழி தோழி நம்காதலர்
புதுவர் ஆகிய வரவும் நின்
வதுவை நாணொடுக்கமும் காணுங்காலே (நற்., 393. 9-13)

என்ற பாடலடிகளின் மூலம், தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வருவதைக் கண்ட தலைவன் தோழி தலைவியிடம் சொல்லியதை உணரலாம். மேலும்,

உடுக்கும் தழை தந்தனனே அவைதாம்
உடுப்பின்யாய் அஞ்சுதுமே ஆயிடை
கேளுடைக் கேடு அஞ்சுதுமே ஆயிடை
வாடல கொல்லோ தாமே அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை அடுக்கத்த கொயற்கு அரும்தழையே (நற்., 359. 4-9)

என்ற பாடலடிகளின் மூலம், தோழி தலைவியிடம், தலைவன் தரும் தழையை ஏற்பின் தாய்க்கு அஞ்சுவேன், கொடுப்பின் தலைவன் ஆற்றமைக்கு அஞ்சுவேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறி தலைவியின் குறிப்பினை அறிய முற்பட்டதை உணரலாம்.

தலைவன் தலைவியிடம்பேசுதல்

தலைவன் தலைவி இருவரிடமும் இயற்பழித்தல், செறிப்பறிவுறுத்தல், வரைவுகடாதல், சிறைப்புறக் கூற்று என்ற துறைகளின் கீழ் முப்பத்தேழு பாடல்களில் தோழி பேசுகிறாள். தலைவன் சிறைப்புறமிருக்கக் காணாத போல் தோழி தலைவியிடம், திருமணம் செய்து

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கொள்ளாமல் காலம் தாழ்த்தும் தலைவன் சான்றோன் இல்லை. அவன் ஊர் எவ்விடத்தில் உள்ளதென்று கேட்டு வருவோம் என்று தலைவனை இயற்பழித்து வரைவுகடாயதை, "**வான்தோய் மாமலை நாடனைச் / சான்றோய் அல்லை என்றனம் வரற்கே (நற்., 365. 8-9)** என்ற நற்றினைப் பாடலடிகளின் வழி அறியலாம்.

சிறுகிளி கடிதல் பிறக்கி யாவணதோ…

…செறிதோட்டு எல்வளைக் குறுமகள்

சிறுபுனத்து அல்கிய பெரும்புற நிலையே (நற்., 306. 8-9)

இப்பாடலடிகளின் மூலம், தினை முற்றியதால் தலைவி இற்செறிக்கப்படுவாள். ஆகையால் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தோழி தலைவனிடம் பேசியதை அறிய முடிகிறது.

செவிலியிடம் பேசுதல்

செவிலி, தலைவிக்கு அணங்கு தீண்டியதால் வெறியாட்டு வைப்பதனைக் கண்ட தோழி, தலைவியைத் தினைப்புனம் காக்க அனுப்பி வைத்தால் இழந்த நலனை மீண்டும் பெறுவாள் என்று செவிலியிடம் கூறியதை,

களிற்றுத் துப்பு அஞ்சாப் புலியதள் இதணத்துச்

சிறுதினை வியன்புனம் காப்பின்

பெருகுவள் மன்னோ என்தோழி தன் நலனே (நற்., 351. 5-9)

என்ற பாடலடிகளின் மூலம் காண முடிகின்றது.

நெஞ்சிடம் பேசுதல்

தலைவி மீது பேரன்புடையவள் தாய். தலைவனுடன் தலைவியை அனுப்பி வைத்தால் தாய்படும் துன்பம் பெரியதாகும். நான் என்ன செய்வேன் என்று தோழி கூறினாள். இதனை,

பாவை அன்ன வனப்பினள் இவளெனக்

காமர் நெஞ்சமொடு பல்பாராட்டி

யாய்மறப்பு அறியா மடந்தை

தேம்மறப்பு அறியாக் கமழ் கூந்தலளே (நற்., 301. 6-9)

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

முருகனிடம் பேசுதல்

தோழி முருகனிடம் தலைவியைத் தலைவனோடு விரைவில் திருமணம் செய்து விட்டால் தலைவியின் நோய் நீங்கும் என்று குறிப்பினால் வெறிவிலக்கியதை,

பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்

அருவி இன்னியத்தாடு நாடன்

மார்புதர வந்த படர்மலி அருநோய்

நின்னணங்கு அன்மை அறிந்தும் அண்ணாந்து

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே (நற்., 34. 4-11)

எனும் பாடலடிகள் விளக்குகின்றது.

முடிவுரை

களவு வாழ்க்கையில் தலைவன், தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவள் தோழி. நற்றிணையில் இடம்பெறும் குறிஞ்சிநிலத் தோழி தலைவன், தலைவி, செவிலி, தெய்வம், நெஞ்சம் போன்றோரிடம் எண்பத்தேழு பாடல்களில் கூற்று நிகழ்த்துகிறாள். தோழி தலைவனிடம் பகற்குறி மறுத்தும் இரவுக்குறி மறுத்தும் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறும், தலைவன் வரைவு மேற்கொள்ள வந்த பொழுதும், ஆறு பார்த்துற்ற அச்சத்தாலும், குறைநயப் பித்தும், இரவுக்குறி நேர்ந்தும் தலைவியிடம் பேசியதையும், தலைவன் தலைவி இருவரிடமும் இயற்பழித்தல், செறிப்பறிவுறுத்தல், வரைவு கடாதல் போன்ற சூழலிலும் தன் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. தலைவனுடன் தலைவியை அனுப்பி வைத்தால் தாய்படும் துன்பம் பெரியதாகும் என்று தன் நெஞ்சிடமும், முருகனிடம் தலைவியைத் தலைவனோடு விரைவில் திருமணம் செய்துவிட்டால் தலைவியின் நோய் நீங்கும் என்றும் தன் மனவுணர்வுகளை தோழி வெளிப்படுத்தியதைக் காணமுடிகின்றது.

குறிப்புகள்

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம்*, சாரதா பதிப்பகம், 2010.
[2] சந்திரன், செ. *இளம்பூரணர் களவியல் உரையில் இலக்கியச் சான்றுகள்*. பல்லவி பதிப்பகம், ஈரோடு, 2017.
[3] சரளா ராசகோபாலன். *சங்க இலக்கியத்தில் தோழி*. ஒளிப் பதிப்பகம், சென்னை. 1986.
[4] சண்முகம் பிள்ளை, மு. (ப.ஆ). *தொல்காப்பியம் - பொருளதிகாரம். இளம்பூரணம்* - பகுதி 2, முல்லை நிலையம், சென்னை, 2004.
[5] நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ. ஆ.). *நற்றிணை மூலமும் உரையும்*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Qualities of Women by Valluvar

Dr. S. Revathi Pappathi, Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-2433-8931
DOI: 10.5281/zenodo.14752689

Abstract

"Thirukkural" is considered to be the best of the didactic book that is considered to be unparalleled in the history of world literature. "Thirukkural" is the source of Tamil culture and virtue and the life of the Tamils. Thiruvalluvar has recorded the glory of women and their qualities in many verses in "Thirukkural". This article aims to study and bring them to light. Thiruvalluvar's point of view summarises not only the virtues of fear, chastity and chastity as the virtues of women but also good deeds as a wife and mother. Most of the opinions expressed by him are still followed by Tamil families. If a woman has to do many tasks to support her family, she should take care of her health first. Valluvar says that she must be tireless in protecting her reputation. In Thiruvalluvar's view, the dignity of the wife is the beauty of the family. The children of the family are the ornaments of that beauty. So, women are responsible for the excellence of those children. So, Thiruvalluvar emphasises certain principles of motherhood and its duties and attributes.

Keywords: Woman's Pride, Duty, Domesticity, Hospitality.

References

[1] Saraswati, S. U. Dr. *Kuravanchi Ilakkiyangalil Pengal.* Kavya Publishing House, First Publication, 2008.
[2] Neudunchezhiyan, T. Dr. "Keezhavor Manpugazh." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol-2 Feb 2020.
[3] Parimelazhkar. *Thirukural Moolamum Uraiyum*. Uraiparisu Publishing House, 2019.
[4] Mathavan. V. R. Dr. *Naanmanikadigai- Vilambi Naganar.* Tamil University Publication, 2001.
[5] Mugeshwary, K. Dr. "Ara Ilakiyankazhil Pen Nilai Pathivukal." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol-2 Feb 2020.
[6] Meiyappan, Dr. *Bharatiyar Kavithaigal*. Manivasaka Thentral Nilayam, 2000.
[7] Jayakanthan, Dr. *Kamparamayanam – Sundarakandam*. Meenakshi Bookstore, 2019.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

வள்ளுவன் காட்டும் மங்கையின் மாண்புகள்

முனைவர் S. ரேவதி பாப்பாத்தி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில். தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-2433-8931
DOI: 10.5281/zenodo.14752689

ஆய்வுச்சுருக்கம்

வள்ளுவர் பார்வையில் பெண்களுக்குரிய மாண்புகளாக அச்சம், நாணம், மடம், கற்பு ஆகிய நல்லொழுக்கங்கள் மட்டுமில்லாமல் நற்செய்கைகளையும் ஒரு மனைவியா, தாயாக, வள்ளுவர் தொகுத்துக் கூறுகிறார். அந்த அதிகாரங்களில் கூறும் கருத்துக்களில் பெரும்பாலானவை இன்னும் தமிழ்க் குடும்பங்களில் பின்பற்றப்படுகின்றாள் மனைவி என்ற சொல்லுக்கு மனையை உடையவள் என்று பொருள். மேலும் ஒரு பெண் தன் குடும்பத்தினருக்கு உதவியாகப் பல பணிகளைச் செய்ய வேண்டுமென்றால் முதலில் அவள் உடல்நலத்தைப் பேணி மனஉறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் அவள்தன் புகழையும் காப்பதில் சோர்வில்லாதவளாகவும் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மேலும் மனஉறுதியால் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதே மிகவும் சிறந்தது என்றும் வள்ளுவர் கூறுகிறார் வள்ளுவரின் பார்வையில் மனைவியின் மாண்பு குடும்பத்திற்கு அழகு. அந்த அழகுக்கு அணிகலன்களாக அமைவது அந்தக் குடும்பத்தின் குழந்தைகள். அக்குழந்தைகள் சிறந்து விளங்க பெண்களே காரணமாகத் திகழ்கின்றனர். எனவே தாய்மைக்கு முதலிடம் தந்து அவளின் கடமைகளுக்கும் பண்புகளுக்கும் வள்ளுவன் சில கோட்பாடுகளை வலியுறுத்துகிறார்.

குறிப்புச்சொற்கள்: பெண்ணின் பெருமை, கடமை, இல்லறம், விருந்தோம்புதல்

முன்னுரை

உலக இலக்கிய வரலாற்றில் ஒப்பற்றதாக எண்ணத்தகும் அற நூல்களுள் தலை சிறந்ததாகக் கருதப்படுவது திருக்குறள். தமிழர் பண்பாட்டின் வாழ்விடமாகவும் தமிழர் தம் வாழ்வியல் நெறியாகவும் *திருக்குறள்* விளங்குகிறது. இத்தகைய சிறப்பு கொண்ட திருக்குறள்களின் திருவள்ளுவர் கூறும் பெண்களின் பெருமைகளையும் அவளின் குணநலன்களையும் பல குறட்பாக்களில் பதிவிட்டுள்ளார். அவற்றை ஆய்ந்து வெளிக் கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தாய்நாடு, தாய்மொழி, இயற்கை அன்னை என்பன போன்ற உயர்வான சொற்களால் பெண்ணை நாம் பல விதங்களில் பெருமைப்படுத்துகிறோம். செம்மொழி வரிசையில் சிறப்பிடப் பெறும் கிரேக்க இலக்கியத்தில் கூட சாஃபோ என்ற ஓர் பெண்பாற் புலவரைப் பற்றி

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. ஓர் இல்ல கிழத்தியின் தலையாயக் கடமைகளைப் பற்றி விளக்கம் தரும் *தொல்காப்பியம்* பெண்ணிய மாண்புகளை,

கற்பும், காலமும், நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும், சுற்றும் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்காப்பியம்)

என்று கட்டமைத்துள்ளது.

சிலப்பதிகாரத்தில் மதுரை காண்டத்தில் கண்ணகி தன் இல்லற கடமைகளைச் செய்ய இயலாமல் மனம் வருந்துவதை,

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை (சிலப்பதிகாரம்)

என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

பெண்ணின் பெருமை

பெண்ணிற் பெருந்தக்க யாவுள் கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின் (குறள்., 54)

அறத்துப்பாலில் வள்ளுவன் "பெண்ணின் பெருந்தக்க யாவுள்" என்ற வினாவினை எழுப்பி பொருட்பாலில்

பெண்ணேவல் செய்தொழுகும் அண்மையின்
பெண்ணே பெருமை உடைத்து (குறள்., 907)

பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நான் இன்றித் தன் இல்லானது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆணின் தன்மையை குறித்து பெண் நாணுவாள் அத்தகைய பெண்மை பெருமை உடையவள் அன்று திருவள்ளுவன் பெண்ணே பெருமை உடைத்து என்ற பொருளை பொருட்பாலில் வைக்கிறார். மேலும், காமத்துபாலில்,

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில் (குறள்., 1137)

கடல் போல் கரையில்லாத காதல் நோய் துன்புறுத்தினாலும் கூடப் பொறுத்து மடலோறாமல் இருக்கும் பெண் பிறவியைப் போலப் பெருமையான பிறவி இவ்வுலகத்தில் வேறு இல்லை என்று பெண்ணின் பெருமைகளை வள்ளுவன் எடுத்துரைக்கிறார்.

பெண்ணின் தனிப் பண்புகள்

பெண் என்பவள், மகளாக, சகோதரியாக, தோழியாக, மனைவியாக, தாயாக வலம் வருபவள். பெண்ணின் ஆற்றலையும் சக்தியையும் வள்ளுவன் தன் குறட்பாக்களின் மூலம் பதிவிடுகிறார். பெண்கள், ஆண்களைக் காட்டிலும் வலிமை உடையவள்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஆண்கள் உடல் பலத்தால் வலிமையானவன் என்றால் அத்தகைய ஆணை இந்த பிரபஞ்சத்திற்கு பெண் எத்தகைய சக்தி வாய்ந்தவளாக இழந்த பெண்கள் இவ்வுலகில் எவ்வளவு பேரிடர்களைச் சந்தித்த பொழுதும் அவள் தன்னையும் காத்தும் தன் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் ஆனால் பெண்களைக் காட்டிலும் குறைவே என்று கூறலாம் இத்தகையச் சிறப்பைத் திருவள்ளுவர்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலார் பெண் (குறள்., 56)

கற்பு நெறியில் தன்மையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காப்பாற்றி உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

மனைவியின் மாண்பு

திருக்குறள் அற நூல்களில் முதன்மையானதாக போற்றப்படுகிறது. இந்நூல் இல்லற வாழ்வின் மேன்மையை சொல்வதற்கு என்றே இல்லறவியலை வகுத்துள்ளது. இல்வாழ்வின் நோக்கம் மேன்மை உடையதாய் அமைய பிறர் பழிக்காத நல்வாழ்வை வாழ வேண்டும் என்று கூறுகிறது. இதற்கு,

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (குறள்., 49)

என்ற குறளே சான்றாகிறது. இத்தகு இல்வாழ்க்கை சிறப்புடையதாய் அமைய மாண்புடைய மனைவியின் துணைதேவை அவளாலே வாழ்வு சிறக்கும் என்றுரைக்கிறார். இதனை சிறப்புப் பொருந்திய இல்வாழ்க்கையின் பெருமைக்குத் துணையாக இருப்பது வாழ்க்கைத்துணை இல்வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவள் இல்லாள் இல்வாழ்க்கையின் சிறப்பிற்கும் வெற்றிக்கும் இல்லாளே முழுப்பொறுப்பு உடையவள். ஒருவனது சாதனைகளுக்குப் பின்னே ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். எனவே ஒருவனது வெற்றிக்குத் துணையாக நிற்பவள், அவனது துணைவியே மனைவியை 'வாழ்க்கைத்துணை' என்றும் "இல்லாள்" என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்., 51)

இல்வாழ்வுக்குத் தகுந்த சிறந்த பண்பு உடையவளாகித் தன்னை மணந்தவனின் வளமைக்குத் தகுந்தப்படி நடப்பவளே சிறந்த வாழ்க்கைத் துணைவி ஆவாள்.

சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை (குறள்., 57)

தம்மைத் தாமே காத்துக் கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியமையாகும். மகளிர் சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? அவர்தமது நிறையால் காக்கும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

காவலே தலையாய காவல் என்று வள்ளுவர் பெண்ணின் மாண்புகளாக கருதுகிறார். மேலும் பாரதியும் பெண் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்பதனை,

ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைத்தோங்குமாம் பேணு நல்லறத்தோடிங்குப் பெண்ணுருவப் போந்து நிற்பது தாய் சிவசக்தியாம் நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாகும் (பாரதியார் கவிதைகள்)

எனப் பெண்மையைச் சிறப்பிக்கின்றார்.

விருந்தோம்பல் விரும்பும் மகளிர்

விருந்தோம்பல் பண்பினை கம்பர், இராமனைப் பிரிந்து அசோகவனத்தில் இருக்கும் சீதையின் வாயிலாக கூறுவார்.

அருந்து மெல்லட்கு ஆரிட அருந்துமென்று
அழுங்கும் விருந்து கண்ட போது எண்ணுறுமோ
என்ற விம்மும் மருந்து உண்டு கொல்யான்
கொண்ட நோய்க் கென்று மயங்கும் இருந்த
மாநிலம் செல்லரிடத்திடவ மாண்டெழாதாள் (கம்பராமாயணம் - காட்சிப்படலம்)

என்ற பாடல் விருந்தனர்வரின் தானில்லாது இராமன் என்ன செய்வனோ என்று எண்ணிச் சீதை வருந்திய நிலைமைப் புலப்படுத்துகிறது. விருந்தோம்பலுக்கு தனி அதிகாரமே தந்த வள்ளுவர் முகர்ந்து பார்த்தாலே வாடி விடக் கூடியது அனிச்சமலர் அத்தகைய மலரைப் போன்றவர்கள் விருந்தனர்கள் என்பதை,

மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரித்து
நோக்கக் குழையும் விருந்து (குறள்., 90)

என்று விருந்தினர் பற்றியும் விருந்தோம்பல் பண்பினையும் கூறுகிறார். இத்தகைய விருந்தோம்பல் பண்பினை போற்றும் குணம் உடையவர்கள் பெண்கள் என்ற சிறப்பினைத் திருவள்ளுவர்.

அகனமர்ந்து செய்யாள் உறையும்முகம் மலர்ந்து
நல்விருந்து ஓம்புலான் இல் (குறள்., 84)

என்ற குறள் மூலம் இல்லத்தை ஆளுபவளாகிய இல்லாள் முக மலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுவதால் தான் அவ்வீட்டில் திருமகள் குடி இருக்கின்றாள் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணின் தாய்மைச் சிறப்பு

மனித வாழ்வு உறவுகளால் சூழப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இவற்றில் எல்லா உறவுகளும் சிறப்பு வாய்ந்தவையாக கருதப்படுகிறது. இருப்பினும் தாயின் சிறப்பை பல அறஇலக்கியங்கள் பதிவு செய்துள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

… என் செயினும்

தாயின் சிறந்த தமரில்லை (நான்மணிக்கடிகை. 351: 2)

என்ற வரிகள் தவறு செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய தாயை விடச் சிறந்த உறவு வேறில்லை என நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் ஆய், ஞாய், அன்னை, நற்றாய், ஈன்றாய் என்ற பெயரில் தாய் என்றழைக்கப்பட்டிருக்கிறாள் அதே போல் அறஇலக்கியங்களிலும் தாயார், ஈன்றாள், அன்னை என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறாள். இத்தாயின் உள்ளத்தை திருவள்ளுவர்,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்., 69)

தம் மகளைக் கல்வி ஒழுக்கங்களால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் கூற அதைக் கேட்ட தாய் அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் மிகுதியாக மகிழ்வாள் என்று தன் மகளின் நினைத்து தாயின் மகிழ்ச்சியினைச் சுட்டியுள்ளார்.

தொகுப்புரை

பெண்மைக் குணங்களின் அன்பு, மென்மை, கற்பு, அடக்கம், பொறை போன்ற சிறப்புத் தன்மைகள் பெண்ணின் இயலாமையாகக் கணக்கிடப்பட்டது. திருக்குறளில் பெண்ணுரிமை பற்றிய சிந்தனைகள் இல்லை. ஆனால் பெண்ணுக்குத் தன்றிலையை உணர்ந்து எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள் சொல்லப்பட்டுள்ளன. பெண்களுக்கு இயற்கையாகவே உள்ள குணநலன்களை அடிப்படைகளாகக் கொண்டு அத்தகைய குணநலன்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் வரையறைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் நாளடைவில் ஆண்கள் தங்களின் ஆளுமையைப் பெண்ணிடத்தில் எளிமையாகச் செலுத்துவதற்கு இத்தகைய மென்மையான குணங்கள் வழிகோலின.

குறிப்புகள்

[1] சரஸ்வதி, சு, முனைவர். *குறவஞ்சி இலக்கியங்களில் பெண்கள்*. காவியா பதிப்பகம், 2008.

[2] நெடுஞ்செழியன், தி. முனைவர். "கிழவோள் மாண்புகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol. 2, Feb. 2020.

[3] பரிமேலழகர். *திருக்குறள் மூலமும் உரையும்*. உரை பரிசு பதிப்பகம். முதல் பதிப்பு, 2019.

[4] மாதவன், வி. ஆர், முனைவர். *நான்மணிக்கடிகை - விளம்பின் நாகனார்*. சாந்தா பப்ளிசர்ஸ், 2003.

[5] முகேஸ்வரி, கா. முனைவர். "அற இலக்கியங்களில் பெண்நிலை பதிவுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol. 2, Feb. 2020.

[6] மெய்யப்பன், முனைவர். *பாரதியார் கவிதைகள்*. தென்றல் நிலையம், முதல் பதிப்பு, 2000.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[7] ஜெயகாந்தன், முனைவர். *கம்பராமாயணம் – சுந்தரகாண்டம்.* மீனாட்சி புத்தக நிலையம், 2019.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Women's Life in *Periyapuranam*

Dr. M. Vijaya Saratha, Assistant Professor ofTamil, Anna Adarsh College for Women, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-8858 -5853
DOI: 10.5281/zenodo.14752710

Abstract

All devotional literature sings the praises of God, but only the Periyapuranam sings the devotional excellence of those who are devoted to Lord Shiva. Periyapuranam shows us the love that the devotees have for God and the lengths to which they went to express that love. If we take the meaning of the word "length" superficially here, there is no doubt that there will be difficulties in understanding the lives of women during the Periyapurana period. Periya Purana is the twelfth of the twelve Saiva religious books. It was written using Sundarar's Thirutondar Puranam and Nambiandar Nambi's Thirutondar Thiruvanthadi as the first and second books respectively. In this book, Sekkizhar has recorded about thirty-four women including Karaikal Ammaiyar, Isai Gnaniyar, Mangaiyar Karasiyar, Thilagavathiyar, Siruthondar's wife Thiruvenkattu Nangai, and Thiru Neelakandar's wife. The women who lived in that time were acting according to the wishes of men in their lives. They have operated beyond their personal preferences for the family. There is nothing of their life incidents and desires were recorded. The article deciphers the life of women in Periyapuranam.

Keywords: *Periyapuranam*, Thirumanam, Thandaikal, Psychology, God, Bhakthi.

References

[1] Rasamaanikkanar, M. *Pallavar Varalaaru*. Senbaga Pathippagam, 2015.
[2] Subramaniyan, N. *Sangakaala Vaazhviyal*. New Century Book House, Chennai, 2010.
[3] Selvaraj, A. *Purananooru*. New Century Book House, Chennai, 2024.
[4] Dhatchinamoorty, A. *Tamizhar Naagarigamum Panpaadum*. Ainthinai Pathippagam, 2021.
[5] Balaiya, A. P. *Periyapuranam Moolamum Uraiyum*. 2019.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

பெரியபுராணம் காட்டும் மகளிர் வாழ்வியல்

முனைவர் மு. விஜய சாரதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-8858 -5853
DOI: 10.5281/zenodo.14752710

ஆய்வுச் சுருக்கம்

பெரியபுராணம் எழுதப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு காணும் அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் வாழ்வில் தான் திருமணம் செய்த ஆணின் விருப்பத்திற்கு இணங்க செயல்பட்டு இருக்கின்றனர்.அவர்களுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்படடே இயங்கியுள்ளனர். அவர்களின் உளவியல் சார்ந்த எதுவும் பதிவு செய்யப்படவில்லை. கணவனுக்கும் சிவனடியாருக்கும் வேண்டுவனவற்றை செய்வதே கடனாகக் கொண்டுள்ளனர். அதனைச் செய்ய தவறும் போது எத்தகைய தண்டனைக்கும் உள்ளாக்கப் பட்டி ருக்கின்றனர்.

குறிப்புச்சொற்கள்: *பெரியபுராணம்*, திருமணம், தண்டைகள், உளவியல், இறைவன், பக்தி.

முன்னுரை

பக்தி இலக்கியங்கள் அனைத்தும் இறைவனின் புகழைப் பாட, பெரியபுராணம் மட்டும் இறைவன் மீது பக்தி கொண்டவர்களின் பக்திச் சிறப்பினைப் பாடுகிறது. அடியவர்கள் இறைவன் மேல் கொண்ட அன்பையும் அந்த அன்பைப் புலப்படுத்த எத்தகைய எல்லைக்கும் அவர்கள் சென்றதையும் பெரியபுராணம் நமக்குத் திரையிட்டுக் காட்டுகிறது. எத்தகைய எல்லைக்கும் என்னும் சொல்லின் பொருளை இவ்விடத்தில் மேம்போக்காக கொள்வோமேயானால் கள ஆய்வு செய்து எழுதப்பட்ட பெரியபுராண கால பெண்களின் வாழ்வியலை அறிவதில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

பெரியபுராணமும் பெண்களும்

சைவ சமயத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பன்னிரண்டாவதாகத் திகழ்வது பெரியபுராணம். சுந்தரரின் திருத்தொண்டர் தொகையையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் முறையே முதல்,வழி நூலாகக் கொண்டு எழுதப்பட்டது . இந்நூலில் காரைக்கால் அம்மையார், இசை ஞானியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் , சிறுத்தொண்டரின் மனைவி திருவெண்காட்டு நங்கை, திரு நீலகண்டரின் மனைவியார் உள்ளிட்ட முப்பத்து நான்கு மகளிர் பற்றி சேக்கிழார் பதிவு செய்துள்ளார்.

இசைஞானியார்:

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சுந்தரரின் தாயான இசைஞானியார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக நம்பியாண்டார் நம்பியால் சேர்க்கப்பட்டவர். இவரைப் பற்றியத் தொன்மங்கள் வழி இவர் சிவ பக்தர் என்பது அறியப்பட்டாலும் சுந்தரர் என்னும் பெறுதற்கரிய மகனைப் பெற்றதால் பெரும்பேறு பெற்றவர்.இதனை "ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்;அழியாப் புரங்கள் எய்து அழித்தார் ஆண்ட நம்பி தனைப் பயந்தார்;இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என் சிறுபுன்மொழியால் புகழ முடியுமோ ? முடியாது; எவர்க்கும் முடியாது ஆல்" (பெரியபுராணம்)என்று சேக்கிழார் மொழி வழி அறியலாம். "ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும்" (திருக்குறள், பா69) என்னும் அடிகளுக்கிணங்க சுந்தரர் போன்ற மகனை உலகிற்கு ஈந்த பேறால் புகழப் பெற்றார்.

தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை:

மானி என்னும் இயற்பெயர் கொண்ட இவர் சமய முதற்குரவரான சம்பந்தர் பெருமானால் மங்கையர்க்கரசி என்று போற்றப்பெற்றவர். அதனால் சேக்கிழாரடிகளால் மங்கையர்க்குத் தனியரசி,தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை எனப்பட்டவர். தன் கணவன் நின்ற சீர் நெடுமாறன் மன்னனாகவே இருந்த போதும் அவன் சமணம் சார்ந்து சைவம் மறந்த வேளையில் அவனை நேர்வழிக்குக் கொண்டு சென்றவர். மன்னன் மனைவி எனினும் தன் குலத்திற்கு வந்த பழியைத் துடைக்கப் பெண்கள் முயன்றமையை உணரலாம்.

தண்டனைகள்

பெண்களுக்குக் கொடுக்கபட்ட தண்டனைகள் பற்றியும் அறிவதற்கு இத்திருமுறை துணை புரிகிறது. பல்லவ மன்னரான மூன்றாம் நந்திவர்மனே, கழற்சிங்க நாயனார் என்று ராசமாணிக்கனாரால் (பல்லவர் வரலாறு,ப.184) நூலில் கூறப்பட்டுள்ளவர். அவரின் மனைவியான பட்டத்தரசியுடன் கோவிலுக்கு செல்லும் போது சிவனுக்கு பூசைக்காக வைத்திருந்த பூவினை முகர்ந்தமைக்காக செருத்துணையார் அவரின் மூக்கினை அறிந்தெறிகிறார். இதனை 'கதும்' என ஓடிச்சென்று, கருவி கைக் கொண்டு பற்றி, மதுமலர்த் திருஒப்பாள் தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார்" (பெரியபுராணம்) என்று சேக்கிழார் கூறுவதன் வாயிலாக காணமுடிகிறது. இதோடு நில்லாமல் கழற்சிங்கரும் பூவை முகர்ந்த தன் மனைவியின் மூக்கை அறிந்தது போதாதென்று வலியால் துடிக்கும் மனைவியென்றும் பாராமல் பூவை எடுத்த கையை வெட்டி வீழ்த்தினார் என்றும் அறிய நேருகிறது. "மட்டு அவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தார் அன்றே. உரை ஒரு தனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது" (பெரியபுராணம்) என்று பதிவு செய்கிறார் சேக்கிழார். கலிக்கம்ப நாயனாரின் மனைவியாரும் தன் வீட்டிற்கு வந்த சிவனடியார் முன்பு தன்னிடம் ஏவல் கேட்காமல் சென்ற பணியாள் என்று அந்தச் சிவனடியாருக்குப் பணிவிடை செய்ய காலம் தாழ்த்தியமையால் அவரின் கையை கலிகம்பர் வெட்டியதும் இதற்கு வலு சேர்க்கிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் சூளுரைத்தல்

திருநீலகண்டக்குயவனார்என்பவர் சிவத்தொண்டு செய்பவர். இருப்பினும் பரத்தையரிடம் சென்று இன்பம் துய்ப்பவர் . இது தெரிந்து தன்னிடம் கோபம் கொண்டு தன் மனைவி உடனுறைவுக்கு உடன்படாமல் இருக்க திருநீலகண்டக்குயவனாரோ அவரை வலுவில் அடைய முயன்றார். இதனால் அருந்ததிக் கற்பின் மிக்க அவரின் மனைவி கோபம் கொண்டு "தீண்டுவீர் ஆயின் எம்மைத் திரு நீல கண்டம்" (பெரியபுராணம்) சூளுரைக்கிறார். இந்த சூளுரைக்குக் கட்டுப்பட்டு அது முதற் கொண்டு அவரைத் தீண்டத் துணியாதவரானார்.

பெயர் - சூளுரை செய்தல்

சூளுரை செய்யும் போது தனக்குப் பிடித்தவர்கள் அல்லது மதிப்பிற்குறியவர்கள் பெயரைக் கூறி அவர்கள் மேல் சூளுரைப்பதும், மன்னர்கள் தம்மிடம் அடிபணியாத பகைவரை அழிப்பேன் என்றும் அவ்வாறு அழிக்காவிட்டால் எனக்கு இவ்வாறு நேரட்டும் என்று கூறுவதும் புதிதல்ல. புறநானூற்றில் பாண்டியன்தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அரியணை ஏறிய இளம் வயதில் பகைவர் எழுவர் அவனுடைய இளமையை இகழ்ந்து படையெடுக்கின்றனர். அப்போது அவன் சினந்தெழுந்து பகைவர் சிதறியோட அவர்கள் முரசைக் கைப்பற்றுவேன். இல்லையாயின் "குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!மாங்குடி மருதன் தலைவன்ஆக,உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக, என் நிலவரை" (புறம், பா. 72) என்கிறான். இவ்வாறு செய்வது அக்காலத்திலிருந்து இக்காலம் வரை தொடர்ந்து வரும் நம்பிக்கை சார்ந்ததொரு பண்பாடு. தன்னைத் தீண்டக் கூடாதுஎன்பதற்காக நீலகண்டம் என்று கூறுகிறார் நீலகண்டரின் மனைவியார். தன் கணவனின் பெயரும் நீலகண்டன் என்பதாலும் இறைவனின் பெயரும்நீலகண்டன் என்பதாலும் எவருடைய பெயரைக் குறிப்பிட்டார் என்பது தெளிவாகப் புலப்படவில்லை. கணவரின் பெயரைச் சொல்லி அழைக்கும் முறை அக்காலத்தில் வழங்கப்படாமையாலும் தன் கணவன் அதீத பக்தி கொண்ட இறைவனான திருநீலகண்டரின் பெயராகவே இருக்கலாம் என்பது துணிவு.

திருமணத்திற்கு முன்னரே கைம்மை

திருவாமூரைச் சேர்ந்த புகழனார் மாதினியாருக்குப் பிறந்தவர்கள் திலகவதியார், திருநாவுக்கரசர். திலகவதியாருக்கு கலிப்பகையார் என்னும் பெயருடையவருக்கும் திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அப்போது புகழனாரும் மாதினியாரும் ஒருவர் பின் ஒருவராக இறக்கின்றனர். போர்க்களத்திற்குச் சென்ற கலிப்பகையாரும் இறக்க அதனைச் சேக்கிழார் "மருவார்மேல் மன்னவற்காய் மலையப் போம்கலிப்பகையார்பொருவாரும் போர்க் களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார்" (பெரியபுராணம்) என்று பாடுகிறார். தனக்கு மணம் பேசி முடித்த கலிப்பகையாரின் இறப்பைத் தன் கணவரின் இறப்பாகவே கருதித் தாமும் உயிர்விடத் துணிந்தமையும்கண்டு "வெம் முனை மேல் கலிப்பகையார் வேல் வேந்தன் ஏவப் போய்அம்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

முனையில் பகை முருக்கி அமர் உலகம் ஆள்வதற்குத்தம் உடைய கடன் கழித்த பெரு வார்த்தை தலம் சாற்றச்செம் மலர் மேல் திரு அனைய திலகவதியார் கேட்டார்" (பெரியபுராணம்) என்று கூறுகிறார் ஆசிரியர். இதன் மூலம்திருமணம் நடவாவிடினும் தனக்கு மன பேசி உறுதி செய்யப்பட்ட ஆணை,பெண்கள் தன் கணவனாகவே எண்ணும் உயர்வான வாழ்வியல் நமக்குத் தெளிவாகிறது. "ஒரு பெண் ஆண்மகனை உள்ளத்தில் வரித்துவிட்டால் அப்போதே கற்பு தொடங்கி விடுகிறது. அக்கணமே அவனைத் தன் நாயகனாகக் கருதத் தொடங்குவாள்" (சங்ககால வாழ்வியல்,ப. 376) என்று பேராசிரியர் ந. சுப்பிரமணியன் கூறுகிறார்.

பன்னிரண்டு– திருமண வயது

பெண்களுக்கான திருமண வயது பன்னிரண்டு என்பது பெரிய புராணம் வழி அறியக் கிடைக்கின்ற மற்றொரு செய்தி ஆகும். "அந் நாளில் திலகவதியாருக்கு ஆண்டு ஆறு இரண்டின்" (பெரியபுராணம்) என்பதன் மூலம் பன்னிரண்டு வயதான திலகவதியாருக்குத் திருமணம் பேசி முடித்தனர் அவர் பெற்றோர் என்று கூறுவதிலிருந்து ஐயமின்றித் தெளிவாகிறது.

பெண்களும் கோயில் திருப்பணிகளும்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் சில நாயன்மார்களின் மனைவியர் தன் கணவனின் சிவத் தொண்டினுக்கு உதவியமை நாம் தெளிந்த ஒன்று. ஆனால் பெண்கள் கோயில் திருப்பணிகளில் இளம் வயதிலேயே ஈடுபாடு கொண்டு தொண்டு செய்தமையைத் திலகவதியார் வரலாறு வழி பெரியபுராணம் பதிவு செய்துள்ளது. போர்களத்தில் தன் கணவனாக வரவிருந்தவரை இழந்த திலகவதியார் திருக்கோயில் பணிகளில் தன்னை அர்பணித்தார். பொழுது விடிவதற்குமுன் திருமுன்றிலிலே திருவலகிடுதலாகிய திருப்பணிசெய்தும், கன்று ஈனாத நன்மை மிக்க பசுவின் சாணத்தினால் நன்கு திருமெழுக்கிட்டும், பூக்களைக் கொய்து கொண்டுவந்து மாலைகள் தொடுத்துக் கொடுத்தும் அன்பர்கள் பலரும் பாராட்டும்படியாக பல திருப்பணிகளையும் செய்தார். "பணி மாறிப் புனிறு அகன்றநலம் மலி ஆன் சாணத்தால் நன்கு திரு மெழுகு இட்டுமலர் கொய்து கொடு வந்து மாலைகளும் தொடுத்து அமைத்துப்பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்" (பெரியபுராணம்) என்று இதனைப் பாடுகிறார் சேக்கிழார். பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி இதனையே "பெண்கள் பலர் சமயத் தொண்டாற்றினர். புனிதவதியாரும் ஆண்டாள் நாச்சியாரும் திலகவதியாரும் மங்கையற்கரசியாரும் இறைபணி செய்து ஈடேறினர்" என்று கூறுகிறார் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 471).

வண்டல் விளையாட்டு

பெண்கள் விளையாடும் வண்டல் விளையாட்டுப் பற்றியும் நம்மால் பெரிய புராணத்தைக் கொண்டு அறிய முடியும். "வண்டல் இழைத்தல் என்பது ஒரு வகை விளையாட்டாகும். மணலால் பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழும் விளையாட்டிது"

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்கிறார்அ.தட்சிணாமூர்த்தி (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.152). புனிதவதியார் வளரும் பருவத்தில் சிவனையே நினைந்து வளர்ந்தார் என்பதை "வண்டல் பயில்வன எல்லாம் வளர் மதியம் புனைந்த சடைஅண்டர் பிரான் திரு வார்த்தை அணைய வருவன பயின்று" (பெரியபுராணம்) என்று விளக்குகிறார்.

உறுப்பு நூலவர்

பெண்களின் திருமணத்தை உடல் கூற்று நூல் வல்லுனர்கள் கூறியது போன்று உறுப்புகள் முழுமையும் வளரப் பெற்ற பின் நிகழ்த்தியமையை காண முடிகிறது . புனிதவதியாரின் திருமணத்தை அவரது தந்தை "நல்ல என உறுப்பு நூலவர் உரைக்கும் நலம் நிரம்பிமல்கு பெரு வனப்பு மீக் கூர" (பெரியபுராணம்)பின் முடிவு செய்ததை அறிய முடிகிறது .

இல் இகவாப் பருவம்

ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குப் பின் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத காலமும் இருந்திருக்கிறது என்பதையும் புனிதவதியார் வாழ்க்கை வரலாற்றில் காண முடிகிறது.அழகு பெருகியதால் தன் மகளை வீட்டை விட்டு வெளியே அனுப்ப முடியாத சூழலை "மல்கு பெரு வனப்பு மீக் கூர வரு மாட்சியினால்இல் இகவாப் பருவத்தில்" (பெரியபுராணம்) எனக் கூறுகின்றார்.

பெண் வீட்டில் திருமணம்

எல்லாக் காலத்திலும்திருமணங்கள் பெரும்பான்மையும் பெண்வீட்டில் தான் நடை பெற்று இருக்கின்றன.மாப்பிள்ளையை அலங்காரம் செய்து பெண் வீட்டிற்கு அழைத்து வந்தமையை "இணர் அலங்கல் மைந்தனையும் மண அணியின் எழில் விளக்கிப்பணை முரசம் எழுந்து ஆர்ப்பக் காரைக்கால் பதி புகுந்தார்.அளி மிடை தார்த் தன தத்தன் அணி மாடத்து உள் புகுந்து" (பெரியபுராணம்) என்பதன் வாயிலாக அறியலாம்.

பெயரும் பெண் தெய்வமும்

பெண் குழந்தைக்குப் பெண் தெய்வத்தின் பெயரை வைக்கும் பழக்கத்தை புனிதவதியாரின் வாழ்க்கை வழியாக அறிய முடிகிறது. பரமதத்தன் தன் முதல் மனைவியின் பெயரை தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு வைத்ததை ''நற் பெருந்தெய்வம் ஆதல் நான் அறிந்து அகன்ற பின்புபெற்ற இம் மகவு தன்னைப் பேர் இட்டேன்"(பெரியபுராணம்)என்று கூறுவதிலிருந்து தெளிய முடிகிறது.

உணவு கடன் பெறுதல்

சிவனடியாருக்கு அமுது இட ஒன்றும் சமைக்ககாத போது புனிதவதியார் தன் கணவனுக்கு என்று வைத்திருந்த மாம்பழத்தையே சிவனடியாருக்குப் படைத்தார். ஆனால் வறுமையின் காரணமாக அடியாருக்கு அமுது இட ஒன்றும் இலாத போது இளையான்குடி மாற நாயனார் தன் மனைவியிடம் என்ன இருக்கிறது உணவிட என்று கேட்கிறார். அதற்கு அவரின் மனைவியார் "மற்று ஒன்றும் காண்கிலேன்; ஏதிலாரும் இனித் தருவார் இல்லை; போதும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வைகிற்றுப் போம் இடம் வேறு இலை" (பெரியபுராணம்) என்று கூறுவதிலிருந்து உணவு பொருட்களை அக்கம் பக்கம் உள்ளவரிடம் கடன் பெறுவதும் அதையும் மாலை நேரம் ஆனால் சென்று கேட்க முடியாத சூழலும் நிலவியதை காண முடிகிறது. அதோடு அன்றி இயற்பகை நாயனார் இயற்கைக்கு மாறாகத் தன் மனைவியைச் சிவனடியாருடன் வாழ அனுப்புதல், பெற்ற தாயிடமே அவளின் பிள்ளையைக் கறி உணவாகக் கேட்டல், தன் கணவன் மறுமணம் செய்து கொண்டமையால் தன் அழகிய உருவம் வேண்டாம் என பேயுறு வேண்டுதல் போன்ற உளவியல் ரீதியான வாழ்வியல் செய்திகளையும் நம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

முடிவுரை

இலக்கியங்கள் எப்போதும் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யத் தவறியதே இல்லை. அவை அவ்வகை இலக்கியமாக இருப்பினும் உரைநூல்களாக இருப்பினும் அந்தந்த காலத்தைத் தெளிவாக நமக்குப் புலப்படுத்துகின்றன. அந்த வகையில் பெரியபுராணமும் செம்மையாகவே காட்டியிருக்கிறது. பெண்களைப்பற்றி முழுமையான பெயர்களுடன் பதிவு செய்யாமல் ஆண்களின் பெயரை மட்டும் கூறி அவர்களுக்குத் துணை நின்ற பெண்களை மனைவியர் என்று கூறி எழுதப்பட்டுள்ளது. சொற்பமான பெண்களை மட்டும் கூறியுள்ள இந்நூலின் வழி அக்காலப் பெண்களின் வாழ்க்கைச் சூழலையும் அவர்களுக்கு நேர்ந்த சிக்கல்களையும் தெளிவாகக் காண பெரியபுராணம் நமக்குத் துணைபுரிகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடிய தண்டனைகள், திருமண முறைகள், பெண்கள் கொண்ட சூளுரைகள் போன்றவற்றையும் அறியமுடிகிறது.

குறிப்புகள்

[1] இராசமாணிக்கனார், ம. பல்லவர் வரலாறு. செண்பகா பதிப்பகம், 2015.
[2] சுப்பிரமணியன், ந. *சங்ககால வாழ்வியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
[3] செல்வராசு, அ. *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[4] தட்சிணாமூர்த்தி. அ. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*. ஐந்திணை பதிப்பகம், 2021.
[5] பாலையா, அ. ப , (ப . ஆ) *பெரியபுராணம் மூலமும் உரையும்*. ப. 2019.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Contemporary Life of Women

Dr. I. K. Viji, Assistant Professor of Tamil, Sree Ayyappa College for Women, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-2019-0919
DOI: 10.5281/zenodo.14752736

Abstract

India is proud to respect women like no other country in the world. "To be born as a bridegroom, mother should have a good period" sung by the Tamil poet Vinayakam Pillai. However many women are not often treated equally with respect in today's society. Many women with courage and faith have accomplished astonishing feats in Indian history. What they started in the past has helped the present day women to gain their hold in various fields. The Tamil saying says that women have a nurturing nature inborn within them. Women are achieving par excellence with men. Today, women tread from the house to the space. A situation where 'no man is equal to a woman' may soon come rather than 'a woman equal to a man'. In reality, rather than a calm and meek woman, brave and intelligent women are prominent in the top ranks of success. Only when a woman is hopeful to go outside the vast world can make her personal life successful. It is not an exaggeration to say that her self-respect is not only for herself but also for her future generations. Therefore, search is essential for every woman because achievement can only be achieved while searching. If one wants success in life one has to create opportunities. During the life journey of every woman, they can come across obstacles and hurdles with the help of her knowledge. This article focuses on the life of contemporary women.

Keywords: Women, Social Service, Feminism, Struggle, Politics.

References

[1] Augustine, S. & Kalavathi, T. S. Dr. "Peniya Kattamaippum Amma Vanthalil Penniya Kattamaippum." *International Journal of Tamil Language and Literature.* Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[2] Anthony Suresh, J. Dr. "Silambil Magalir Iruthal Nilaikalum Penniya Kattamippum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[3] Anitha, N. Dr. "Samayangalum Pen Viduthalaiyum." *International Journal of Tamil Language and Literature.* Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[4] Anusuya, I. Dr. "Pengalum Alumai Thiranum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140,
[5] Rajam Krishnan. *Kalanthorum Pen.* National Book Trust, India, First Edition-1994.
[6] Ezhilarasi, M. S. "Viviliyathil Penniya Kurugalum Veera Pengalum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020.E-ISSN-2581-7140.
[7] Dayanidhi. *Alumai Thiran.* Kannadasan Pathipagam, 2013.
[8] Dharmaraj, J. *Penniyal.* Tensi Publications, Sivakasi.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil

Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல்

முனைவர் ஐ. க. விஜி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2019-0919
DOI: 10.5281/zenodo.14752736

ஆய்வுச்சுருக்கம்

உலகில் வேறு எந்த நாடும் போற்றாத அளவுக்குப் பெண்ணைப் போற்றும் பெருமையுடையது நம்நாடு. ''மங்கையராகப் பிறப்பதற்கே- நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று பாடியுள்ளார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. ஆனால் மாதவம் புரிந்து பிறந்துள்ள பெண்கள் பலரும், இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் சமமாகவும், மரியாதையுடனும் நடத்தப்படவில்லை. ஆனாலும் தைரியத்தையும், நம்பிக்கையையும் ஆயுதமாக கொண்ட பெண்கள் இந்திய வரலாற்றில் வியக்க வைக்கும் வகையில் பல்வேறு செயல்களைப் புரிந்துள்ளனர். அவர்கள் தொடங்கி வைத்ததுதான் இன்று பெண்கள் பல்வேறு துறைகளில் கால்பதிக்க உதவி புரிந்துள்ளது. பேணும் தன்மையுடையவளையே பெண் என்கிறது தமிழ் வழக்கு. பெண்கள் ஆண்களுக்கு நிகராக சாதித்துக் கொண்டிருக்கின்றனர். வீட்டின் அடுப்பங்கரை முதல் வானில் நிலவு வரை பெண்களின் காலடி படாத இடமே இல்லை. 'ஆணுக்கு நிகரான பெண் என்பதை' விட ''பெண்ணொருத்திக்கு ஒரு ஆண் நிகரில்லை'' என்ற நிலையும் விரைவில் வரக்கூடும். என்னை பொருத்தமட்டில் அமைதியான சாந்தமானவனே பெண் என்பதை விட வீரமான துணிச்சலான விவேகம் கலந்த பெண்களே தமிழ் பெண்கள் வரிசையில் முக்கிய இடம்பெறுகின்றனர். இந்த உலகில் வாழும் மனிதனின் வாழ்க்கையில் கடைசி வரையிலும் தேடல் இருக்க வேண்டும். தேடலின் மத்தியில்தான் சாதனை படைக்க முடியும். வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்றால் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் சாதனைப் பயணத்தின் போது எத்தனையோ தடைகள், இடையூறுகள் வரினும் தன் அறிவின் துணைகொண்டு அவற்றை சமாளிக்க முடியும். போராடினால் தான் வெற்றி பெறமுடியும்.

குறிப்புச் சொற்கள்: பெண்கள், வீரம், சமூகசேவை, பெண்ணடிமை, போராட்டம், அரசியல்.

முன்னுரை

இயற்கையின் படைப்பில் சகல உயிர்களும் உல்லா ஆற்றலும் தனித்தன்மையும் கொண்டு இவ்வுலகில இயங்கி வருகிறது. மனிதன் என்ற பரிணாமத்தை அடைந்து இன்று உலகையே கையில் வைத்து விண்ணையும், அறிவையும் ஆராய்ந்து வருகிறது. இந்த உலகில் மனிதனைப் படைக்கும் மாபெரும் சக்தியாகக் கண்ணில்பட்டத் தெய்வமாக, வாழும் கடவுளாக நம் முன்னர் பெண்கள் இருக்கின்றனர். வீட்டுப்படி தாண்டவிடாமல் இருந்த அந்த காலம் முதல்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விண்வெளிக்கு செல்லும் இந்த காலம் வரை சாதனைப் பெண்மணிகளின் பட்டியல் மிகவும் நீளமானது. பெண்கள் கல்வி அறிவு பெற்றிருந்தால் மட்டுமே குடும்பமும் சமூகமும் முன்னேறும் என்பதை உணர்ந்த சான்றோர்கள் பெண் கல்வியை வலியுறுத்தினர். பெண் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே பெண் விடுதலை பெற முடியும் என்பதை,

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் (கும்மிப்பாட்டு)

இக்கும்மி பாட்டின் வழியாக பாரதியார் பெண்கல்வியை வலியுறுத்தியுள்ளார்.

தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல்

எங்கோ ஒரு மூலையில் பிறந்து வளர்ந்து, புதுமுகங்களாக மாறி மாநிலத்தின் சாதனைப் பெண்களாக மாறிய பெண்களின் எண்ணிக்கை பல. தங்களின் உழைப்பு, விடாமுயற்சி, உள்ளிட்டவைகளால் தாங்கள் சார்ந்த துறைகளானச் சமூக சேவை, சுகாதாரம், விளையாட்டு, கல்லி, பொழுதுபோக்கு உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கி தங்களுக்கு மட்டுமல்லாது தாங்கள் சார்ந்துள்ள தாய்நாட்டிற்கும் பெருமைத் தேடி தந்துள்ளனர் பெண்கள். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என இருந்த நிலைமாறி இன்று அனைவரும் படித்து இராணுவம், விமானம், கடற்படை, மருத்துவம், பொறியியல், அரசியல் ஆகிய துறைகளில் தொடங்கி பெண்கள் இல்லாத துறையே இல்லை எனும் அறவுக்கு பெண்கள் இன்று முன்னேறி வருகிறார்கள். அறிவியலில் பெண்கள் (Wome in Science) என்பது பழங்காலம் முதல் இன்று வரை அறிவியலில் பெண்கள் ஆற்றியுள்ள பங்கினைக் குறிக்கும். பழங்காலம் முதலே பெண்கள் அறிவியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளனர்.

சார்லட் பள்ச் என்பவர், பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்று எடுத்துரைப்பார் (முனைவர். ஞா. அந்தோணி சுரேஷ். ப. 10)

பாலினம் மற்றும் அறிவியலில் ஆர்வமுள்ள வரலாற்று ஆய்வாளர்கள், அறிவியலில் பெண்களின் சாதனைகள், அதை முடிப்பதற்கான பெரு முயற்சிகள் எனப் பதிவு செய்து வைத்துள்ளனர். தனது சாதனைகளுக்காக அவர்கள் எதிர்கொண்ட தடைகள், அவர்களின் பணிக்காகச் செயல்படுத்திய உத்திகள், குழு ஆய்வுகள், முக்கிய அறிவியல் இதழ்களிலும் பிற வெளியீடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டமை ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. சமூகம், வரலாறு, விமர்சனம் இவையனைத்தையும் தாண்டி, தன் அறிவுசார் ஒழுக்கத்தை வெளிப்படுத்தி தனது உரிமையை நிலைநாட்டியுள்ளனர். 2020 இல் உலகம் மாறிவிட்டது. ஆனால் பெண்களுக்கு ஒவ்வொரு நாளும் உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. பெண்கள்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

செயல்பாடுகளின் போக்கை மாற்றியுள்ளனர். பணிநிலைகளை மாற்றியுள்ளனர். வரக்கூடிய தலைமுறைகளுக்கு இந்த நடைமுறை நிலையாக இருக்கும்.

மருத்துவத்தில் பெண்கள்

முந்தைய பல நாகரிகங்களில் பெண்கள் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்தனர். பண்டை கிரேக்கத்தில் பெண்களுக்காக இயல் மெய்யியலில் வாய்ப்புகள் இருந்தன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பெண்கள் இரசவாதம் என்னும் துறையில் பங்களித்துள்ளனர். இடைக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கான இடமாக அருட்சகோதரி மடங்கள் இருந்தன. இது போன்ற சில சமூகங்களில் பெண்கள் அறிவார்ந்த ஆய்வுப் பணிகளில் ஈடுபட வாய்ப்புகள் வழங்கப்பட்டன. பதினோராம் நூற்றாண்டு இடைக்காலப் பல்கலைக் கழகங்கள் தோற்றம் கண்டபோதே, பெரும்பாலான பெண்கள் பல்கலைக்கழகக் கல்வியிலிருந்து விலக்கப்பட்டனர். மருத்துவத்துறையில் பெண்கள் கல்வி கற்பதற்கான சுதந்திரம் மற்ற இடங்களில் இருந்ததைக் காட்டிலும் இத்தாலியில் அதிகமாக இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் அறிவியல் துறை ஆய்வுகளில் ஈடுபட்டு பல்கலைக்கழகத் தலைவராக உயர்ந்த முதல் பெண் அறிவியலாளர் லாரா பாசி ஆவார். இவர் இத்தாலியைச் சேர்ந்த அறிவியலாளர் ஆவார். பதினெட்டாம் நூற்றாண்டில் பாலின வரையறைகள் பெரிதாக இருந்தபோதும் பெண்கள் அறிவியல் துறையில் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டனர். தான் வாழும் சமூகத்தில் பெண்களின் சாதனைகள் விலக்கி வைக்கப்பட்ட போதும் படித்த சமூகங்கள் பெண்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் மகளிர் கல்லூரிகள் அதிகரிக்கத் தொடங்கின. அதன்மூலம் பெண்களுக்கானக் கல்வியும் பெண் அறிவியலாளருக்கான வேலை வாய்ப்புகளும் அதிகமாயின. 1903ஆம் ஆண்டில் இயற்பிலுக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அறிவியலாளர் மேரி கியூரி ஆவார். மேலும் 1911 இல் வேதியியலில் இவரின் கதிரியக்கம் குறித்த ஆய்வுகளுக்கு நோபல் பரிசு பெற்றார். இரட்டை நோபல் பரிசு பெற்ற முதல் பெண் இவராவார். 1901 முதல் 2010 வரை நாற்பது பெண்கள் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளனர். இவற்றில் பதினேழு பெண்கள் இயற்பியல், வேதியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

சௌமியா சுவாமிநாதன் (சுகாதாரம்)

உலக சுகாதார அமைப்பின் (World Health Organization - WHO) ஒரு துறையின் தலைமை விஞ்ஞானியாக சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னால் இந்த அமைப்பின் துணை பொது இயக்குநர் பதவியை கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. மருத்துவத்தில் மேற்படிப்பு பயின்று இருக்கும் இவர் காசநோய், எய்ட்ஸ் பற்றிய ஆய்வு மற்றும் விழிப்புணர்வு திட்டங்களில் பெரும் பங்காற்றியுள்ளார். இவர் பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மகள் ஆவார்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வீரத்தில் பெண்கள்

வேலுநாச்சியார்

1746- ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்து வடுநாதரை மணந்து பட்டத்து ராணியாக மகுடம் சூடி பெருமை பெற்றார் வேலுநாச்சியார். தன் கணவரை கொன்ற ஆங்கிலேய படைதளபதிகளான ஸ்மித் மற்றும் பாஞ்சோர் ஆகியோரையும் வெற்றி கொண்டார். விருப்பாச்சி கோபால நாயக்கரிடம் நட்பு கொண்டு மைசூரின் ஹைதர் படையை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். 1780 முதல் 1788 வரை நேரடி ஆட்சியாளராக சிறப்பாக ஆட்சி செய்தார். 1796 ஆம் ஆண்டு 66 வயதில் மரணமடைந்தார். சிறப்பான ஆட்சியை வழங்கிய வேலுநாச்சியார் அவர்கள் மக்களுக்கு சிறப்பான ஆட்சியை வழங்கி திறம்பட ஆட்சி செய்ததுடன் ஆங்கிலேயரை எதிர்த்து நின்று வீரமுடன் செயல்பட்டார். காந்தியோ உடன் மற்ற எந்த எழுச்சி சக்தியும் உடன் இல்லை. ஆனால் வீரம் ஆளும் நிர்வாகம் மக்கள் நலன் ராஜநிர்வாகம் அறிந்து வைத்திருந்தார். அவரின் அணுகுமுறை சிறப்பான வழிகாட்டியாக இருந்தது. இவரை பார்த்து பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். முதல் எழுச்சி வீராங்கனையாக இருந்த இவர் இந்திய விடுதலை போராட்டவாதிகளுக்கெல்லாம் முன்மாதியாக இருந்தார். எனல் அது மிகையாகாது. ஆறாம் அறிவற்ற விலங்கினங்களுக்கு இயற்கையாகச் சில உணர்வுகள் அமைந்திருக்கின்றன. ஆனால் மனிதரை அண்டி அவர் போடும் உணவுக்காக அடிமை வாழ்வுக்குப் பழகிய நாகரிகம் விலங்குகளை வந்தெய்திய பிறகு, அவை மனிதரைவிட்டுப் போகத் துணிவதில்லை. இயல் பூக்கங்கள் மங்கிப் போகின்றன போலும், இத்தகைய அண்டிப் பிழைக்கும் சார்புநிலை நாகரிகத்தில் பெண்ணும் தனித்தன்மையை இழந்து வந்திருக்கிறாள் என்கிறார் இராஜம் கிருஷ்ணன். (எழிலரசு. ப. 71)

சாவித்திரிபாய் பூலே

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பெண்களுக்கான உரிமை மற்றும் கல்வி போராட்டத்தில் பங்கேற்று பெண்களின் உரிமையை நிலைநாட்ட போராடிய பெண்களில் முக்கியமான ஒருவராக சாவித்திரிபாய் பூலே திகழ்ந்தார். இவர் ஜனவரி 3, 1931ஆம் நாள் பிறந்தார். ஜோதிராவ் பூலே என்னும் சுதந்திர போராட்ட வாதியின் மனைவியாவார். பனிரெண்டாம் வயதில் திருமணம் செய்த சாவித்திரிபாய் பூலே கணவரிடம் கல்வி கற்று பெண்களின் கல்வி மற்றும் உரிமைக்கு முதல் குரல் கொடுத்தவர். சாவித்திரிபாய் பூலே பெண்களுக்காக முதல் பள்ளியை கணவருடன் இணைந்து பூனேவில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தொடங்கினார். சாதிய வெறியையும் அத்துடன் இணைந்து பாலின வேறுபாடுகள் பெண்கள் மீது காட்டுவதனை எதிர்த்து குரல் கொடுத்தார். முக்கிய பெண் சீர்த்திருத்தவாதி 1840 ஆம் ஆண்டுகளில் கத்தியில்லை ரத்தமில்லை காந்தியும் இல்லை. ஆனால் சாவித்திரி இருந்தார். எந்த ஒரு சிப்பாய் கலகமும் நடைபெறவில்லை. ஆனால் இந்தியாவில் ரௌத்திரம் பழகும் திறம் இருந்தது. இந்திய விடுதலை போராட்டத்திற்கு முன்பே சமூக சீர்த்திருத்தத்தை நாட்டில்

விதைத்தார். ஒரு பெண்ணாக இருந்து பழமை வாய்ந்த சமூகத்திற்கு பாடம் கற்பிப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பதனை நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. சாவித்திரிபாய் பூலே குழந்தைகள் இல்லாதபோதும் இரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தார். அவர் எழுதிய கவிதை புத்தகத்தில் பெண்களுக்கான எழுச்சிமிகு கவிதைகளைப் படைத்தார். சாவித்திரி மற்றும் வேலுநாச்சியார் இந்த தேசத்தில் எந்தவித முன்னேற்றமும் அற்ற ஒரு சமுதாய சூழலில் வேறுவேறு சூழல்களில் பிறந்தவர்கள். அவர்களின் மூலம் சிறந்த நிர்வாகம் எது என்பதையும் எது மக்களைக் கொண்டு செல்லும் நிர்வாகம் என்பதையும் அறிந்து கொள்ளலாம். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பிறந்த ஒரு ஆட்சியாளர் பெண்மணியும் ஒரு சமூக சீர்திருத்த பெண்மணியின் வாழ்க்கை மற்றும் அவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். தேசத்தின் அனைத்து மக்களுக்கும் இவர்கள் ஒரு பாடமாக அமைத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக சேவையில் பெண்கள்

சின்னப்பிள்ளை

மதுரை மாவட்டத்தை சேர்ந்த 66 வயதான சின்னப்பிள்ளை கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தி வருகிறார். களஞ்சியம் என்ற பெயரில் மகளிர் சுய உதவிக்குழு அமைப்பை நிர்வகித்து வருகிறா. தமிழகம் முழுவதும் சுமார் 2000 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்க உதவி இருக்கிறார். மரபுசார் வேளாண்மை மீது கொண்ட ஈடுபாட்டால் அது குறித்த விழிப்புணர்வையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார். கடந்த 2000 மாவது ஆண்டில், 'ஸ்த்ரீ புரஸ்கார்' விருதை இவருக்கு அன்றைய பிரதமராக இருந்த திரு. அடல்பிகாரி வாஜ்பாய் வழங்கி கவுரவித்தார். கிராமப்புறங்களில் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை நகரத்துப பெண்களும் பயன்படுத்தலாம் என்ற தெளிவைக் கொண்டு வந்தவர் சின்னப்பிள்ளை. இப்போது 12 மாநிலங்களைச் சேர்ந்த 250 கூட்டமைப்புகளுக்குத் தலைவியாக முதிய வயதிலும் ஓடி உழைத்து வருகிறார் சின்னப்பிள்ளை. மத்திய அரசு இவரது சேவையை பாராட்டி 2019 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது. வீட்டு வேலைகளை மட்டும் தான் பெண்களால் செய்ய முடியும் என்ற தவறான எண்ணத்தில் பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடவில்லை. மனுதர்மம் பெண்களைப் போற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதன்படி பெண்ணை பூஜிக்கப்படும் இடத்தில் தேவர்கள் மகிழ்கிறார்கள் (முனைவர் ந. அனிதா. ப.23)

இசைவாணி

இந்தியாவின் ஒரே பெண் கானா பாடகி என்ற பெருமை இசைவாணிக்கு உள்ளது. தமிழகத்தில் வடசென்னையைச் சேர்ந்த இவர் ஆண்கள் மட்டும் ஆதிக்கம் செலுத்தி வரும் கான பாடல் துறையில் பல ஆண்டுகளாகச் சாதித்து வருகிறார். பிரபல ஆண் கானா பாடகர்கள் பாடிய அதே மேடையில் இவர் பாடுவதே ஒரு சாதனைதான். பழைய நடைமுறையை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இசைவாணி உடைத்ததை அடுத்து மற்ற இளம்பெண் கானா பாடகர்களும் இப்போது களம் இறங்கியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவிய வேளாண்மைச் சமூகம், பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த அடிப்படையான மாற்றங்கள் அடையத் தொடங்கியது. இந்த மாற்றங்களை இக்கால இலக்கியங்கள் பிரதிபலித்தன. மரபான இந்துப் பண்பாட்டைச் சீர்படுத்த முனைந்தார்கள். இதில் பெண்களின் முன்னேற்றம் முக்கிய இடம்பெற்றது. புதிய இலக்கியத்தை முதன்முதலாகப் படைத்த வேதநாயகமும், மாதவை யாவும் பெண்கல்வி, விதவை மறுமணம் பற்றி பேசினார்கள். (சா. அகஸ்டின். ப.2)

போராட்டத்தில் பெண்கள்

பில்கிஸ்

82 வயதான பில்கிஸ் சர்ச்சைக்குரிய குடிமக்கள் சட்டத்திற்கு எதிராக நடந்த பெண்கள் போராட்டத்தில் அமைதியாகப் பேராடியவர். தலைநகரில் முஸ்லீம்கள் வாழும் ஷாஹீன் பாக் பகுதியில் அதிக நாட்கள் போராட்டம் நடந்த இடத்தில் போராட்டத்தில் முக்கியமானவராக அவர் இருந்தார். 'ஒடுக்கப்பட்டவர்களின் குரல்' என்று அவரை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ரானா அயூப் குறிப்பிட்டுள்ளார்.

ரிதிமா பாண்டே

ரிதிமா பாண்டே பருவநிலை மாற்றத்துக்கு எதிரான செயல்பாட்டாளர். பருவநிலை மாற்றத்தின் பாதிப்பைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி 2019இல் தன் 9வது வயதில் வேறு 15 சிறுவர் மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கு தொடர்ந்தார். ஐந்து நாடுகளுக்கு எதிராக அவர் ஐ.நாவில் வழக்கு தொடர்ந்துள்ளார். ரிதிமா இப்போது சர்வதேச மாநாடுகளில் பங்கேற்று மற்ற மாணவர்களுக்கு அதிகாரம் கிடைக்க உதவுகிறார். தன்னுடைய வருங்கால தலைமுறையினரின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்காக ரிதிமா பாடுபட்டு வருகிறார். உலகெங்கும் உள்ள பெண்கள் பல்வேறுத் தழைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும், ஆண் பெண் இருவருக்குமான அதிகாரங்கள் முறையாகப் பிரியாமல் இருப்பதை எதிர்த்து போராடிக் கொண்டே இருக்கிறார்கள். தங்களை நல்ல நிலையில் நிறுத்திக் கொள்வதற்கும், தங்களைப் பாதிக்காதவகையில் கொள்கைகளை உருவாக்கவும் பெண்களுக்கு அதிகாரம் அவசியமாகிறது. (இரா. அனுசுயா. ப. 36)

முடிவுரை

பெண்ணடிமை எனும் விலங்கை உடைத்து எறிந்து இன்றைய நாகரீக உலகில் பெண்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். பெண்ணடிமை என்ற இரும்புக் கூண்டிலிருந்து இன்றைய பெண்கள் சுதந்திர பறவைகளாக சிறகடித்து பறக்கின்றனர். காவல்துறை, சட்டம், அரசியல், தகவல்தொடர்பு துறை உட்பட அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் பெரிய பதவிகளை வகித்து திறம்பட செயல்படுகின்றனர். மருத்துவத் துறையிலும் பெண்கள் வியக்கத்தக்க சாதனைகளைப் படைத்து வருகின்றனர். போக்குவரத்து

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

துறையிலும் பெண் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் வந்துவிட்டனர். விளம்பர துறையிலும் பெண்கள் நல்லநிலையை அடைந்துள்ளனர். குடும்பப் பெண்கள் தங்கள் வீட்டு கடமைகளை முடித்துவிட்டு பகுதிநேர வேலைக்குச் சென்று கணவரின் கஷ்டத்தில் பங்கெடுக்கின்றனர். வேளாண்மை துறையிலும் பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். படிப்பிலும் மாணவிகள் முதலிடத்தை பிடித்து ஒவ்வொரு ஆண்டும் சாதனை படைத்து வருகின்றனர். விளையாட்டு துறையிலும் பெண்கள் பங்கேற்று இந்தியாவிற்கு பதக்கங்களைப் பெற்று தந்துள்ளனர். இதுபோல் பல துறைகளிலும் பெண்களின் முன்னேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவ்வாறு பண்டைய காலத்தை விடவும் தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல் சிறப்படைந்துள்ளதை நாம் உணரலாம்.

குறிப்புகள்

[1] அகஸ்டின், சா. & கலாவதி, த. சே. முனைவர். "பெண்ணியக் கட்டமைப்பும் அம்மா வந்தாளில் பெண்ணியக்கட்டுடைப்பும்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb. 2020. E-ISSN-2581-7140.

[2] அந்தோணி சுரேஷ், ஞா. முனைவர். "சிலம்பில் மகளிர் இருத்தல் நிலைகளும் பெண்ணியக் கட்டுடைப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[3] அனிதா, ந. முனைவர். "சமயங்களும் பெண் விடுதலையும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[4] அனுசுயா, இரா. முனைவர். "பெண்களும் ஆளுமைத் திறனும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[5] இராஜம் கிருஷ்ணன். *காலந்தோறும் பெண்*. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1994.

[6] எழிலரசி, மி. சு. "விவிலியத்தில் பெண்ணியக் கூறுகளும் வீரப் பெண்களும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[7] தயாநிதி. *ஆளுமைத் திறன்*. கண்ணதாசன் பதிப்பகம், 2013.

[8] தர்மராஜ், ஜே. *பெண்ணியல்*, டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Women's Life in *Purananooru*

S. Velankanni, Assistant Professor of Tamil, St. Joseph College of Arts and Science, Veikalipatti, Mettur– 627808, Tenkasi (Dt), Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-5829-2769
DOI: 10.5281/zenodo.14752774

Abstract

During the Sangam period, women acted more skillfully than men. They involved themselves in every activity that men were involved in. They were given the right to express their talents on an equal footing. Women had leadership qualities. They excelled in various professions to increase the economy. Women poets excelled in education. They acted with intelligence in the court, advising kings and transforming society. Through this article, we will learn about how they paved the way for other women to act with courage and bravery. We know that during the Sangam time, women lived in the form of force with the restriction of internal life. They also have special respect for outside life. They were treated fairly in the community. The kings also showed appreciation for that, it was the principal cause of civilization and culture in their activities. They had the honour of education, heroism, courage, personality, industry, wisdom, intelligence, Justice and so on. On considering these characteristics, the article examines the life of women as seen in "Purananooru".

Keywords: Education, Bravery, Courage, Intelligence, Justice.

References

[1] [Kailasapathy. *Samogaviyalum Ilakiyamum*. New Century Book House, Chennai-1988.
[2] Saminathaiyar U, V. Purananooru Moolam Uraium. U. V. Saminathaiyar Nool Nilayam, Chennai.
[3] Subramanian, N. *Sanga Kala Valviyal*. New Century Book House, Chennai-1986.
[4] Bakiyameri. *Kalanthorum Tamil Kalaigal*. Bhuvendar Publications, Chennai-4, 2005.
[5] Vaiyapuripillai, S. *Sanga Ilakiyam*. Pari Nilayam, 2015,

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

புறநானூற்றில் பெண்களின் வாழ்வியல்

ச. வேளாங்கண்ணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிபட்டி, மேட்டூர்-627808, தென்காசி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-5829-2769
DOI: 10.5281/zenodo.14752774

ஆய்வுச்சுருக்கம்

சங்க காலத்தில் பெண்கள் அக வாழ்க்கையில் கட்டுக்கோப்போடு கற்பொழுக்க நெறியில் வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் அறிவோம். அதுபோல புற வாழ்க்கையிலும் அவர்களுக்கு சிறப்பு மரியாதை வழங்கப்பட்டது. அதனால் சமுதாயத்தில் உயர்வாக நடத்தப்பட்டனர். மன்னர்களாலும் போற்றத்தக்க வகையில் வாழ்ந்து காட்டினர். அதற்கு அவர்களுடைய செயல்பாடுகளில் நாகரிகமும், பண்பாடும் தான் முக்கிய காரணமாக இருந்தது. இவர்கள் ஆணுக்கு நிகராகக்கல்வி, வீரம், துணிச்சல், ஆளுமைத்திறன், தொழில், மதிநுட்பம், நுண்ணறிவு, நீதி இவற்றில் மேன்மை பெற்றிருந்தனர். இத்தகைய பண்புகளை கருத்தில் கொண்டு புறநானூறு நூல் வழியாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்புச்சொற்கள்: கல்வி, வீரம், துணிச்சல், ஆளுமைத்திறன், மதிநுட்பம், நுண்ணறிவு, நீதி.

முன்னுரை

சங்ககாலத்தில் பெண்கள் ஆண்களை விட திறமைவாய்ந்தவர்களாக செயல்பட்டனர். ஆண்கள் ஈடுபடுகின்ற ஒவ்வொரு காரியங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். சமத்துவ நிலையில் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த உரிமைகள் வழங்கப்பட்டது. பெண்கள் தலைமைப்பண்பு உடையவர்களாக இருந்தனர். பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்வதற்கு பல்வேறு தொழில்களில் சிறந்து விளங்கினர். பெண்பாற் புலவர்கள் கல்வியில் சிறந்துவிளங்கினர். அரசவையில் மன்னர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய வகையிலும் சமுதாயத்தை மாற்றி அமைக்கக்கூடிய வகையிலும் நுண்ணறிவோடு செயல்பட்டனர். இதனால் மற்ற பெண்களையும் வீரத்தோடும், துணிச்சலோடும் செயல்படுவதற்கு வழி வகுத்தனர் என்பதை பற்றி இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்வோம்.

பெண்களின் கல்வி

சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். அவர்களுக்கு கல்வி கற்க தடையேதும் இல்லை. இலக்கியத்தில் புலமை பெற்றிருந்தனர். முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இவர்களில் ஔவையார் மதிநுட்பமும், ஆளுமைத்திறனும், கல்விக் கேள்விகளில் புலமையும் பெற்றிருந்ததால் கடையேழு வள்ளல்களுள் ஒருவரான அதியமான் என்னும் குறுநில மன்னன் தன்னுடைய

அரசவையில் அவர்களுக்கென்று தனிமரியாதை வழங்கப்பட்டு அவைக்களப்புலவராக அமர்த்தினார். அவர்களிடம் உள்ளார்ந்த அன்போடு நெருங்கிய உறவு வைத்திருந்தார். அந்த உறவு உயிரினும் மேலானதாக இருந்தது என்பதை புறநானூற்றில்,

வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்...

...ஆர்கலி நறவின், அதியர் கோமான்

...மன்னுக பெரும! நீயே

சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே! (புறநானூறு.91)

இப்பாடலில் அதியமான் மலையுச்சியில் அரிதாக கிடைக்கக் கூடிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவையாருக்கு கொண்டுவந்து கொடுத்தால் அவர் நெடுநாள் வாழ்ந்து நாட்டை ஆளும் மன்னர்களையும், சமுதாயத்தையும் தமது கல்விப்புலமையால் அறிவு புகட்டி ஆலோசனை வழங்கி அறவழியில் நடத்துவார் என்று நினைத்து ஔவையாருக்கு கொண்டு வந்து கொடுத்தான். இதனால் அவருடைய கல்விப் புலமையை பற்றி பெருமையாக எடுத்துக் கூறுகிறார்.

பெண்களின் வீரச் செயல்

சங்க காலத்தில் பெண்கள் வீரம் மிகுந்தவர்களாக வாழ்ந்துவந்தனர். தங்களுடைய வீரத்தை நேரடியாக காட்ட முடியாமல் போனாலும் போருக்குச் செல்லும் வீரர்களுக்கு போரில் வெற்றி பெறுவதற்கு போர் யுத்திகளையும், தந்திரங்களையும் எடுத்துக் கூறுவர். தன்னுடைய வயிற்றில் வளரும் குழந்தை வீரம் செறிந்தவனாக பிறக்க வேண்டும் என்று நினைப்பாள். போரில் விழுப்புண்பட்டு இறப்பதையே பெருமையாகக் கொள்வாள் என்பதை புறநானூற்றில்,

சிறுவன் / களிறுஎறிந்து பட்டனன் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர் (புறநானூறு. 277: 3-5)

இப்பாடலில் தன் மகன் போர்க்களத்தில் யானைகளைக் கொன்று தானும் மாண்டு விட்டான் என்ற செய்தியை கேள்வியுற்ற தாய் தான் பெற்றெடுத்த மகிழ்ச்சியை விட மேலான மகிழ்ச்சியை அடைந்தாள் என்று சொல்லப்படுகிறது.

பெண்களின் துணிச்சல்

சங்க காலத்தில் பெண்கள் எந்த ஒரு காரியத்தில் ஈடுட்டாலும் பயம்படாமலும் பின்வாங்காமலும் துணிச்சலாக செயல்படுவாள். ஆண்களுக்கு தைரியத்தையும், துணிச்சலையும் கொடுத்து வழி நடத்துவதே பெண்தான். தன்னுடைய பச்சிளம் குழந்தைக்கு வேல் கொடுத்து போர்களத்திற்கு அனுப்பும் துணிச்சலை புறநானூற்றில், **கடிது இவள் துணிவே ஒருமகன் அல்லது இல்லோள் / செருமுக நோக்கிச் செல்கஎன விடுமே! (புறநானூறு. 279)** இப்பாடலில் ஒரு தாயினுடைய துணிச்சல் கடுமையானது. முந்தைய நாள் போரில் அவளுடைய அண்ணன் யானையை வீழ்த்தி விட்டு போர்களத்திலேயே மாண்டுவிட்டான். நேற்றோ நடந்த போரில் இவளது கணவன் மாண்டான். மீண்டும் போர்க்களத்தில் பறை

ஒலிக்கப்படுகிறது. ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக தலையில் எண்ணெய் விட்டு சீவி முடித்துக் கொண்டு தன்னுடைய ஒரே மகனான பச்சிளம் குழந்தையிடம் வேலைக் கையிலேக் கொடுத்து 'போர்க்களம் நோக்கிச் செல்க' என்று கூறி போருக்கு அனுப்பி வைத்தாள் என்பதை ஒரு பெண்ணின் துணிச்சலைப் பற்றி எடுத்துக் கூறுகிறது

பெண்களின் ஆளுமை

சங்க கால பெண்கள் பல்வேறு கைத் தொழில்களைக் கற்றுக் கொண்டு உழைப்பில் சிறந்து விளங்கினர். தன்னுடைய தேவைகளை தாமே பூர்த்தி செய்யும் ஆளுமைத்திறன் பெற்றிருந்தனர். அதனால் பொருளாதாரத்தை பெருக்கிக் கொண்டனர்.செய்யக் கூடிய தொழிலில் நேர்மையாகவும், அறிவுத் திறனோடும் செயல்பட்டனர். ஆண்களை விட திறமை மிகுந்தவர்களாக இருந்தனர். உழவுத்தொழில் செய்யும் இடத்தில் உழத்தியர் பெண்கள் நெல் நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். ஆயர்குலப் பெண்கள் தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்ற பால் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்வர். பூ தொடுத்து விற்றல். மேலும் பெண்கள் நெசவு தொழிலில் ஈடுபட்டனர். இவர்களை பருத்திப் பெண்டிர் என்பதை புறநானூற்றில், "பருத்திப் பெண்டிர் பனுவலன்ன" (புறநானூறு. 125: 1) இப்பாடல் வரியில் கணவனை இழந்த பெண்கள் மற்றும் தனியாக வசிக்கும் பெண்கள் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள நெசவுத் தொழிலை வீட்டிலிருந்தே செய்வர்என்று சொல்லப்படுகிறது. மேலும், **பருத்திப் பெண்டிர் சிறுதீ விளக்கத்து (புறநானூறு. 326: 5)** இப்பாடல் வரியில் பெண்கள் வீட்டின் விளக்கொளியில் பருத்தி பஞ்சை நூல் நூற்க தகுந்தவாறு தரம்பிரித்து அவற்றிலுள்ள குறைகளை நீக்கும் பணிகளைச் செய்வர் என்று சொல்லப்படுகிறது.

பண்டமாற்று முறை

சங்க காலத்தில் பெண்கள் திணை அடிப்படையில் தொழில் செய்தனர். தங்களுடைய நிலத்தில் விளைந்த பொருளை மற்றொரு நிலத்தில் வசிக்கும் மக்களிடம் மாற்றிக் கொள்வர். இதனைப் பற்றி புறநானூற்றில்,

...ஆய்மகள்
தயிர் கொடு வந்ததும் பும்நிறைய...
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப... (புறநானூறு. 33: 2-6)

இப்பாடல் வரிகளில் ஆயர்குலப் பெண்கள் தங்களது மொந்தையில் கொண்டு வந்த தயிரைக் கொடுத்து விட்டு வெண்ணெல்லை பெற்றுக் கொண்டனர் என்று சொல்லப்படுகிறது.

இசைக்கலையில் பெண்கள்

சங்க காலத்தில் பெண்கள் இசைக்கலையில் சிறந்து விளங்கினர். இசையை இசைப்பதற்கென்று விறலி, பாடினி போன்ற பெண் கலைஞர்கள் இருந்தனர் என்பதை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

புறநானூற்றில், **மறம் பாடிய பாடினியு ம்மே (புறநானூறு. 11:11)** இப்பாடல் வரியில் வீரனுடைய செருக்கை பாடினாள் பாடினி என்று சொல்லப்படுகிறது. மேலும்,

நல்யாழ், ஆகுளி, பதலையடு சுருக்கிச்,

செல்லா மோதில் சில்வளை விறலி! (புறநானூறு. 64:10-11)

இப்பாடல் வரிகளில் யாழ், ஆகுளி, பதலை போன்ற இசைக்கருவிகளை சுருக்குப் பையில் போட்டுக் கொண்டு செல்வோம் என்று விறலி கூறுகிறாள். இவ்வாறு தங்கள் வறுமையை போக்குவதற்காக கணவனோடு சேர்ந்து இசைக்கலையை எடுத்துக் கொண்டு மன்னன் இருக்கும் இடத்தை நாடிச் சென்று இசையை மீட்டி, பாடிப் புகழ்ந்து பரிசினைப் பெற்று அதன் மூலமாக வாழ்க்கை நடத்தி வந்தனர் என்று சொல்லப்படுகிறது.

முடிவுரை

சங்க காலத்தில் பெண்கள் சமுதாயத்தில் இயங்கு சக்தியாகவும், இயக்கு சக்தியாகவும் விளங்குகிறாள். சமுதாயத்தில் முக்கிய அங்கமாக செயல்படுகிறாள். பெண் இல்லையென்றால் நாடும், சமுதாயமும் இல்லை என்பது தான் உண்மை. பெண்மை நலம் மிக்கவர்களாகவும், வீரத்தில் சிறந்தவர்களாகவும், கல்வியில் புலமை பெற்றவர்களாகவும், ஆளுமைத் திறன் வாய்ந்தவர்களாகவும், எல்லாக் கலைகளையும் கற்றவர்களாகவும் சிறந்து விளங்கினர். அவர்களுடைய செயல்பாடு அறவழியில் இருந்ததால் தங்கள் உரிமையை நிலை நாட்ட முடிந்தது. மன்னர்களாலும் போற்றத்தக்க வகையில் வாழ்ந்து காட்டினர் என்பதை புறநானூற்றின் மூலம் அறிந்து கொண்டோம்

குறிப்புகள்

[1] கைலாசபதி. *சமுகவியலும் இலக்கியமும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-1988.
[2] சாமிநாதையர், உ., வே. *புறநானூறு மூலமும் உரையும்*. உ. வே. சா. நூல் நிலையம்.
[3] சுப்பிரமணியன், ந. *சங்ககால வாழ்வியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-1986.
[4] பாக்கியமேரி. *காலந்தோறும் தமிழர் கலைகள்*. பூவேந்தர் வெளியீடு, சென்னை- 4, 2005.
[5] வையாபுரிபிள்ளை, எஸ். சங்க இலக்கியம். பாரிநிலையம் வெளியீடு-1, 2015,

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Merits of Women in the Sangam Period

Dr. P. M. Jayakala, Associate Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil- 2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14752791

Abstract

Literature tells us that women lived with dignity during the Sangam period. Women of that time were called by many names like Mangala Mahal, Manaiyal, Mellyil Mahal, Seyizhay Mahal, Veyyol, and Vasayil Mahal. Tolkappiyar says that the primary qualities of a woman are fear and modesty. Moreover, life is the most important thing for living beings in the world. But Tolkappiyar points out that modesty is better than life for women and chastity is better than wisdom. The hero says that the love of the heroine will continue in the next birth. No matter how many births she takes, loving women think that her husband should come as her husband in all births. The hero's love is revealed by the hero cooking as he likes. Literature shows that the love that women of the Sangam period had for their husbands was greater than the earth, higher than the sky and deeper than the sea. There is no better wealth for women than children. Hospitality was one of the essential customs practised by their ancestors. Women who lived in the Sangam period were also known for their bravery. The bravery of women is revealed through the mother who sent her only son to war the day after her father and husband died in the war. This article studies the merits of the Sangam Women.

Keywords: Sangam Period, Women, Progeny, Love, Chastity, Valour.

References

[1] Alex Aruldasan, N. "Velan Malir Samuka Vazhviyal." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannaddu Ayvithzh*, Thokuthi-2, Sirappithazh-3, Thokuthi-1, February-2020.
[2] Karunanithi, M, Kalaignar. *Thirukural.* Thirumakal Nilaiyam, Chennai-17, 2003.
[3] Jeyabal, R. Dr. *Aagananuru.* New Century Book House, 2014.
[4] Selvarasu, A. Dr. *Purananooru* (1 & 2). New Century Book House, 2014.
[5] Thirugnasampanthar, S. Perasiriyar. *Tholkappiyam.* Kathir Pathippagam, 2018.
[6] Nagarajan, V. Dr. *Kurunthokai*. New Century Book House, 2014.
[7] Nithiya Araventhan, Dr. *Kurignsippaddu.* New Century Book House, Chennai, 2024.
[8] Balasubramaniyan, Ku.Ve. Dr. *Nattinai*. New Century Book House, Chennai, 2014.
[9] Poornima, M. "Sanka Ilakkiyatthil Penkalin Isai Unarvu." *International Journal of Creative Research Thought (IJCRT),* Thokuthi-11, Ithazh-2, Pathippu, February-2023.
[10] Muneesmoorthy, M. *Kalitthokai*. New Century Book House, Chennai, 2024.
[11] Yogeshvari, A. "Thiru. V. Kavum Penniyach Sinthanaiyum." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannaddu Aayvithazh,* Thokuthi-2, Sirappithazh-3, Thokuthi-1, February-2020.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

சங்க காலப் பெண்களின் மாண்புகள்

முனைவர் பா. ம. ஜெயகலா, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14752791

ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலத்தில் பெண்கள் சிறப்புற்று வாழ்ந்ததை இலக்கியங்கள் நமக்குப் பறைச்சாற்றுகின்றன. அக்கால பெண்கள் மங்கல மகளிர், மனையோள், மெல்லியல் மகளிர், சேயிழை மகளிர், வெய்யோள், வசையில் மகளிர் என பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் பெண்ணின் முதன்மை குணங்களாக அச்சம், நாணம், மடம், என்கின்றார். மேலும் உலகில் வாழும் உயிரினங்களுக்கு முதன்மையானது உயிர். ஆனால் அந்த உயிரை விட பெண்களுக்கு நாணமே சிறந்தது என்றும் ஞானத்தை விட கற்பே மேலானது என்றும் தொல்காப்பியர் எடுத்தியம்புகின்றார். தலைவன் தலைவியின் அன்பானது மறுபிறவிலும் தொடரும் என்கின்றார். எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தன் கணவனே எல்லா பிறவிகளிலும் கணவனாக வரவேண்டும் என அன்புடைய பெண்கள் எண்ணுகின்றனர். தலைவனுக்குப் பிடித்தது போல் தலைவன் சமைத்துக் கொடுப்பதன் மூலம் தலைவியின் அன்பானது வெளிப்படுகின்றது. சங்க கால பெண்கள் தன் கணவனோடு கொண்ட அன்பினை நிலத்தை விட பெரிதாகவும் வானினை விட உயர்ந்ததாகவும் கடலை விட ஆழமானதாகவும் இருந்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெண்களுக்கு மக்கட்பேற்றினை விட சிறந்த செல்வம் எதுவுமில்லை. குழந்தையைப் பெற்றெடுத்து அதனை பேணி வளர்ப்பது ஒரு தாயின் பெரும் பேறாக கருதப்பட்டது. தம் முன்னோர்கள் கடைப்பிடித்த இன்றியமையாத பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பலாகும். சாகாத மருந்தாக இருந்தாலும் அதனை தாம் மட்டும் உண்பது பண்பாடில்லை. சங்க கால பெண்கள் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாகவும் இசை வல்லுநர்களாகவும் காணப்பட்டனர். பெண்களின் இசைக்கு காட்டு விலங்குகளும் மயங்கி உறங்கியதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் வீரத்திலும் சிறந்தவர்களாக விளங்கியுள்ளனர். தந்தையும் கணவனும் போரில் இறந்து விட மறுநாள் போருக்கு தன் ஒரே மகனை அனுப்பிவைத்த தாயின் வீரம் வெளிப்படுகின்றது.

குறிப்புச்சொற்கள்: சங்க காலம், பெண்கள், மக்கட்பேறு, அன்பு, கற்பு, இசை, வீரம், மகளிர்.

முன்னுரை

உலகில் வாழும் உயிரினங்களுக்கு முதன்மையானது உயிர். ஆனால் பெண்களுக்கு உயிரை விட கற்பொழுக்கமே சிறந்தது. தொல்காப்பியர் அச்சம், நாணம், மடன் என்பன

பெண்களின் முதன்மை குணங்களாக குறிப்பிடுகின்றார். சங்க கால பெண்களின் கற்பொழுக்கம், தலைவன் தலைவியரின் அன்பு, மக்கட் பேறு, விருந்தோம்பல், இசை புலமை, வீரம் என்பனவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க கால பெண்கள்

பொற்காலம் என்று போற்றப்படும் சங்க காலத்தில் பெண்கள் சிறப்புற்று விளங்கியுள்ளனர். இவர்களை மங்கல மகளிர், மனையோள், மெல்லியல் மகளிர், சேயிழை மகளிர், வெய்யோள், வசையில் மகளிர் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. இவர்கள் கற்பில் சிறந்து விளங்கினர். மக்கட்பேறு, விருந்தோம்பல், நட்பு, அன்பு, நாணம், அடக்கம் என்பன போன்ற பெண்மை குணங்களிலிருந்தும் வழுவாது வாழ்ந்தனர். ஆண்களுக்கு நிகரான கல்வியைப் பெற்று அரசவைகளில் அமைச்சராகவும் உயர்ந்து விளங்கியுள்ளனர். இசைக்கலையில் வல்லவர்களாகவும் திகழ்ந்தனர். வீரம் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். "கணத்துக்கு கணம் மாறுபடும் உணர்வே! நீதான் பெண் என்றார் அறிஞர் ஷேக்ஸ்பியர். 'அன்பிற்கு இருப்பிடமாக தியாகத்திற்கு உறைவிடமாக இருப்பவளே பெண்' என்றார் அறிஞர் மால்ஸ்டாய். 'உலகை உய்விக்க வந்த உயர்வான ஆத்மாக்களை அறிந்தவளே பெண்' என்றார் பெரும் மேதை பெர்னாட்ஷா. 'மனையாளும் தெய்வமே பெண்' என்றார் பெண்ணுரிமை பேச வந்த பெருங்கவிஞர் பாரதியார். 'தாய்மையின் தனி இருப்பிடமே பெண்' என்றார் மறைமலையடிகள். அன்பு, அறம், ஆண்மை அனைத்தின் வாழ்வும் வீற்றிருப்பது பெண்மையின் வாழ்வில் என்றார் டாக்டர் மு. வரதராசனார். " (ஞா. அலெக்ஸ் அருள் தாசன். ப. 16). இவ்வாறு பெண் குறித்து பலரும் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

மெல்லியல் என்று அழைக்கப்படும், "பெண்மைக்கு திரு.வி.க கண்டுரைத்த இலக்கணம் மகளிர் பற்றி பொதுவாக நிலவும் கருத்தினினும் சில வகைகளால் மாறுபட்டது. தனித்தன்மை வாய்ந்தது. அவர் கருத்தின் படி பெண் என்ற சொல் பால் வேறுபாட்டை மட்டும் உணர்த்துவதன்று பெண்ணுக்குரிய பண்புகளாகக் குறிக்கப்படுவதையும் சேர்த்து உணர்த்துவதாகும். இன்பமோ, நுண்ணியது. காணக் கூடாதது. காணக் கூடாத இன்பம் பெண்ணாகி நமக்கு காட்சி அளிக்கிறது. பெண்மை என்னும் இன்பத்தை ஏந்தி நிற்கும் பெண்ணை வெறும் பெண் எனக் கொள்ளாது பெண் தெய்வம் என்று போற்றலாம். இங்ஙனம் பெண்மையுடைய பெண்ணை முதன்மை யுடையவள் எனில் என்ன முழுகிப் போகும். "(அ. யோகேஸ்வரி. ப. 389). இவற்றின் மூலம் பெண்ணின் சிறப்பினை அறிய முடிகிறது.

பெண்ணின் குணங்கள்

தொல்காப்பியர் பெண்ணின் முதன்மை குணங்களாக அச்சம், நாணம், பேதமை என்கிறார். இதனை,

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல். பொருள். 96)

இந்நூற்பா வழி அறியலாம். பேதமை குணம் கொண்ட பெண்டிரின் இயல்புகளை,

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பா லான (தொல். பொருள்.206)

இந்நூற்பாவழி தொல்காப்பியர் சுட்டியுள்ளார். உடலாலும் உள்ளத்தாலும் அடக்கமாயிருத்தல், மனம் அலைபாயாமல் அமைதியுற்று இருத்தல், மனங்கோடாமை, செய்ய தகுந்தவற்றைக் கூறுதல், நன்மை தீமை தருவனவற்றை அறிதல், தம் உள்ளக் கருத்தைப் பிறர் அறிய முடியாமை இத்தகைய அறுவகைப் பண்புகளையும் பெண்டிருக்கு உரியன என்கிறார். தலைவன் தலைவியருக்கு ஒத்திருக்கும் பண்புகளாக தொல்காப்பியர் கூறியதை,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு

உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திரு

என முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல். பொருள். 269)

இந்நூற்பா வழி அறிய முடிகின்றது.

கற்பொழுக்கம்

மனையுறை மகளிரின் மாண்புகளைத் தொல்காப்பியர் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதனை,

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்.பொருள். 150)

இந்நூற்பா எடுத்துரைக்கின்றது. கற்பு, பேரன்பு, இல்லற ஒழுக்கம், பொறுமை, அடக்கமுடைமை, விருந்தினரைப் போற்றுதல், உறவினரைப் பாதுகாத்தல் என்பனவற்றை பெண்களின் மாண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

உலகில் வாழ்வோருக்கு எல்லா பொருட்களையும் விட சிறந்தது உயிர். ஆனால் அந்த உயிரை விடப் பெண்களுக்கு நாணம் சிறப்புடையது. நாணத்தை விட கற்பு சிறந்தது. இதனை,

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று எனத்

தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு

காமக் கிழவன் உள்வழிப் படினும்

தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்

ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே (தொல். பொருளியல். 111)

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இந்நூற்பா நமக்கு எடுத்துரைக்கின்றது.

அன்பு

தலைவன் தலைவியரின் அன்பானது பிறவிதோறும் தொடரும் என்பதனை,

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49:3-5)

இப்பாடலடி வழி அம்மூவனார் எடுத்துரைக்கின்றார். இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருவதாயினும் நீயே என் கணவன். நான் உன் மனம் ஒத்தவளாவேன் என்றாள் தலைவி. இதன் மூலம் கற்பொழுக்கமுடைய பெண் எத்தனை பிறவி எடுத்தாலும் தன் கணவனே தனக்கு எல்லா பிறவியிலும் கணவனாக வரவேண்டும் என எண்ணுகிறாள்.

தலைவனுக்காக முற்றிய தயிரை தலைவியானவள் தன் மெல்லிய விரல்களால் பிசைந்து குவளையைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை நெருங்கி படர இனிய புளிப்புச் சுவையுடைய குழம்பினைத் தலைவி தானே சமைத்து தனது கணவனுக்குப் பரிமாறினாள். அவன் அதனை உண்டு இனிது என புகழ்ந்துக் கூறியதை,

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., 167)

இப்பாடலில் கூடலூர் கிழார் பறைசாற்றுகின்றார். தலைவனுக்காக தலைவியானவள் சிரமம் பார்க்காமல் அவனுக்குப் பிடித்தது போல் சமைத்துக் கொடுக்கின்றாள். இதன் மூலம் சங்க கால பெண்கள் தங்கள் கணவன் மேல் வைத்த அன்பினை அறிய முடிகின்றது. தலைவனோடு தலைவிக் கொண்ட அன்பின் சிறப்பினை,

நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்., 3)

இப்பாடல் வழி தேவகுலத்தார் அறிவுறுத்துகின்றார். தலைவனோடு தலைவி கொண்ட அன்பானது நிலைத்த விட அகலத்தால் பெரியது. வானை விட உயர்ந்தது. கடலை விட ஆழமானது என்கிறார். ஒரு பெண் தன் தலைவன் மேல் கொண்ட அன்பினை இதனை விட சிறப்பாக எவராலும் கூற இயலாது.பிசிராந்தையார் வயதான பின்பும் தன் முடி நரையின்றி இருப்பதற்கு காரணம் மாட்சிமையுடைய தன் மனைவி என்கிறார். இதனை,

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர் (புறம்., 191:1-3)

என்னும் பாடலடிகளில் எடுத்துரைக்கின்றார். இல்லாள் மாட்சிமை பொருந்தியவளாக இருந்தால் தலைவனுக்கு எக் கவலையும் இருக்காது. அதனால் எளிதில் நரை வராது என்பதனை இப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது இதன் மூலம் ஆணின் வாழ்வு அவனது மனைவியின் அன்போடு இணைந்துக் கலந்திருப்பதை காண முடிகின்றது.

மக்கட்பேறு

இல்வாழ்க்கையில் நல்ல அறிவு பெற்ற மக்களைப் பெறுதல் பெரும்பேறாக கருதப்பட்டது. பெண்களுக்கு இதைவிட சிறந்த செல்வம் எதுவுமில்லை. தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல் கேட்காதவர்கள் தான் குழலோசை, யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை என்று கூறுவர். இதனை,

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர். (குறள்: 66)

இக்குறள் வழி வள்ளுவர் சுட்டுகின்றார். பெண்ணின் தலையாய கடமைகளில் ஒன்று குழந்தைப் பேறு இதனை,

ஈன்று புறந்தரு லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே. (புறம்., 312)

இப்பாடலடிகள் மூலம் அறியலாம். குழந்தையைப் பெற்றெடுத்து அதனை பாதுகாத்துப் பேணி வளர்ப்பது ஒரு தாயின் பெரும் பொறுப்பாகும். இதனை நாம் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

வினைவயிற் பிரிந்துச் சென்ற தலைவன் குறித்துச் சொல்லிச் சென்ற பருவத்தே தப்பாது மீண்டு வந்தான். அதனால் மகிழ்ச்சியுற்ற தோழி தலைவனிடம் நீ வந்து நின்ற தன்மை, தெய்வத்தன்மை பொருந்திய கற்புடன், குடிக்குச் சிறப்பினைத் தரும் மகனைப் பெற்ற தலைவிக்கு மட்டும் அன்று,எனக்கும் இனிமையைத் தந்தது என்று கூறியதை,

கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய
புதல்வற் பயந்த புகழ்மிக சிறப்பின்
நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்
இனிதுஆ கின்றால் சிறக்க நின் ஆயுள் (அகம்.,184: 1-4)

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இவ்வடிகள் எடுத்து ரைக்கின்றன. இதன் மூலம் குடிக்குச் சிறப்பு தருவது மக்கட்பேறு என்பதனை அறிய முடிகின்றது.

விருந்தோம்பல்

தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் உலகுக்கு முன்னோடியாக விளங்குபவர்கள். அவர்கள் கடைப்பிடித்த இன்றியமையாத பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பலாகும். சாதாரண குடிமக்கள் மட்டுமின்றி அரசர்களும் விருந்தோம்பலில் சிறந்தவர்களாக விளங்கினர். இல்லறத்தின் சிறப்புகளில் ஒன்று விருந்தினரை மனம் கோணாமல் வரவேற்று உபசரிப்பதாகும். அனிச்சம் எனப்படும் பூ முகர்ந்தவுடன் வாடி விடக் கூடியது அது போல சற்று முகம் கோணி வரவேற்றாதலே விருந்தினர் வாடி விடுவர். இதனை,

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள். 90)

இக்குறள் எடுத்துரைக்கின்றது. விருந்தினராக வந்தவரை வெளியே விட்டு விட்டு சாகாத மருந்தாக இருந்தாலும் அதனை தான் மட்டும் உண்பது பண்பாடல்ல என்பதனை,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (குறள். 82)

இக் குறள்வழி வள்ளுவர் உணர்த்தியுள்ளார். தலைவன் தேர் பாகனிடம் இரவு நேரத்தில் விருந்தினர் வந்தாலும் அவர்களை சிறப்புடன் வரவேற்று நல்லறம் செய்பவள் கற்பினையும் மென்மையான இயல்பையும் இளமையையும் உடைய என் தலைவி என்றான். இதனை,

அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே (நற்., 142: 9-11)

ஒளிரும் கூந்தலையும் ஒளி வீசும் நெற்றியினையும் உடையபெண் நடுகல்லைத் தொழுது, இடைவிடாமல் விருந்தினரை நான் எதிர்கொள்ள பெறுவேனாக என்று வேண்டியதை,

களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
யரிதுண் கூவ லங்குடிச் சீறூ
ரொலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெருகதில் யானே யென்னையு
மொ-------- வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே (புறம்., 306)

என்னும் பாடல் நமக்கு பகர்கின்றது. விழா காலங்களில் ஊரில் வாழ்வோர் தங்கள் வீடுகளுக்கு வருவோர்க்கு வரையாது உணவளித்துள்ளனர்.விருந்துண்டு எஞ்சிய உணவினைத் தலைவி வழங்க, தான் உண்ணும் இன்பமே சிறந்தது என தலைவன் எண்ணியதை,

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வருநர்க்கு வரையா, வளநகர்ப் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலர்உண
பைந்திணம் ஒழுகிய நெய்மலி அடிசில்
வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது (குறிஞ்சி., 202-207)

இவ்வடிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

இசை வல்லுநர்

பொற்காலம் என்றழைக்கப்படும் சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக காணப்பட்டதல்லாமல் இசை வல்லுநர்களாகவும் காணப்பட்டனர். இசையும் பாட்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்துக் காணப்பட்டன. பெண்களின் இசை திறன் அவர்களுக்கு மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. "பெண்களின் பிறப்பு முதல் ஒவ்வொரு நகர்விலும் இசைக்கலை இயைந்து காணப்படுகின்றது. குடும்பம், சமூகம் இவற்றின் மகிழ்ச்சிக்கு இசைக்கலை சிறந்த ஒரு துணையாக நிற்கின்றது. அதன் முழுமைக்கும் சாத்தியமானவள் பெண் ஆவாள். எனவே இலக்கியங்களில் பல நிலைகளில் பெண்களின் இசை உணர்வு பதிவாகியுள்ளது. சங்க கால மகளிர் கலைகளில் வல்லவராகத் திகழ்ந்தனர். வாழ்க்கையில் மகிழ்ச்சி விளைவிக்கும் கலைகள் பலவற்றையும் தமிழ் மகளிர் ஐந்தாம் வயது நிரம்பிப் பன்னிரெண்டாம் வயது முடியவுள்ள ஏழாண்டுகளிலும் நன்றாகக் கற்றுணர்ந்தனர் என்கின்றார் கா வெள்ளை வாரனார். எனவே இசைப் பயிற்சியும் மகளிருக்கு இன்றியமையாததாக கருதப் பெற்றனர்" (மு. பூர்ணிமா. ப. 536). வளைந்த தண்டனையுடைய யாழோடு பல இசைக்கருவிகளும் இசைக்க ஆம்பல் குழலை ஊதி இசை எழுப்பி மணியை, அடித்து காஞ்சிப் பண்ணைப் பாட எண்ணியதை,

தீம் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க
கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசை மணி எறிந்து, காஞ்சி பாடி,
நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ
காக்கம் வம்மோ- காதல் அம்தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம் பொறிக் கழற்கால் நெடுந்தொகை புண்ணே (புறம்., 281)

இப்பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் தலைவி, தோழியருடன் காஞ்சிப் பண்பாடியதை அறிய முடிகின்றது. தலைவியும் தோழியும் பாறையால் ஆகிய உடலில் ஐவனை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நெல்லையிட்டு யானையின் தந்தத்தால் ஆன உலக்கையால் குற்றி முருகப்பெருமானை புகழ்வது போல தலைவனைப் புகழ்ந்து பாடியதை,

வேங்கை தொலைத்த வெறிபொறி வாணரத்
தேந்து மருப்பி னின்வண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
மையினை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவா நாம்...
....கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
வாடமை வெற்ப னளித்தக்காற் போன்றே (கலித்., 43 (7))

கானவன் காவற்பரணிலே கள்ளுண்டு களித்து இருந்தான். மயிர்ச் சாந்து தடவப் பெற்ற பரந்த கரிய தன் கூந்தலை மெதுவாக அசைந்து வரும் காற்றுப் புகுந்து உலர்த்த அவனுடைய மனைவி கொடிச்சியானவள் தழைத்து நீண்ட அக்கூந்தலைத் தன் கையினால் பெயர்த்துக் கோதியவளாய்ப் பெரிய மலைப் பக்கத்த குறிஞ்சிப் பாடலைப் பாடினாள். அப்பாடலைக் கேட்ட இளங்களிறு தான் உண்ண விரும்பி வந்த தினைக் கதிரினை உண்ணாமல், கண்களில் உறக்கம் வரப்பெற்று அவ்விடத்திலேயே உறக்கம் கொண்டுள்ளது இதனை,

ஒலியல் வார் மயிர் உளரினள்கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட
குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது
படாஅப் பைங் கண்பாடு பெற்று, ஒய்யென
மறம் புகல் மழ களிறு உறங்கும் நாடன் (அகம்., 102: 5-9)

இவ்வரிகள் சுட்டுகின்றன. பெண்களின் இசைக்கு காட்டு விலங்குகளும் மயங்கியதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது பெண்கள் இசையிலும் புலமை பெற்று விளங்கியுள்ளனர்.

வீரம்

சங்க கால ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் வீரம் உண்டு தன் வயிற்றில் பிறந்த மகன் வீரம் உடையவனாக விளங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறந்து கிடந்த மகனை கண்ட தாயின் மார்பில் பால் சுரந்தது. போரில் பின்னிட்டு ஓடாத உறுதிமிக்க வீரன் ஒருவனின் உடல் கண்டு அவனை ஈன்ற தாய் அடைந்த பேற்றினை,

கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வெந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி,
தோடு உகைத்து எழுதரூஉ, துரந்து எறி ஞாட்பின்
வரு படை போழ்ந்து வாய்ப் பட விலங்கி
கிடைப் படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி
வாடு முலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே (புறம்., 295)

இப்பாடல் விளக்குகின்றது. மறக்குடியில் பிறந்த மகள் ஒருத்தியின் துணிவையும் வீரத்தையும்,

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதில் மகளிராதல் தகுமே
மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை…
…வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே (புறம்., 279)

இப்பாடல் எடுத்துரைக்கின்றது. முதல் நாள் போரில் தந்தையையும் மறுநாள் போரில் கணவனையும் இழந்த பெண் தன் ஒரே மகனின் கையில் வேலை கொடுத்து வெண்மையான ஆடை உடுத்தி பரந்து கிடந்த குடுமி தலைக்கு எண்ணெய் தடவி போர்க்களம் நோக்கி போய் வா என்று கூறி அனுப்பினாள். இதன் மூலம் பெண்களின் வீரத்தை அறிய முடிகின்றது.

முடிவுரை

சங்ககால பெண்கள் கற்பொழுக்கத்தில் சிறந்தவர்களாக இருந்தனர். கணவனுக்கு ஏற்றம் தரும் வகையில் ஒழுக்கமுடையவர்களாகவும், அன்பானவர்களாகவும் திகழ்ந்தனர். பெண்கள் இல்வாழ்க்கையில் நல்ல அறிவு பெற்ற மக்களைப் பெறுதலைப் பெரும்பேறாக எண்ணினர். பெண்ணின் தலையாய கடமைகளில் குழந்தைப்பேறு இன்றியமையாத தாகும். நம் முன்னோர்கள் கடைப்பிடித்த பண்பாட்டில் விருந்தோம்பலும் ஒன்றாகும். சாதாரண குடிமக்கள் மட்டுமின்றி அரசர்களும் விருந்தோம்பலில் சிறந்தவர்களாக விளங்கியதை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. சங்க கால பெண்கள் இசையிலும், கலையிலும், கல்வியலும், வீரத்திலும் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர். பெண்களின் இசைக்கு இளங்களிறு தான் உண்ண விரும்பி வந்த தினைக் கதிரினை உண்ணாமல் உறக்கம் கொண்டதை இலக்கியங்கள் நமக்கு பறைச் சாற்றுகின்றன.

குறிப்புகள்

[1] அலெக்ஸ் அருள் தாசன், ஞா. "வேளாண் மகளிர் சமூக வாழ்வியல்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.* தொகுதி-2, சிறப்பிதழ்-3, தொகுதி-1, பிப்ரவரி-2020.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[2] கருணாநிதி, மு. கலைஞர். *திருக்குறள்*. திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17, 2003.

[3] செயபால், இரா. முனைவர். *அகநானூறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2024.

[4] செல்வராசு, அ. முனைவர். *புறநானூறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[5] திருஞானசம்பந்தம், ச. பேராசிரியர். *தொல்காப்பியம்*. கதிர் பதிப்பகம், திருவையாறு-04, 2018.

[6] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை*. (1 & 2 தொகுதி). நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2014.

[7] நித்தியா அறவேந்தன், முனைவர். *குறிஞ்சிப்பாட்டு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[8] பாலசுப்பிரமணியன், கு. வெ. முனைவர். *நற்றிணை*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2014.

[9] பூர்ணிமா, மு. "சங்க இலக்கியத்தில் பெண்களின் இசை உணர்வு." *International Journal of Creative Research Thoughts (IJCRT)*, தொகுதி-11, இதழ்-2, பதிப்பு- பிப்ரவரி-2024.

[10] முனீஸ்மூர்த்தி, மு. *கலித்தொகை*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[11] யோகேஸ்வரி, அ. "திரு.வி.காவும் பெண்ணியச் சிந்தனையும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி-2, சிறப்பிதழ்-3, தொகுதி-1, பிப்ரவரி-2020.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Majestic Wife Who Shows the Kural

Dr. S. Jeyakumari, Associate Professor, Tamil Research Centre,
Vivekananda College, Agastheeswaram - 629 701, Kanyakumari District, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0004-9329-6660
DOI: 10.5281/zenodo.14752872

Abstract

"Thirukkural", a universal scripture that is revered by the world, is a special book that has been translated into most languages in the world. It is a guide to the best moral principles that apply to all social structures. It specifies the practices that people should follow for wellbeing. "Thirukkural" says that for a society to progress, for a home to prosper and for a family to prosper, women should take precedence. Valluvam explains the benevolent characteristics of a woman who is excellent at homemaking. A woman who is endowed with good qualities and good deeds suitable for a household and lives according to the income of her husband is like a queen to him. She will be an excellent companion for him. In addition to the concepts of Valluvam, caring for her husband and children, being hospitable, respecting monks, giving food to the poor, cooking deliciously, protecting the house and belongings and being friendly, good qualities and good deeds are the great virtues of women. This article examines how women are described as those who are capable of ruling the home with moral virtues.

Keywords: Wife, Chaste woman, Good Children, *Thirukkural*, Valluvar.

References

[1] Ilangovadigal. *Silappathikaram*, Uma Pathippagam, Chennai, 2006.
[2] Karunanithi, M. Kalaignar. *Thirukkural*. Thirumakal Nilaiyam, Chennai-17, 2003.
[3] Sivgnanam, M.P. Silappathikara Aayvurai, Poonkodi Pathippakam, Chennai-4, 2001.
[4] Parimelazhagaar Urai, *Thirukkural.* Gangai Puthaga Nilayam, Chennai, 2022.
[5] Madurai Mudaliar, K. *Naladiyar.* Pari Nilayam. Chennai, 2019.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

குறள் காட்டும் மாட்சிமை பொருந்திய மனையாள்

முனைவர் சு. ஜெயக்குமாரி, இணைப் பேராசிரியை, தமிழ் உயராய்வு மையம்,
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம் - 629 701, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0004-9329-6660
DOI: 10.5281/zenodo.14752872

ஆய்வுச் சுருக்கம்

உலகம் போற்றும் பொதுமறையான திருக்குறள் பெரும்பாலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த நூலாகும் எல்லா சமூகக் கட்டமைப்பிற்கும் பொருந்தும் சிறப்பம்சங்களைக் கொண்ட மிகச்சிறந்த அறநெறி முறைகளை போற்றும் கையேடாக விளங்கக்கூடிய திருக்குறள் மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை மிகச் சிறப்பாக குறிப்பிடுகிறது. ஒரு சமூகம் முன்னேற, இல்லம் சிறக்க, குடும்பம் மேலோங்க பெண்கள் முதன்மை பெறுகின்றனர். அவ்வாறு இல்லறம் சிறந்தோங்க சிறப்புடன் திகழும் பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்த சிறப்புகளை வள்ளுவம் மிகச்சிறப்பாக எடுத்துரைக்கிறது. இல்லறம் ஓங்க பெண்கள் இல்லறத்தை ஆளும் தன்மையுடையவர்களாக விளங்கும் தன்மைகளை கூறியுள்ள விதமாக குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

குறிப்புச்சொற்கள்: மனையாள், கற்புடை மகளிர், நன்மக்கள் பெறுதல், *திருக்குறள்*, வள்ளுவர்.

முன்னுரை

உலகப் பொதுமறை என்னும் பெருமைக்குரிய திருக்குறள் எல்லைகளைக் கடந்து எல்லோராலும் போற்றப்படும் நூலாகும். தனிமனிதன் உயர்வுபெறச் செய்ய வேண்டிய அறச்செயல்களை எக்காலத்திற்கும் பெருந்தும்படி குறட்பாக்களில் அமைத்துள்ளது திருக்குறளின் சிறப்பு. சமூக நடைமுறைகள் யாவற்றுள்ளும் தலைசிறந்தது இல்லறம் நடத்துதலே ஆகும். அவ்வில்லறம் தலைசிறந்ததாக அமைய இல்லாள் இன்றியமையாதவளாகிறாள். மனையாள் கணவரை உயிரெனப் பேணியும், வலிமை வாய்ந்த கற்பினின்று வழுவாமலும், குழந்தைச் செல்வத்தை மாண்புறும் வகையில் பேணியும் வளர்த்தும் வருபவள். குடும்பம் சிறக்க முதன்மைத் தன்மை வகிப்பவள் மனைவியே ஆவாள். சீரிய மனையாள் வாய்த்துவிட்டால் இல்லறம் சிறக்கும். இல்லையேல் பாலைவனத்திற்கு ஈடாக இல்வாழ்வு வறண்டு போகும்.

மனையாள்

'மனை' என்னும் சொல் வீடு என்று பொருள்படும். இதிலிருந்து மனையாள் அதாவது, மனையை ஆள்பவள், மனைவி போன்ற சொற்கள் தோன்றின. மனை மாட்சிமை பெற, உயரிய பண்புநலன் வாய்ந்த மனைவியே அடிப்படையாவாள்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்

வளந்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள். 51)

இல்லறத்திற்கேற்ற நற்குண நற்செய்கைகள் உடையவளாய், தன்னை மணந்து கொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவள் அவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாவாள்.

கணவனையும், குழந்தைகளையும் பேணுவதோடு, அன்பாக விருந்தோம்புதலும் துறவியர்களைப் போற்றுதலும், இரப்போர்க்கு ஈதலும் சுவையாக சமைத்தலும் வீட்டையும் பொருட்களையும் பாதுகாத்தலும், நட்புடன் பழகுதலும் நற்குணங்களும், நற்செய்கைகளும் பெண்களின் பெருங்குணங்கள் ஆகும்.

மனைக்கு விளக்கம் மடவாள்,

மடவாள் தனக்கு தகைசால் புதல்வர்,

மனக்கினிய காதல் புதல்வர்க்குக் கல்வியே

கல்விக்கும் ஓதின்

புகழ்சால் உணர்வு (நான்மணி., 101)

மனைவி வீட்டுக்கு ஒளி தரும் விளக்கு; குழந்தைகளுக்கு கல்வி தரும் விளக்கு எனப் பல பரிமாணங்களை உடையவளாகத் திகழ்கிறாள். ஒருவன் செல்வம், அதிகாரம் போன்றவற்றில் எவ்வளவு சிறந்தவனாக இருந்தாலும், அவனுடைய மனைவி இல்லறத்திற்கேற்ற நற்குண செய்கைகள் பொருந்தியவளாக இல்லாவிட்டால், அச்சிறப்புகள் சிறப்புடையதாகக் கொள்ளப்பட மாட்டாது. இதனை,

மனைமாட்சி இல்லாள் கண் இல் ஆயின் வாழ்க்கை

எனை மாட்சித்து ஆயினும் இல் (குறள். 52)

என வள்ளுவம் விளக்குகிறது.

கணவனின் சொல்கேட்டு நடக்காமை மற்றும் குடும்பத்தை கவனிக்காமல் புறக்கணித்தல் இன்றைய காலகட்டத்தில் பெருகிக் கொண்டே வருகின்றது. இல்லறத்தான் சிறப்புப் பெற இல்லாளும் சிறப்புடையவளாக விளங்க வேண்டும். தனக்கும் தன் கணவனுக்கும் புகழை விரும்பிய மனைவியைப் பெறாதவனுக்குத், தம்மை பழித்துரைக்கும் பகைவர் முன் ஆண் சிங்கம் போல் இறுமாப்புடன் நடக்கும் பெருமித நடை இல்லை. அவர்கள் முன்னிலையில் தலைகவிழ்ந்து போகக் கூடிய தாழ்வு நிலையே அமையும்.

புகழ் புரிந்தில்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன்

ஏறுபோல் பீடு நடை (குறள். 59)

கற்புடைய மனைவியாலேயே கணவன் மதிக்கப்படுதலை, இலக்கியங்கள் பலவும் எடுத்தியம்புகின்றன. மனையாளை முன்னிலைப்படுத்தி, அவளால் பெருமை பெற்ற கணவனை,

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

செயிர் தீர் கற்பிற் சேயிழை கணவ (புறம்., 3)

அறம்பாடிற்றே ஆயிழை கணவ (புறம்., 34)

என்று புறநானூறும்,

சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ (பதிற்., 88)

என்று பதிற்றுப்பத்தும் எடுத்தியம்புகிறது. கற்புடைய மனைவியால் அறம் பொருள் இன்பம் முதலிய பேறுகள் வந்து சேரும். வாழ்நாளும் சிறப்புப் பெறும். தன் கற்பையும், தன் கணவனையும் காத்து அதற்கான மதிப்பினையும் பேணி பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் சிறிதும் சோர்வுறாதவள் இல்லறத்திற்குச் சிறந்தப் பெண்ணாவாள். இத்தகையப் பெண்ணே இச்சமூகத்திற்குத் தேவை. இத்தகைய குடும்பத் தலைவிகளால் நாடும் வீடும் நலம் சூழும்.

இல்லறத்திற்கு ஏற்றவள்

இல்லறத்திற்கு ஏற்ற பெண்ணுக்கான தகுதியை வள்ளுவர் மிக அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள். 56)

அதாவது, தன் கற்பையும் உடல்நலத்தையும் காத்து தன் கணவனையும் உணவு, மருந்து முதலியவற்றால் பேணிப் பாதுகாத்து தம் இருவரையும் பற்றிய தகுதி வாய்ந்த உலக மதிப்பையும் காத்து பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள், இல்லறத்திற்குச் சிறந்த பெண்ணாவாள் என இல்லறத்தை நடத்திச் செல்ல பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணநலன்களை மிக அழகாக எடுத்துரைக்கிறார். பெண்களுக்கு இல்லறத்தில் ஆண்களைவிட மிக அதிகமான கடமைகள் உண்டு. பெரியோர்களைப் பராமரித்தல், குழந்தைகளைப் பராமரித்தலோடு எதிர்கால வாழ்வை வளமாக்கும் வகையில் அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து அறநெறிமுறைப்படி குழந்தைகளை வளர்த்தல் ஆகிய பெரும்பணிகளுக்கிடையே, தான் கற்ற கல்வி பயன்படும் வகையில், சமூகத்திற்குத் தன் பங்களிப்பைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்ற பட்சத்தில், எல்லா சூழ்நிலைகளையும் சமாளித்து எல்லா கடமைகளையும் சோர்வின்றி திட்டமிட்டு செயலாற்றுபவள். செய்யும் செயல்பாடுகளில் சிறிதும் தொய்வின்றி தேனீ போல சுறுசுறுப்புடன் செயல்படும் பெண்கள் எல்லோராலும் போற்றப்படுவார்கள்.

இத்தகைய இல்லறப் பண்புகளுடன் தன் கணவனின் பொருள் வளத்துக்குத் தக்கவாறு நற்பண்புகளுடன் குடும்பம் நடத்தும் மனைவி கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாக அமைவாள். இதனை வள்ளுவர்,

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள். 51)

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்கிறார். நற்பண்பு உடைய ஒரு பெண் ஒருவனுக்கு மனையாளாக வாய்த்து விட்டால் அவன் உலகில் பெறும் பேறு வேறில்லை. எல்லாமும் உடையவனாக அவன் வாழ்க்கை நிறைவாக அமையும்.

கற்புடை மகளிர்

பெண்களுக்கு கற்பு உயிர் போன்றது. அது உயிர்போல் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். உயிர்போனால் மீண்டு வாராததைப் போல, கற்பிழந்தால் மீளாது. உயிர்போன உடலை, யாரும் விரும்பார். அது இழிவாகக் கருதப்படும். அதற்கு ஈடாக கற்பிழந்தப் பெண்ணின் நிலையும் கூறப்படும். எனவே கற்பினைக் காக்க நல்ல நெறியில் பெண்கள் விளங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். கற்புடைய மகளிர் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்பட்டனர். அவர்கள் மழையைப் பெய்வாயாக என்று உரைத்தால் மழை பொழியும். தொன்றுதொட்டு தொழுது வரும் தெய்வத்தைத் தொழாமல் தன் கணவன் பாதங்களைத் தொட்டுக் கும்பிடும், கற்புடைய மனைவி பெய்யென்று சொன்னவுடன் மழை பெய்யும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள். 55)

பெண்ணிடத்து கற்பு என்னும் கலங்காத நிலை நீங்காமல் நிலைபெற்று இருத்தல் வேண்டும். இத்தகைய தன்மை உடைய மனைவியைப் பெற்றவனுக்கு இவ்வுலகில் வேறு தகுதியுடைய எப்பொருட்களும் இருக்க முடியாது. இதனை,

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் (குறள். 54)

என உரைக்கிறார் வள்ளுவர். சிலப்பதிகாரமும், பத்தினிப் பெண்கள் இருக்கும் நாட்டில், வானம் பொய்க்காமல் மழைதரும்; வளம் பிழைப்பில்லாமல் ஓங்கி நிற்கும் என எடுத்துரைக்கிறது.

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு (சிலம்பு., 15, வரி. 145-147)

கணவனைப் போற்றும் பெண்கள் மண்ணுலகத்தில் மட்டுமன்றி விண்ணுலகத்திலும் சிறப்படைவர்.

நன்மக்கள் பெறுதல்

இல்வாழ்க்கையினால் கிடைக்கும் பெரும் பேறே குழந்தை செல்வம் தான். குழந்தைப் பேறு தான் ஒரு பெண்ணிற்குப் பெருஞ்சிறப்பை நல்குகின்றது. இல்வாழ்க்கையைப் பூர்த்தி செய்யும் அணிகலன் நல்ல பண்புடைய மனையாளும் குழந்தைப் பேறுமே ஆகும். இதனை,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள். 60)

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்னும் குறள் எடுத்தியம்புகிறது.

இம்மையிலும் மறுமையிலுமாக எதிர்காலத்தில் தம் மக்கள் தமக்கு செய்யக் கூடிய நன்மையை எதிர்நோக்காமல் அவர்களை குழவிப் பருவத்திலும், பிள்ளைப் பருவத்திலும் சிறந்த செல்வமாகப் பாராட்டுவது பெற்றோர் வழக்கம். அந்த குழந்தைகளைச் சிறப்புடன் வளர்த்தெடுக்க வேண்டும். அப்பண்புடைய நல்ல குணங்களை உடைய மக்களைப் பெற்றால், அதுவே எல்லா பிறவிகளிலும் நமக்கு இன்பம் பயக்கும் துன்பங்கள் என்றென்றைக்கும் அணுகாது.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் (குறள். 62)

இந்நிலை உருவாக, பெண் சிறப்புடையவளாக இருக்க வேண்டும். அப்போது தான் குடும்ப உறவுகள் பலப்படும்.

நல்ல மனையாள் பெறற்கரிய பெரும்பேறு

பொது வாழ்வில் தலைவனோ, தலைவியோ சிறந்தோங்க வேண்டுமாயின் வாழ்க்கைத் துணை சிறப்பாக அமைய வேண்டும். ஏனெனில், இவ்வுலகில் ஒருவன், மனையாளோடு சேர்ந்து வாழும் குடும்ப வாழ்வே முதலிடம் பெறுகிறது. கணவனின் உள்ளக் குறிப்பறிந்து செயல்படுவதோடு, வரவிற்கு ஏற்றாற் போல் செலவினை மேற்கொள்ளும் தன்மை உடையவளாக இருத்தல் வேண்டும். அஃதோடு தன் கணவனுக்குத் தொண்டு செய்யும் நல்லுள்ளம் உடையவளாக இருத்தல் வேண்டும். அத்தகைய பெண்கள், தேவருலகில் அவர்களால் பெருஞ்சிறப்புச் செய்யப்படும் தகுதியுடையவர்களாகத் திகழ்வாள்.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு (குறள். 58)

மேலும்,

மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்
காண்டற்கு அரியதோர் காடு (நாலடி., 361)

என்னும் பாடலில் பெண்ணின் பெருமையை எடுத்துரைக்கிறது. எவ்வளவு பொருளுடையவனாக ஆடவன் இருப்பினும், பெருமை பொருந்திய மனைவி வாய்க்கப் பெற்றால் மட்டுமே வீடு வீடாகத் திகழும். இல்லையேல் காட்டிற்கு சமமாகும்.

ஒருவனுடைய மனைவி நற்செய்கைச் சிறப்புடையவளானால் அவனுக்கு இவ்வுலகில் 'இல்லாதது' என்று எதுவும் இல்லை. மாறாக அம்மனைவி சிறப்பில்லாதவளாக இருந்தால் அவனுக்கு இவ்வுலகில் 'உள்ளது' என்று எதுவும் இல்லை. பெண்கள் சிறப்பும், நற்குணமும் பெற்றுத் திகழ்ந்தால், அக்குடும்பம் சிறந்தோங்கும்.

குறள் காட்டும் பெண்மை குறித்த இச்செய்திகள், பெண்ணியப் பார்வை கொண்டோருக்கு மூடத்தனமாக ஏற்றுக் கொள்ளவியலாத கருத்துக்களாகத் தோன்றலாம்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஆனால், இன்றைய சமூகச் சூழலை வைத்துப் பார்க்கும் போது, சமூகத்தில் அதிகரித்து வரும் குற்றங்கள், இளைஞர்கள் சீரழிந்து நிற்கும் நிலைகள் ஆகியவை, வரம்பின்றி பலரும் வாழும் சூழல்களை ஏற்படுத்தியிருப்பதாக உணர முடிகிறது. இவற்றைக் களைய புதுமையான சமூகத்தை உருவாக்கப் பெண்களால்; சிறந்த இல்லத் தலைவிகளால் மட்டுமே முடியும். சிறுவயது முதலே ஆண், பெண் பாகுபாடின்றி சமூகத்தில் தலைமைப் பண்புடையவர்களாகக் குழந்தைகளை அறவழியில் உருவாக்க பெண்ணின் வளர்ப்பும், அவளின் அரவணைப்பும், ஆலோசனைகளும், நற்குணங்களும் உயர் கற்பும், சீரிய ஒழுக்கமும் துணை நிற்கும் என்பதில் வியப்பில்லை.

குறிப்புகள்

[1] இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*. உமாபதிப்பகம், சென்னை, 2006.
[2] கருணாநிதி, மு, கலைஞர். *திருக்குறள்*. திருமகள் நிலையம், தி.நகர். சென்னை-17, 2003.
[3] சிவஞானம், ம,பெ. *சிலப்பதிகார ஆய்வுரை*. பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, 2001.
[4] பரிமேலழகர் உரை. திருக்குறள். கங்கை புத்தக நிலையம், சென்னை, 2022.
[5] மதுரை முதலியார், கு. *நாலடியார்*. பாரி நிலையம், சென்னை, 2019.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

The Life of the Female Friend in *Kalithogai*

Dr. K. S. Jaya Shree, Assistant Professor in Tamil, Lekshmipuram College Arts & Science Neyoor, Kanniyakumari District,Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0008-2501-7753
DOI: 10.5281/zenodo.14752809

Abstract

There are many old traditions found in Sangam literature. In Sangam literature, love is the state where the minds of the hero and the heroine who fall in love are united. The one who supports the love of the leader and the beloved is the female friend. The Agam tradition calls the female friend 'Nannar Makkal'. The female friend plays a special role in the life of the beloved. She acts as a medium between the leader and the beloved. She helps the beloved in her love life. No other information is known about the birth, marriage, or life of the female friend. She is seen as a character created for the leader and the success of the beloved's love. She cares for the beloved very keenly from her childhood. Sangam literature is mostly internal in meaning. It surpasses time. The hero who is saddened by the separation will come quickly to the heroine and soothe her worries. The female character called the friend is the one who takes care of the heroine's welfare in all walks of her life. This study shows through the information of the female friend how she helps the beloved to get a safe heart at times of turbulence.

Keywords: Sanga Ilakkiyam, Kalithogai, Kathal, Thalaivan, Thalaivi, Thozhi, Sevili, Nattai

References

[1] Dasan, M. *Tolkappiya Kalanjiyam Porulattathikaram.* Abila Publishing House, Melappottakkuzhi, Teruvukkade Mail, Kumari District- 629 157, 2011
[2] Puliyurkesigan. *Kalithogai.* Jeeva Publishing House, Chepauk, Chennai – 600005, 2012.
[3] Puliyurkesigan. *Thirukkural.* Poombukhar Publishing House, Chennai- 600 008.
[4] Manavalan, A. A. *Sanga Ilakiyam.* New Century Book House, Chennai, 2009.
[5] Viswanathan, A. *Kalithogai.* New Century Book House, Chennai, 2009.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

கலித்தொகையில் தோழியின் வாழ்வியல்

முனைவர் கு. ச. ஜெயஸ்ரீ, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், குமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-2501-7753
DOI: 10.5281/zenodo.14752809

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியப் பாட்டுகளில் காணப்படும் பழைய மரபுகள் பல உண்டு. சங்க இலக்கியங்களில் காதல் கொள்ளும் தலைவனும் தலைவியும் மனம் ஒத்து இணையும் நிலையே காதல் என்பர். அத்தகையவர்களின் காதலுக்குத் துணையாக நிற்பவள் தோழியாவாள். தோழியை 'நன்னர் மாக்கள்' என்று அகம் கூறுகின்றது. இலக்கியத்தில் கலித்தொகையானது 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்று போற்றப்படுகிறது. இது முழுவதுமாக அகப்பொருளைக் கொண்ட இலக்கியமாகத் திகழ்கிறது. இது காலத்தால் பின் தங்கியது. பிரிவால் வருந்திய தலைவிக்குத் தலைவன் விரைந்து வருவான் கலங்காதே என்று, தலைவியின் நலனில் அக்கறைக் கொள்பவள் தோழி என்னும் பெண் கதாபாத்திரமே. இவள் இல்லை என்றால்,சங்க இலக்கியங்ளில் காதலுக்கு முக்கியத்தும் காணப்படாது என்பதையே தோழியின் வாழ்வியல்ச் செய்திகள் மூலம் இவ்வாய்வுக் கூறுகிறது.

குறிப்புச்சொற்கள்: சங்க இலக்கியம், *கலித்தொகை*, தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய்.

முன்னுரை

தமிழின் முதல் இலக்கியமும், முதன்மையான இலக்கியமும் சங்க இலக்கியம் என்பர். குடும்ப வாழ்க்கையைச் சித்தரிக்ககக் கூடிய இலக்கியம் அகப்பொருள் இலக்கியம் அகப்பொருளில் தலைவன், தலைவி,தோழி, செவிலி, நற்றாய் முதலானோர் இடம்பெறுகின்றனர். தலைவனும், தலைவியும் செல்வ நிலையில் சிறந்தவர்களாக காணப்பட்டனர். தோழி சொல், செயல் ஆகியவற்றில் சிறந்தவளாக காணப்பட்டாள். தோழி என்பவள் தன் நிலையினைப் பெரிதும் எண்ணாதவள். தலைவியின் நிலையினையே அக்கறைக்கொண்டு இருப்பாள். சங்க இலக்கியத்தில் வரும் துணைப் பாத்திரங்களில் தோழியே தலைமைத் தாங்கும் தகுதியுடையவள். இதனையே தோழியின் பாத்திரம் வழி வாழ்வியல் நிலையே ஆராய்ந்துக் கூறப்பட்டுள்ளது.

தோழி பெண் பாத்திர அறிமுகம்

தோழி அக இலக்கியத்தில் சிறப்பானப் பாங்கினை வகிக்கின்றாள். அவள் தலைவன் தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றாள். தலைவனின் காதல்

நிலையில் அவனுக்கு உதவுகின்றாள். தோழியின் பிறப்பு, திருமணம், வாழ்க்கைக் குறித்து வேறெந்த செய்தியையும் அறியப்படவில்லை. அவள் தலைவிக்காகவே தலைவியின் காதல் வெற்றிக்காகவே படைக்கப்பட்ட பாத்திரமாகக் காணப்படுகிறாள். தலைவியின் விளையாட்டுப் பருவத்தில் இருந்து செவிலியாக மாறும் வரை தலைவிக்காகவே வாழ்கிறாள். செவிலியின் மகள் என்பதால் இவளுக்கும் திருமணம் உண்டு. தோழி என்பவள் செவிலியின் மகள் இது குறித்து தொல்காப்பியர், **"தோழி தானே செவி மகளே" (தொல்.பொருள். 123)** என்று செவிலியின் மகளாகத் தோழியைக் காட்டுகிறார். தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குகிறாள். அவள் தலைவன் தலைவி என்ற இரு கரைகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள். தோழியின் பின்னணி, தோழியின் இலக்கணம், தோழியின் பாத்திரச் சிறப்பு, தோழிக்குரிய மரபு பற்றி கூறப்படுகிறது.

தோழியின் பின்னணி

தோழியின் வாழ்வு பற்றிய செய்திகள் சங்கப்பாடலில் காணப்படவில்லை. ஆயினும் அவளுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு முந்தைய தலைமுறையிலே ஏற்பட்டதாகும் என்பது மட்டும் தெரிகிறது. தோழியின் தாயாகிய செவிலியும், தலைவியின் தாயாகிய நற்றாயும் நெருங்கிய தோழியராய் விளங்கியவர்கள் என்பது குறிப்பாகத் தோன்றுகிறது. தோழியர் பலர் இருந்தனர் என்பதை இளம்பூரணரும், புலவர் குழந்தையும் கூறுகின்றனர்.

தோழியின் இலக்கணம்

தோழி தலைவியோ ஒத்த வயதுடையவள். உடன் வளர்ந்து விளையாடிப் பழகி அவளை விட்டு பிரியாதவள் உணர்வாலும் ஒத்தவள். ஒன்றித் தொன்றுந்தோழி எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இதன் மூலம் தோழியும், தலைவியும் தொட்டில் தொட்ட இப்பிணைப்புக் கருதி இவ்வாறு கூறியுள்ளதாக நாம் உணர முடியம். மேலும் தோழி, தானே ஆராயும் அறிவு மிக்கவள். தலைவிக்கு உயிர் போன்று இன்றியமையாதவள். தலைவிக்கு தீங்கு நேராமல் பாதுகாப்பவள். தலைவிக்கு வருத்தம் நேர்ந்த போது ஆறுதல் கூறுபவள். களவுக் காலத்திலும் தலைவியின் துணையாக இருப்பவள். தலைவனுக்கும், தலைவிக்கும் ஏற்றவிடத்தில் தன் தகுதிக்கு உட்பட்டு அறநெறி கூறுபவள். தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயிலாக இருப்பவள். தோழி என்பதை அறிய முடிகிறது. தலைவியின் இன்னொரு கண்ணாக அமைந்திருக்கிறாள். நேர்மை, கண்டிப்பு, கனிவு, அமைதி ஆகிய குணங்கள் தோழிக்கு இயல்பாக அமைந்துள்ளன.

தோழியின் பாத்திரச் சிறப்பு

காதலர்கள் உணர்ச்சி, மாந்தர்கள், உணர்ச்சியில் விளையும் அறப்போராட்டங்களையும் மோதல்களையும் உள்ளவாறு அறியும் அறிவுப்பாத்திரம் தோழியாவாள். வரம்பு கடந்து செல்லும் தலைவனை இடித்துரைத்தும் தனிமை தாங்தாத தலைவியை ஆற்றியிருக்க அறிவுறுத்தலும் செய்யும் ஒளிவீசும் ஆசான் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அகப்பொருள் பற்றிய பாடல்களில் வரும் அகமாந்தருள் பெரும் பொறுப்புடையவள் தோழி. அவள் அறிவும், ஆற்றலும், பண்பும், திறனும் மிக்கவளாக இருந்தால் தான் தலைவனுக்கும், தலைவிக்கும் தக்க வழிகாட்டி அவர்களை நன்னெறிப்படுத்துதல் இயலும். உலகியல் தெளிவும் இருந்தால் தான் காதல் நெறியில் நேரும் இடர்பாடுகளை அறிந்து உள்ள துணையாக இருந்து வர இயலும். இத்தகையவள் தோழி என்பதை சங்கப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

தோழிக்குரிய மரபு

தோழியின் மரபுகளாக,
புலத்தலும் ஊடலும்ஆகிய இடத்துந்
சொல்லத்தகு கிளவி தோழிக்குரிய (தொல்.பொருள். 155)

இதற்கு ஒப்பாக,

அலந்தாரை யல்லல் நோய் செய்தற்றால் தம்கைப்
புலந்தாரைப் புல்லா விடல் (குறள்., 1303)

என்ற வள்ளுவரின் இக்குறளை ஒப்பிடலாம். தலைவன், தலைவி இருவரும் ஊடலின் காரணமாகப் பேசாமல் இருந்தால் நன்மை விளையாது. இருவருக்கும் இடையில் ஊடல் தீர்க்க அழும் பொருட்டு தோழி செயல்படுகிறாள் என்பதை இந்நூற்பாவின் மூலம் அறியலாம்.

தோழியின் திறன்

தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலைநிறுத்தவும் தன் அறிவையும் செயலாற்றலையும் கருவியாகக் கொள்கிறாள். தோழி, அதனால் தொல்காப்பியரும் அவளை அறிவுடையவளாகக் காட்டுகிறார். அவளுடைய சொல்லாற்றலால் தலைவன் தலைவி தாயார் முதலியவர்களைத் தன் சொல்வழி ஒழுகச்செய்யும் திறன் பெற்றவளாகிறாள். அவள் பேசும் சொற்களில் கேட்டார்ப் பிணிக்கும் தன்மையும் வருந்தாமல் திருத்தும் பண்பும் புலப்படும். உள்ளுரை வைத்துத் தோழி திறம்படச் செயலாற்றுபவள் என்பதனைச் சங்கப்பாடல்களில் தோழி கூற்றுக்கள் வழி அறியலாம்.

பேச்சுத்திறம்

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தோழியிடம் உறுதியளிப்பதும் பின் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு செல்வதும் ஐயத்தை உறுதியளிப்பதாக உள்ளது. இதனால் தோழி தலைவியின் இரங்கத்தக்க நிலையை எண்ணி வருந்துகிறாள். மனதில் களிப்புடன் சொல்லில் கடுமையை வெளியிடும் சொற்களைத் செங்கடுமொழி என்பர். தலைவியின் மனத்தை நல்ல நினைவுகளில் திருப்புவதற்குத் தோழி கையாண்ட அரிய உளவியல் முறை இயற் பழித்து மொழிதலாகும். சொன்ன சொல்லில் மாறுபட்டுத் தலைவன் பிரிந்தான். அதனால் தலைவி மயங்கி நிலை கலங்கினாள்,

நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்
செல்வமன்று தன் செய்வினைப் பயனெனச்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சொல்லுப என்ப சான்றோர் நேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். பா., 210)

என்ற பாடலில் தலைவன் தலைவியோடு அன்போடு வாழ்வதே பெரிய செல்வமாகும் என்று தலைவனைப் பழிப்பது தலைவனுக்கு அறிவுரை கூறுவதாக உள்ளது.

தோழியின் - சொல் விளக்கம்

தலைவியுடன் இருந்த பெண்ணானவள் தோழி எனப்பட்டாள். 'தோழி' என்ற பெயரைச் சுட்ட இருளை, பாங்கு, சிலதி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இப்பெயர் தொல்காப்பியம், இறையனார், அகப்பொருள், வீரசோழியம் போன்ற நூல்களிலும் காணப்படுகிறது. கண் போன்றவன் கணவன், தலை போன்றவன் தலைவன், இவ்வாறே தோள் போன்ற உறுப்பினால் அமைந்ததால் 'தோழி' என்ற பெயரும் தோன்றின என்று கருதப்படுகிறது.

தோழி - தலைவி உறவு நிலை

தோழியானவள் தலைவனையும் தலைவியையும் காதலில் இணைப்பதும், பிரிவால் வருந்தும் போது ஆற்றுவிப்பதும் அவளது பொறுப்பு ஒவ்வொரு துறையிலும் தலைவி தோழி உறவு நிலை சிறப்பாக கூறப்படுகிறது. தோழிக்கும் - தலைவிக்கும் இடையே உள்ள அன்புநிலை, ஒருவரை ஒருவர் அழைக்கும் நிலை, இன்ப துன்பங்களில் இருவரும் பங்கு கொள்ளும் நிலையினை கலித்தொகையில்,

பூண் அகம்நோக்கி இமையான், நயற்று, நம்
கேண்மை விருப்புற்றவனை, எதிர் நின்று
நான் அடப்பெயர்த்த நயவரவு இன்றே (கலி., 24)

என்று தோழியானவள் தலைவியின் காதலில் உதவி செய்து உறவை வளர்க்கும் நிலையினைக் கூறப்பட்டுள்ளது.

அகவாழ்வில் தோழி

அக இலக்கியங்களில் தலைவியின் உணர்வுகளைப் பெற்றோரை விட, மற்றோரை விட மிகச் சிறப்பாகப் புரிந்து கொள்ளும் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள். அக இலக்கியங்களில் தோழி பெறும் சிறப்பிடம் குறித்து இது விளங்குகிறது.

கலித்தொகையில் தோழியின் நிலை

கலித்தொகையில் தோழியானவள் தலைவியின் மகிழ்ச்சிக்காகவே வாழ்பவள். தலைவியின் முகம் மலரும் போது தான் தோழியின் இதயம் மகிழும் தலைவனையும் தோழி வாழ்த்துகின்றாள். தலைவன் வரைவு மேற்கொண்டாலும் தமர் மறுப்பரோ எனத் தலைவி அஞ்சும்போது வரைவை நினைத்து மகிழ்வதாய் கலித்தொகைப் பாடல் கூறுகின்றது.

அவரும் தெரிகிணை நோக்கி, சிலை நோக்கி

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஒரு பகல் எல்லாம் உருத்து எழுந்து ஆறி
இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை (கலி., 37)

தலைவியை தலைவனுடன் சேர்த்து வைத்தாள். தலைவனின் தந்தை வாழ்க என்று வாழ்த்துகிறாள். இவ்வாறு தனக்கெனத் தனி இன்பம் இல்லாமல் தலைவிக்கான இன்பமே தன் இன்பம் என கருதும் தோழி சிறப்பைப் பெறுகின்றாள் என்பது கலித்தொகை வாயிலாக அறிய முடிகின்றது. தலைவன் எந்த நிலையிலும் தலைவியைப் பிரிதல் கூடாது. அவ்வாறு பிரிந்து சென்றால் அவனை கடிந்து கொள்பவளாகவும் தோழி இருக்கின்றாள் என்பதை கலித்தொகைப் பாடல் கூறுகின்றது.

அணை தரும் பண்வினான், நின்தீமை காத்தவள்
அருந்துயர் ஆர் அஞர் தீர்க்கும்
மருந்து ஆகிச் செல்கம்,பெரும்! நாம் விரைந்தே (கலி., 44)

தலைவன் தலைவியின் பிரிவில் தலைவி வருந்துவதை தோழி தலைவனிடம் சென்று கூறி அவளை ஆற்றுவிக்க விரைந்து வர வேண்டும் எனக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை கலித்தொகைப் பாடல்,

எறி திரை தந்திட இழிந்த மீன் இன் துறை
மறி திரை வருந்தாமல் கொண்டாங்குநெறி தாழ்ந்து
சாயினுள் வருந்தியாள் இடும்பை
பாய் பரிக்கடுந் திண்தேர் களையினோ இடனே (கலி., 4)

என்று கூறுகின்றது.

தோழி செவிலி உறவு நிலை

தலைவியின் உயிர்த்தோழியே பிறகு செவிலித் தாயாகிறாள். செவிலி தன் மகளான தோழியிடம் பாசம் காட்டுவது பற்றி கூறப்படவில்லை. தலைவியை வளர்ப்பதில் மட்டுமின்றி அவளது புதிய குடும்ப அமைப்பிலும் செவிலித்தாயும் அவளுடைய மகளாள தோழியும் முக்கிய பங்கேற்கின்றனர். அதனால் தான் தொல்காப்பியர்,

ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாய் எனப்படுவோள் செவிலி யாகும் (தொல்., 122)

செவிலியின் மகள் என்பதால் அவளை போலவே தோழியும் அறிவுடையவளாக இருந்ததாக கருதப்படுகிறது. மேலும் செவிலி தோழி உறவை தலைவியின் காதல் நிலையில் தோழி செவிலியிடம் கூறி திருமணத்தை நடத்தி வைப்பதாக அமைகின்றது. இதனை,

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறம்பட
என்னையர்க்கு உய்த்து உரைத்தாள் யாய்
அவரும் தெரி கணை நோக்கி சிலை நோக்கி கண்சேந்து

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஒரு பகல் எல்லாம் உளுத்து எழுந்து ஆறி
இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று
தெரு மந்து சாய்ந்தார் தலை (கலி., 3)

என்று கலித்தொகைப் பாடல் தோழி செவிலி உறவைக் காண்பிக்கின்றது.

தோழியின் அறிவுத் திறன்

தோழியின் அறிவுத்திறன் என்பது தோழியின் சொல்லாற்றல்இ உவமை, குறிப்புப் பொருளை ஆளும் சிறப்பு, பேச்சுத்திறம், வரலாற்றறிவு, உளவியல் ஆகியன தோழியின் சிறப்பைக் கூறும் விதமாக அமைகின்றன.

தோழியின் சொல்லாற்றல்

தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலை நிறுத்தவும் தன் அறிவையும் சொல்லாற்றலையும் கருவியாக கொள்கிறாள் தோழி. இதனால் தொல்காப்பியரும் தோழியை அறிவுடையவளாக கூறுகின்றமைத் தெரிகிறது. **"சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே" (தொல்., 124)** தோழி தன் சொல்லாற்றலால் தலைவன், தலைவி தiயார் முதலானவர்களை தன் சொல் வழி ஒழுகச் செய்யும் திறன் பெற்றவளாக தோழி திகழ்கிறாள்.

தோழியின் அழகு

சங்க இலக்கியத் தோழியானவள் அறிவில் சிறந்து விளங்குவதுப் போல அழகு தன்மையிலும் சிறப்பாக விளங்குகின்றாள். கலித்தொகையில் மட்டுமே தோழியின் அழகு சிறப்பாகக் கூறப்படுகிறது. தோழியின் உருவச் சிறப்பு ஆயிழை, சேயிழை, சடரிழாய் என அணிகலத்தின் வழி கூறப்படுகிறது. தாழம்பூ அணிந்த கூந்தலை உடையவள். நீலம் போன்ற கண்ணழகும், புன்னகை போன்ற வாயழகும், தோழியின் சிறப்புக்கே உரிய பேச்சழகும், என அவளுடைய அழகு காட்டப்படுகிறது. தோளின் அழகை தலைவனும் சிறப்பித்து கூறுவதாக சொல்லப்படுகிறது.

தலைவி தோழி தொடர்பு நெருக்கம்

ஈருடலும் ஓர் உயிர் உயிருமாகத் தோழியும் தலைவியும் இளமையில் இருந்தே பழகுகின்றனர். தனிநிலை காதலையும் தமக்குள் பொதுவாக பேசிக் கொள்கின்றனர். தலைவிக்கு உரிய தலைவனை நம் காதலர் என்றும் தலைவின் உயிரே தன் உயிர் எனவும் உயர்த்தி பேசுகின்றாள். இருவரின் பண்பும் ஒன்றாக காணப்படுகிறது. இதனை,

நன்று ஆகின்றால் - தோழி! நம் வள்ளையுள்
ஒன்றி நாம் பாட, மறை நின்று கேட்டு அருளி
மென்தோட் கிழவனும் வந்தனன் (கலி., 41)

என்று கூறுகின்றது. தோழி தலைவி இருவருமே தோழி என்று அழைத்துக் கொள்கின்றனர். செவிலியும் நற்றாயை தோழி என்று அழைக்கின்றாள். இதனால் தலைவியிடத்திலும் தோழியிடத்திலும் வேறுபாடு இல்லாத நெருக்கமே காணப்பட்டது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

தோழி பாணன் உறவு நிலை

புறத்திணையில் கலை வல்ல பாணர்கள் போற்றப்படுகின்றனர். ஆனால் அகத்திணையில் பாணர்கள் பழிக்கப்படுகின்றனர். பாணரும் விறலியும் தலைவனை பரத்தையிடம் சேர்ப்பதனால் இவ்வாறு தாழ்வாக கருதப்படுகின்றனர். இதனால் தோழியின் தலைவியும் பாணனை வெறுக்கின்றனர். மேலும் பாணனை கள்வனாக்கியும் தோழி கூறுகின்றாள்.

மெல்லியான் செவி முதல் மேல் வந்தான் காலை போல்
எல்லாம் துயிலோ எடுப்புக நின்பெண்டிர்
இல்லின் எழி இய யாழ் தழீஇய கல்லாவாய்
பாணன் புகுதராகக் கால் (கலி., 70)

என்று *கலித்தொகை* பாடல் தலைவன் வாயில் மறுத்த நிலையை விட இந்த பாணரின் யாழ் தழுவி வருவது தான் வருத்தம் தருவதாக உள்ளது என்று தோழி கூறுகின்றாள். மேலும் தலைவன் பாணனை தூதாக விட்டதால் பழிக்கப்படவில்லை. தகுந்த காலத்தில் தலைவன் வந்து சேராததால் தலைவனை பாணனிடம் தோழி பழித்து கூறுகின்றாள். இவ்வாறு இருவருடைய உறவு நிலையும் அமைகிறது.

தோழியின் சிறப்புகள்

இலக்கியத்தில் தோழி மிகவும் சிறப்புடையவள். அவள் தலைவன் தலைவியர் வாழ்வின் மேன்மைக்காகச் செயல்படுகின்றாள். இலக்கியத்தை பொருத்தமட்டில் எல்லா வகையிலும் செவிலிக்கும் தோழிக்கும் தான் மிகுதியான இடங்கள் உண்டு. பிறர் துன்பம் துடைக்கும் தோழிக்கும் நெஞ்சு வேண்டும் என்றும் தோழியின் சிறப்பு கூறப்படுகிறது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் தோழி இல்லை என்றால் காதல் நிலை அமையாது. தோழி இல்லையேல் தலைவியின் காதல் பாங்கன் கூட்டத்துடன் முடிந்துவிடும். தோழி தான் தலைவியின் காதல் அரும்பை மலர்வித்து கனிவிக்கிறாள். தோழியே அடி மண்ணாக இருந்து பிறர் அறியாமல் செயல்படுகிறாள் தலைவியின் வாழ்வில் தோழியின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. காதலைப் பற்றிக் கூறாத பாடல்களை இல்லை. எனவே மக்களின் வாழ்வைப் பற்றி அறியும் விதமாகவும் இந்த தோழியின் நிலை அமைகின்றது. கலித்தொகை தோழியே இவற்றில் சிறப்பான இடத்தையும் பெறும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

குறிப்புகள்

[1] தாசன், மு. *தொல்காப்பிய களஞ்சியம் பொருளதிகாரம்.* அபிலா பதிப்பகம், மேலப் பொட்டக் குழி, தெருவுக்கடை அஞ்சல், குமரி மாவட்டம்- 629 157, 2011.
[2] புலியூர்க்கேசிகன். *கலித்தொகை.* ஜீவா பதிப்பகம், சென்னை – 600005, 2012.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[3] புலியூர்க்கேசிகன். *திருக்குறள்*. பூம்புகார் பதிப்பகம், சென்னை-600 008.

[4] மணவாளன், அ. அ. *சங்க இலக்கியம்*. நியூ செஞ்சுரி ஹவுஸ், சென்னை - 600008, 2009.

[5] விசுவநாதன், அ. *கலித்தொகை* நியூ செஞ்சுரி ஹவுஸ், சென்னை- 600098, 2009.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Kambar's Creation of Royal Female Personage

Dr. J. G. Joni Jebamalar, Assistant Professor, Head of Tamil Department,
Muslim Arts College, Thiruvithancode. Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-4866-5537
DOI: 10.5281/zenodo.14752834

Abstract

The poet must give a shape to all the characters found in the epic and structure it properly. If the characterization in the epic is to be done in the best way, it will be clear if the poet becomes a person living in the society or a character and makes them speak or speak, rather than thinking of it as a mere character created in the poet's mind. In short, he should become the lifeblood of the character that the poet creates. There should be no change in this, whether it is a minor character or the hero of the epic. Even if the poet is a man, it is difficult to create an epic by understanding the mental state of the king and the mentality of the peasant. Whoever succeeds in this, can earn the title of the best poet and establish himself among the people. Kambar is such a majestic poet who crafted his epic Ramayana with great dignity. His depiction of royal women is excellent. This article ponders over the creation of royal women characters in the epic Ramayana.

Keywords: Kambar, Kosalai, Seethai, Kaigeyi, Subathirai, Kooni.

References

[1] Ramanan, M. K. Kaviyam Kanda Nayakiyar. Poonkodi Pathippakam, Chennai, 2008.
[2] Ramasubramaniam, V. *KambaninSattamum Neethiyum*. Vanathi Publishing House, Chennai, 1992.
[3] Ramasubramaniam, V.T. *Urainadaiyil Kambanamayanam.* Thirumagal Publishing House, Chennai, 2006.
[4] Iyer. V.V.S. (in English), Suresh, D.R. (in Tamil). *Kambanamayanam – Oor Aaivu*. Sandhya Publishing House, Chennai, 2023.
[5] Sinivasan, I. *Kambanamayanam*. Saran Books, Chennai, 2002.
[6] Gnanasambandhan, A. S. *Kamban Puthiya Paarvai*. Kaura Publishing House, Chennai, 2007.
[7] Manikkam. *Kambar*. Meyyappan Pathippagam, Chidambaram, 1990.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கம்பனின் அரசகுல பெண் பாத்திரப் படைப்பு

முனைவர் ஜா. ஞா. ஜோணி ஜெபமலர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-4866-5537
DOI: 10.5281/zenodo.14752834

ஆய்வுச்சுருக்கம்

ஒரு படைப்பின் சிறப்புக்கு முக்கிய அடிப்படையாக பாத்திரப் படைப்பு அமைகிறது. பாத்திரப் படைப்பென்பது ஏதோ ஒரு தேவை கருதி படைப்பாளர் பயன்படுத்தி கொள்கின்ற ஒன்றல்ல. அது அவருடைய முழுமையான வெளிப்பாட்டாகும். கம்பராமாயணத்தில் பல இனங்களை சார்ந்த பெண் பாத்திரப் படைப்புகளுடன் பல தரம் வாய்ந்த பாத்திரங்கள் காணப்படுகின்றது. சிறுபாத்திரமானாலும் பெரும்பாத்திரமானாலும் அதற்குரிய சிறப்பினை கொடுத்து மக்கள் மனதில் நிலைபெற வைப்பதில் கம்பரின் ஆளுமை இதில் நுட்பமாக வெளிப்படுகிறது.

குறிப்புச்சொற்கள்: கம்பர், கோசலை, சீதை, கைகேயி, சுபத்திரை, கூனி.

முன்னுரை

கவிபுனையும் கம்பரிடம் தமிழ்சொற்கள் ஓடிவந்து என்னையும் கவிதையில் சேர்த்துவிடு என்று கெஞ்சுமாம். கம்பரின் கவிதையின் தன்மையைசொல்ல இந்த வழக்காற்றைக் கூறுவது வழக்கம். அவரின் படைப்பில் பெண் கதாபாத்திரங்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

கம்பராமாயணத்தில் பெண்பாத்திரப் படைப்பு

காப்பியத்தில் காணப்படும் அனைத்து பாத்திரங்களுக்கும் ஒரு வடிவினை தந்து அதனை முறையாகக் கட்டமைத்துச் செல்வது கவிஞரின் கடமையாகும். காப்பியத்தில் பாத்திரப்படைப்பு சிறந்த முறையில் அமைய வேண்டுமானால் கவிஞரின் எண்ணத்தில் உருவான பாத்திரம் என எண்ணாமல் சமூகத்தில் வாழும் ஒருவராக அல்லது கவிஞரோ அப்பாத்திரமாக மாறிப் பேச வைப்பாராயின் அல்லது பேசுவராயின் தெளிவுறும். சுருங்கக் கூறினால் கவிஞர் வடிக்கும் பாத்திரத்தின் உயிர்நாடியாக அவர் மாற வேண்டும். இதில் சிறிய பாத்திரமாயினும் காப்பியத் தலைவனாயினும் மாற்றம் இருக்கக்கூடாது. கவிஞர் ஆணாகயிருப்பினும் அரசனின் மன நிலையினையும், குடியானவனின் மனநிலையினையும் உணர்ந்து காப்பியம் படைத்தல் கடினமாகும். இதில் எவர் ஒருவர் வெற்றி கொள்கின்றாரோ அவரே சிறந்த கவிஞர் என்ற பட்டத்தை மக்களிடம் பெற்று நிலைபெற முடியும். இவ்வாறு ஆண் கவிஞர்கள் பலதரப்பட்ட ஆண்களின் உணர்வுகளை அறிந்து காப்பியம் இயற்றுதல் கடினம் எனும்பொழுது பெண்களின்றி காப்பியம் இயற்ற முடியாத நிலையில் கவிஞரின் நிலை

சோதனைக்குரியதாகக் காணப்படுகிறது. எனவே ஒரு கவிஞன் சாதாரண மனிதன் காணாததையும் தன் மனக்கண்ணால் கண்டு உணர்பவனாக இருத்தல் வேண்டும்.

அரசகுலப் பெண்பாத்திரப் படைப்பு

கம்பர் காப்பியத்தை அழகும், வைப்பும் ஒருங்கே அமையப்பெற்று அயோத்தி மாநகரில் தொடங்கியுள்ளார். இந்நிலை மெல்ல வளர்ந்து பல நிலைகளை அடைந்ததுடன் பல இனத்தாரையும் கண்டு இறுதியாக இவ்வயோத்தியிலேயே முடிவடையச் செய்துள்ளார். இவ்வாறு பரந்து விரிந்த பரப்பினைக் கொண்ட காப்பியத்தினை பாத்திரப்படைப்பில் அரசர் குலப்பெண் பாத்திரங்கள் முக்கியத்துவம் வாய்க்கப்பெற்றவர்கள் ஆவர். கோசலை, கைகேயி, சுமித்திரை, சீதை, நீலமாலை, கூனி, ஊர்மிளா, சுருதகீர்த்தி, மாண்டவி போன்ற அரசக்குல பெண் பாத்திரப்படைப்புகளை அறிமுகப்படுத்தி காப்பியத்திற்கு கம்பர் வளம் சேர்த்துள்ளார் எனலாம்.

கோசலை

நதி நீரானாலும், ஆற்று நீரானாலும் அதனை தள்ளாது ஏற்றி நிற்கும் கடலின் ஆழத்தைப் போன்று பொறுமையும் பரந்த உள்ளமும் கொண்டவளாக கோசலை படைக்கப்பட்டுள்ளாள். தசரதனின் தேவியர்களுக்கு கோசலை மூத்தவள். இராமனை ஈன்ற பெரும் பேறு உடையவள்.

> **மலைபோல் அடுக்கி வரினும் துயரத்தைக்கண்டு அஞ்சியோடாமலும் அதன்பொருட்டுப் பிறர் காரணம் உள்ள பொழுது, இல்லாத பொழுதும் நொந்து கொள்ளாமல் தன் கடமையை விடாது செய்யும் பெருமாட்டியாகவே கோசலை காணப்படுகிறாள்" (அ. ச. ஞானசம்பந்தர் ப. 121)**

என்று அ.ச. ஞானசம்பந்தன் கூறியதன் வழி கோசலை பாத்திரப்படைப்பின் தன்மையை அறிய முடிகிறது.

> **மாமுனி அருள்வழி மன்னர் மன்னவன்**
> **நூழமென் கரிகுழல் தொண்டைத் தூயவாய்க்**
> **காமரு கோசலை கரத்தில் ஓர்பகிர்**
> **தாம்உற அளித்தனன், சங்கம் அர்த்துஎழு (கம்பராமாயணம். பா. 267)**

என்று குழந்தைப்பேறு கருதி நடந்தப்பெற்ற யாகத்தினால் கிடைத்த அமுதத்தினை தசரதன் கோசலைக்கு கொடுத்த காட்சியின் வழியாக கம்பர் காப்பியத்தில் கோசலையை அறிமுகம் செய்கிறார்.

கைகேயி

காப்பிய போக்கிற்கு துணையாகி தலைமை எதிர்மை மாந்தர்க்கு உறுதுணையாகி பல்சுவைச் செயல்பாட்டிற்குக் காரணமாகி, திருப்பங்கு கால்கோள் இட்டு, மாற்றங்களுக்கு பாதை வகுத்து, வளர்ச்சி வீழ்ச்சிகளுக்கு வழிவிட்டு அமையும் பாத்திரங்கள் துணைமை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பாத்திரங்கள் எனக் கூறுவர். கைகேயி என்ற கதாபாத்திரத்தின் வழியாக கம்பர் கதையை நகர்த்திச் செல்கிறார். கைகேயினை கம்பர் தெய்வக் கற்பினாள் ஆழ்ந்தப்பேர் அன்பினாள் என புகழ்ந்தும் பின்னர் நாகம் என்னும் கொடியாள், தீயவையாயினும் சிறந்த தீயாள் என இகழ்ந்தும் காப்பியத்தில் படைத்துள்ளார். இவளை

கைகயன் தனையை தன்கரத்தும், அம்முறைச்
செய்கையின் அளித்தனன், தேவர் ஆர்த்துஎழ்
பொய்கையும் நதிகளும் பொழிலும், ஓதிமம்
வைகுறு கோசல மன்னர் மன்னனே (கம்பராமாயணம். பா. 268)

என்னும் பாடல் வரிகள் வழியாக அறிமுகம் செய்துள்ளார்.

கம்பன் கட்டிய கலைக்கோவிலில் ஓர் இன்றியமையாத பாத்திரமாவாள் கைகேயி. அவளாலேதான் இராம கதை நடைபெறுகிறது. இராமன் உலகில் தோன்றிய பயன் விளைய, அவள் ஒருத்தியே காரணமாகிறாள் (வ. சுப. மாணிக்கம். ப. 128)

என்பதற்கு ஏற்ப கம்பர் கைகேயினைப் படைத்துள்ளார்.

சுமத்திரை

கம்பர் தன் காப்பியத்தில் ஒரு சில பாத்திரங்கள் பால காண்டம் தொடங்கி இறுதிவரை இடம்பெற்றுள்ளன. சில பாத்திரங்கள் சில காண்டங்களில் அதிலும் சிற்சில பகுதிகளில் மட்டுமே காட்சியளிக்கின்றன. அவ்வகையில் மிக சிறிய பங்கை ஏற்று படிப்போர் உள்ளத்தில் நிலைத்த இடத்தினைப் பெற்ற பாத்திரங்களுள் இளைய மென்கொடி என்று புகழப்படும் சுமித்திரை பாத்திரமும் ஒன்றாகும். யாகத்தில் பெறப்பட்ட அமுதத்தினை கைகேயிக்கு கொடுத்த பின்னர் மீதமுள்ள அனைத்தையும் சுமித்திரைக்கு இருமுறை கொடுக்கிற பொழுது அறிமுகம் செய்கிறார் கம்பர்.

நமித்திரர் நடுக்குறு நலம்கொன் மெய்ப்புடை
நிமித்திரு மரபுனாள், முன்னர் நீர்மையின்
சுமித்திரைக்கு அளித்தனள். கூராக்கு வேந்துஇனிச்
சமித்ததுஎன்; பகைஎன தமரொடு ஆர்ப்பவே (கம்பராமாயணம். பா. 269)

என்ற பாடல் விளக்குகிறது. சுமித்திரை அதிகப் பாடலில் இடம்பெறாததால் இவரின் சிறப்பு குன்றியது எனக் கூறுவதற்கு இல்லை. கோசலையின் நிழலாகக் காணப்படும் இவளை கம்பர், ஒருமுறை மட்டும் காப்பியத்தில் பேசவைத்துள்ளார். அவளது பேச்சிலேயே பண்பு நலன்கள் அனைத்தும் குறிப்பிட்டுள்ளார்.

சீதை

மிதிலை நகர் மண்ணில் ஏர் முனையில் கண்டெடுக்கப்பட்டதால் சீதை என்ற பெயரையும் மிதிலை நகர் செல்வியாகையால் மைதிலி என்ற பெயரையும், சனகன் எடுத்து வளர்த்ததால் சானகி என்ற பெயரையும் பெற்ற இவள், திருமகளின் அவதாரமாகப் பூமியில்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பிறந்தாலும் புடம் போட்ட தங்கமாகக் கற்பின் கனலியாகக் கம்பரால் படைக்கப்பட்டிருக்கிறாள்.

> **காலத்தாலும் கற்பாலும் அழகாலும் அனைத்தாலும் மனித சமுதாயப் பெண் வரலாற்றிற்கு முன்னுதாரணமாகவும் முதல் உதாரணமாகவும் நிற்பது சீதாதேவியை தான் (மா. கி. இரமணன். ப. 5)**

என்பர் மா.சி.இரமணன் அவர்கள் கூறுகிறார்கள். இராமனும், இலக்குவனும், முனிவனும் மிதிலைக்கு செல்லும் வழியில் இராமனுக்கு அறிமுகமானாள் சீதை. அங்கு இருவரின் கண்ணும் கலந்து காதல் மலர்கிறது. இராமன் வில்லை ஒடித்ததால் திருமணம் நடைபெறுகிறது. இவ்வாறு மிதிலையின் சீதை, இராம காதை நிகழ இராமனின் துணையாக மாறுகிறாள். அவளின் பண்பு நலத்தினை தெரியப்படுத்த முடிசூட்டு விழாவில் நடைபெறாத இருக்கும்போது அவர் வருத்தப்படவில்லை, இராமன் தன்னை விட்டு வனவாசம் செல்கிறான் என்பது தெரிந்து துன்பப்படுகிறாள். இராவணனைக் கொன்றபிறகு இராமனால் மீட்கப்பட்டு சந்தேகத்திற்கு ஆளாகி தீக்குளித்து கற்பின் தீண்மையையும் பொருண்மையையும் இராமனுக்கும் உலகிற்கும் நிறுவினாள். பின்னர் அவளை ஏற்ற இராமன், அயோத்திக்கு அழைத்துச் சென்று பட்டத்தரசியாக்குகிறார்.

கூனி

கம்பராமாயணத்தில் எல்லையில்லா சிறப்புக்கும் நாளும் வளரும் மேன்மைக்கும் அடித்தளமானவள் மந்தாரையாவாள். மக்கள் உள்ளத்தில் கம்பராமாயணம் பெற்றுள்ள ஒப்புயர்வற்ற இடத்திற்கும் காரணமாயிருப்பவள் அனைவரின் வசைமொழிக்கும் வெறுப்புக்கும் பாத்திரமானவள். அறிமுகம் செய்யும்போது கம்பர் கொடுமனக்கூனி தோன்றினாள் என்று குறிப்பிட்டுள்ளார். இராமன் மீது அளவற்ற அன்புக் கொண்ட கைகேயின் மனதை இராமன் மீது கொண்ட பகையுணர்வால் கூனி கெடுக்க எண்ணினாள். அதன் முதற்கட்டமாக, கைகேயின் மனதில் பொறாமை பொங்க வேண்டும் என்ற திட்டத்தின்படி பேசியவள் தோன்றினாள். அது பயன்தராதுபோகவே கைகேயி பரதன் இருவர் மீது தான் வைத்துள்ள அன்பினை பெரிதாக்கிக் கூறி, இராமன் அரியணையேறினால் பரதன் வருத்தமுறுவான் என நம்பும்படி பேசி கைகேயின் மனதை மாற்றி வெற்றி கொண்டாள். கூனியின் கதாபாத்திரம் சிறிதாக இருந்தாலும், ஆளுமை மிக்க பாத்திரமாக மாற்றியுள்ளார் கம்பர்.

முடிவுரை

இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதற்கு காரணம் அதன் கவிதைப் பண்பு என்று கூறுவர். கம்பராமாயணம் காலம் கடந்து வாழ்வதற்கு கதை மட்டும் காரணம் அன்று. கதை சொல்லல் முறை, காட்சியமைப்பு, கதாபாத்திரப்படைப்பு போன்றவை முக்கியமாக

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அமைகின்றன. அதிலும் பெண் கதாபாத்திரங்களை கம்பர் படைத்துள்ள தன்மையை இக்கட்டுரை ஆராய்கிறது.

குறிப்புகள்

[1] இரமணன், மா.கி. *காவியம் கண்ட நாயகியர்*. பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2008.

[2] இராமசுப்பிரமணியம், வெ. *கம்பனின் சட்டமும் நீதியும்*. வானதி பதிப்பகம், சென்னை. 1992.

[3] இராமசுப்ரமணியம், வ. த. *உரைநடையில் கம்பராமயணம்*. திருமகள் பதிப்பகம், சென்னை, 2006.

[4] ஐயர். வ, வே, சு.(ஆங்கில மூலம்), சுரேஷ், டி,ஆர். (தமிழில்). *கம்பராமயணம் - ஓர் ஆய்வு*. சந்தியா பதிப்பகம், சென்னை, 2023.

[5] சீனிவாசன், இரா. *கம்பராமாயணம்*. சரண் புக்ஸ், சென்னை, 2002.

[6] ஞானசம்பந்தன், அ. ச. *அரசியர் மூவர்*. கங்கை புத்தகநிலையம், சென்னை, 2001.

[7] ஞானசம்பந்தன், அ.ச. *கம்பன் புதிய பார்வை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2007.

[8] மாணிக்கம், வ.சுப. *கம்பர்*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1990.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Feminist Perspective P. Vijay's Poems

Dr. S. Sajibha, Assistant Professor, Department of Tamil, Muslim Arts College, Thiruvithancode –174, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-9782-403X
DOI: 10.5281/zenodo.14752898

Abstract

The poet can enter into a human being by his thoughts and ideas. A poet shines poetically only when the context is clear. Poetry is the foundation of Tamil literature. The poet P. Vijay excelled in poetry. He has written related to feminism and its need of the time in Tamil Nadu. Feminism is a global literature and has no boundaries. Feminism is about creating awareness through education and discipline for women who have been enslaved and suffering for ages and to gain a hold in society. Many women lose their lives because of love. Women are facing various pains and suffering due to family situations. Due to this, they feel sad and tired. Cultural growth and progress occur through academic feminism. So, women should maintain the morals of their lives without fail. If the society wants to rise, women should act with awareness. Feminist influences are deeply embedded in the poet P. Vijay's poetic thoughts. He believes that a better society should be created by the emancipation of women. Many poets and women have made revolutions for women. P. Vijay is on the row. Hence, this article explains the ideas of feminism in P. Vijay's poetry.

Keywords: Feminism, Woman, Emancipation, P. Vijay, Poems.

References

[1] Parimelazhagar. Thirukkural. Narmata Publishing House, Chennai – 17, 2005.
[2] Bharatiyar. *Bharatiyarm Kavithaigal*. Manikkavasakar Publishing House, Chidambaram, 1987.
[3] Prema, Ra. Penniya Kathaigal. Kavia Publishing House, Chennai, 2004.
[4] Puliyurkesigan. *Natrina*i. Sri Senpaha Publishing House, Chennai, 2010.
[5] Vijay, P. Nampikaiyudan. Kumaran Publishing House, Chennai – 17, 2007.
[6] Vijay, P. "Natpin Natkal. Kumaran Publishing House, Chennai – 17, 2007.
[7] Vijay, P. "Irantatukku Akayam. Kumaran Publishing House, Chennai – 17, 2007.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

பெண்ணிய நோக்கில் பா. விஜய் கவிதைகள்

முனைவர் செ. ஷஜிபா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லிம் கலைக்கல்லூரி,திருவிதாங்கோடு – 629 174, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0003-9782-403X
DOI: 10.5281/zenodo.14752898

ஆய்வுச் சுருக்கம்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் பூரணமாய் கவிஞன் நுழைந்து கிடக்கிறான். சூழல் வாய்க்கும் போது மட்டுமே கவிஞன் கவிதையாய் மிளிர்கிறான். தமிழிலக்கியத்தின் அடிப்படை கவிதையாகும். கவிஞர் பா. விஜய் கவிதை இலக்கியத்தின் வாயிலாக திரையுலகிற்கு வந்த புதிய உதயம் எனலாம்.பெண்ணியம் என்பது உலகம் தழுவிய ஓர் இலக்கியமாகும். காலங்காலமாக அடிமைப்பட்டு வாடி வதங்கிய நிலையில் இருக்கும் பெண்களுக்கு கல்வியின் மூலமும், ஒழுக்கத்தின் மூலமும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி சமூகத்தில் காலூன்றச் செய்வது பெண்ணியமாகும். பெண்கள் பலர் காதலால் தங்களுடைய வாழ்க்கை இழக்கும் நிலை ஏற்படுகிறது. பெண்கள் குடும்ப சூழ்நிலைகளால் பல்வேறு விதமான வலிகளை வேதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பாலியல் பிரச்சனைகளில் ஈடுபட்டு வருவதால் நோய்கள் பல அவர்களை தாக்குகிறது. இதனால் மனவேதனையும்சோர்வும் அடைகிறார்கள். கல்விநெறிப் பெண்ணியத்தின் மூலம் பண்பாட்டு வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படுகிறது. பெண்கள் தங்களுடைய வாழ்க்கையின் ஒழுக்க நெறிகளை தவறாது காத்துக் கொள்ள வேண்டும். சமுதாயம் ஏற்றம் பெற வேண்டுமாயின் பெண்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். அதோடு அடிமை நிலையும் மாற வேண்டும் என்பதை பற்றி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

குறிப்புச்சொற்கள்: பெண்ணியம், பெண்கள், விடுதலை, பா. விஜய், கவிதைகள்

முன்னுரை

கவிஞரின் கவி சிந்தனைகளில் பெண்ணியத் தாக்கங்கள் மிகவும் ஆழமாக பதிந்திருக்கின்றது. கவிஞர்கள் தங்கள் படைப்புகளின் மூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக வேண்டும் என்று எண்ணுகிறார்கள். பெண்களுக்காக எத்தனையோ கவிஞர்களும் பெண்களும் புரட்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வகையில் கவிதைகள் பெண்களின் வளர்ச்சிக்கு குரல் கொடுக்கின்றன. கவிதையை கலைகளின் அரசி என்று தாமஸ் ஆல்வா எடிசன் கூறியுள்ளார். இன்றைய காலத்திற்கு ஏற்றார் போல தமிழ் கவிஞர்களும் வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்தும் வகையிலும் உணர்வுகளை தூண்டக்கூடிய

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வகையிலும் கவிதைகளை படித்துள்ளார். அவ்வகையில் கவிஞர் பா. விஜயின் படைப்புகளை பெண்ணிய நோக்கில் ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணிய காதல்

சங்ககால தமிழர் காதலையும் வீரத்தையும் இரு கண்களாக போற்றினர். எல்லா உயிருக்குள்ளும் இருக்கின்ற உணர்வு காதலாகும். ஒவ்வொருவர் மீதும் இன வேறுபாடு இன்றி காதல் மலர்கிறது. இளம் தலைமுறையினர் இளம் வயதில்சந்திக்கும் சிக்கல்களில் காதல் சார்ந்த துன்பங்களே அதிகம் எனலாம். சமுதாயத்தில் பெரும்பாலான பெண்களின் வாழ்வு காதலால் இழக்கும் நிலையுள்ளது.

சில வினாடிகள்தான்
காதல் பிறக்க ...
ஆனால்
அது ஜீவிப்பதோ
யுகயுகமாய்!
கண்களை திறந்து கொண்டு
கனவு காண முடியாது
ஆனால்
காதலித்தால் முடியும் (வள்ளுவர் தோட்டம். ப. 102)

என்று கவிஞர் பா. விஜய் காதல் வரிகளை மிகவும் சிறப்பாக உணர்வுபூர்வமாக எழுதியுள்ளார். ஒரு பெண்ணை காதலன் எவ்வாறெல்லாம் வர்ணிக்கிறான் என்றால் அவளின் புன்னகையை மின்னும் என்றும், உதடுகள் பூவின் இதழாகும் என்றும், உண்மை நடையோடு வர்ணிக்கின்றான்.

கண்ணும் கண்ணும் கவர்ந்திழுக்கும் கோபத்தில் கன்னம் சிவக்கும் அதுவே ஏக்கம் தீர அழுதுவிட்டால் காதலில் நறுமணம் வீசும் காற்றடிக்கும் இவை எல்லாம் நடந்தேற வேண்டும் எனில் இரவு பகல் தெரியாமல் விழித்திருப்பாள். புசி என்றால் என்னவென்று மறந்திருப்பாள். உறவு என்பது என்ன என்று தெரியாதென்பாள். மனதில் எண்ணும்கவிதையை எல்லாம் எழுதிக் கொண்டிருக்கும்போதே அவளிடம் சின்ன காதல் பூ மணக்கும் அப்போதே பருவ காதல் உற்றெடுத்தும், ஊமை காதல் துளிரெடுத்து வருகிறது. துள்ளிபறந்து கூவிவிட்டால் துளிர்த்தக் காதல் குளிரடித்துக் கொண்டே இருக்கிறது. இந்த பெண்ணிய காதலை மிகவும் கலை நயத்தோடு கற்பனை கலந்து அழகாய் சித்தரித்துள்ளார்.

பெண்ணின் உடல் வேதனை

பெண்கள் குடும்பத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரி செய்வதற்காக பணிக்கு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். மகப்பேறு கால நாட்களிலும் குழந்தை பிறந்த பின்பும் பெண்கள் வேலைக்குச் செல்வதால் அவர்கள் உடல் பல வேதனைகளை அடைகிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்களின் இடுப்பெலும்பை
இறுக்கி படைக்க வேண்டுமென்று
குறிப்பெடுத்துக் கொண்டான் (கடவுள் வருகிறான் ஜாக்கிரதை. ப. 11)

பெண்ணின் பணிகளை அவளே பட்டியலிடுகிறாள். மிகவும் குறைந்த சதவீதத்தில் தான் வீட்டு வேலைகளில் ஆண்கள் பங்கு பெறுகிறார்கள். அதுவும் நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவரிடம் மட்டும் தான் இந்த மாற்றத்தை பார்க்க முடிகிறது. பெண்கள் தங்கள் உடல் வலி, அலுவலக வேலை, கணவனின் கோபம் என போராடும் பெண்கள் பலர் உள்ளனர். அதே சமயம் பெண்களின் ஊதியம் மற்றவர்களுக்கு குறையாமல் கொடுத்து விட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். பெண்களை வேலை செய்யும்இயந்திரமாக நினைக்கிறார்கள். பெண்களை உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இழிவு படுத்துகிறார்கள்.

பெண்களின் பாலியல் கொடுமைகள்

தாய் வழி சமுதாயம் முடித்து தந்த வீடு சமுதாயம் தொடங்கிய காலத்தில் எழுந்த நிலவுடைமை காரணமாக கற்பு வலியுறுத்தப்பட்டது. இந்த கற்புக்கொள்கை உடைக்கப்படுமாயின் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அதன் நிறுவனர்களான குடும்பம் முதலிய பெண்ணடிமைக்குக் காரணமாக அனைத்தும் உடைந்து சிதறி பெண் முற்றிலுமாக விடுதலை அடைந்து விடுவாள். அது போல கற்புக் கொள்கையானது ஆணுக்கும் வலியுறுத்தப்பட்டால் அடிமைத் தளைகள் நீங்கி உண்மையான மனிதநேயம் காக்கப்படும்.

விபச்சாரியாக இருக்க
மிரட்டி உதைத்தது
முதலாளிகள் என்னை
பூட்சுகால்களால்
மிதித்தார்கள் (இரண்டடுக்கு ஆகாயம். ப. 14)

கற்புநிலை என்று சொல்ல வந்தால் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென்று வைப்போம் என்று பாரதியார் கூறுகிறார். கற்பின்மீது எழுந்த போராட்டத்தில் பெண்களோடு ஆணும் சேர்ந்து போராடும்நிலைகள் பா. விஜயின் கவிதைகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியம்

சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நீங்காத இயல்புடையது கல்வியாகும். பண்பாட்டு வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் ஆற்றல் மிகுந்த கருவியாக கல்வி விளங்குகிறது.

ஆம்! நமமூர்
கூட்டு ரோட்டில் நிற்கும்
ஆட்டு மந்தைகள் மாதிரிதான்
நிற்க வைத்திருந்தது மனிதர்களை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கல்வி நிறுவனங்கள் (கடவுள் வருகிறான் ஜாக்கிரதை. ப. 3)

என்கிறார். இன்றைய காலகட்டத்தில் கருவில் உள்ள குழந்தைக்காகக் கூட கல்வி நிறுவனங்களில் வாசலில் நீண்ட வரிசையில் காத்து நிற்கிறார்கள்.

சமூகத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்கள் யாவும் ஆண்களின் ஆதிக்கத்தின் கீழ் இயங்குவதால் ஆண்களே கல்விக் கோட்பாடுகளை உருவாக்கும் சூழல் நிலவியதால் கல்வி நெறிப் பெண்ணியத்தின் தேவை எழுந்தது. கோயில்களில், தொலைக்-காட்சிகளில், பட்டிமன்றங்களில் காரசாரமாகப் பேசுவதற்கும் தான் இப்பெண்ணியம் பயன்படுகிறது. சுயநல போக்கினாலும் ஆண்களைப் போல செய்தல் என்று இயங்குவதாலும் தங்களுடைய நடுத்தர வர்க்கக் குணத்தினாலும் சமூகத்தில் இயங்குகின்ற பல புரட்சிகரமான பெண்ணிய இயக்கங்களோடு கலந்து பணியாற்றாமல் விலகிக் கொள்கின்றனர்.மேலும் இக்கல்வி நெறிப் பெண்ணியவாதிகள் பெண்களுக்கான உரிமையைப் பெறுவதற்காக பெண்களை ஒரு சமூகமாக திரட்டுதல், பெண்களை அரசியல் மயப்படுத்தல் போன்றவற்றில் கூட அக்கறை காட்டுவதில்லை என்பது கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியமாக உள்ளது.

சமுதாயத்தில் பெண்களின் நிலை

ஆண், பெண் இரு பாலரும் கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு பெண்பாற் புலவர்களும் அவர்தம் பாடல்களும் சான்றுகளாகும். சங்ககால பெண்கள் கல்வி சுதந்திரமும், படைப்பு சுதந்திரமும் பெற்றிருந்தார்கள். சங்ககாலத்துப் பெண்கள் காதல் சுதந்திரமும், திருமண சுதந்திரமும் பெற்றிருந்தார்கள் என்பதற்கு களவு வாழ்க்கை, உடன்போக்கு போன்ற பல ஆதாரங்கள் இருந்தாலும், கவிஞர் பா. விஜய் தற்போதைய பெண்களின் நிலையையே சிறப்பாக சித்தரித்துள்ளார். இலக்கியத்தில் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு இருந்தார்கள். பொழுது பாராமல் எல்லா நேரங்களிலும் பெண்கள் விருந்தோம்பல் செய்வார்கள் என்று நற்றிணை பாடல், **"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" (நற்றிணை. 142)** என்று குறிப்பிட்டுள்ளது. கவிதைகள் வழியே பெண்களின் அடிமைத்தனத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்கள் சாதனைகள் புரியவும் சரித்திரம் படைக்கவும் படைக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. கவிஞர் பெண்களின் உணர்வுகளுக்கு மிகவும் சிறப்பாகவே மதிப்பளித்துள்ளார் என்பதையும் நாம் தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது.

பெண்களின் ஒழுக்க நிலை

ஒழுக்கம் என்ற தமிழ்ச்சொல் 'ஒழுங்கு' என்பதிலிருந்து வந்ததாகும். பெண்கள் ஒழுக்கம் தவறினால் எல்லாமே தவறிப்போகும். உடலுக்கும், உள்ளத்திற்கும் துன்பம் தராத செயல்கள் யாவும் ஒழுக்கமாகக் கருதப் பெற்றதாகும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் (குறள்., 131)

என்று திருக்குறளில் கூறுவது போல், உயிரினும் மேலானதாக பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டியது ஒழுக்கமாகும். ஒழுக்கமாக வாழாவிடில் பெண்களின் அறிவு மிகவும் சிறந்ததாக கவிஞர் கூறியுள்ளார்.பெண்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்வியல் ஒழுக்க நெறிகளை கடைபிடித்தல் வேண்டும் பெண்களின் தகாத ஒழுக்கத்தினால் நோய்கள் பல ஏற்படுவதாகக்கூறியுள்ளார்.

ஆணும் பெண்ணும் கூடினர்
உலகம் முழுக்க
எய்ட்ஸ் நோய்களும்
அனுதினமும் கூடின (வள்ளுவர் தோட்டம். ப. 214)

பெண்களின் ஒழுக்கம் மிகவும் சிதைந்துகொண்டே இருக்கிறது. ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினால் பெண்களின் வாழ்வு உயர்ந்துநிற்கும். பெண்களை வாழ்விக்க மிகவும் அவசியமாக இருப்பது ஒழுக்கமேயாகும்.

கவிஞரின் படைப்பில் பெண்ணியம்

சமுதாயம் ஏற்றம் பெற்றிட பெண்கள் விழிப்புணர்வுடன் போராடுதல் வேண்டும். பெண்களுக்கான உரிமை போராடி பெறுவதன் வாயிலாக அடிமை நிலை மாற்றம் பெற்று முன்னேற்றம் அடையலாம்.

வட்டமிடும் பருந்துகளே நாங்கள் உங்கள்
வசதிக்கு வந்துதித்த நாகம் அல்ல
திட்டமிடும் நாரைகளே நாங்கள் உங்கள்
தீனிக்கென்று பிறந்துவிட்ட மீன்கள் அல்ல
கொட்டமிடும் நரியினமே நாங்கள் உங்கள்
கொள்பசிக்கு கிடைத்துவிட்ட கறியும் அல்ல
பட்டமிட்டார் அறிவீரோ நாங்கள் - நெருப்பு
பற்றாமலே எரிகின்ற சூரியக் கூட்டம் (நிழலில் கிடைத்த நிம்மதி. ப. 18)

இவ்வரிகள் மூலம் பெண்களின் உரிமைப் பாதுகாப்பை அறிய முடிகிறது.

கவிஞர் பா. விஜய் கவிதைகளில் பெண்ணை தெய்வமாய் வைத்து பூஜை செய்து வருகிறார்கள். அதே நேரத்தில் பலவிதமாக இழிவு செய்யப்பட்டு வாழ்வதையும் கண்கூடாக காண முடிகிறது. பெண்ணியம் பெருமையடைய அவர்கள் அடிமை விலங்கைத் தவிர்த்து பெண்ணிற்கு நீதி அரசராய் நாம் இருக்க வேண்டும் என்று கவிஞர்கள் கூறுகிறார்கள். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்குமாம் என்கிறார் பாரதியார். சமூகத்தின் சரிபாதியான பெண்ணின் இருத்தலைப் பற்றி பேசுவது பெண்ணியம். இது ஒரு சமூக அக்கரையின் வெளிப்பாடு என்பதால் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் உலகம் முழுவதும் பெருகி வருகிறது. இது போலவே பா. விஜய்யின்கவிதைகளும் பெண்ணின்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சிக்கல்களை நமக்கு தெளிவு படுத்துகிறது. புத்தம் புதிய சமுதாயம் காண கவிஞர் விரும்புகிறார். தன்னுடைய கவிதைகள் சிறப்படைய வேண்டும் என்று எண்ணுபவர் கவிஞர். ஒரு குழந்தை பிறக்க வேண்டுமானால் அது ஒரு பெண்ணால் மட்டுமே முடியும். பெண்ணே முதன்மை உடையவள். அப்பெணையே தாயாக வணங்குகிறேன் என்று பெருமைப்பட சொல்பவர். பெண்கள் தாழ்மை மனப்பான்மையை நீக்க வேண்டும். பெண்என்றாலே அழகுதான். பெண் பொறுமையோடும், தியாக மனப்பான்மையோடும், அடக்கத்தோடும், இரக்கத்தோடும் இருக்கும் தன்மை கொண்டவள்.

முடிவுரை

பெண்ணிய வாழ்வில் புதைந்து கிடக்கும் விருப்பங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், கொடுமைகள் மற்றும் குமுறல்கள் யாவும் எளிமையாக எல்லாரும் புரியும் விதத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காதலன் ஒரு பெண்ணை வர்ணிக்கும் நிலையையும், பெண்கள் உடல் அளவில் சந்திக்கும் பிரச்சனைகளையும், பெண்களுக்கு ஏற்படும் பாலியல் கொடுமைகளையும், பெண்களின் ஒழுக்க நெறியும், கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியத்தையும் பற்றி இக்கட்டுரையின் வழியாக மிகவும் தெளிவாக தெரிந்து கொள்ள முடிந்தது.

குறிப்புகள்

[1] *திருக்குறள்*. நர்மதா பதிப்பகம், சென்னை 17, 2005.
[2] பாரதியார். *பாரதியார் கவிதைகள்*. மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.
[3] இரா. பிரேமா. *பெண்ணியக்கதைகள்*. காவியா பதிப்பகம், சென்னை, 2004.
[4] புலியூர் கேசிகன். *நற்றிணை*. ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2010.
[5] பா. விஜய். *நம்பிக்கையுடன்*. குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.
[6] பா. விஜய். *நட்பின் நாட்கள்*. குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.
[7] பா. விஜய். *இரண்டடுக்கு ஆகாயம்*. குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Feminism in the Novel *Aalankaal*

D. Sheeja, Reg No: 241130601015, Research Scholar, Tamil Research Centre, Lekshmipuram College of Arts & Science, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-4459-903X
Dr. S. Elamaran, Assistant Professor, Tamil Research Centre, Lekshmipuram College of Arts & Science, Kanniyakumari, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
DOI: 10.5281/zenodo.14752925

Abstract

Feminism is not only about gaining rights for women but also about trying to change society. Feminists should understand all the problems of women and try to solve them. Feminism is about promoting the advancement and equality of women. In the Tamil novel by "Aalangaal" how women run the family, cheat others, the living conditions of the poor, the flow of life, feminism, female slavery, women's kindness and dowry violence are made as themes by the writer. Feminism also speaks against the atrocities committed against women. The novel has such incidents related to the victimization of women. Since the dawn of human society, women have been subjected to many hardships. The very birth of a woman is seen as a symbol of bearing burdens. From birth to death, women experience many hardships in life. Women who do not change this situation face many problems. They face problems such as lack of freedom, being subjected to violence and even slavery. This article examines the message of Mughilai Rajapandian's novel about the ethics of family life and issues related to feminism.

Keywords: Feminism, Women, Family, *Aalangal*, Mughilai Rajapandian.

References

[1] Aranganathan, The. *Tamil Ilakkiya Varalaru Oru Puthuparvai*. Devan Pathippkam, 43 Thirunagar, Thiruvanaikovil, Trichy-620005, 1999.
[2] Rajapandian, Mughilai. *Aalankal*. Kowvan Pathippkam, Chennai-600061, 2009.
[3] Gauri Anuradha, K. *Ramanan Padaippukalil Makalir Nilai*. Kodambakkam, Chennai-600024, 2012.
[4] Subbiah, Arang. *Ilakkiyaththiranayvu Isangal.* Kolkaikal. Pavai Publications, Chennai-14, 2006.
[5] Mallika, Arang, Munaivar. *Tamil Ilakkiyamum Penniyamum.* Pavai Printers, Chennai-14, 2015.
[6] Rengammal, Ira, Munaivar. Vasuki, Su. Munaivar. *Penniyam Anugumuraikalum Ilakkiyapayanpaadum*. Pavai Printers, Chennai-600014, 2016.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

ஆலங்கால் நாவலில் பெண்ணியப் பார்வை

து. ஷீஜா, பதிவு எண்: 241130601015, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-4459-903X
முனைவர் சு. இளமாறன், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுமையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980
DOI: 10.5281/zenodo.14752925

ஆய்வுச்சுருக்கம்

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துக் கொண்டு அவற்றைக்களைய பெண்ணியம் முற்பட வேண்டும். பெண்களின் முன்னேற்றத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதாக அமைவதே பெண்ணியமாகும். ஆலங்கால் நாவலில்; பெண்கள் குடும்பத்தை நடத்தும் விதங்கள், பிறரை ஏமாற்றுதல், ஏழைகளின் வாழ்வு நிலை, வாழ்க்கையின் ஓட்டம், பெண்ணியப்பார்வை, பெண்ணடிமைத்தனம், பெண்ணின் இரக்கம், வரதட்சணை கொடுமை ஆகியவை இடம்பெறுகின்றன. குடும்பத்தின் வாழ்வியல் நெறிமுறைகளையும் பெண்ணியம் சார்ந்த பிரச்சனைகளையும் முகிலை இராசபாண்டியன் புனைவு கதையாக கூறியுள்ள செய்தியை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்புச்சொற்கள்: பெண்ணியம், பெண்கள், குடும்பம், ஆலங்கால், முகிலை ராஜபாண்டியன்.

முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுப்பதாகும். மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டே பெண் என்பவள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றாள். பெண் என்னும் பிறப்பே சுமைகளைத் தாங்கும் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை பெண்கள் பல இன்னல்களை அனுபவிப்பவர்களாகவே உள்ளனர். இந்நிலை மாறாதபெண்கள் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். சுதந்திரமின்மை, வன்கொடுமைகளுக்கு உட்படுத்துவதால் அடிமைத்தனம் ஆகிய நிலைகளில் பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். ஆலங்கால் நாவல் கூறும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம் விளக்கம்

பெண்ணியம் என்பது ஒவ்வொரு காலத்திலும் பெண்களின் முன்னேற்றத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதாகும். ‘Feminism’ என்ற ஆங்கிலச்சொல் ‘Femina’ என்ற

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'Feminism' என்ற இலத்தின் சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ளது.'Feminism' என்ற சொல் 1894 ஆம் ஆண்டில் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன் முதலாக இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆக்ஸ்போர்டு அகராதி பெமினிசம் என்ற சொல் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்ற பொருளைத் தந்துள்ளது. 'Delux' ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி பெமினிசம் என்பதற்குப் பெண்களின் உரிமையை வற்புறுத்தும் ஒரு இயக்கம் என்று விளக்கம் தந்துள்ளது. பாலினப் பாகுபாடு (Sex Discrimination) தொடர்பான சமூகப் பண்பாடு வேர்களை இனம் கண்டுகொள்ளவும் குறிப்பாக, பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறைகளை உணர்ந்து கொள்ளவும், பெண்ணியம் தெளிவான வரையறையை முன்வைக்கிறது. இது பெண்களுக்கு எதிராக குடும்ப சமூக நிறுவனங்களில் அரசியலாகி வரும், ஆண் அதிகாரத்தை (Power) ஆளுகையை (Domination) எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலையைச் சுட்டியும் நிற்கிறது. சமூகத்திலும், வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலையைச் சுட்டியும் நிற்கிறது. சமூகத்திலும், குடும்பத்திலும், வேலைதளத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வறையரையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்.

பெண்ணியம் - அறிஞர்கள் கருத்து

பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மெற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்கிறார் கார்டன். "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பின் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது என்பது ஜெயின் என்பவரின் கருத்தாகும்". பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப்பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்கிறார். புட்சர் சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்" என்கிறார் மொலினாதேன்மொழி.

ஆலங்கால் நாவலில் ஒரு கலைஞன் பெறும் பல்வேறு வாழ்வியல் அனுபவங்களே அவனது படைப்பிற்கு ஆதாரமாக அமைகின்றன. மனிதன் செம்மையாக வாழ்வதற்குத் தேவையான வழிமுறைகளை சமுதாயம் அவ்வப்போது உருவாக்கி தருகிறது. சமூக

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

நிறுவனங்களுக்கு அடிப்படையாக விளங்குவது குடும்பமாகும். படைப்பாளி தன் அனுபவங்களிலிருந்தும், சமூதாய சூழல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் வாழ்க்கை அனுபவங்களைப் படைப்புகளில் வெளிப்படுத்துகிறான். இவ்வியலில் ஆலங்கால் நாவலில் காணப்படும் வறுமை, மதுப்பழக்கம், திருமணம், குடும்பச் சூழ்நிலை, முதியோரின் நிலை, மனிதநேயம், தொழிலாளர்களின் நிலைகள் ஆகியவை குறித்த பதிவுகள் ஆராயப்பட்டுள்ளன.

ஆலங்கால் நாவலில் சமுதாய நிலை

ஆலங்கால் நாவலானது சமுதாயக் கண்ணோட்டத்தில் படைக்கப்பட்டுள்ளது. நாவலாசிரியர் சமுதாயத்தில் மக்கள் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சனைகள், தொழிலாளர்கள் நிலைகள், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள், அரசியல் ஆட்டங்கள், உணவுப்பற்றாக் குறையினால் ஏழை மக்கள் படும் துன்பங்கள், சமூதாயத்தில் பெண்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள் என சமூகத்தை அப்படியே பிரதிபலித்துள்ளார். அவ்வகையில் ஆலங்கால் நாவலில் மக்கள் தேவைக்குப் பயன்பெறும் பனையேறும் தொழிலை தர்மலிங்கம் செய்து வாழ்ந்தார். ஒரு நாள் தர்மலிங்கம் பனையேறிவிட்டு வீட்டிற்கு வந்து மனைவி ரெங்கம்மாள் "இன்னா…. வந்திட்டேன்…" (முகிலை இராசபாண்டியன், ப. 11) என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தாள் கணவனின் தொழிலில் தன்னையும் இணைத்துக் கொண்டு குடும்பத்திற்காக உழைக்கும் பெண்ணாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

குடும்பம்

மனிதன் வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது குடும்பம். அது கணவன், மனைவி, பிள்ளைகளைக் கொண்ட சிறிய அளவுடைய ஒன்றாகும். பரந்துப்பட்ட நிலையில் ஒருங்கிணைந்து வாழ்கின்ற நபர்களையும் குறிக்கிறது. "குடும்பம் என்பது சிறிய குழுவாகவும் இருக்கலாம், பலர் அடங்கிய ஒரு பெருங் குழுவாகவும் இருக்கலாம், இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இடம் பெற வேண்டும் இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். கணவன், மனைவி முதலியோர் சேர்ந்து வாழும் அமைப்பு" 'குடும்பம'; எனக் கூறப்படுகிறது.

தொழிலார்களின் அவலம்

மக்களின் உயிரையும் உடலையும் பாதுகாத்து வாழ்வதற்கு துணை செய்வது தொழில்களாகும். தொழிலாளியின் நிலை மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகிறது. உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கை என்பது சமூகத்தில் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. நாவலில் முதலாளிகள், தொழிலாளர்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை ஆலங்கால் கூறுகிறது. இதில் காணலாம். முதலாளிகளுக்கு தொழில்களினால் எண்ணற்ற லாபம் கிடைத்தாலும் ஏழைகளுக்குக் அற்பக் கூலியைக் கொடுக்கவும் தயங்கினர். தொழிலாளிகள் வீட்டில் படும் துன்பங்களும் அதிகம். "நான் எங்ஙன பேசிக்கிட்டு நிக்கேன்

பனை ஏறின ஒடனே வீட்டுக்குத் தான் வருவேன்... வாறதுக்கு முன்னால் ஆலங்கால்ல ஏறங்கி ஒருமுங்கு முங்கிட்டு வருவேன்...." தர்மலிங்கத்தின் அவல நிலை நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதனின் மனநிலை

மனிதன் மனிதனை மதித்தலும் மனித மதிப்பைப் பேணுதலும் மனித மனநிலை ஆகும். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மனிதன் தன்னைப் போன்ற மனிதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். அன்பே இன்பத்தின் ஊற்றாகும் அவ்வின் ஊற்று மனித இனத்தின் படிந்துள்ள மாசுகளை நீக்கும். மனிதனை மனிதனாக வாழ வைக்கும் மனிதனை நேசிப்பது மனித நேயம் எனலாம். திருவள்ளுவர்

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் பேர்த்த உடம்பு (குறள்-80)

வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் சிந்தனையில் மனித நேயம் மிளிர்வதைக் காணமுடிகிறது. உணர்வு சார்ந்த மனித நேயம் என்பது காலம், இடம் என்னும் பின்னணிகளில் மனிதன் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைக் குறிக்கிறது. கள்ளு வித்துட்டு தர்மலிங்கம் சொன்னது எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. **"முத்தையா தப்பிப்போன விஷயத்தை மறைப்பதற்கு இன்னொருவரைப் பிடிப்போம் என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தால் அவர் சொன்ன எதையும் அவர்கள் கேட்கவில்லை" (முகிலை இராசபாண்டியன். ப. 21)** என்ற வரிகள் தெரிவுப்படுத்துக்கின்றன. முதன்மையானது என்பதுமாகிய நடைமுறைகள் ஆணாதிக்க சமுதாயத்தில் நிலவுகிறது என்று ஆணாதிக்கம் பற்றிய செய்தியைப் பதிவு செய்கிறது.

பிறரை ஏமாற்றுதல்

பிறரை ஏமாற்றுதல் மனிதனிடம் இயல்பாக இருக்க கூடிய ஒன்றாகும். பல மனிதர்கள் தன்னுடன் பழகும் தோழமைக்கு இடையூறை ஏற்படுத்துவார்கள். சிலர் நல்லது செய்வது போன்று தீமையை உருவாக்குகின்றனர். நாவலில் இடம்பெறும் முத்தையா கள்ளு குடிச்சாருண்ணு போலீஸ்காரர் வேனுக்குள் ஏற்றினார். அவர்களை அழைத்துக்கொண்டு செல்லும்போது **"முத்தையா திடீரென்று குளத்திற்குள் குதித்துவிட்டார். வெளியே நின்ற போலீஸ்காரர் பார்ப்பதற்குள் முங்கு நீச்சலிலேயே குளத்துக்குள் போய் விட்டார். என்ன...ஓய்...இப்படிக் கோட்டை உட்டுட்டு நிக்கிறீரு..." (முகிலை இராசபாண்டியன். ப.22)** என்று கூறுவதிலிருந்து அவன் பிறரை ஏமாற்றுவதையே குறிக்கோளாகவும் தொழிலாகவும் கொண்டிருக்கும் இழிகுணத்தை எடுத்துரைக்கின்றது.

ஏழைகளின் வாழ்வு நிலை

சமுதாயத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டே ஏழை, பணக்காரன் உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலாளி தொழிலாளி எனும் பாகுபாடு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உருவாகின்றது. ஒவ்வொரு சமூகச்சூழலும் ஏழைகளை ஒரு சமூகக் கைதியாக நிர்ணயம் செய்கின்றது. இந்நாவலில் தர்மலிங்கம் என்ற பாத்திரத்தின் மூலமாக பல்வேறு பொருளாதார வசதி படைத்தோர் ஏழைகளை நசுக்குவதை ஆசிரியர் காட்டுகின்றார். அத்தடையையும் மீறி தர்மலிங்கம் தன்னுடைய சொந்த முயற்சியின் மூலமாகப் போராடி வாழ்வில் வெற்றியடைகிறான.

வாழ்க்கையின் ஓட்டம்

ஒவ்வொரு காலநிலையிலும் வாழ்க்கைப் போராட்டமானது சமூக பணக்காரனை கொண்டே அமைகின்றது. வாழ்க்கைமுறையானது சமூக ஏற்றத்தாழ்வுகளை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. இந்நாவலிலும் தர்மலிங்கம் வாழ்க்கைமுறை, அவனது குடும்பத்தின் வறுமை நிலையை முன்னிலைப்படுத்தியே அமைகின்றது. அவன் போலீஸ்காரன் மூலம் பல இன்னல்களை அடைந்தான் என்றும் எளியவனை அந்தஸ்து மிக்கவர்கள் எவ்வாறு அடிமைப்படுத்தி அவர்களை அடக்க முற்படுகின்றனர் என்பதையும் ஆசிரியர் கூறுகின்றார். கணவனைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போன கவலையில், தங்கையின் கல்யாண ஏற்பாட்டால் மறந்தது இதைப் போல தான் இன்றைய வாழ்க்கைமுறை உள்ளது. மக்களின் வாழ்க்கையில் ஒன்றினை அடைய வேண்டும் என நினைக்கும் போது வேறு ஒன்று வந்து தடையிட்டு வாழ்க்கையானது ஏதோ ஒன்றை அடையவேண்டும் என்பதற்கான போராட்டமாகவும் இயந்திரத்தனமான ஓட்டமாகவும் அமைகின்றது. தர்மலிங்கம் தன்னுடைய இன்னல்கள் அனைத்தையும் எதிர்த்து சுயமாக தனக்கென சுயமரியாதை ஏற்படுகின்ற வகையில் வேலையினை அடைய எண்ணி கடினமாக உழைக்கிறான். தன்னுடைய முயற்சியால் கிடைத்த வேலையின் நிமித்தமும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைகிறான்.

பெண்ணியப் பார்வை

அன்றாட வாழ்வில் வீட்டு வேலைகள் அனைத்தையும் பெண்கள் செய்கின்றனர். நம் சமூகத்தில் ஒரு கணிசமான சதவீதம் பெண்கள் சும்மாதான் வீட்டில் இருக்கிறேன் என்று சொல்லி கொண்டிருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். உண்மையில் இவர்கள் எந்த வேலையும் செய்யாமல் வீட்டில் சும்மா இருக்கவில்லை, வீட்டு வேலைகளையும் செய்து முடிக்கின்றனர். இவர்கள் தங்கள் குடும்பத்தின் எல்லோருக்கும் முன் விழித்தெழுந்து எல்லோருக்கு பின் உறங்கச் செல்கிறார்கள். இந்த விழிப்பிற்கும் உறக்கத்திற்கும் இடைப்பட்ட காலம் முழுவதும் இவர்கள் வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள். ஓய்வெடுக்கும் நேரத்திலும் கூட இவர்களின் கைகள் ஏதாவது ஒரு வேலையை செய்து கொண்டே இருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம். அதை போல தர்மலிங்கத்தின் மனைவி ரெங்கம்மாள் காலை வேலையாக புட்டுக்குழலில் இருந்த புட்டை எடுத்து இரண்டு தட்டுகளில்

வைத்தாள். இன்னொரு தட்டில் சிறுபயிறையும் சீனியையும் கொண்டு வைத்தாள் ரெங்கம்மாள்.

"யப்பா....! காப்பி குடிக்க வாங்க...." என்று கூட்டிக் கொண்டு போய் உட்கார வைத்தாள். "நீயும் சாப்பிடும்மா...." (முகிலை இராசபாண்டியன். ப. 48) என்று தாயார் சொன்னதற்கு அவிய இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவாங்க... அதுக்கப்புறமா நான் புட்டு தின்னுவேன்.... (முகிலை இராசபாண்டியன். ப. 48) என்று சொன்ன அவள் கருப்பட்டி காப்பியை இரண்டு தம்ளர்களில் ஆற்றிக்கொண்டு வந்தாள். மதியம் ரெங்கம்மாள் தன் கணவருக்கு சாப்பிடுவதற்காக மீன்கறியை சமைத்து வைத்து விட்டு தன் கணவரையும் தன்னுடைய தம்பி முத்துப்பாண்டியையும் சாப்பிடுவதற்காக அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் போனாள். மீன்கறி வாசம் கவலையை எல்லாம் மறக்கச் செய்தது. **"சரி...சரி...நீங்க சாப்பிடுங்க..." (முகிலை இராசபாண்டியன். ப. 36)** என்ற ரெங்கம்மாள் இருவருக்கும் மீன் துண்டுகளை எடுத்து வைத்தாள். முத்துப்பாண்டியும் தர்மலிங்கம் சாப்பிட்டு விட்டு எழுந்திருந்தான். பெண் என்பவள் தன் குடும்பத்திற்கு தேவையான உணவு வகைகளை சமைத்து கொடுத்து குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உள்ள தேவைகளைக் கவனிக்கின்றனர். இவை அனைத்தையும் பெண்களே செய்வதால் அவர்களே குடும்பப் பொறுப்பில் பெண்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

பெண்ணடிமைத்தனம்

வரலாற்றின் பெரும் பகுதியில் பெண்கள் சமவுரிமை வாய்ப்புகள் பெறாமல் தாழ்வுநிலையில் வாழ்ந்ததையும் அவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளையும் சமய சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்பையும் குறிக்கிறது. சில சமூகங்களைத் தவிர பெரும்பான்மைச் சமூகங்கள் நெடுங்காலமாக ஆணாதிக்க சமூகங்களாகவே இருக்கின்றது. சுதந்திரங்கள் அற்றவர்களாகவும், ஆண் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருக்கும் நிலையைப் பெண்ணடிமைத்தனம் ஆகும். ஒரு குறிப்பிட்ட வேலை என்றில்லாமல், வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் இழுத்து போட்டு செல்லத்தாய் செய்து கொண்டிருப்பார்கள். தங்கையா சைக்கிளை ஸ்டேண்ட் போட்டு விட்டுக் காலைக் கழுவுவற்காக மாட்டுத்தொழுவத்தின் கதவைத் திறக்கப் போனார். சேல்லத்தாய்க்குத் **"திடுக்" என்றது. (முகிலை இராசபாண்டியன். ப. 69) "அந்தக் களத்துக்குள்ள தண்ணி இல்லையப்பா...! நீங்க அந்தமங்களா படியில நில்லுங்க..., நான் தண்ணி கொண்டு வாறேன்..." (முகிலை இராசபாண்டியன். ப. 69) என்று அவள் சொன்னதும் படியில் ஏறி நின்ற தங்கையாவின் காலில் ஊற்றினாள். காலுக்கு மேல் காலைத் தேய்த்து அழுக்கைக் கழுவிய அவர், "போதும்மா" (முகிலை இராசபாண்டியன். ப. 69) என்று சொல்லி விட்டு உள்ளே போனார். "அப்பா...! நான் ஒங்களுக்குச் சோறு போடுறேன்..." (முகிலை இராசபாண்டியன். ப. 69)** என்று வேகமாக உள்ளே போனாள். தங்கையா சாப்பிட்டு முடித்த அறிகுறி தெரிந்தது. சாப்பிட்டு முடித்ததும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உடனே தூங்கும் வழக்கம் அவருக்குக் ஒருநாளும் கிடையாது. வெற்றிலை போட்டபடி திண்ணையில் இருப்பார். அதன் பிறகு தான் தூங்கி விடுவார். செல்லத்தாய் வீட்டு வேலைகள் முடிந்தவுடன் தூங்கி விடுவாள். பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருந்தனர்.

பெண்ணின் இரக்கம்

மன்னிக்கும் பண்புடையோருக்கு இரக்கக்குணமும் இருக்கும். எல்லா உயிர்களிடமும் இரக்க குணமுடையவராக இருத்தல் நன்மை பயக்கும். **"தர்மலிங்கத்தைப் பார்த்ததும் ஓடி வந்தாள், ரெங்கம்மாள் அவளது கண்ணிலிருந்து கண்ணீர் பொங்கி வந்தது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும் நிலை வந்துவிட்டதே என்று நினைத்து நினைத்துக் கவலைப்பட்டு தர்மலிங்கத்தின் இரக்கக்குணத்தை பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்". (முகிலை இராசபாண்டியன். ப: 35)**

வரதட்சணை கொடுமை

வரதட்சனை என்பது பெண்களைப் பெற்றவர்களுடைய மனதை சிதறடிக்கக் கூடியதாக உள்ளது. வரதட்சனை இந்திய நாட்டில் மட்டும் பரவலாகக் காணப்படும் ஒரு சமூகநோய் ஆகும். பெற்றோர்கள் தங்கள் பெண்களை நல்ல படித்த வேலையுள்ள வரன்களுக்குத் திருமணம் முடிக்க எண்ணி போது ஒரு போட்டி நிலை உருவாகியது. எனவே மாப்பிள்ளைக்குத் பெண்ணும் பொருளும் அளிக்க முன் வந்தனர். மெல்லமெல்ல ஆணாதிக்கம் அதிகரித்து சமுதாயத்தில் வரதட்சணை திருமணத்தில் வியாபாரம் விஷயமாகிறது. இந்திய தண்டனைச் சட்டம் 498 கட்டாய வரதட்சணை வாங்குவோர் தண்டிக்கப்பட வேண்டும்என்று கூறுகிறது. முத்துநாடார் கொஞ்சம் வருமாணத்தை வைத்து ரெங்கம்மளுக்கு ஏதோ கொஞ்சம் நகை போட்டுக் கல்யாணம் செய்து வைத்தார். இப்போது தங்கமாளுக்கு கொஞ்சம் நகை போட முடிந்தது. தங்கமாளுக்கு மாப்பிள்ளை வீடு பாண்டிக்காடு ஆதலால் அவங்க ஒன்றும் கேட்கவில்லை என்றாலும் நாம நம்ம மரியாதைக்கு ஏத்தாப் போல் போடணும் என்ற நினைப்புடன் நகைகள் எல்லாம் செய்துவிட்டார். பெற்றோர் பொருட்களைப் பரிசாகக் கொடுப்பது பற்றி தனது ஆலங்கால் நாவல் முகிலை இராசபாண்டியன் உணர்த்தியுள்ளார்.

பெண் உரிமை மறுப்பு

பெண்கள் தங்கள் வீடுகளில் முன் பகுதியில் இருப்பதற்கு உரிமை இல்லாமல் இருந்தது. என்னங்க... இன்னைக்கி வட்டலாத்து எங்கயும்போகல்லியா...? என்று கேட்டுக் கொண்டே மங்களாவுக்குள் பத்திரகாளியும் வந்தாலும் அவ்வளவாக உட்காரவில்லை. யாராவது அந்நிய மனிதர்கள் வருவார்கள்... போவார்கள் என்பதால் ஏதாவது பேசவேண்டும் என்றாலும் நின்று கொண்டே பேசிவிட்டுப் போய்விடுவார்கள்.

திருமணம் உரிமை மறுப்பு

தான் விரும்பும் மணமகனைத் தானே திருமணம் செய்து கொள்ள முடியாது. பெண்ணுக்கு வாழ்க்கையில் பெண் உரிமை மறுக்கப்பட்டது. தான் காதலிக்கும் ஆண்மகனை

திருமணம் செய்யக் கூடிய உரிமை மறுக்கப்பட்டது. முத்துப்பாண்டியின் மீது காதல் கொண்ட செல்லத்தாய் காதலை விட உயர்வானதும் புனிதமானதும் இந்த உலகத்தில்வேறு எதுவும் இல்லை' என்று சொல்வாள். அந்த அளவிற்குக் காதலை மதித்தாள் அவள். முத்துப்பாண்டியின் மீது அளவு அதிமான காதல் வைத்தால். அவனை விட முடியாத அளவில் இருந்தாள். தன் தகப்பனார் தன்னுடைய காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து விட்டார். பத்திரகாளியும் செல்லத்தாய் ராத்திரி முழுவதும் தூங்கவில்லை. செல்லத்தாயின் கன்னம் வீங்கியிருந்தது. தலைவிரி கோலமாக இருந்தாள் அவள். மானம் போனதாக அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தாள் அவள். 'புள்ளய வளர்த்திருக்க லெச்சனமா' என்று ஏசுவதற்கு வந்த தங்கையா வீட்டின் நிலையைப் பார்த்ததும் அமைதியாக மங்களாவுக்குள் இருந்தார்.

ஆணாதிக்க வர்க்கம்

பெண்தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டியவர். ஆணே முன் நிறுத்தப்பட வேண்டியவன் என்னும் கருத்தியலுக்குள் ஆணாதிக்கவர்க்கம் பெண்ணைச் சிறைவைத்து வருகின்றன. எனவே சமுதாயத்தின் கடைசிநிலை உயிரியாகப் பெண் பின்னுக்குத் தள்ளப்படுகின்றாள். **தர்மலிங்கம் இடுப்பில் தொங்கிய குடுவையை அவிழ்த்த படியே "ரெங்கம்மா...!" (முகிலை இராசபாண்டியன். ப. 11) என்று அவரது மனைவியைக் கூப்பிட்டார். கருப்பட்டியை அடுக்கிக் கொண்டிருந்தரெங்கம்மாள், "இன்னா... வந்திட்டேன்..." (முகிலை இராசபாண்டியன். ப.11) என்று சொல்லிக் கொண்டே ஓடிவந்தாள். "ஏ.. ரெண்டு சொம்பு எடுத்துட்டுவா...." (முகிலை இராசபாண்டியன். ப. 11) என்று சொன்ன தர்மலிங்கம் குடுவையை அருகில் வைத்து விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். ரெங்கம்மாள் கொண்டு வந்த செம்புங்களில் இருந்த பதநீரை ஊற்றினார். இரண்டு செம்புகளும் நிறைந்ததும் ஒரு செம்பை உள்ளே கொண்டு போய் வைக்கச் சொன்னார். தர்மலிங்கத்திற்கு அடிமையாக ரெங்கம்மாள் இருந்தாள்.** இன்றைய சமுதாயம் ஆண்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட சமுதாயமாகும். இந்த ஆணாதிக்கச் சமுதாயம் பெண்ணை ஒரு மனித பிறவியாகப் பர்க்காமல் ஒரு போதைப்பொருளாகவும், விலங்காகவும் எண்ணி தங்களுக்கு அடிமையாக வைத்துக் கொண்டிருக்கிறது.

பெண் கல்வி மறுப்பு

பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. ஆலங்கால் நாவலில் ஆண்மகனை மட்டுமே படிக்க வைத்தனர் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. சந்தையில் பார்த்த வியாபாரத்தால் தான் முத்துப்பாண்டியை மட்டும் படிக்க வைத்தார். அந்த வருமானத்தால் தான் ரெங்கம்மாளுக்கு ஏதோ நகைபோட்டுக் கல்யாணம் செய்து வைத்தார். தங்கம்மாளும் திருமணம் செய்து வைத்தார்.

முடிவுரை

மனிதனுடைய வாழ்வில் நடைபெறுகின்ற யதார்த்தங்களை வெளிக்கொண்டு வருவது

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். மனித வாழ்வில் நெறிமுறையில் பெண்ணிப்பார்வையின் மூலமாக பெண்களையும் மனிதவாழ்க்கையும் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் வெளிக்கொண்டு வருவது. வாழ்க்கையில் நம்பிக்கையுடன் வாழ உதவுகிறது. இன்றைய காலகட்டத்திலும் பெண்ணடிமை பெண்களுக்கெதிரான சூழல், ஆணாதிக்கம் இன்றைய காலங்களிலும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஏழை மக்களின் அடிமைத்தனத்தை உடைக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

குறிப்புகள்

[1] அரங்கநாதன், தி. தமிழ் இலக்கிய வரலாறு ஒரு புதுப்பார்வை. தேவன் பதிப்பகம், 43 திருநகர், திருவானைக்கோவில், திருச்சி-620005, 1999.

[2] இராசபாண்டியன், முகிலை. *ஆலங்கால்.* கோவன் பதிப்பகம், 72, எம்.ஜி.ஆர். சாலை, நங்கை நல்லூர், சென்னை-600061, 2009.

[3] கௌரி அனுராதா, க. *ரமணன் படைப்புகளில் மகளிர் நிலை.* கோடம்பாக்கம், சென்னை-600024, 2012.

[4] சுப்பையா, அரங்க. *இலக்கியத்திறனாய்வு இசங்கள், கொள்கைகள்.* பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை-600014, 2006.

[5] மல்லிகா, அரங்க, முனைவர். *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்.* பாவை பிரிண்டர்ஸ், (பி)லிட்., இராயப்பேட்டை, சென்னை-600014, 2015.

[6] ரெங்கம்மாள், இரா, முனைவர். வாசுகி, சு. முனைவர். *பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப்பயன்பாடும்.* பாவை பிரிண்டர்ஸ், இராயப்பேட்டை, சென்னை-600014, 2016.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Modern Feminism in the Novel *Irayuthirkadu*

J. Sherafin, Reg.No.: 22213154021018, Tamil Department, S.T. Hindu College, Nagercoil -02, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-6275-3270
N. Nisha Navis, Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil -02, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597
DOI: 10.5281/zenodo.14752946

Abstract

Modern Tamil novels portray the lives of contemporary women. Tamil women have gone through many oppressions and live without much worldly knowledge. They have adapted themselves to suit the modern environment. The times when they fought to free themselves from slavery have changed and they have started fighting for the problems of their dependent communities. They are using their work and knowledge along with social media to reclaim the right to life of socially marginalized people from the ruling classes. Times have changed when they used to think of home as the world and today educational institutions have provided opportunities for women to explore the world. Many modern women do not fail to pass on culture and tradition to the next generation. They raise some intellectual questions against the encroachments imposed on them in the name of spirituality and tradition. Women who were enslaved by patriarchy are also helping men who live with wrong principles in today's times. Modern women do not move their lives according to the environment like the women of the previous century but they shape the environment as it suits them. They do not allow any events in their life that affect their normal life and principles. Indira Soundarrajan has revealed such matters in the novel "Iraiyuthirkadu". It will bring a change in Tamil society by bringing it out of the ruling classes and superstitions.

Keywords: Modern Feminism, Women, Indira Soundarrajan, *Iraiyuthirkadu.*

References

[1] Archana, A. "Puthumai Pithan Sirukathaigalil Mithavatha Penniyam" *Tamil Mozhi Matrum Pannattu Aivithazh.* Volume - 4, Issue -1, Dec. 2024.
[2] Indira Sounder Rajan. *Iraiyuthirkadu.* Vikatan Publication. Chennai - 600002.
[3] Bharathiar. *Bharathiar Kavithaigal*. Kaleshwari Publication, Chennai -600017.
[4] Muthu Chidambaram, S. *Penniya Thotramum Valarchium.* NCBH, Chennai -600028.
[5] Ratinakumar, N, S. "Venugopalin Chengattu Kathaigalil Pen Thannilaikal." *Tamil Mozhi Matrum Ilakiya Pannattu Aivithazh*, Volume - 4, Issue -1, Dec. 2024.
[6] Vasuki Jayaratnam, Dr. *Pennia Suvadugal.* Arivu Publication, Chennai -600014.
[7] Jayasili. *Kaatil Oru Magan Penniya Nokku.* New Century, Chennai -600028.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

இறையுதிர்காடு நாவலில் நவீன பெண்ணியம்

ஜெ. ஷெராபின், பதிவுஎண்: 22213154021018, தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-6275-3270
நே. நிஷா நேவிஸ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597
DOI: 10.5281/zenodo.14752946

ஆய்வுச்சுருக்கம்

தற்கால தமிழ் நாவல்களில் சமகால பெண்களின் வாழ்வியலை காண முடிகிறது. தமிழ் பெண்கள் பல அடக்குமுறைகளைக் கடந்து உலகியல் சார்ந்த பல அறிவு நுட்பங்களோடு வாழ்ந்து வருகின்றனர். நவீன கால சூழலுக்கு ஏற்றார்போல் தங்களை மாற்றிக் கொண்டனர். தங்களை அடிமை வாழ்க்கையிலிருந்து மீட்டுக் கொள்ள போராடிய காலங்கள் மாறி தான் சார்ந்த சமூக மக்களின் பிரச்சனைகளுக்காக போராட ஆரம்பித்து விட்டனர். சமூகத்தினரால் ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையை அதிகார வர்க்கங்களிடமிருந்து மீட்டுக்கொள்ள தங்கள் வேலைகளையும் அறிவு திறத்தையும் அதோடு சமூக ஊடகங்களையும் மிகத் தெளிவாக பயன்படுத்துகின்றனர். கலாச்சாரம், பாரம்பரியம் இவற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்தவும் நவீன கால பெண்கள் பலர் தவறுவதில்லை. ஆன்மீகம் மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் தங்கள் மீது திணிக்கப்பட்ட அத்துமீறல்களை எதிர்த்து அறிவுப்பூர்வமான சில கேள்விகளை எழுப்புகின்றனர். வீட்டையே உலகமாக எண்ணி வாழ்ந்த காலங்கள் மாறி இன்று உலகையே வலம் வருமளவு வசதி வாய்ப்புகளை கல்வி நிலையங்கள் பெண்களுக்கு வழங்கிவிட்டன. ஆணாதிக்கத்தில் அடிமைப்பட்டு இருந்த பெண்கள் இன்றைய காலகட்டத்தில் தவறான கொள்கை கோட்பாடுகளுடன் வாழும் ஆண்களை நல்வழிப்படுத்தவும் செய்கின்றனர். நவீன கால பெண்கள் முந்தைய நூற்றாண்டு பெண்களைப் போல் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கையை நகர்த்தாமல் தங்களுக்கு ஏற்றார் போல் சூழல்களை அமைத்துக் கொள்கின்றனர். தங்கள் இயல்பு வாழ்க்கையும் கொள்கைகளையும் பாதிக்கும் எந்த ஒரு நிகழ்வுகளையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதில்லை. இத்தகைய வாழ்வியல் முறை தமிழ் சமூகத்தை அதிகார வர்க்கங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்து வெளிக்கொண்டு வந்து மாற்றத்தை ஏற்படுத்தும் என இந்திரா சௌந்தர்ராஜன் அவர்கள் தன் இறையுதிர்காடு நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்புச்சொற்கள்: நவீன பெண்ணியம், பெண்கள், இந்திரா சௌந்தர்ராஜன், இறையுதிர்க்காடு.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

முன்னுரை

தமிழ் நாவல்கள் பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பெண்ணிய சிந்தனைகளுக்கு வலுசேர்த்த காலங்கள் மாற்றம்பெற்று பெண்ணிய கோட்பாடுகளை பிரதிபலிக்கும் கதாபாத்திரங்களை வெளிகாட்ட ஆரம்பித்துவிட்டன. எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் தன்னுடைய இறையுதிர் காடு நாவலில் பாரதி என்ற கதாபாத்திரத்தை நவீன கால பெண்ணியத்தின் பிரதிநிதியாக முன்னிறுத்தியுள்ளார். பெண்ணிய கோட்பாடுகளான தனித்துவம், அதிகாரம், போராட்ட குணம், சமத்துவம் என பல கூறுகளை தன்னகத்தே கொண்ட பாரதி கதாபாத்திரம் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

பாரதி கண்ட புதுமைப்பெண் 'பாரதி'

பாரதி கதாபாத்திரம் தான் இறையுதிர் காடு நாவலின் கதாநாயகி. பாரதி ஒரு எம்.பி.யின் மகளாக இருந்தபோதும் தனது வீட்டில் அடங்கி விடாமல் தனக்கென ஒரு வேலை, தனிக்கொள்கை என சமூக அக்கறை கொண்ட பெண்ணாக திகழ்கிறார். தான் சார்ந்த சமூகம் சந்திக்கும் சமூக சிக்கல்கள், சுரண்டல்கள் மற்றும் அதிகார மீறல்கள் இவற்றிற்கு தனது பத்திரிக்கை வேலையின் மூலம் தீர்வு காண முற்படும் ஒரு புதுமைப்பெண் பாரதி. பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக வாழ்ந்த சூழல்கள் மாற்றம் பெற்று அதிகாரம் மிக்க ஆண்கள் தவறு செய்யும் பட்சத்தில் அதனை எதிர்த்து கேள்வி கேட்டு அதற்கான நீதியை நோக்கி பயணம் செய்யும் பெண்களாக பலர் மாற்றம் பெற்று விட்டனர். பாரதியும் அப்படியான எண்ணம் கொண்டவள் என்பதை நாவலில் வரும் சில நிகழ்வுகள் காட்டுகின்றன. பாரதியின் தந்தை அடுத்தவர் நிலத்தை ஆக்கிரமித்து அதில் கல்லூரி கட்டி பணம் சம்பாதிக்க ஆசை கொள்கிறார். இது போன்ற எந்த எண்ணமும் இல்லாதவள் பாரதி. தான் விலை கொடுத்து வாங்கிய பொருள் தனக்கு சொந்தமில்லை என்று அறிந்ததும் பொருளை உரியவரிடம் ஒப்படைக்கும் மனம் கொண்டவளாக காணப்படுகிறாள். பேராசைமிக்க தன் தந்தையின் மேல் கோபம் கொள்கிறாள். தந்தையை இழந்த சிறுமி மீது கருணை கொள்கிறாள். தன் தந்தை திருந்தி வாழ வேண்டும் என்பதே அவளது எண்ணம். அவரை நல்வழிப்படுத்தவும், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் நல்வாழ்வுக்காகவும் சில முயற்சிகளை மேற்கொள்கிறாள். அக்குடும்பத்திலுள்ள பெண் குழந்தையின் கல்வி மற்றும் எதிர்கால தேவைகளுக்காக பண உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்கிறாள். இவ்வாறான அறிவு சார்புலமையும் பொதுநல செயல்பாடுகளும் பாரதியை ஒரு புரட்சி பெண்மணியாக காட்டுகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞான செருக்கும் இருப்பதால் (மகாகவி பாரதியார் கவிதைகள்)

என்ற மகாகவி பாரதியின் வரிகள் பாரதி கதாபாத்திரத்தோடு ஒத்து செல்கிறது. பாரதி நல்லெண்ணம் கொண்ட இனியவள். நாவல் முழுவதும் அவள் ஓரிடத்தில்கூட பொய்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உரைத்ததாக காணப்படவில்லை. அவள் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் கடந்து செல்லும் விதம் அவளது மன உறுதியை காட்டுகிறது. மனிதர்கள் மட்டுமல்ல விஷத்தன்மை கொண்ட பாம்பு கூட கொல்லப்படக்கூடாது என்பது பாரதியின் எண்ணம். வளர்க்கும் செடிகளும் நீரின்றி வாடுவதை அவள் விரும்பவில்லை. கடவுள் நம்பிக்கை இல்லாதவளாக இந்திரா சௌந்தர்ராஜனால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் மதங்கள் போதிக்கும் எந்த ஒரு கோட்பாட்டையும் மீறாதவளாக காணப்படுகிறாள் பாரதி.

மனதி லுறுதி வேண்டும்.

வாக்கினி லேயினிமை வேண்டும்.

நினைவு நல்லது வேண்டும். (மகாகவி பாரதியார் கவிதைகள்)

மகாகவியின் இவ்வரிகள் மூலம் அவர் விரும்பிய பெண்ணிய கதாபாத்திரமாக பாரதி காணப்படுவது புலனாகிறது.

ஆடை சுதந்திரம்

மாநகரத்தில் வாழும் பெண்களின் இயல்பான ஆடை அணிகலன்களை பயன்படுத்துபவளாகவே பாரதி காட்சிப்படுத்தப்படுகிறாள். தனது வேலைக்கு ஏற்றதாகவும், வசதியாகவும் அமையும் சில ஆடைகளையே பாரதி பயன்படுத்துகிறாள். தமிழ் சமூகத்தின் முந்தைய தலைமுறையினர் வரை புடவையை அணிவதற்கு வசதியானதாக உணர்ந்திருந்தாலும் உலகமயமாதலால் வெளிநாட்டு ஆடை அமைப்புகளை இன்றைய தலைமுறையினர் விரும்பி அணியத் தொடங்கிவிட்டனர். இவை சிலவேளைகளில் சீரழிவுகளையும் சில முகச்சுழிவுகளையும் ஏற்படுத்தி செல்கின்றன. புதுமைப்பெண்கள் என்பவர்கள் வெறுமனே இன்றைய கால நாகரிகங்களுக்கு மட்டும் உட்பட்டவர்கள் அல்லர். பாரம்பரிய சமூக சூழல்களோடும் ஒத்து செல்பவர்களே. தமிழ் சமூகத்தில் பெண்கள் புடவை அணியும் பட்சத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய தன்மைகளைக் கொண்டிருப்பார்கள் என்ற பொதுவான கண்ணோட்டம் காணப்படுகிறது.

இன்றைய கால அவசர உலகில் வெளிநாட்டு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் ஆடைகள் ஒரு பெண்ணை துணிச்சல் மிக்கவளாகவும் உலகியல் குறித்த பரந்துபட்ட பார்வை கொண்டவளாகவும் வெளிக்காட்டுகிறது. இருப்பினும் கோவில் திருவிழாக்கள் திருமண விழாக்கள் போன்ற பாரம்பரிய நிகழ்வுகளின் போது தங்கள் கலாச்சாரத்தை மறவாதவர்களாக புடவை அணிந்து கொள்கின்றனர். பாரதி நாவல் முழுவதும் நவீன உடையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் பிற்பகுதியில் ஆன்மீகம் சார்ந்து பழனி மலை நோக்கி பயணம் செய்யும்போது மஞ்சள் நிற புடவை அணிந்த பெண்ணாகவே காட்டப்படுகிறாள். தனது பணி நிமித்தமாக நவீன ஆடைகளை அணிந்திருந்தாலும் தனது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் தமிழ் பெண்கள் மறவாதிருக்க வேண்டும் என்பதை இறையுதிர்காடு நாவல் சுட்டிச் செல்கிறது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அறிவு சார் கேள்விகள்

ஆணாதிக்கத்திற்கும் சமூகத்திற்கும் கட்டுப்பட்டு விளங்கிய பெண்கள் தன் மூத்தோர், ஆண்களை எதிர்த்து கேள்வி கேட்கும் உரிமைகளற்று காணப்பட்டனர். வழிவழியாய் கடைபிடிக்கப்பட்ட சில சடங்குகளை தெய்வ வாக்குகளாக பின்பற்றி வந்தனர். இன்றைய கால பெண்கள் கல்வி அறிவினாலும் சமூக அறிவினாலும் திணிக்கப்படும் தனக்கு விருப்பம் இல்லாத ஆன்மீகம் சார்ந்த நம்பிக்கைகள் மீது கேள்விகளை எழுப்புகின்றனர். முடி காணிக்கை கொடுத்தல் என்பது தமிழ் சமூகத்தின் பெரும்பாலான சமயத்தவரால் பின்பற்றப்படும் பக்தி முயற்சிகளில் ஒன்று. இது நாட்டுப்புற பெண்களிடையே மிகவும் அசைக்க முடியாத நம்பிக்கையாக காணப்படுகிறது. ஆனால் நகர்ப்புற பெண்களில் சிலர் இந்நம்பிக்கைகள் தங்கள் இயல்பு வாழ்க்கையில் தாக்கங்களை ஏற்படுத்துவதாக உணர்கின்றனர். இம்முயற்சிகள் தேவையில்லாதது என்றும் கருதுகின்றனர். இந்நாவலிலும் பாரதி ஒரு நவ நாகரீக பெண்ணாக,

இந்த உலகத்தையே படைச்சதா சொல்லப்படுற கடவுளுக்கு,

போயும் போயும் அல்ப தலை முடியையா தருவாங்க? (இந்திரா சௌந்தரராஜன். ப.23)

என்ற கேள்வியை முன் வைக்கிறாள்.

இறந்தவர்களை வழிபடும் முறை சங்க காலம் முதலே இருந்து வருகிறது. நாட்டுப்புற தெய்வங்களில் பலவும் இறந்துபட்ட மனிதர்களே. நாட்டுப்புறங்களில் இன்றளவும் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு படையல் அளிப்பதும் வழிபாடுகள் செய்வதும் இருந்து வருகின்றது. மக்களின் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்க இயலாத ஒன்றாக காணப்படுகிறது. ஆதலால் அறிவியல் நோக்கில் பயணிக்கும் மக்கள் இதுபோன்ற கருத்துக்களின் மீது நம்பிக்கை இல்லாதவர்களாகவும் அதன் மீது கேள்விகளை எழுப்புபவர்களாகவும் காணப்படுகின்றனர். மேற்கூறிய சிந்தனையோடு செயல்படும் பாரதி,

செத்துட்ட எல்லாரும் இப்படி ஆவியா வந்து பழி வாங்க முடியும்னா கோர்ட், போலீஸ்னு எதுவுமே தேவையில்லண்ணே! (இந்திரா சௌந்தரராஜன். ப.162)

என்ற கேள்வியை நாவலில் எழுப்புகிறாள். இம்மாதிரியான கேள்விகளெல்லாம் அவளது அறிவுப் புலமையை வெளிப்படுத்துபவைகளாக அமைகின்றன.

முடிவுரை

ஆதிகால சமூகம் பெண்களின் கட்டமைப்பில் அமைந்திருந்தாலும் காலப்போக்கில் சில கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் ஆணாதிக்க சமூகம் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு முன்பு வரை வடிவமைத்திருந்தது. இதனை தங்களது அறிவு நுட்பத்தினாலும் சில போராட்டங்களினாலும் உடைத்தெறிந்தனர் பெண்கள். தங்கள் வாழ்க்கையை சமுதாயம் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்துகின்றனர். காலங்கள் மாறினாலும் தாய்மை, தோழமை என பெண்ணிற்கான உணர்வுகள் மாற்றம் பெறுவதாய் இல்லை.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் கல்வி, அறிவு மற்றும் போராட்ட குணம் போன்றவற்றில் சிறப்புற விளங்கும்போது சமூகம் எந்த ஒரு சீரழிவுகளுமின்றி முன்னேற்றம் பெறும்.

குறிப்புகள்

[1] அர்ச்சனா, ஆ. "புதுமைப்பித்தன் சிறுகதைகளில் மிதவாத பெண்ணியம்." *தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்*. தொகுதி-4, இதழ்-1, டிச. 2021.

[2] இந்திரா சௌந்தர்ராஜன். *இறையுதிர் காடு*. விகடன் பிரசுரம், சென்னை- 600002.

[3] பாரதியார். *பாரதியார் கவிதைகள்*. காளீஸ்வரி பதிப்பகம், சென்னை-600017.

[4] முத்துச் சிதம்பரம், ச. *பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும்*. நியூ செஞ்சுரி, சென்னை-600028.

[5] ரத்தினகுமார், ந, சு. "வேணுகோபாலின் செங்காட்டுக் கதைகளில் பெண் தன்னிலைகள்." *தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்*. தொகுதி-4, இதழ்-1, டிச. 2021.

[6] வாசுகி, Dr. ஜெயரத்தினம். *பெண்ணியச் சுவடுகள்*. அறிவு பதிப்பகம், சென்னை-600014.

[7] ஜெயசீலி. *காட்டில் ஒரு மகன் - பெண்ணிய நோக்கு*. நியூ செஞ்சுரி, சென்னை-600028.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Feminist Thoughts Evinced in *Manimegalai*

Dr. I. J. Helena Gracelin, Assistant Professor, Department. of Tamil, St. John's College, Palayamkottai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-2401-997X
DOI: 10.5281/zenodo.14752987

Abstract

The primary purpose of the epic "Manimegalai" is to relieve hunger. Manimegalai is a role model showed the way to cure hunger. Manimegalai, the daughter of Madhavi, is portrayed in the epic as a one who has the attitude of helping people as much as she can to reduce poverty. The character Manimegalai lived like a lighthouse guiding the people who were wandering in poverty. Even though she was born in the Devadasi community, she came out of the profession and became a Buddhist monk spreading the principles of Budda. She takes the concept of feeding the starved as the goal of her life. She gives food to the hungry and wipes away the misery of hunger. Manimegalai became Annapoorani because she had done the job of eradicating poverty perfectly and the record of virtue shows Manimegalai as a woman of noble thought. Among the two great Tamil epics out of five, Manimegalai is a Buddhist epic. Her attitude toward charity presents the basic moral principle that has been insisted on by all religions. Hence, this study examines the principles of chastity, charity and giving food to the needy to emphasize morality.

Keywords: Hunger, Chastity, Amutha Surabi, Chaste Woman, *Manimegalai*.

References

[1] Balasundaram, T.S. *Pathinen Keelkanaku Moolam Uraiyum*. Saiva Sithantha Kalagam, Alwarpettai, Chennai.
[2] Balasubramanian, K.V. *Purananooru.* New Century Book House Pvt. Ltd., 2004.
[3] Pulavar Kulanthai. *Neethi Kalanchiam*. Saradha Publication, Chennai - 600014.
[4] Manickam, A. *Thirukural.* Manivasakar Publication, Paris Corner, Chennai – 600108.
[5] Venkadasamy Nattar, N. M. *Manimegalai Moolamum Uraiyum*. Saratha Publication, Rayapettai, Chennai – 600014.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

மணிமேகலை காட்டும் பெண்ணிய சிந்தனைகள்

முனைவர் ஐ. ஜெ. ஹெலினா கிரேஸ்லின், உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0003-2401-997X
DOI: 10.5281/zenodo.14752987

ஆய்வுச் சுருக்கம்

"மணிமேகலை" என்ற பௌத்த சமய காப்பியத்தின் முதன்மை நோக்கம் பசி ஒழிப்பே ஆகும். பசி ஒழிப்புக்குரிய அமுத சுரபியை மணிமேகலைக்கு காட்டியது மணிமேகலா என்ற பெண் தெய்வம் ஆகும். கடலில் தத்தளிப்போருக்குத் திசை காட்டும் கலங்கரை விளக்கம் போல பசியில் துன்புறுவோருக்கு உணவு கொடுத்து பசி என்னும் துயரை போக்கி காப்பியத்தில் ஒளியாக மின்னுகின்றாள். அன்னத்தை அமுத சுரபியில் பூரணமாய் பெற்றிருந்தவள் என்பதல் மணிமேகலை அன்னபூரணியானாள். மணிமேகலை காட்டும் அறம் குறித்த பதிவு இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்புச் சொற்கள்: பசி, கற்பு, அமுதர சுரபி, பத்தினிப்பெண், *மணிமேகலை.*

முன்னுரை

இரட்டை காப்பியங்களில் மணிமேகலை பௌத்த சமய காப்பியமாக இருந்தாலும் அனைத்து சமயத்தாருக்கும் பொருந்தும் வகையில் அறக்கோட்பாடுகளை முன் வைக்கிறது மாதவியின் மகளான மணிமேகலை தன்னால் இயன்ற வரை மக்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவளாக காப்பியத்தில் படைக்கப்படுகின்றாள். பசிபோக்குதல், கற்புநெறி, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை என்ற கொள்கைகளை முன்னிறுத்தி அறத்தை வலியுறுத்தும் வகையில் இவ்வாய்வு ஆராயப்படுகின்றது.

அறம் – விளக்கம்

'அறு' என்ற வினைச்சொல் அடியாக பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருள்களை வழங்கி வருகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே அறம். அது மட்டுமன்றி பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்கிறது ஆன்மீகம். தமிழ் இலக்கியங்கள் 20 நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழமை வாய்ந்தவையாகும். இலக்கியங்கள் எழுந்த காலத்தில் காணப்பட்ட சமூக பிரச்சனைகள் மக்களின் வாழ்க்கை நெறிகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு இல்வாழ்க்கை நெறிமுறைகள் போன்ற வாழ்வியல் சிந்தனைகளை

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஊட்டும் அறிவு பெட்டகம் அற இலக்கியங்கள் ஆகும். **"அறத்தால் வருவது இன்பம்" (39)**என்கிறார் வள்ளுவர். மனித வாழ்வை மேன்மையுற செய்வது அறம். இதனையே.

அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. (குறள், 39)

என்ற குறளின் மூலம் அறம் இன்பம் புகழை தரும் என்கின்றார்.

பசி தீர்க்கும் அறம்

உலகத்தில் கொடிய நோய் 'பசிநோய்' என்கிறது. மணிமேகலை, அமுதசுரபி, பசியின் கொடுமையை உணர்த்துவதற்காகவே படைக்கப்பட்டது. அறங்களில் சிறந்த அறம் எதுவென்றால்,

அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்
மறவாதிது கேள் மண்ணுயிர்க்கெல்லாம்
உண்டிமுடையு முறையுளுமல்லலது
கண்டதில்லை (மணிமேகலை, 25: 228-231)

உணவும், உடையும், உறையுளும் இல்லாதவர்களுக்கு அளிப்பதே அறங்களில் சிறந்தது. இம்மூன்றினுள் பசிப்பிணிபோக்கல் மிகச் சிறப்பு வாய்ந்தது. பசியில் ஒருவன் இறந்துபடும் நிலையில் அவனுக்கு உணவு கொடுப்பவன் உயிர் கொடுக்கின்ற கடவுளுக்கு சமம் என்பதை,

மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி
கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (மணிமேகலை, 11: 95-96)

என்றும் வறியவர்களுக்கு உணவளிப்பதே சிறப்பு என மணிமேகலை சுட்டுகின்றது. அள்ள, அள்ள குறையாத 'அமுதசுரபி' என்ற பாத்திரம் மூலம் உணவு அளித்து மணிமேகலை மக்களின் பசிப்பிணியை அகற்றுகின்றாள்.

கற்பின் சிறப்பு

கற்புடன் இருக்கும் பெண்களுக்கு இயற்கையைக் கட்டுப்படுத்தும் திறன் உண்டென திருக்குறலும், மணிமேகலையும் விளக்குகின்றன. மணிமேகலையில் கற்பின் சிறப்பினை உணர்த்த பீலிவளை சாருகை, மடந்தை, விசாகை, ஆதிரை சாலினி, மணிமேகலை போன்ற கதாபாத்திரங்களில் படைக்கப்பட்டன. ஆதிரையின் கணவன் கணிகையிடம் அழிவுறுதலும், ஆதிரை கற்புடன் சிறந்து விளங்குவதால் தீயும் அவளைத் தீண்டாததும் கற்பின் சிறப்பாகும்.

திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீவினை கொல்லாத் தீவினை யாட்டியேன் (மணிமேகலை, 16: 34-35)

என்பதில் ஆதிரையின் கற்பின் மாட்சியும் தெளிவாகிறது.

மணிமேகலையில் பத்தினிப் பெண்களை மூவகைப்படுத்திக் கூறுகின்றது. கணவன் இறந்தவுடன் எரிமூழ்கி இறப்பவர், தனியே எரி வளர்த்து இறப்பவர், கணவனை நினைந்து

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கைமை நோன்பேற்பவர் என்று விளக்குகின்றது. பெண்களின் கற்பு தவசிகளின் நோன்பு ஆகியவற்றை அரசன் பாதுகாக்கா விட்டால் இடர்பட நேரிடும் என்று மணிமேகலை இயம்புகிறது. மணி பல்லவத் தீவிற்கு மணிமேகலையை எடுத்துச் சென்றது. அமுதசுரபி பெறவும் பழம் பிறப்பு அறியவும், மணிமேகலையை பல்வேறு துன்பங்களிலிருந்து காப்பாற்றியது மணிமேகலா தெய்வம் என்கின்ற பெண் பாத்திரப்படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. மணிமேகலையை ஒரு அறச்செல்வியாக உயர்த்திய பெருமை சீத்தலைச் சாத்தனாயே சாரும் என்றே கூறலாம்.

புலால் மறுத்தல்

தன்னூண் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் (குறள், 251)

மனிதன் பிற உயிரினங்களைத் தன்னூன் பெருக்கத்திற்கு உண்ணுவது அறம் ஆகாது என வள்ளுவர் உரைக்கிறார். ஆனால் மணிமேகலையில் மனிதனைக் கொன்று மனிதன் உண்ணும் வழக்கம் இருந்தது.

நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பின்னிவன்
தானே தமியள் வந்தனன் அளியள்
உளனுடை இவ்வுடம் புண்வென்றெழுப்பலும் (மணிமேகலை, 16: 56-59)

சாதுவன் அவர்களின் மொழி தெரிந்ததினால் அறவழியில் செல்லுமாறு அறிவுறுத்துகிறான்.

கள்ளுண்ணாமை

சங்க காலத்தில் போற்றப்பட்ட கள்ளுண்ணும் வழக்கம் சங்கம் மருவிய காலத்தில் ஒழுக்கத்திற்கு எதிரானதாகக் கருதப்பட்டது. திருவள்ளுவர் கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்தைப் படைத்து கள்ளுண்ணுதலைக் கடிந்துள்ளார். மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதையில் சாதுவன் நாகர்களிடம் சிக்கி நாகர் குருமகனிடம் அவனை அழைத்துச் செல்லப்பட்டபோது அக்குரு மகன்கள் மயக்கத்தில் இருப்பதைக் கண்டு,

மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய் (மணிமேகலை, 16: 84-85)

மனதை மயக்கும் கள்ளும் மனித உயிர்களைக் கொல்லுதலும் சான்றோர்கள் கடிந்த செயலாகும் என சாதுவன் நாகர் குருமகனுக்கு அறிவுரை கூறுகிறான்.

பிறருக்கு உதவும் அறப்பண்பு

தன்னிடம் இல்லை என்று கேட்பவர்க்கு இருப்பதை கொடுத்து உதவுவது ஈகை குணம். ஒருவன் தான் தேடிப் பெற்ற செல்வத்தை தான் மட்டும் பயனை அடைந்து இன்புற்று வாழ்தல் கூடாது பிறருக்கும் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பதை,

முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதல்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பிற்பெரிய செல்வம் பெறலாமோ (பழமொழி நானூறு, 233. 1-2)

என்ற வரிகளில் இருப்பவரின் உள்ளத்தின் மனநிலை அறிந்து கொடுப்பதே சிறந்த ஈகையாகும். காப்பிய காலத்தில் மணிமேகலை என்ற பாத்திர படைப்பு ஏனைய கதாமாந்தரை விட ஈகைப் பண்பில் தன்னிரிகல்லாத தலைவியாய் உயர்ந்து நிற்கின்றாள்.

மனிதன் சுயநலவாதியாக இருக்காமல் பிறருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட உதவிகளைச் செய்யும்போது நம்மை விட சிறியவர்களுக்குச் செய்ய வேண்டும். **"ஆற்றுநர்களிப்போர் அறவிலை பகர்வோர்" (மணிமேகலை, 11:92)** என்று மணிமேகலை உணர்த்துகின்றது. "**வறியவர்களுக்கு ஒன்று ஈவதே ஈகை" (குறள், 221)** என்னும் வள்ளுவரின் கருத்தோடு ஒத்து நோக்கப்படுகின்றது.

நல்ல செயல்களைச் செய்வொர் சொர்க்கத்திலும், தீயச் செயல்களைச் செய்வோர் நரகத்திலும் போவார் என்பதை உணர்ந்த சான்றோர் தீயதை விட்டு நல்லறம் நாடினர்.

இதனையே சாத்தனார் மணிமேகலையில்
நல்லறம் செய்வோர் நல்லுலகடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகடைதலும்
உண்டென உணர்ந்தலின் உரவேள் களைந்தனர் (மணிமேகலை, 16: 88-90)

என்ற பாடல் விளக்குகின்றது. இதனால் பிறவிப்பயன் பற்றி நன்கு தெளிவு பெற்றிருந்தனர் எனலாம்.

நல்லது செய்த லாற்றீராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே (புறம், 195:6-9)

என்ற புறநானூற்ப் பாடலிலும் நரிவெரூத்தலையார் நல்ல செயல்களை வாழ்வில் செய்தால் மட்டுமே வாழ்வு வளமாகும் என்கின்ற கருத்தை முன் வைக்கின்றார்.

மணிமேகலையில் வரும் மணிமேகலை என்ற பெண் பாத்திரம் அறம் செய்தலையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுனர் முக்தி அடைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றைய காலகட்டத்தில் உற்றுநோக்கும்கால் புகழ், பணம் இதற்காகவே அறம் செய்யும் சமூக அவலத்தை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

மணிமேகலையில் பெண்ணிய சிந்தனைகள்

மணிமேகலை ஒரு தன்னிச்சையான பெண்ணாக வரையறுக்கப்பட்டுள்ளார். ஆண்கள் வழிநடத்தும் சமுதாயத்திலிருந்து விலகி தன் வாழ்வின் பாதையை தானே தேர்வு செய்கிறாள். அவள் தன்னுடைய வாழ்க்கையை பக்தியுடனும், அறத்துடனும், தத்துவ சிந்தனைகளுடன் அமைத்துக் கொள்கிறாள். மணிமேகலையின் வாழ்வு பெண்ணின் சுய நிர்ணயத்தை முன் வைக்கிறது. காதல், துறவியம், தன்னலமற்ற சேவை ஆகியவற்றின் மூலம் தனக்கென ஒரு

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அடையாளத்தை உருவாக்குகிறாள். சமகால பெண்ணியக் கோணத்தில் மணிமேகலையின் கதை பெண்களின் சுதந்திரம் மற்றும் சமுதாயத்தில் அவர்களின் உரிமைகளை எடுத்துக் காட்டுகிறது. மணிமேகலை பௌத்த தத்துவங்களின் மீது உறுதியுடன் இருப்பதால் பெண்களின் அறிவாற்றல் மற்றும் தத்துவ சிந்தனைமிக்க மனோபாவத்தை காட்டுகின்றார்.

மொத்தத்தில் மணிமேகலை காப்பியம் பெண்ணியக் கோணத்தில் பெண்ணின் சுயநிர்ணயம், சுதந்திரம் அறம், துறவியத்தில் அவர்களுடைய பங்கு ஆகியவற்றை வலுப்படுத்தும் ஓர் இலக்கிய ஆக்கமாகும்.

முடிவுரை

கணிகை குலத்தில் பிறந்தாலும் கற்புக்கு இலக்கணமான மணிமேகலை பிற உயிர்கள் மீது இரக்கம் கொண்டு அறம் செய்து காப்பிய மாந்தர்களின் தலைமைப் பண்பை அடைகின்றாள். பசிப்பிணியைப் போக்கும் நோக்குடன் செய்யப்படும் அறமே நல்லறமாகும். எதார்த்தம், புனைவு வழியாகப் பல நல்ல கருத்துக்களை உள்ளடக்கிய மணிமேகலை பாத்திரப்படைப்பினை இன்றைய இளைய சமுதாயத்தினர் உணர்ந்து அறவழியைப் பின்பற்ற வழி நடத்துவோம்.

குறிப்புகள்

[1] பாலசுந்தரம், தி. சு. *பதினெண் கீழ்க்கணக்கு மூலம் உரையும்.* சைவ சித்தாந்த கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை.

[2] பாலசுப்பிரமணியன், கு. வெ. *புறநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 2004.

[3] புலவர் குழந்தை. *நீதிக் களஞ்சியம்.* சாரதா பதிப்பகம், சென்னை – 600014.

[4] மாணிக்கம், ஆ. *திருக்குறள்.* மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108.

[5] வேங்கடசாமி நாட்டார், நா. மு. *மணிமேகலை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 600014.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Feminism in Chimamanda Adichie's Novel *Purple Hibiscus*

Dr. J. Cenu Nair, Associate Professor, Department of English, S.T. Hindu College. Nagercoil, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-5654-5475
DOI: 10.5281/zenodo.14753021

Abstract

Nigerian literature in English has witnessed impressive expansion in the past few decades. The most notable feature of Nigerian literature is the rise of women writers who have created immortal books in English. Chimamanda Adichie is one such prolific writer whose debut novel "Purple Hibiscus" mirrors the enchanting beauty and richness of the country without shying away from capturing its trauma, tragedy, desperation, resignation and political tribulations. The novel presents a moving picture of the effect of domestic violence on children, of religious fanaticism and of the political unrest in Nigeria. At the core of the novel are a brother and sister who seem to have a perfect life, but in reality, it is slowly suffocating them. The novel is at once the portrait of a country and a family, of terrible choices and the tremulous pleasure of an odd, rare purple hibiscus blooming amid a conforming sea of red ones. The novel is a feminist work that challenges the dehumanising tendencies of patriarchy and the oppression of women in postcolonial Nigerian society. The novel depicts how women can assert themselves in a male-dominated world through education and female solidarity.

Keywords: Domestic Violence, Religious Fanaticism, Oppression, Female Solidarity.

Feminism, in simple terms, is the belief in social, political and economic equality of the sexes. Although feminist thinkers have always existed, Mary Wollstonecraft's *A Vindication of the Rights of Woman* (1792) is considered one of the first written works that can unambiguously be called feminist philosophy. Feminism as an organized movement appeared in the late nineteenth century in several countries. Agitation for women's voting rights became increasingly visible and vocal at the beginning of the twentieth century. After the granting of suffrage, women's movements turned to other issues of social reform and equality. The two World Wars changed much of the world and with it the perception of women's work outside the home. After the Second World War, feminism entered a second stage with campaigns for reproductive rights and the removal of discrimination, and the United Nations created an office to represent women's rights. Since then feminism has continued to reinvent and redefine itself to adapt to a changing world and a diversity of cultures.

Modern African feminism is about confronting patriarchal mythmaking on one hand and tackling racist stereotypes on the other. One of the recent writers of Africa who proudly identifies herself as a feminist is Chimamanda Ngozi Adichie. In her essay "We Should All Be Feminists" Adichie explains how feminism should be in the twenty-first century. This essay, published in 2014, was adapted from Adichie's 2012 TEDx talk. In the essay, Adichie argues that we must challenge long-held beliefs and gender stereotypes that perpetuate inequality between men and women. Saying that "Culture does not make people; people make culture," Adichie highlights the need for a cultural shift to achieve gender equality. She says that all men and women should be feminists who champion the rights of women.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

Purple Hibiscus, the debut novel of Adichie, is a feminist work that challenges the dehumanising tendencies of patriarchy. Published in 2003, this novel won the Best First Book Award at the 2005 Commonwealth Writers' Prize. A close reading of the novel shows the writer's art of portraying women characters with special focus and emphasis on their individuality. Of the many types of feminism, individualist feminism is a blanket term for different forms of individualist feminist ideas. While other types of feminism often stress that women in general are living under similar circumstances, individualist feminists stress that all women are unique and have unique goals. A core principle of this type of feminism is that all human beings have a moral and legal claim to their persons and property. Individualist feminism is distinct from both mainstream and radical feminist movements. In their rhetoric, individualist feminists emphasise individual empowerment, responsibility, and equality of rights. In short, individualist feminism calls for freedom, choice, and personal responsibility.

Set in post-colonial Nigeria, the novel *Purple Hibiscus* is narrated in first person by the central character Kambili Achike, a fifteen-year-old girl. She and her brother Jaja are the children of a rich, fanatical and oppressive Catholic patriarch Eugene Achike. As Stanley in his online article describes, "The first sentence of *Purple Hibiscus* reads: Things started to fall apart at home when my brother, Jaja, did not go to communion and Papa flung his missal across the room and broke the figurines on the étagère" (3). The work's first line is a feminist manifesto. It's also a patriarchal comment from Achike.

The novel begins on Palm Sunday. Jaja has refused to go to church and receive communion. Because Jaja has no reasonable excuse for missing church, Papa Eugene throws his missal at his son. The book hits a shelf containing his wife's beloved figurines. This defiant act and resulting violence marks the beginning of the end of the Achike family. Kambili then explains the events leading up to Palm Sunday, detailing the seeds of rebellion that are planted in the children's minds by their liberal Aunty Ifeoma, Papa's sister.

Papa Eugene is a prominent figure in Enugu. He owns several factories and publishes the pro-democracy newspaper *The Standard*. He is praised by his priest Father Benedict, and his editor Ade Coker, for his many good works. He donates generously to his parish and his children's schools. But though he is well respected by the community and generous to outsiders, he is a despot at home. Kambili's family live in a house surrounded by high compound walls topped with electrified cables. She and her brother Jaja are driven to school each day by the chauffeur. After school hours, they should run back to the waiting car or they will be punished at home. Music, dancing and having fun are prohibited. Friendship with other children is discouraged. Instead, they must follow Eugene's schedule which allows only time to study, eat, pray and sit with family.

Kambili is a quiet child. When she tries to speak, she often stutters or has a coughing fit. The rigid life that is shaped by her father seems to have rendered her mute. She is a good student most often rising to the top of her class. Once when she got the second rank, she waits in sheer terror and with bated breath for the nasty consequences that are sure to follow. The girls at school assume she is a snob because she doesn't socialise and always runs straight to her father's car after class. But, in reality, she is not a snob; rather she is motivated by fear, unable to create her own identity.

Eugene has repudiated his father Papa-Nnukwu, for refusing to convert to Catholicism, and turned his grandchildren against him, allowing them only fifteen minutes a year with him at Christmas. Papa calls his father a "heathen" (62) because he still follows the religious traditions of his people, the Igbo. Once when Aunty Ifeoma invites Kambili and Jaja to visit

so they can go on a pilgrimage to Aokpe, the site of a miraculous apparition of the Virgin Mary, Papa begrudgingly agrees.

Nsukka, the hometown of Aunt Ifeoma, is a different world. Here, even while the two children are free from their father's physical presence, they are still unable to shake off their father's shadow. Every time the phone rings, Kambili quakes in fear. Gradually they observe how their widowed Aunty Ifeoma successfully raises her three children, Amaka, Obiora and Chima, with what little she has. But her family is a happy one. Unlike Papa, Aunty Ifeoma encourages her children to question authority, raising them with faith but also intellectual curiosity. Amaka and Kambiliare very different girls. Amaka, like Kambili's classmates, assumes her cousin is a privileged snob since she does not know how to contribute to household chores. Kambili retreats into silence even in Nsukka. Jaja, on the other hand, blossoms by following the example of his younger cousin Obiora.It is at her aunt's house that Kambili first meets Father Amadi. He is a young priest who wears jeans and shorts, coaches local boys in football and has progressive ideas about church worship. Through him, Kambili starts viewing religion differently, realising that it can have a human face and that it can even incorporate singing.

It is at Aunt Ifeoma's house that the children first discover the purple hibiscus. The purple hibiscus flower is an uncommon and experimental hybrid species of the hibiscus plant. The reaction of the children when they first see the purple hibiscus is described as follows, "That's a hibiscus, isn't it, Aunty? Jaja asked, staring at a plant close to the barbed wire fencing. 'I didn't know there were purple hibiscuses" (128). The flower is symbolic of defiance, freedom and hope. As Davis in her online article says, “For Jaja, the flower being a new creation and uniquely beautiful, represents freedom. It is a symbol of an alternative to the rigid life that has been created by their father for him and his sister. When he takes the stalks to his home, he brings with them a new sense of self and possibility.”

Kambili's garden at home had only red hibiscus flowers which propagate profusely. Red symbolises oppression as well as the blood spilt during the miscarriages. The clandestine introduction of purple hibiscus cuttings into the garden reflects the gradual breaking down of Eugene's power. The motif of freedom is further developed by Kambili who sees the plant as symbolic of inward liberation. As she says, "Jaja's defiance seemed to me now like Aunty Ifeoma's experimental purple hibiscus: rare, fragrant with the undertones of freedom, a different kind of freedom" (16).

Kambili and Jaja learn to be more accepting and understanding in Nsukka. When their grandfather Papa-Nnukwu falls ill, Aunty Ifeoma brings him to her flat. Kambili and Jaja decide not to tell Papa that they are sharing a home with a "heathen" (62). Kambili witnesses her grandfather's morning ritual of innocence, where he offers thanks to his gods and proclaims his good deeds. She sees the beauty in this ritual and begins to understand that the difference between herself and Papa-Nnukwu is not so great. When her father finds out that Kambili and Jaja have spent time with their grandfather, he brings them home and punishes them by pouring hot water over their feet for "walking into sin." (194)

Papa rationalises the violence he inflicts on his family, saying it is for their good. The beatings have rendered his children mute. Kambili and Jaja are both wise beyond their years and also not allowed to reach adulthood, as maturity often comes with questioning authority. Within the narrative of the novel, Beatrice loses two pregnancies because of Eugene’s flogging. Whenever she miscarries, Eugene makes the children say special novenas for their mother's forgiveness. Even though he is to blame, he insinuates it is his wife’s fault.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

In the beginning, Beatrice believes that she cannot exist outside her marriage. So she tolerates the abuse. But gradually the abuse represses her to the point that she must resort to murder to escape. This desperate act can be considered as a plea for survival. Survival feminism is a feminist theory that emerged in Africa as women faced economic and political challenges. It is characterised by women questioning and redefining gender and family roles in society and for individuals. This survivalism is a policy of trying to ensure one's survival; it is based on the primacy of survival as a value.

Several characters are gripped with silence throughout the novel. Kambili suffers the most, unable to speak more than rehearsed platitudes without stuttering or coughing. Her silence is a product of the abuse that she endures at the hands of her father. Kambili does not allow herself to tell the truth about her situation at home. When her classmates taunt her for being a backyard snob, she does not explain that she does not socialise because she is afraid. She is not allowed to dally after school lest she be late and beaten. She finally learns how to speak her mind when she is taunted continuously by her cousin Amaka. Aunty Ifeoma encourages her to defend herself and only then can Amaka and Kambili begin their friendship. Kambili begins to speak more confidently, laugh and even sing.

On several occasions, Eugene beats his wife and children. Each time, he is provoked by an action that he deems immoral. When Beatrice does not want to visit Father Benedict because she is ill, Eugene beats her and she miscarries. However human patience and endurance to injustice are definite and limited. In a particular instance, when Eugene beats his wife and children, the wife Beatrice takes from him the belt with which he flogs them and quietly lays it on the table. The final method adopted by Beatrice to put an end to Eugene's violence aligns with the principles of radical feminism. She adopts the means of violence to put an end to violence, by poisoning his tea little by little every day. Getting weaker by the day, Eugene becomes a shivering personality and finally dies. After his death, the children understand that Mama is responsible but Jaja willingly accepts the responsibility and goes to prison.

The final chapter of the book takes place nearly three years later. Kambili and Mama visit a hardened Jaja in prison. He has faced severe punishments and miserable conditions over the course of his term. However, with the leadership in Nigeria changing again, their lawyers are confident that Jaja will be released. Though Jaja has learned not to expect a favourable outcome, Kambili is overjoyed. She dreams that she will take Jaja to America to visit Aunty Ifeoma, together they will plant orange trees in Abba, and purple hibiscuses will bloom again.

The book mirrors the enchanting beauty and richness of the country without shying away from capturing its trauma, tragedy, desperation, resignation and political tribulations. It also presents a moving picture of the effect of domestic violence on children, of religious fanaticism and of the political unrest in Nigeria. Oppression is a theme that haunts every page of the novel. The novel shows why oppression need not be tolerated in any form. Oppression will continue only as long as people are silent. Freedom can be achieved through resistance and protest against injustice. In this novel, three people are the victims of one man's cruelty. The oppressor is Eugene and the victims are his wife Beatrice, son Jaja and daughter Kambili. As oppression becomes intolerable, each of these characters decides to ensure their survival in widely different ways. Jaja becomes overtly defiant, Kambili mildly disobedient, but it is the mother who finally takes matters into her own hands and commits a crime so that she and her children can survive.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

The novel exposes the African concept of an ideal woman. The character of Kambili's mother, Beatrice Achike is an instance of this. For the major part of her life, she remains silent in the face of humiliation and brutality. Her husband is extremely brutal to her but she copes by cleaning the figurines in the house soon after an episode of violence. It is only when his brutality towards the children increases that Beatrice decides to take action. As Ann in her journal article says,

Ifeoma was associated with the radical way of standing up for her rights while Mama at the beginning of the novel was liberal but when it became obvious that her life was at risk, she dammed the consequences and went radical. This is a deliberate attempt by Adichie to prove that radical feminism is a reaction to some circumstances, she believes that one can't wake up and start crushing anything that stands in his/her way. It is often prompted by situations that seem to overpower the person. Mama's radical way of ending her husband's life was prompted by his violent actions which she brought to an end by poisoning his tea.

Kambili's father is both evil and loving, both a benevolent protector and an emotional terrorist. While Kambili desperately wants her father's love and has a natural attachment to her blood roots, she simultaneously wishes to sever her connection to her father, along with the tyrannical rule that comes with him. Kambili's house is falling. Propriety and submission are valued over free will, and while her controlling father is the overlord of all he surveys-revered in the community and church-his family is coming apart at the seams. When Kambili is allowed to spend time with her independent and strong-willed Aunty Ifeoma, she is introduced to a world without rigid schedules, religious rules or a supreme Monarch.

Adichie's work grows into the past as well as the future. Tradition, custom and ritual anchor the roots while the symbolic purple hibiscus - rare, individual reaches for the light. The purple hibiscus becomes a metaphor for freedom and independence. While a flower may seem delicate in constitution, purple is historically associated with royalty and the divine. The purple flower then comes to signify Kambili's urge to bloom, her instinct to look for the light. Kambili's sagacious instinct to spend time with her Aunt resembles a tender shoot growing up between cement slabs, working its way past enormous obstacles towards whatever light it can find. In the climactic conclusion of the novel, the characters split out of their shells and change in surprising, if not shocking ways. The rebellion that has been fuelling throughout the book ignites a fatal spark, and the rule of evil burns down.

The novel depicts how women can assert themselves in a male-dominated world through education and female solidarity. This aspect is brought out through the character of Aunt Ifeoma who is highly educated and dares to stand her ground in personal and professional life. She too has a lot of loss in life. As a young widow with three children, she refused to consider remarriage that society tried to impose on her. As a lecturer at the university also, she raises her voice against injustice and doesn't fear the possibility of losing her job. She is fired from the job but before that, she attends an interview for a job in America and gets selected for it. She is a strong woman who inspires Kambili a lot. After observing the silent nature of her mother, Kambili is surprised to see the strength of Aunt Ifeoma as she stands against her brother, supports her father and independently drives around to meet the needs of her family. She advises her sister-in-law, Kambili's mother, not to put up with domestic violence and asks her to leave her husband. It is she who gives a ray of hope to the family when everything falls apart in Kambili's house.

In this novel, Adichie has introduced women characters who display their strength and hidden potential after being unfairly exploited by people close to them. These voiceless

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

victims suffer a lot before they make strong, valid decisions to cope with the dilemmas in their lives. Adichie's women characters are strong-willed persons who tolerate, only to an extent, the injustice meted out to them. They achieve what they want in life as they progress from unhappy to happy individuals. They prefer calm and silent action to screaming for their rights. Although the end they want to achieve is the same, the means that they adopt are markedly different from each other. Each of the characters in her novel tends to the unique needs of their soul by making a thorough study of themselves. This novel is at once the portrait of a country and a family, of terrible choices and the tremulous pleasure of an odd, rare purple hibiscus blooming amid a conforming sea of red ones. Adichie, therefore, creates a masterly work with *Purple Hibiscus*, a work that is carefully planted and lovingly tended.

References

[1] Adichie, Chimamanda Ngozi. *Purple Hibiscus*. Harper Perennial Publishers, 2004.
[2] ---. "We should all be Feminists." Fourth Estate, 2014.
[3] Ann, IbekuIjeoma. "Adichie's*Purple Hibiscus* and the issue of Feminism in African Novel." www.davidpublisher.com. doi: 10.17265/2159-5836/2015.06.007.
[4] Davis, Sincy. "Narrating Human Ecology in Adichie's *Purple Hibiscus*. www.rjelal.com.
[5] Ordu, Stanley. "Womanism and Patriarchy in ChimamandaAdichie's *Purple Hibiscus*." www.litinfinite.com. doi: 10.47365/litinfinite.3.2.2021.61-73.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

A Study of the Unsung Women Freedom Fighter K.P. Janaki Ammal

M. Sudalai Muthu, Reg. No. 22113151091003, Ph.D. Research Scholar, Dept. of History,
S.T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
Dr. B. Sheeba Kumari, Assistant Professor, Department of History and Research Centre,
S.T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-5112-4806
DOI: 10.5281/zenodo.14753023

Abstract

Women must be given equal opportunities in every field, irrespective of gender. The sacrifice made by the women of India will occupy the foremost place. They fought with true spirit and faced various tortures, exploitation and hardship to earn us freedom. When men were in prison the women came forward and took charge of the struggle. The women dedicate and devote themselves to the struggle. Women's participation in India's freedom struggle began as early as in the eighteenth century many women participated in the freedom struggle. K.P. Janaki Ammal the unsung heroine of the Tamil Nadu freedom fighters. In this context, K.P. Janaki Ammal has been chosen for study.

Keywords; India, Freedom Struggle, K. P. Janaki Ammal.

Introduction

Janki Ammal was born to Padmanabhan and Lakshmi, Janaki Ammal in 1917 in Madurai, was raised by her grandmother after losing her mother when she was eight years old. After quitting the eighth grade to pursue her musical career, she joined the Palaniappa Pillai Boys Company, where she married a harmonium player named Gurusamy Naidu and rose to the position of lead actress. She began inspiring the liberation fight at the age of twelve by singing patriotic songs. In 1930, she was one of the first South Indian women to be arrested by the British and spent a year in prison. She joined the Congress in 1936 and the Communist Party in 1940 as a result of her strong political beliefs. She spent her money on charitable causes and advocated for workers' rights after winning a seat in the State Legislative Assembly in 1967. This article highlights the contributions made by Janki Ammal for the welfare of people.

K.P. Janaki Ammal

Tamil Nadu was one of the major states that contributed enormously to India's war for independence. Many unidentified Tamil Nadu freedom fighters sacrificed their lives for the nation's freedom. Individuals in a high profession also played a vital role in the noble battle, this motivated the people of Tamil Nadu to join hands and support the liberation cause. K.P. Janaki Ammal was one of the forgotten independence fighters. She was courageous and never hesitated to speak out against the British. She is a courageous freedom warrior, who raised her voice in opposition to the British. Her emotive and inspiring tone drew the crowd. She sacrificed a huge sum of money for the welfare of society while dedicating her entire life to the Indian freedom fight. The independence revolution was inspired by her well-known Tamil composition "Vetkam Ketta Vellai Kokkukalai, viratta vaarigalaa...." She was the first female to be detained in 1930 and spent an entire year in prison.

Janaki Ammal with Political

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

As she started to devote more of her resources and time to helping others, her acting career became constrained by her growing involvement in politics and the independence struggle. Women at the time didn't dare to take the lead in any kind of societal or political action but she was the first in the theatre, to sing her rebellious song in accusing the authoritarian rule of westerners and in praising the sovereignty of India on stage this aroused a revolutionary shift. She frequently performed various freedom-related subjects. Janaki Ammal decided to perform in the theatre with S. Viswanathadass, a prominent Congress activist who was additionally a well-known singer, during the period when discrimination predominated in the Tamil community. No one stepped up to support Viswanathadass because he came from the Maruthuvar (Barber) society which was regarded as an underprivileged caste at the time. K.P. Janaki Ammal volunteered to act with him. In the meanwhile, she wedded harmonium musician Gurusamy Naidu of the same group. She used her theatrical income for the betterment of the community. Due to her active political activity, she ascended considerable acclaim in Tamil Nadu.

Introduction of Netaji Subhash Chandra Bose

JananakiAmmal attended the event when the Congress members of Madurai chose to offer Netaji Subhash Chandra Bose a resounding welcome in Madurai. At Batlagundu, she subsequently encountered the Communist leaders P. Ramamurthy and P. Jeevanandam taking them as a motivation she became part of the Communist Party in 1940 and remained a member until her demise. As a Communist Party member, K.P. Janaki Ammal engaged in countless battles on behalf of the labourers and farmers. The feudal system had become prevalent in the state before the legislative assembly passed a property limitation. She was detained for engaging in anti-war campaign operations in violation of Defense Indian Laws. A protest against the battle was conducted in Ponmalai, near Trichy, amid World War II. She emphasized at this gathering that this conflict was a form of imperialism, nobody ought to enlist in the British Forces, the war shouldn't receive any funding, beyond people's consent, and the Europeans were involving them in this conflict. The conflict was also fiercely denounced by K.P. Janaki Ammal. The K.P. Janaki Ammal was taken into custody by the British authorities the following day for anti-war activity.

Janaki Ammal with II World War

During World War II, the English administration enlisted Indians against their will. The Communist Party protested this with several anti-war demonstrations. Janaki Ammal spoke at the event and said that the Europeans are engaging Indians in war simply because they hold the power and treat Indians as captives. She was detained according to the Treason Act, commonly referred to as the National Security Act. She was the first lady from the southern part of India to be subjected to an act of imprisonment. When the Madurai Thuvarimaan fought for restitution of lane because the rich property owners repressed tenant farmers, unrest arose. Although police officers showed up, a number of the male and female protesters were threatened for the safety of the police by threats and gunshots. By the moment, she plunged out of the crowd and bravely raised her voice for the peasants this changed the scenario; her bravery shook the police who were taken aback by this sudden change. It demonstrated Janaki Ammal's courage. She contested in the 1967 general elections from the Madurai East Assembly Constituency and won, becoming an elected official of the Legislative Assembly. After that, she predominantly discussed the condition of the farmers and the equality of women throughout the legislative discussions and conducted several campaigns to regularize salaries for farmers, labourers, and industrial workers.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

Conclusion

K.P. Janaki Ammal was a courageous social reformer and freedom fighter who sacrificed her life to promote social justice and India's independence. She motivated many youngsters to join the liberation movement with her political activism, revolutionary songs, and support of workers' rights. She broke down caste and societal boundaries by promoting equality and justice through her political and theatrical platforms. Janaki Ammal is a great but much-underappreciated character in India's struggle for independence. Her bravery, selflessness, and unshakable dedication to the country will be ever remembered by true patriots and citizens.

References

[1] Ananthi, S. *Women and Social Reform in Modern India*. 2001.
[2] *From the Commemoration Volume*. 28th Annual Conferences of the Institute of Historical Studies, Souvenir, Thoothukudi, 1991.
[3] Manivasaham. *Viduthalaikku Paadupatta Veerth Thalaivarkal*. (Tamil) 2012.
[4] Raja Mohan. *Women in India National Congress*. Rawat Publication, New Delhi,1999.
[5] Somayajlu, S. N. *Whos Who Freedom Fighters*, vol 3, 1973.
[6] Thirunavukkarasu, K. *Dravida Iyakka Vergal*. Chennai, 1991.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Government Agencies Promotion of Women Entrepreneurship in India

Dr. K. K. Thanammal, Associate Professor of History, S.T. Hindu College, Nagercoil, Kanyakumari District, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0005-2224-1539
DOI: 10.5281/zenodo.14753059

Abstract

Women are the major source of manpower in any society. If any scheme aimed at the economic development of a nation without women will be uneven without involving them who constitute half of the world's population. Women entrepreneurship gained energy in the last three decades with the growth in the number of women enterprises and their functional contributions to economic growth. The industrial performance of the Asia-Pacific region propelled by manufactured exports has brought a wide range of economic and social opportunities to women entrepreneurs. In India, though women have played a significant role in society, their entrepreneurial skills have not been properly nominated due to the lower status of women in society. For sustained economic development and social justice, the socio-economic status, of women and their lives should be improved along with that of men. Today, several policies and programmes are being instigated for the development of women's entrepreneurship in India.

Keywords: Education, Empowerment, Employment, Entrepreneur, Enhancement

Introduction

The development of women entrepreneurs has become an important aspect of our plan priorities. It is only from the Fifth Five Year Plan (1974-1979) onwards that their role has been recognized with a clear approach to women's issues from women's welfare to women's development. The government has taken several measures to encourage women entrepreneurs to set up small-scale and micro enterprises. The Small Industries Development Organization (SIDO), State Small Industries Development Corporations (SSIDCs), the nationalised banks and even NGOs are conducting various programmes including Entrepreneurship Development Programmes (EDPs).

Development Programmes of Central Social Welfare Board

The Central Social Welfare Board is running several programmes for the development of women and children.

Vocational Training for Women

The Vocational Training Programme was started during the year 1975 to train women in the trades which are marketable and also to upgrade their skills to meet the demands of the changing work environment. The main objective of training interventions is to enable and empower women to access remunerative employment opportunities, which will instil self-confidence and enhance their self-esteem. At this instant Ministry of Skill Development & Entrepreneurship takes care of providing skill training to women in the country which aims at stimulating employment opportunities among women of various socio-economic levels and different age groups.

The Program offers

1. Industrial skill training under the Craftsmen Training Scheme (CTS)

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

2. Instructor skill training under the Craft Instructors Training Scheme (CITS)
3. Demand-driven Short-term courses
4. Special programs for training the Instructors of ITIs
5. Tailor-made courses as per industry demand

Socio-Economic Programme

The Socio – Economic Programme of the Central Social Welfare Board endeavour to provide employment openings on a full or part-time basis to destitute women, widows, deserted and the physically handicapped, to supplement their minor family income. Besides, women entrepreneurs are encouraged to display and sell their products through Exhibition-cum-Melas organized by State Boards at the District level. The Central Social Welfare has two different types of schemes Agro-based Units and Production Units giving support for the training and employment of women under the Socio-Economic Programme.

MahilaSamakhya Project (MSP)

The main goal of this project was the empowerment of women without causing any disturbance in their family and social lives. It not only focuses on women's problems but also deals with social and economic issues that concern the entire family. It helps women in rural areas to realize their rights, understand the strength of collectiveness and gradually empower themselves for a better life socially, legally, physically and emotionally. This programme was launched in 1988. It recognized that education can be an effective tool for women's empowerment, the parameters of which are:

- enhancing self-esteem and self-confidence of women
- structuring a positive image of women by spotting their contribution to the society, polity and the economy
- evolving ability to think critically
- promoting decision-making and action through collective processes
- empowering women to make informed choices in areas like education, employment and health (especially reproductive health)
- confirming equal participation in developmental processes
- providing information, knowledge and skills for economic independence;
- Enhancing access to legal literacy and information relating to their rights and entitlements in society to enhance their participation on an equal footing in all areas.

Indira MahilaYojana (IMY)

IMY was launched in 1995, it was reorganised, as Swayamsidha in 2001 is a centrally sponsored integrated programme for the empowerment of women by generating awareness through the network of Self-Help Groups of women and helping them to achieve economic strength through micro-level income generation activities and facilitate easy convergence of various services including entrepreneurship of State and Central Governments at the block level. SwayamSidha has resulted in outstanding improvement in the socio-economic prestige of rural poor women and it has helped in providing skill improvement to the poor women for income-generating activities. The evaluation report of an external agency in 2005 indicated that women in Swayam Sidha Blocks have supported their social standing in society and the awareness of social ills like alcoholism, dowry & female feticide is visible. The economic importance of women has improved after joining the SHGs. The number of women members in Panchayat levels has improved and some of them have been chosen by local bodies. The Scheme ended in March 2008. Govt. of India has desired that the State Governments should

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

handhold the Self Help Groups formed under the Swayamsidha scheme till the launch of the second phase of the program.

Women's Component Plan (WCP)

This plan was launched in the Ninth Plan where not less than 30 per cent of funds/benefits are earmarked in all the women-related sectors. The flow of funds was monitored through an effective mechanism of inter-sectorial review to ensure that adequate funds flow to women from all the related sectors for the development and advancement of women.

Swarna Jayanthi Shahari Rozgar Yojana (SJSRY)

This programme was effected in 1997 to employ the urban unemployed by encouraging the setting up of self-employment ventures of wage employment. The distinct scheme of the Urban Self-Employment Programme (USEP), which is a component of SJSRY, provides support to the urban poor, especially women living under the urban poverty line.

Technology Development & Utilisation Programme for Women (TDUPW)

To meet the exact needs of women and to enrich the contribution of women towards technology capability building, the TDUPW has been framed by the Department of Scientific and Industrial Research DSIR. The chief objectives of the programme are:

- Promoting the adoption of new technologies by women.
- Awareness creation and training of women on technology-related issues about women
- Promoting technological gradation of tiny, small and medium enterprises run by women entrepreneurs.
- Showcasing appropriate technologies and organising demonstration programmes for the benefit of women.
- Design and development of products and processes beneficial to women.

Swa-Sakthi Project

Swa-Sakthi Project (earlier known as Rural Women's Development and Empowerment Project). The intentions of the project are the establishment of self-reliant women's Self-Help Groups sensitising and strengthening the institutional capacity of support agencies to proactively address women's needs, developing linkages between SHGs and credit-lending institutions, enhancing women's access to resources for better quality of life and increased control of women particularly poor women, over income and spending, through their involvement in income generation.

Trade Related Entrepreneur Assistance and Development of Women (TREAD)

To alleviate the problems faced by women entrepreneurs, the Ministry of Small Scale Industries (SSI) in the Government of India launched this scheme in 1998. The main objective of the scheme is to empower women through the development of their entrepreneurial skills in non-farm activities by eliminating constraints faced by them in their sphere of trade. Men and Women are like two wheels of a chariot of happiness and fulfilment. If both the wheels were in good condition the chariot would move smoothly. Women are part and parcel of society. We cannot neglect or ignore them. No society can fully be made of men only, however brilliant, efficient, powerful and handsome those men are! Though theoretically woman is recognised as socially equal to men, the old institutions-like caste, patriarchal family and religious and dominant value systems have subjected women to discrimination and still reign with considerable vigour surcharge with the spirit of male dominance.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

Conclusion

Since independence, the government has enacted many acts for the welfare of women. The Government enactments concerning women's education, women's employment, equal pay provision, crimes against women, property rights of women, marriage & divorce laws etc., have empowered women to a considerable extent. Nowadays, women are well-educated with technical and professional qualifications. Many of them have medical, management and similar degrees and diplomas. Many entered their family business as equal partners. Women in rural areas also engaged in innumerable entrepreneurs. In the face of the setback from COVID-19 in the last two years, women entrepreneurs have shown their strength, spirit and creativity in not only running their enterprises but also contributing to COVID-19 response efforts through large-scale production of masks, PPE kits and other COVID-19 essentials. Every year, WEP flagship Women Transforming India (WTI) awards showcase the successful journeys of women entrepreneurs who are at the frontiers of their fields from manufacturing, handicrafts, health and wellness to technology and automation. All these occurred with the support rendered by the Government agencies promoting women entrepreneurs.

References

[1] Dharmaja S.K. Bhatia B.S. and Saini J.S. *Women Entrepreneurs: Perceptions, Attitudes and Opinions- Entrepreneurship and Education.* Rawat Publications, New Delhi 2001.
[2] Ganesan, S. *Status of Women Entrepreneurs in India.* Kanishka Publishers, New Delhi, 2003.
[3] Lalitha Iyer. *Women Entrepreneurs, Challenges and Strategies.* Friedrich Ebert Stiftung, New Delhi, 1991.
[4] Madhulata Anand. *Women Empowerment (Legal and Education Perspective).* Vital Publications, Jaipur, 2011. ISBN: 978-93-80274-05-8.
[5] Shah, Hina. *Fostering Women Entrepreneurs in India.* Mittal Publications, New Delhi, 1987.
[6] Guha, Sumi. *Entrepreneurship and Empowerment of Women Entrepreneurship and Education*. Rawat Publication, New Delhi, 2001.
[7] Vasanthagopal R. and Santha S. *Women Entrepreneurship in India,* New Century Publications, New Delhi, India, 2008, ISBN: 978-81-7708-182-4.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 **E-ISSN: 2583-715X**

Perceptions about Cosmetics among Feminine Working Consumers in Kanyakumari District

Dr. T. Barathi, Assistant Professor, Department of Commerce,
Arunachala Arts & Science (Women) College, Vellichanthai- 629203, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0000-0552-5568
Dr. V. Ramalexmi, Assistant Professor, Department of Commerce,
Manonmaniam Sundaranar University College, Panagudi. Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-7992-9751
DOI: 10.5281/zenodo.14753073

Abstract

Today women are equal to men, they are involved in various activities like men. In the latest decade women are well educated and mostly they are employed. Self-confidence is important for women to face the problem in the society. Physical appearance is one of the important factors which enhance self-confidence in women. To improve their physical appearance women self-groom themselves using cosmetics. This study focuses on the perception of cosmetics among feminine consumers in Kanyakumari District. This study found that self-confidence, fresh feelings and attraction are the main motivating factors that influence the respondents in the study area to purchase cosmetics. High cost, poor quality and non-availability are the major problems faced by the respondents in the study area.

Keywords: Feminine, Cosmetics, Purchasing Behaviour.

Introduction

Indian Cosmetic Industry has had faster growth over the last couple of years. In that situation, the range of cosmetics and beauty products in our country has widened tremendously. Indian competitors have begun to manufacture products to cater to international needs. Organic and herbal cosmetics in India have greater demand in the international market. Some of the top cosmetics brands in India are Vive Cosmetics, VICC, Lotus Herbals, Colorbar, Cipla Limited, Lakme, Ag Industries, AM Enterprises, Biotique, Himalaya Herbals, L'Oreal India, Ayur herbs, Scot Derma etc. The top cosmetic products India exports are skin care products such as creams, serums, sunscreen lotions, and medicated ointment. Beauty and personal care products such as soaps, cleansers, oil and scrubs, Hair care products such as shampoos, gel, conditioner and oil. Oral care products such as mouthwash, toothpaste and mouth fresheners. Make products such as nail paints, lipsticks, lip gloss, hair colour and bleaches. There are lots of cosmetic products exported from India. Also, India plays a major role in the global beauty market as evidenced by the wide range of cosmetic products, it produces and exports.

Cosmetics are composed of mixtures of chemical compounds extracted from natural sources or synthetically created ones. Cosmetics help to conceal blemishes and to enhance natural features. Make-up can also add colour to a person's face, for enhancing the physical appearance women make use of cosmetics. A cosmetic is a substance used to clean, improve or change the complexion of the skin, hair and nails. Cosmetics include beauty preparations. It is used to repair damaged skin, hair, nails etc. In modern technology females are most urged to use cosmetics due to various factors such as dust and fumes, exposure to ultraviolet radiation from the sun etc, these factors cause harm to human beings. To enhance the

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

physical appearance they go behind the cosmetics. Beyond physical health, cosmetics can help to improve our mood, enhance our appearance and boost our self-esteem.

Statement of the problem

In modern times women are concentrating more on personal care as they are frequently moving out of their homes. In the olden days, cosmetics were considered a luxury for middle and lower classes but now it is a necessity. Expenditure on cosmetics occupies a prime share in the family's budgets. Working women consider cosmetics as a part of their lives as it brings self-confidence to them. At this juncture, several questions arise in the mind of the researchers, like what are the factors that motivate working feminine to purchase cosmetics? Are they satisfied while using cosmetics? Whether they are facing problems using cosmetics? To find fitting answers to these questions the study entitled, "Perception about cosmetics among the feminine consumers in Kanyakumari District." has been undertaken.

Scope of the study

This study covers working feminine consumers who use some of the make-up products which are face make-up products, eye make-up products, lip make-up products and nail make-up products. The face make-up product includes foundation, concealers, blushers and compact powder. Eye makeup products consist of eyebrow pencils, eye shadow, eyeliner and mascara. Lip makeup products include lipstick, lip gloss, and lip liner. Finally, nail make-up product includes nail polish and nail polish top coat.

Objectives of the study

The general objective of the study is to know the perception of cosmetics among feminine consumers in Kanyakumari District.

The following are the specific objectives

- To study the personal profile of the respondents.
- To find out the factors that motivate the respondents to purchase cosmetics.
- To know the source of knowledge about cosmetics and
- To find out the problems faced by the respondents.

Research Methodology

The study is based on primary and secondary data. The primary data were collected from 100 working women who consume cosmetics in Kanyakumari district. The samples were selected on a convenient basis. The secondary data were collected from articles, books, journals and websites. The collected data were analysed with the help of percentages, Garret's ranking and Likert's five-point scale.

Data & Discussions

The personal profiles of the respondents are studied by the researchers and presented in tabular form.

Table 1 - Personal profile of the respondents

S. No	Age	No. of Respondents	Percentage
1	20-30	50	50
2	30-45	21	21
3	45-60	19	19
4	60 Above	10	10
S. No	**Marital Status**	**No. of Respondents**	**Percentage**
1	Married	44	44
2	Single	56	56

S. No.	Family structure	No. of respondents	Percentage
1	Joint	34	34
2	Nuclear	66	66
S. No.	**Working Status**	**No. of respondents**	**Percentage**
1	Private	80	80
2	Government	20	20

Source: Primary data

The respondents were asked to indicate their responses by questionnaire. From the above table, it can be seen that out of 100 respondents, 50% of the respondents belong to the age group between 20-30 years and only 10% of the respondents are in the age group of above 60 years. It is inferred from the above analysis that the majority of the respondents in the age group between 20-30 years wish to use cosmetics more. 56% of the respondents are single and the remaining 44% of the respondents are married. This shows most of the unmarried feminine consumers wish to use cosmetics more. 34% of the respondents belong to a joint family and 66% of the respondents belong to a nuclear family. It shows that the majority of respondents belonging to the nuclear family consume cosmetics. 80% of the respondents are working in the private sector and 20% of the respondents are working in the Government sector. It shows that self-confidence is important to the private employee so, they are using cosmetics to enhance their appearance.

Table 2 - Sources of Knowledge

S.No	Sources	No. of respondent	Percentage
1	Social media	42	42
2	Television	20	20
3	Neighbour and Relatives	12	12
4	Friends and Colleagues	26	26

Source: Primary data

The above table reveals that 42% of the respondents know the product through social media, 26% of the respondents know through Friends and Colleagues, 20% of the respondents know through Television and 12% of the respondents know through Friends and Relatives. It indicates social media leads today's generation.

Table 3 - Motivational factors

S.No.	Factors	Average Score	Rank
1	Improves Self Confidence	67.43	I
2	Feel Fresh	52.02	II
3	Attract Others	50.07	III
4	Get young look	48.55	IV
5	Affordable Cost	46.37	V

Source: Primary data

A scrutiny of the above table reveals that the three major factors that influence the respondents to purchase cosmetics Self Confidence (I Rank), Feeling fresh (II Rank) and attracting others (III Rank).

Table 4 - Satisfaction Level of the Respondents

Factors	H.S	S	N	D.S	H.D.S	Total respondent	Total score	Mean score	Rank
Reasonable price	38(190)	36(144)	10(30)	8(16)	8(8)	100	388	3.88	I
Good quality	30(150)	34(136)	20(60)	10(20)	6(6)	100	372	3.72	II
Correct quality	10(50)	30(120)	30(90)	16(32)	14(14)	100	306	3.06	IV
Availability	14(70)	30(120)	20(60)	24(48)	12(12)	100	310	3.10	III
Last for a long time	10(50)	26(104)	30(90)	20(40)	14(14)	100	298	2.98	VII
Offers	10(60)	22(88)	28(84)	20(40)	20(20)	100	292	2.92	VIII
Package	20(100)	20(80)	20(60)	20(40)	20(20)	100	300	3	VI
Chemical free	20(100)	20(80)	20(60)	25(50)	15(15)	100	305	3.05	V

Source: Primary data

Table 4 reveals that the respondents are highly satisfied regarding the 'reasonable price' of the product it got the first rank, the good quality got the second rank and availability got the third rank. The last rank is for offers. This shows the respondents are highly satisfied with the reasonable price of the product and they are not satisfied with the offers provided by the sellers.

Table 5 - Problems

S.No.	Problems	Average	Rank
1	Costly	57.26	I
2	Non-availability	49.2	III
3	Poor quality	52.34	II
4	Cheating	46.3	VI
5	Less quality	47.08	V
6	Causing allergy	47.38	IV

Source: Primary data

From Table 5 which is based on Garret's ranking technique, it was revealed that 'costly' is the major problem with the highest average score of 57.26. Accordingly 'poor quality' with an average score of 52.34 is ranked second. The average score of 49.2 is for 'non-availability' and it is ranked third, fourth and fifth rank is for 'causing allergy' for which the average score is 47.38 and 'less quality ' for which the average score is 47.08 and the last rank is for 'cheating' for which the j average score is 46.3. High cost, low quality and non-availability are the major problems faced by the respondents in the study area.

Suggestion

- The respondents are not satisfied with the offers given by the sellers of cosmetics. So, the sellers can give different types of offers for their products to attract consumers.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

- Quality is very important for cosmetics as it provides many side effects to the users. The manufacturers must produce the cosmetics with the utmost care as it affects the health of the consumers.
- Appropriate pricing strategies should be formulated for different types of cosmetic products.
- Retailers should make efforts to retain their regular and future customers by serving upgraded products to them.
- To enhance the level of satisfaction of feminine consumers, it is recommended to enhance the quality, suitability and fragrance of cosmetics by the manufacturers through proper research and development efforts.

Conclusion

Every woman's everlasting desire is to stay young and beautiful always. Make-up products are a powerful weapon in the hands of the feminine which transforms normal-looking people into beautiful. This study found that self-confidence, fresh feelings and attraction are the main motivating factors that influence the respondents in the study area to purchase cosmetics. High cost, poor quality and non -availability are the major problems faced by the respondents in the study area. Designing effective tools and regulations to monitor the cosmetic market and improve the knowledge of cosmetics are important to ensure safe cosmetic usage by feminine consumers.

References

[1] Nair Shruthi Venugopalan & Josheena Jose. "A study on the buying behavior of women customers towards cosmetic products With special reference to Irinjalakuda Town." *International Journal of Management and Social Science Research Review*, Vol-1, pp. 1-6. 2016.
[2] Pratap Simha Netaji & Maheswaran. "A study on buying behaviour of herbal cosmetics among women consumers with reference to Coimbatore District." *Journal of Emerging Technologies And Innovative Research (JETIR)*, Volume 2, Issue 1, pp. 1526 - 1535. 2015.
[3] www.cosmenova.in Accessed on 15 November 2024.
[4] www.seair.co.in Accessed on 15 November 2024.
[5] www.eximpedia.app Accessed on 15 November 2024.

Author Contribution Statement: NIL
Author Acknowledgement: Nil
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.